6156

முற்றாக ஆசிரியர் அறிவுரைப்பு
வழிகாட்டியைத் தழுவியது.

## தரம் 4

புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக,

# குறிஞ்சியின்

# சுற்றாடல்சார்ந்த செயற்பாடுகள்



ஆசிரியை
A.K.S.றிஸானா ஹில்மி
(B.ED.Dip.in.Teach)



குறிஞ்சி வெளியீடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 6156

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியபாடத்திட்டம்
தரம் - 04

முற்றாக ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தழுவியது.

Class No:
Acc No 6156
Arasady Public Lib
Municipal Coun...
Batticaloa

# குறிஞ்சியின் சுற்றாடல்சார்ந்த செயற்பாடுகள்

ஆசிரியை
றிஸானா ஹில்மி
(B.ED,Dip.in.Teach)



குறிஞ்சி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No
Acc No
Arasady Public Lib.
Municipal Council
Batticaloa

## நூல் விபரம்


| | |
|---|---|
| பெயர் | : குறிஞ்சியின் சுற்றாடல்சார்ந்த செயற்பாடுகள் |
| தரம் | : 04 |
| பக்கங்கள் | : i-iv 222 |
| அளவு | : A4 210 x 297 |
| ஆசிரியை | : திருமதி. றிசானா ஹில்மி |
| பதிப்புரிமை | : ஆசிரியருக்கு |
| கணினித் தொகுப்பு | : ஜே.எனஸ்கா மியூரியல் |
| | : திருமதி. மோகனேஸ்வரி சுவேந்திரன் |
| வெளியீடு | : குறிஞ்சி |
| அச்சுப்பதிப்பு | : நேத்ரா அச்சகம் 280-ஏ சேனாநாயக்கா வீதி, கண்டி. |
| I.S.B.N | : 978-955-7734-43-9 |
| விலை | : 575.00 |


Arasady Public Lib.
Municipal Council
Batticaloa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியருரை

ஆக்கமும், ஊக்கமும் எனக்களித்து ஒரு புதிய முறையில் தெளிவான விளக்கங்ளுடன் 2019ஆம் ஆண்டு புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக இந்நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அதற்கு அருள் புரிந்த அல்லாஹ்வுக்கே நான் சிரம் பணிகிறேன்.

அல்-அம்துலில்லாஹ்,

சுற்றாடல்சார் செயற்பாடுகளுக்கென்று அரசு இது வரையிலும் ஒரு நூலை வெளியிட்டதில்லை. அதற்கு காரணம் மாணவரகள் பலரும் பலவகையான சூழலில் வாழ்பவர்களாவர். எனவே ஒவ்வொரு மாணவரும் தாம் வாழும் சூழலை அறிந்து கொள்வதற்கும். அதற்கேற்ப தமது அனுபவங்களை கையாளுவதற்கும் சுற்றாடல் அறிவு துணைபுரிய வேண்டும் என்பதே நோக்கமாகும். இருந்தும் சுற்றாடல் அறிவை ஒரு மாணவன் ஒரு நூலின் துணைக்கொண்டு கற்பதில் அர்த்தமில்லை அதாவது, மாணவன் தனது சூழலுடன் தொடர்பு கொண்டவனாகவும், சூழலை அவதானிப்பதன் ஊடாகவும் தனது அனுபவங்களை செயற்பாடுகளின் ஊடாக பெற்றுக்கொள்வதன் ஊடாகவும் தான் சுற்றாடல் அறிவு மாணவர்களிடத்தில் விருத்தியடையும் என்பது எனது கருத்தாகும்.

ஆதலினால்தான் சில குறிப்புக்களையும், விளக்கங்களையும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உதவியுடன் செயற்பாடுகளாக திட்டமிட்டு வழங்கியுள்ளேன். அதை அடிப்படையாகக்கொண்டு மாணவர்களாகிய நீங்கள் செயற்பாடுகளில் ஈடுபட்டு அனுபவங்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் எதிர் பார்க்கின்றேன். வெறுமனே இப் புத்தகத்தை மட்டும் படியாமல் செய்து பார்த்தல்களில் ஈடுபடுமாறும் வேண்டுகிறேன்.

உங்கள் எதிர்கால வாழ்வின் வெற்றிக்கு எனது மனமார்ந்த பிரார்த்தனைகளும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

**ஆசிரியர்**
**திருமதி. A.K.S. றிஸானா ஹில்மி**
**(B.ED,Dip.in.Teach)**

**குறிஞ்சி வெளியீடு**
**280-A, Nethra offset printers**
**D.S. Senanayaka veediya**
**Kandy**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


காருப்பொருள் 1.0. எமது நல்வாழ்வு

காருப்பொருள் 2.0. நாம் இலங்கையர்

காருப்பொருள் 3.0. மரஞ்செடி கொடிகள்

காருப்பொருள் 4.0. எம்மைச் சூழவுள்ள பிராணிகள்

காருப்பொருள் 5.0. நாம் பயன்படுத்துபவை

காருப்பொருள் 6.0. எமது உணவு

காருப்பொருள் 7.0. பாதுகாப்பும் கரிசனையும்

காருப்பொருள் 8.0. நீர்

காருப்பொருள் 9.0. போக்குவரத்து

காருப்பொருள் 10.0. வீட்டுத்தோட்டம்

காருப்பொருள் 11.0. வேலையை இலகுபடுத்திக் கொள்ளும் வழிகள்

காருப்பொருள் 12.0. மனித நடத்தைகள்

காருப்பொருள் 13.0. நிலமும் வானும்

காருப்பொருள் 14.0. எம்மால் செய்யக்கூடிய மாற்றங்கள்

காருப்பொருள் 15.0. மனிதனும் தகவல்களும்

காருப்பொருள் 16.0. எமது பண்டைய தகவல்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருப்பொருள் 01 எமது நல்வாழ்வு

தமது அன்றாட வேலைகளை வெற்றிகரமாகச் செய்வதற்காகநேரத்தை உரியவாறு பயன்படுத்தல்.

### செயற்பாடு 01

- 60 - 90 cm அல்லது அதிலும் கூடிய உயரமான நிலைக்கண்ணாடியை பொருத்தமான ஓர் இடத்தில் வைத்தல். அதன் அருகே சீப்பு, நகம் வெட்டி போன்றவற்றையும் வைத்தல்.
- ஒவ்வொரு மாணவரும் தாம் கொண்டுள்ள நல்லவற்றை நிலைக்கண்ணாடியில் பார்க்கச் செய்தல்.
- மாணவர் ஒவ்வொருவராக தமது உருவத்தை நன்கு பார்த்தல்.
- தமது தோற்றத்தில் அழகாக ஒழுங்காக நன்றாக இருப்பவை பற்றி கூறுதல்.
- தமது தோற்றத்தில் அழகாக ஒழுங்காக நன்றாக இல்லாதவைப் பற்றி கூறுதல்.
- ஒழுங்கின்றிக் காணப்படும் யாதேனும் ஒன்றை நேர்த்தியாக்கிக் கொள்ளல்.
- "கண்ணாடியில் கண்ட எனது உருவம்" எனும் தலைப்பில் சித்திரம் வரைதல்.
- மாணவர்கள் இருவர் இருவராகச் சேர்ந்து தாம் வரைந்த சித்திரத்தை விபரித்தல்.





◆. கண்ணாடியில் பார்த்த எனது உருவம் (பாடலைப் பாடி மகிழ்தல்)

கண்ணாடி முன்னே கண்ணாடி முன்னே
என்னை என்னைப் பார்த்தேன்
தலை முடியைப் பார்த்தேன்
வடிவாய் சீவிக் கொண்டேன்

முகத்தைப் பார்த்தேன்
வடிவாய் அலங்கரித்தேன்
உடையைப் பார்த்தேன்
அழகாய் சீராக்கிக் கொண்டேன்

சுற்றிச் சுற்றிச் சுழன்றேன்
என் அழகைக் கண்டு வியந்தேன்
இறைவன் தந்த அழகை
வீணடிக்கலாமோ? என் நண்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 02

❖. **மாணவர்கள் பயன்படுத்தக் கூடிய பொதுவான ஒரு நாளுக்குரிய நேரசூசி**

| | |
|---|---|
| •. நித்திரை விட்டு எழும்புதல் | மு.ப - 5.00 மணி |
| •. முகம் கழுவுதல் (குளித்தல்) | மு.ப - 5.00 - 5.30 மணி |
| •. இறைவனை வணங்குதல். | மு.ப - 5.30 - 5.45 மணி |
| •. தேநீர் குடித்தல் | மு.ப - 5.45 - 6.00 மணி |
| •. பாடசாலை சீருடை அணிதல் | மு.ப - 6.00 - 6.15 மணி |
| •. காலை உணவு உட்கொள்ளல் | மு.ப - 6.15 - 6.30 மணி |
| •. இலேசாக பாடங்களை மீட்டல் (மனனம் செய்தல்) | மு.ப - 6.30 - 7.00 மணி |
| •. பாடசாலைக்கு செல்லல் | மு.ப - 7.00 - 7.20 மணி |
| •. பாடசாலை ஆரம்பம் | மு.ப - 7.30 (காலைக் கூட்டத்தில் பங்குக்கொள்ளல்) |
| •. பாடங்களைக் கற்றல் | மு.ப - 8.00 - பி.ப 2.00 மணி |
| •. வேதம் கற்றல் | பி.ப - 3.00 - 4.00 மணி |
| •. விளையாடுதல் | பி.ப - 4.00 - 5.00 மணி |
| •. வீட்டைக் கூட்டுதல் (ஒழுங்குப்படுத்தல்) | பி.ப - 5.00 - 5.30 மணி |
| •. பூஞ்செடிகளுக்கு நீர் ஊற்றுதல் | பி.ப - 5.30 - 5.45 மணி |
| •. உடலைத் தூய்மைப்படுத்தல் | பி.ப - 5.45 - 6.00 மணி |
| •. இறை வணக்கம் | பி.ப - 6.00 - 6.15 மணி |
| •. பாடங்களைப் படித்தல் | பி.ப - 6.15 - 7.45 மணி |
| •. இரவு உணவு | பி.ப - 7.45 - 8.15 மணி |
| •. தொலைக்காட்சியில் செய்தி பார்த்தல் | பி.ப - 8.15 - 8.45 மணி |
| •. நாளைக்கான உடைகளை தயார்படுத்தல், அழுத்துதல் | பி.ப - 8.45 - 9.15 மணி |
| •. பல் துலக்குதல் | பி.ப - 9.15 - 9.30 மணி |
| •. நித்திரைக்குச் செல்லுதல் | பி.ப - 9.30 மணி |

●. **சிறுபராயம் முதலே ஒரு நேரசூசியின் படி வேலைசெய்யப் பழகுவதன் முக்கியத்துவம்**

•. காலம் பெறுமதியானது காலத்தை வீண்விரயமாகாமல் பாதுகாத்தல்.

•. திட்டமிட்டபடி வேலைகளை இலகுவாக செய்யலாம்.

•. பதற்றம் பயம் இல்லாமல் போகும்.

•. களைப்பு ஏற்படாது.

•. இதனால் மன அழுத்தம் குறைக்கப்படும்.

•. வாழ்க்கையில் நிம்மதி கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாழ்வில் சாதிக்கக்கூடியவற்றை சாதித்திடலாம்.
- வாழ்க்கையில் இலக்கு தடுமாறிப்போகாது.
- உரிய நோக்கத்தை வெற்றிகரமாக அடையலாம்.

- **நேரத்திற்கு வேலை செய்வோம்.**

வேலை செய்வோம் வேலை செய்வோம்
நாம் ஒன்றாய் வேலை செய்வோம்
திட்டமிட்டு வேலை செய்வோம்
உரிய நேரம் பேணிடுவோம்
உலகையே வென்றிடுவோம்

காலம் பொன்னானது நினைவில் வைத்திடுவோம்
காலத்தை வென்றுவிட்டால் நன்மைகள் அதிகமன்றோ
நிம்மதி வேண்டுமென்றால் காலத்தைக் காத்திடுவோம்
வீறு நடை போட்டு நாமும்
வெற்றிகளை கொண்டாடுவோம்

- **உரிய நேரத்தில் வேலைகளைச் செய்து முடிக்காமையால் மாணவர் எதிர் நோக்கும் பிரச்சினைகள்.**

- தொடர்ச்சியான பயம் ஏற்படல்.
- அழுது கொண்டே பாடசாலைக்கு வருகைத் தரல்.
- ஆசிரியரிடத்தில் பேச்சு வாங்குதல்.
- ஏனைய மாணவர்கள் ஏளனம் செய்தல்.
- மனம் குழப்பமடைதல்.
- கற்கும் பாடங்களை உள்வாங்க முடியாமை.
- வகுப்பில் பின்னடைதல்.
- ஏனையோரது பாராட்டுக்கள் கிடைக்காமல் போதல்.
- அதிபரது கவனத்திற்கு கொண்டு செல்லப்படுதல்.

(அவ்வாறு ஏற்பட்ட சந்தர்ப்பங்களை மாணவர்களுடன் கலந்துரையாடல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை - 2**

**மாந்தோப்புக் கிராமத்தில் சிறந்த கமக்காரனைத் தெரிவு செய்யும் போட்டி**

அறிவிப்பாளர் : முருகேசுத் தாத்தா, உங்களது இந்த வெற்றிக்கு என்ன காரணம் எனக் கூறுவீர்களா?

முருகேசுத் தாத்தா : நான் எனது வேலைகளைச் சரியான நேரத்தில் செய்தேன்.

அறிவிப்பாளர் : கொஞ்சம் விளக்கமாகக் கூறுங்கள்.

முருகேசுத் தாத்தா : மழைக்காலத்தில் வயலில் வேலை செய்தேன்.
கோடை காலத்தில் சேனையில் வேலை செய்தேன்.
சரியான நேரத்தில் சேனையில் நெல்லை விதைத்தேன்.
சரியான நேரத்தில் அறுவடை செய்தேன்.

அறிவிப்பாளர் : நீங்கள் ஒரு சுறுசுறுப்பான கமக்காரர்.

முருகேசுத் தாத்தா : "எந்த வேலையையும் நேரத்திற்குச் செய்து முடிக்க வேண்டும்" என்று எனக்குச் சின்ன வயதிலேயே எனது அப்பா சொல்லித் தந்தார்.

- **இக்கதையில் முருகேசுத் தாத்தாவின் வெற்றிக்கான காரணங்களை கலந்துரையாடல்.**

படிமுறை - 03

குழு A : யாதேனும் வேலையை உரிய நேரத்தில் செய்து முடிப்பதால் கிடைக்கும் நன்மைகள் பற்றிக் கலந்துரைாடல்

குழு B : யாதேனும் வேலையை உரிய நேரத்தில் செய்து முடிக்க முடியாமல் போவதால் ஏற்படும் பாதகமான நிலைமைகளை கலந்துரையாடல்.

மாணவரது அனுபவங்களை வெளியிடுவதற்கு சந்தர்ப்பம் அளித்தல்.

**உரிய நேரத்தில் வேலைகளைத் திட்டமிட்டு செய்வதால் வாழ்வில்**
**பல சாதனைகளை புரியலாம்.**
**வெற்றி அடையலாம்.**
**அபிவிருத்தியை நோக்கி வீறு நடைப்போடலாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு 3

•. மனிதர் பொது இடங்களில் தவறான வகையில் நடந்துக் கொள்ளும் சந்தர்ப்பங்கள், செய்யும் தவறுகள், பொது இடங்களைப் பாதுகாத்தல்

•. தவறான நடத்தைகளை திருத்திக் கொள்ளும் முறைகளும் பொது இடங்களைப் பாதுகாத்தலும்

•. **பொது இடங்கள்**

- நூலகம்
- பேருந்து நிலையம்
- வைத்தியசாலை
- வங்கி
- பெருந்தெரு
- பொது மலசலக்கூடம்
- பொது வாகனங்கள்
- பொதுச் சந்தை

•. மாணவர்களை A,B என குழுக்களாக்கி தவறான நடத்தைகளை சுட்டிக்காட்டுவதோடு அவற்றை சரியான நடத்தைகளாக மாற்றுவது தொடர்பாக கலந்துரையாடல்.

◆ **நூலகம்**

குழு - A **தவறான நடத்தை**

உரத்துப் பேசி ஏனையோருக்கு இடைஞ்சல் விளைவித்தல்

குழு - B **சரியான நடத்தை**

அமைதியாக, ஏனையோருக்கு இடைஞ்சல் இன்றி நடத்தல்

◆ **பேருந்து நிலையம்**

குழு - A **தவறான நடத்தை**

ஏனையோரைத் தள்ளிக்கொண்டு ஓடிச் சென்று ஏறுதல்

குழு - B **சரியான நடத்தை**

ஒருவர் பின் ஒருவராக ஏறுதல்

◆ **வைத்தியசாலை**

குழு - A **தவறான நடத்தை**

வரிசையில் ஒழுங்காக செல்லாமல் இடையில் பாய்தல் தொலைப்பேசியில் உரத்து கதைத்தல், ஆங்காங்கே குப்பைகளை போடுதல், எச்சில் துப்புதல்

குழு - B **சரியான நடத்தை**


இலக்கத்தொடருக்கு ஏற்ப வரிசையில் செல்லுதல், தொலைப்பேசியை நிறுத்தி வைத்தல், குப்பைகள் போடுவதையும், எச்சில் துப்புவதையும் முற்றாகத் தவிர்த்தல். இது போன்று ஏனைய இடங்களையும் கருத்திற்கொண்டு செயற்படுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 4

❖. **ஆரோக்கியமான செயற்திறன் மிக்க வாழ்க்கைக்குத் தேவையான உடல், உளத் தகைமையை ஏற்படுத்துவதற்காக சூரிய நமஸ்காரச் செயற்பாட்டில் ஈடுபடல்.**



## செயற்பாடு 5

❖. ஆன்மீகப் பொருத்தப்பாட்டிற்காக நாளாந்தம் வாழ்க்கையில் பழக்கமாக்கிக் கொள்ள வேண்டிய மனதை இதப்படுத்தும் செயற்பாடுகள்.

### படிமுறை - 1 உடலைத் தளர்த்துதல்

சௌகரியமாக அமருக. கண்களை மூடிக்கொள்க. மெல்லமெல்ல கை, கால்களைத் தளர்த்துக. கால்விரல்கள், கணுக்கால்கள், முழங்கால்கள், வயிறு, இடுப்பு, நெஞ்சு, தோள்கள், கைகள், கைவிரல்களைத் தளர்த்துக. கழுத்து - தலைப் பிரதேசங்களைத் தளர்த்துக. உள்மூச்சு வாங்குக. வெளிமூச்சு விடுக.................... சுவாசிக்குக.

### படிமுறை - 2 உள்ளத்தைத் தளர்த்துதல்

•. மாணவரை விழித்துப் பின்வருமாறு கூறுக.

" உங்களது உடல் இப்போது தளர்ந்துவிட்டது. உங்களது உடல் இதமாக இருக்கிறது. இனி உள்ளத்தையும் இதப்படுத்துவோம். இனி உள்ளத்தைத் தளர்த்துவோம். தூரத்தே கேட்கும் ஒலிகளைச செவிமடுங்கள். சுற்றுப்புறத்தில் கேட்கும் ஒலிகளைச் செவிமடுங்கள். அருகே கேட்கும் ஒலிகளைச் செவிமடுங்கள். உங்கள் இதயத்துடிப்பைச் செவிமடுங்கள்.

எமது சுவாசத்தைச் செவிமடுப்போம். சினக்கும், கவலைப்படும் உள்ளத்தை விடுத்தும் நினைவுகளிலிருந்தும் நீங்குவோம். எண்ணங்களைத் தளர்த்துவோம். உள்ளம் அமைதி பெறட்டும், உள்ளம் இதம் பெறட்டும், உள்ளத்தில் அமைதி நிலைக்கட்டும், உள்ளம் இவற்றை உணரட்டும், எண்ணங்கள் நல்லவையாகட்டும்.!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படிமுறை - 3 திடசித்தம்

மாணவரை விழித்துப் பின்வருமாறு கூறுக. பின்வருமாறு எண்ணிப்பார்க்குமாறு பிரேரிக்க.

'எனது உள்ளத்தை என்னால் அமைதிப்படுத்த முடியும். எனது உள்ளத்தின் அமைதியை ஏனையோர் உணரத்தக்க வகையில் நான் நடந்துகொள்வேன். எனது வகுப்பிற்கு - பாடசாலைக்கு - வீட்டிற்கு நான் ஒளியாவேன். நான் ஆசிரியரின் அறிவுரைப்படி நடந்து, கல்வியில் வெற்றிபெற்றேயாகுவேன். நான் எனது குடும்பத்திற்கும் வீட்டிற்கும் நற்பண்புள்ள ஒரு நல்ல பிள்ளையாவேன். நான் நாட்டிற்கும் உலகிற்கும் பயனுள்ள ஒருவனாவேன்.'

## படிமுறை - 4 பிரார்த்தனை

- எனது உள்ளம் அமைதியுறுவதால் கிடைக்கும் நிம்மதியை உணரட்டும்! எமது நண்பர்களின் உள்ளங்களும் அதனை உணரட்டும்!
- எனது குடும்பத்தார் அனைவரது உள்ளங்களும் அதனை உணரட்டும்! சிறிய வகுப்புகளைச் சேர்ந்த தம்பி - தங்கைகளின் உள்ளங்களும் அதனை உணரட்டும்! பாடசாலையில் உள்ள எல்லோரது உள்ளங்களும் அதனை உணரட்டும்!
- பிராணிகளும் மரஞ்செடிகொடிகளும் அதனை உணரட்டும்! அனைவரது உள்ளங்களும் அமைதி பெறட்டும்! நிம்மதி பெறட்டும்!

## படிமுறை - 5 உதிப்பு

எனது உள்ளம் அடக்கமாக உள்ளது. எனது உள்ளத்தால் உணரப்படும் நிம்மதியை வகுப்பு நண்பர்களுக்கும் இப்போது என்னால் பகிர முடியும். எனது அண்மை நண்பர்களுக்கும் பகிர முடியும். எனது வகுப்பிற்கும் பாடசாலைக்கும் நான் ஓர் ஒளிவிளக்காவேன். எனது குடும்பத்தாருக்கும் நான் ஒரு மணி விளக்காவேன். நான் ஓர் ஒளிவிளக்காக உலகிற்கு ஒளியூட்டுவேன்.

- இதமடைந்த உள்ளத்துடன் வேலை செய்வதற்காக சில தடவைகள் சுவாசியுங்கள்.
- உள்ளத்தை அமைதியாக வைத்து இரண்டு நிமிட நேரத்தை அமைதியாக கழியுங்கள்

### செயற்பாடு 6

❖ **திவாகரனின் கதையைச் சுவையாகவும் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையிலும் முன் வைத்தல், கதையைக் கூறும் போது**

1. அம்மா, எங்கே காணவில்லையே ................
2. அம்மா அவசரமான ஒரு வேலைக்காக அதிகாலையிலேயே வெளியே போனாள்.
3. உங்களை ஆயத்தப்படுத்த என்னால் முடியாது
4. நான் டீச்சரிடம் சொல்லுகின்றேன் இன்றைக்கு வீட்டில் இருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- . போன்ற இடங்களில் கதை கூறுவதை நிறுத்தி மாணவரை கொண்டு கதையை கட்டியெழுப்புதல்.
- . அது பற்றி கலந்துரையாடல்
- . கதையை முழுமையாக முன் வைத்தல்.
- . தமது வேலைகளை தாமே செய்து கொள்வதால் கிடைக்கும் பயன்கள் பற்றி கலந்துரையாடல்

**திவாகரனின் கதை**

திவாகரன் காலையில் துயிலெழுந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். அம்மா எங்கே, காணவில்லையே. பாட்டியின் அறையைப் பார்த்தான். (திவாகரனின் அம்மா அவசரமான ஒரு வேலைக்காக அதிகாலையிலேயே வெளியே போனார்.) எனக்கு இடுப்பு வலிக்கிறது. எழுந்திருக்க முடியவில்லை. உங்களை ஆயத்தப்படுத்தவும் என்னால் முடியாது. நான் ரீச்சரிடம் சொல்லுகிறேன். இன்றைக்கு வீட்டில் இருங்கள்.


நீங்கள் எழுந்திருக்க வேண்டாம். பாட்டி! திவாகரன் பல்துலக்கி, முகம் கழுவி, சீருடையணிந்து, பாதணிகள் அணிந்து, தலை சீவி பாட்டியின் அறையின் அருகே வந்தான். தனியாக ஆயத்தமாகிவிட்டாயா? நல்ல பிள்ளை. ஆம் பாட்டி நான் ஆயத்தமாகிவிட்டேன்.

பிள்ளைக்கு இறைவன் துணை. கவனமாகப் போய்வாருங்கள்!

பாட்டிக்குச் சரியான கவலை. பாட்டி அம்மாவுகடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நடந்தவற்றை விவரித்தார். அம்மா பெரிதும் மகிழ்ந்தார். அம்மா உடனே ஆசிரியையுடன் தொடர்புகொண்டு விவரங்களைக் கூறினார்.

காலையில் பாடசாலை ஆரம்பமாகியது. பாடசாலையைத் தொடங்குமுன்னர், ஆசிரியர் திவாகரனை அழைத்தார். திவாகரன் வகுப்பின் முன்னே நின்றுகொண்டிருந்தான். திவாகரனின் கெட்டித்தனத்தை நண்பரின் எதிரே ஆசிரியர் கூறினார். பாராட்டினார்.

இப்படியான பிள்ளைகள் தான் எதிலும் வெற்றியடைவார்கள். சரி எல்லோரும் திவாகரனுக்காக ஒரு தடவை கைத்தட்டுங்கள்



" எனது வேலையை நானே செய்து கொள்கிறேன்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திவாகரன் போன்று செயற்படும் மாணவர்களை அறிந்து பாராட்டுதல்.
- திவாகரனின் கதையில் தாம் விரும்பும் ஓர் சம்பவத்தை சித்திரமாக வரைவதற்கு வழிப்படுத்தல்.

- **தாமே தமது வேலைகளை செய்து கொள்வதால் கிடைக்கும் பயன்கள்**

1. உளத் திருப்தி
2. மகிழ்ச்சி
3. பாராட்டு
4. தகைமை விருத்தி
5. நேரம் வீணாகாமை

மாணவர்கள் வரைந்த சித்திரத்தில் கீழ் **"எனது வேலையை நானே செய்து கொள்கிறேன்."** எனும் கூற்றை எழுதவிடல்.

### செயற்பாடு 07

**இசை நாடகத்தை நடித்தல்.**

மாணவர் : பொரித்த உணவுகள் இனிப்புப் பலகாரங்கள்
வண்ண வண்ண ஐஸ் பக்கெற் உண்ண எமக்கு ஆசை
பாட்டி : பொரித்த உணவுகள்
உண்ண வேண்டாம் பிள்ளைகளே//
மாணவர் : சரி இனி நாம் உண்ண மாட்டோம்.
பாட்டன் : இனிப்புப் பலகாரங்கள்
உண்ண வேண்டாம் பிள்ளைகளே//
மாணவர் : சரி இனி நாம் உண்ண மாட்டோம்
ஆசிரியை : வண்ண வண்ண ஐஸ் பக்கெற்
உண்ண வேண்டாம் பிள்ளைகளே//
மாணவர் : சரி இனி நாம் உண்ண மாட்டோம்.

**PHI** பொதுச்

சுகாதாரப் பரிசோதகர் : முருங்கைக் கீரை, அகத்தி, வல்லாரை, சாரணை
உண்ண நல்ல கீரைகள்
அனைவரும் : நல்ல சுவை நல்ல சுவை சுகந்தரும் கீரைகள்
வைத்தியர் : வீட்டுத்தோட்ட காய்கறி
கத்தரிக்காய், பாகற்காய், வாழைக்காய், தாக்காளி
தவிட்டரிசிச் சோற்றுடனே உண்ணுங்கள் பிள்ளைகளே
அனைவரும் : நல்ல சுவை நல்ல சுவை சுகம் தரும் உணவுகள்!
ஆசிரியை : உடல் நன்கு வளருமே, சக்தியும் கிடைக்குமே
எமது வகுப்பு பிள்ளைகள், நாடு போற்றும் பிள்ளைகள்
நாம் வெற்றி வெறுவோம், நாம் வெற்றி பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 8

❖. முன்மாதிரியான நற்பழக்கங்கள் அடங்கிய பாடலைப் பாடி மகிழ்க

**ஆசை வை!**

பள்ளிக்கூடம் செல்வதற்கு ஆசை வை! - தம்பி
பாடங்களைப் படிப்பதற்கு ஆசை வை!

துள்ளி விளையாடுவதற்கு ஆசை வை! - என்றும்
தூய்மை நலம் காப்பதற்கு ஆசை வை!

கள்ளமின்றிப் பழகுவதற்கு ஆசை வை! - மிக்கக்
கனிவுடனே பேசுவதற்கு ஆசை வை!

வெள்ளையுள்ளம் கொள்வதற்கு ஆசை வை! - வாழ்வில்
வெற்றி பெற உழைப்பதற்கு ஆசை வை!

அன்னை தந்தையரை மதிக்க ஆசை வை! - உனது
ஆசான் சொன்னபடி நடக்க ஆசை வை!

அன்பும் பண்பும் கொண்டொழுக ஆசை வை! - மக்கள்
அனைவரையும் விரும்புதற்கே ஆசை வை


- மாணவர்களை மூவர் கொண்ட குழுக்களாகப் பிரித்து நல்லவற்றைப் பழகிக்கொள்வோம். எனும் தலைப்பில் ஆக்கங்கள் செய்தல், காட்சிப்படுத்தல்.
- கவிதைகளை வாசித்தல், கவிதைகள் எழுதுதல்
- சித்திரங்களை இரசித்தல், சித்திரங்களை வரைதல்.
- மரஞ்செடிக்கொடிகளை அவதானித்தல், மரங்களை வளர்த்தல்.
- பிராணிகளின் நடத்தைகளை அவதானித்தல், வியத்தல், அவற்றை பாதுகாத்தல்.
- நண்பர்களுடன் இணக்கமாக நடத்தல், உதவிபுரிதல்.
- பெரியோரை மதித்தல், உதவிகளை செய்தல்.
- சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிராணிகளின் உருவங்களைப் பின்னல் (இவ்வாறான ஆக்கங்களை குழுவாகச் செய்ய விடுக)**





**கடதாசிப் பீங்கான் ஆக்கங்கள்**







**கடதாசி ஆக்கங்கள்**





## செயற்பாடு 9

❖. பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல் என்ற நோக்கில் விளையாடுதல்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திட்டப்படத்தில் “ஆரம்பிக்கும் இடம்” எனக் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் மாணவரை நிறுத்துக. (வட்டத்தின் விட்டம் ஏறத்தாழ ஓர் 30 சென்றிமீற்றர்)
- அவ்வெல்லையைத் தாண்டாதவாறு மற்றைய மாணவர் இருக்கும் இடத்துக்குப் பந்தை உருட்டுதல் வேண்டும். பந்தைப் பெறும் மாணவனை அவ்விடத்தில் இருந்து இரண்டாம் மாணவனுக்கும் அவர் மூன்றாம் மாணவனுக்கும் அவர் நான்காம் மாணவனுக்கும் அவர் ஐந்தாம் மாணவனுக்கும் பந்தை அனுப்புதல் வேண்டும்.
- மீண்டும் ஐந்தாம் மாணவரில் ஆரம்பித்து முதலாம் மாணவர் வரை பந்தை உருட்டி அனுப்பி ஆரம்ப இடத்துக்கு அனுப்புதல் வேண்டும்.
- குழுவின் இரு புறங்களிலும் ஏறத்தாழ 30 சென்றிமீற்றர் தூரத்தில் உள்ள பொதுச் சொத்துக்களைக் காட்டும் குறியீடுகள் பாதுகாக்கப்படும் வகையில் செயற்படுதல், சட்டத்திட்டங்களைச் சரியாகப் பின்பற்றுதல், துரிதமாகச் செய்து முடித்தல் ஆகியவற்றைக் கவனத்திற்கொண்டு வெற்றிபெறும் குழுவைத் தீர்மானம் செய்து கொள்ளலாம்.

**Activity Based Oral English**

| Suggested vocabulary & useful expressions | Songs / Games / Activities | Conversational Language between class teacher and students, students and students |
|---|---|---|
| **01. Our Good Behaviour**<br>01. win<br>02. loss<br>03. happy<br>04. sad<br>05. smile<br>06. sing<br>07. life<br>08. clean<br>09. dirty<br>10. bend<br>11. stretch your arms<br>12. put your arms down<br>13. stand straight<br>14. run to the wall<br>15. come back<br>16. run to the blackboard<br>17. turn around<br>18. sit down | **Song**<br>win or loss - happy or sad //<br>Smile and sing - it`s our life //<br><br>**Game**<br>01. Stand up<br>02. Bend forward<br>03. Touch your toes<br>04. Stand straight<br>05. Stretch your arms<br>06. Put down your arms/ put your arms down.<br>07. Run the wall<br>08. Come back<br>09. Run on the Spot<br>10. Stop<br>11. Turn around<br>12. Let`s go to the classroom/ sit down | **Useful Expressions**<br>01. I am Ruwan<br>What` your name?<br>02. How old are you?<br>I am eight / nine<br>03. What`s your School?<br>My School is Dharmapala Vidyalaya<br><br>04. In Which grade are you?<br>I`m in grade three/ four |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு வினாக்கள்

**பயிற்சி 01**

**(01) தொடர்புபடுத்துக**

01. உடலைத் தளர்த்துதல் • நான் நற்பண்புள்ள ஒரு நல்லபிள்ளையாவேன்.

02. மனதைத் தளர்த்துதல் • உள்மூச்சு வாங்குக வெளிமூச்சு விடுக


03. திடசித்தம் • எனது குடும்பத்துக்கு நான் ஒரு மணிவிளக்கு

04. பிரார்த்தனை • நான் உணரும் நிம்மதியை எனது நண்பர்களும் உணரட்டும்

05. உதிப்பு • அருகே கேட்கும் ஒலிகளை செவிமடுங்கள்

**(02) பொருத்தமான உருவை இணைக்குக**

01. படி 3
02. படி 4
03. படி 2
04. படி 5
05. படி 8




**(03) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

01. நூலகத்தில் அமைதியாக நூலை வாசிக்க வேண்டும். ( )
02. முகம் பார்க்கும் கண்ணாடி எமது ஒழுங்கீனங்களைக் காட்டும். ( )
03. ஒன்பது வயதுடைய நாம் எமது வேலைகளை நாமே செய்ய வேண்டும். ( )
04. திவாகரன் பாராட்டத்தக்க மாணவனாவான். ( )
05. எமது வேலைகளை வேகமாகச் செய்வதற்கு நேரசூசி அவசியமில்லை ( )
06. முருகேசுத் தாத்தா நேரத்தின் மீது அக்கறைக் கொண்டவர். ( )
07. பெருந்தெருக்களில் குப்பைகளைக் கொட்டுவது நல்லப்பழக்கமாகும். ( )
08. வைத்தியசாலையில் கையடக்கத்தொலைப்பேசியை பயன்படுத்தவது சிறந்தது.( )
09. பொரித்த உணவுகளை உண்பதை குறைத்துக் கொள்வது நல்லது. ( )
10. சிறுவயதிலிருந்தே சிறிய ஆக்கங்களை செய்து மகிழ வேண்டும். ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(04) இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை வைத்து எழுதுக.**

01. எமது வேலைகளை நாமே செய்தால் எமக்கு ............................... உண்டாகும்.

02. ஆரோக்கியமாக வாழ்வதற்கு ............................................ உண்ண வேண்டும்.

03. உள்ளத்தை தளர்த்துவதால் ................................... துடிப்பின் ஒலியை உணரமுடியும்.

04. திடசித்தம் என்பது ......................................... ஆகும்.

05. பொது வாகனங்களில் பயணிக்கும் போது உரத்து ...................................... கூடாது.

06. பொது மலசலகூடத்தைப் பயன்படுத்தும் போது .......................... நீர் ஊற்ற வேண்டும்.

07. உரிய நேரத்தில் வேலை செய்தால் ............................................... கிடைக்கும்.

08. முகம் பார்க்கும் கண்ணாடியைப் பார்த்து எம்மை .............................. படுத்திக்கொள்ள முடியும்.

| |
|---|
| மனவுறுதி, கதைக்க, அழகு, இதயத், மனநிம்மதி, இருமுறை, கீரைகள், வெற்றி |

**(05) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக**

01.  இவ் உரு சூரிய நமஸ்காரச் செயற்பாட்டில் எத்தனையாம் படிமுறையாகும்,

1) 2ஆம் 2) 3ஆம் 3) 6ஆம் 4) 5ஆம்

02. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் இறுதியானது எது?

1) உடலைத்தளர்த்துதல் 2) மனவுறுதி 3) மலர்வு 4) பிரார்த்தனை

03. சூரிய நமஸ்காரச் செயற்பாடுகளில் முதலாவதும், இறுதியுமான செயற்பாடு,

1)  2)  3)  4) 

04. எதிர்காலத்தில் எனது நாட்டுக்குப் பயனுடைய ஒருவராக வருவேன். என்பது எத்தனையாவது படிமுறையில் இடம்பெறும்,

1) படிமுறை - 1 2) படிமுறை - 3 3) படிமுறை - 5 4) படிமுறை - 4

05. மனதைத் தளர்த்துதல் செயற்பாட்டில் இடம்பெறுவது,

1) உள்மூச்சு வாங்குதல், மூச்சை வெளிப்படுத்தல்

2) பாடசாலைக்காக ஆற்ற வேண்டிய பொறுப்புக்களை கட்டாயமாக ஆற்றுவேன்.

3) தூரத்தே கேட்கும் ஒலிகளை செவிமடுத்தல்.

4) நான் ஓர் ஒளிவிளக்காவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06.  இவ்வுரு சூரிய நமஸ்காரச் செயற்பாட்டில் எத்தனையாவது படிமுறை ஆகும்.

1) 3வது  2) 4வது  3) 6வது  4) 2வது

07. எவ்வகை உணவுகளை அதிகம் உண்டால் கேடு உண்டாகும்.

1) கீரைகள்  2) பருப்பு வகைகள்
3) இனிப்பு வகைள்  4) பழ வகைகள்

08. கீரை வகைகளில் ஒன்று எது?

1) அன்னமுன்னா  2) அகத்தி  3) அவரை  4) சோளம்

09. சிறந்த போசணைச் சத்துள்ள சோறு எது?

1) பச்சரிசிச்சோறு  2) சம்பா சோறு
3) தவிட்டரிசிச்சோறு  4) பாஸ்மதிச்சோறு

10. அதிகம் உண்ணக்கூடாத உணவு எது?

1) பிஸ்கட் வகைகள்  2) புளிப்புப் பழங்கள்
3) கடலைகள்  4) ஐஸ் பக்கற்றுகள்

11. நாம் நாட்டுக்காக செய்யக்கூடிய பணி

1) பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்  2) பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லல்
3) ஆடல் பாடல்களில் ஈடுபடல்  4) மூத்தோருக்கு பணிபுரிதல்

12. பின்வரும் எந்தக்கீரை வகையின் பூவை உண்ண முடியும்?

1) வல்லாரை  2) அகத்தி  3) பசளி  4) முருங்கை

13. நேரசூசிப்படி இயங்குவதால் கிடைப்பது

1) களைப்பு  2) நேர வீண்விரயம்  3) வெறுப்பு  4) சுறுசுறுப்பு

14. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகள்

1) 5  2) 4  3) 6  4) 10

15. **"நான் நாட்டிற்கும் உலகிற்கும் பயனுள்ள ஒருவனாவேன்"** இவ்வெண்ணம் தோன்றுவது

1) உதிப்பில்  2) திடசித்தத்தில்
3) பிரார்த்தனையில்  4) உள்ளத்தை தளர்த்துதலில்

16. விளையாட்டு ஒன்றில் பேணப்பட வேண்டியது

1) நேரம்  2) விறுவிறுப்பு  3) சட்டதிட்டம்  4) சீருடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கருப்பொருள் 02 நாம் இலங்கையர்

### செயற்பாடு 01

❖. **தேசியக்கொடி தொடர்பான அடிப்படை தகவல்கள்**

- தேசியக்கொடி ஏன் எமக்கு முக்கியமாகின்றது?
- தேசியக்கொடியில் உள்ள வெவ்வேறு குறியீடுகள் யாவை?
- எவ்வாறான சந்தர்ப்பங்களில் தேசியக்கொடி ஏற்றப்படுகிறது?

இவைக்குறித்து கலந்துரையாடல்



சிவப்பு நிறப் பின்னணியில் மஞ்சள் நிற வாளேந்திய சிங்க உருவம் - சிங்கள மக்கள்


செம்மஞ்சள் நிறப் பட்டி - தமிழ் மக்கள்


பச்சை நிறப் பட்டி - முஸ்லிம் மக்கள்

முழுக் கொடியையும் சுற்றிவர இடப்பட்டிருக்கும் மஞ்சள் நிறப் பட்டி - இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையையும் கொடியின் முழுமைப்பாட்டையும் குறிக்கிறது.

கொடியின் உள்ளேயுள்ள நான்கு அரச இலைகள் - இரக்கம், காருண்யம், திருப்தி, பற்றின்மை ஆகிய நான்கு பண்புகளைக் குறிக்கின்றன.

தேசியக்கொடியை ஏற்றலும் தேசியக்கீதத்தை பாடுதலும்





நிமிர்ந்து நிற்றல் / கவனமாக நிற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ❖. தேசியக்கொடியின் முக்கியத்துவம்

1. எமது நாட்டின் அடையாளமே தேசியக்கொடியாகும்.
2. எமது நாட்டில் வாழும் இனத்தவர்களை அது பிரநிதித்துவப்படுத்துகிறது.
3. தேசத்தின் ஒற்றுமையை அது நிலைப்படுத்தியுள்ளது.
4. மனித வாழ்க்கைக்குத் தேவையான அறக்கருத்துக்களையும் அது வலியுறுத்தியுள்ளது.

### ❖. தேசியக்கொடி ஏற்றப்படுகின்ற சந்தர்ப்பங்கள்

1. தேசிய சுதந்திரத்தினத்தில் ஏற்றப்படும்.
2. பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி மற்றும் பாடசாலை விழாக்களின் போது
3. தேசிய விழாக்களின் போது

### ❖. தேசிய கீதமும் நாட்டுப்பற்றும்

1. தேசியகீதத்தின் பொருளை உணரச்செய்தல்
2. தேசியகீதத்தை சரியான உச்சரிப்புடன் நாட்டுப்பற்றுடனும் விளக்கத்துடனும் நிமிர்ந்து நின்றுப் பாடுதல்.

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 02

### ❖. தேசிய இலச்சினை


●. தேசிய இலச்சினை காணப்படும் இடங்கள்

01. இலவசப்பாடநூல்கள்
02. அரச பொது வாகனங்கள்
03. அரச ஆவணங்கள் (பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், வாகன அனுமதி பத்திரம், காப்புறுதி அட்டை, ஆள் அடையாள அட்டை, அரசாங்க நிறுவனங்களின் கடித தலைப்பு, கடவுச் சீட்டு)

**●. தேசிய இலச்சினை பொறிக்கப்பட்டுள்ள கட்டடங்கள்**

01. அஞ்சல் அலுவலகம்
02. நீதி மன்றம்
03. பொலிஸ் நிலையம்
04. கல்விக் காரியாலயங்கள்
05. வைத்தியசாலை
06. பிரதேசச் செயலகம்
07. மாவட்டச் செயலகம்

**●. அரச இலச்சினையின் பகுதிகளும் உணர்த்தும் விளக்கங்களும்**






**"அரச இலச்சினையின் முழுமையான விளக்கம் தன்னிறைவான ஒரு நாட்டில் சூரியனும், சந்திரனும் இருக்கும் காலமெல்லாம் அறத்தைப் பாதுகாத்தவாறு மக்கள் யாவரும் ஓங்கட்டும்."** எனும் ஒட்டுமொத்தக் கருத்து எடுத்துக்காட்டப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| நிறைக்குடம் | - | சௌபாக்கியம் |
| நெற்கதிர் | - | தன்னிறைவும் செழிப்பும் |
| மத்தியில் இருக்கும் வாளேந்திய சிங்கம் | - | நாடும் கட்டுப்பட்டான மக்களும் |
| தர்மச்சக்கரம் | - | தார்மீகம் |
| சூரியன், சந்திரன் | - | நிலைத்திருப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **ஒரு நாட்டின் பெருமையையும் தனித்தவத்தையும் எடுத்துகாட்டும் குறியீடுகள்**
- இலங்கையின் தேசிய பறவை - காட்டுக்கோழி
- இலங்கையின் தேசிய மலர் - நீலோற்பலம்
- இலங்கையின் தேசிய விளையாட்டு - கரப்பந்து (வொலிபோல்)
- இலங்கையின் தேசிய மரம் - நாகமரம்



## செயற்பாடு - 3

◆. **தாம் பார்த்த ஊர்வலங்கள்**


- ஊர்வலம் செல்வதைக் கண்ட இடம்
- ஊர்வலம் நடத்தப்பட்டதற்கான காரணம்
- ஊர்வலத்தின் சிறப்பம்சங்கள்
- ஊர்வலத்தைப் பார்த்த விதம் தொடர்பாக கலந்துரையாடுதல்.

- **ஊர்வலங்கள்**

- வேல் ஊர்வலம்
- மீலாத்விழா
- கரோல் பாடல் நிகழ்வுகள்
- மிஹிந்து ஊர்வலம்
- கதிர்காம ஊர்வலம்
- கத்தோலிக்க / கிறிஸ்தவ தேவாலய ஊர்வலங்கள்
- தலதா ஊர்வலம்
- வெசக் பத்திப்பாடல் ஊர்வலம்



வேல் ஊர்வலம்




கதிர்காம ஊர்வலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மடுமாதா ஊர்வலம்




தலதா ஊர்வலம்




மிஹிந்து ஊர்வலம்



வெசக் பக்திப்பாடல் ஊர்வலம்



கரோல் பாடல் நிகழ்வுகள்





மீலாதுன் நபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஊர்வலம் ஒன்றை திட்டமிட்டு மாணவர்களை பங்குபற்றச்செய்க.
- மாணவர்கள் பார்த்துள்ள பண்பாட்டு அம்சங்களை சித்திரமாக வரைக.

தலதா ஊர்வலம் (நிறம் தீட்டுக)



### செயற்பாடு 4

நாட்காட்டியைப் பயன்படுத்தி ஆண்டில் விசேட சமய உற்சவங்கள் நடைபெறும் திகதிகளை கண்டறிந்து அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| உற்சவம் | சமயம் | திகதி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

அனைவரும் இலங்கையர் என்ற வகையில் சகல சமயங்களையும் மதித்தல் வேண்டும் எந்த வொரு சமயத்தையும் விமர்சித்தலாகாது.. அது மட்டுமன்றி ஏனைய இனத்தவரதும் ஏனைய சமயத்தவருடனும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்பவற்றை கலந்துரையாடல் (வலியுறுத்திக் கூறல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**●. ஊர்வலங்கள் நடத்துவதற்கான காரணங்கள்**

•. மக்களது பாரம்பரியங்களை நினைவூட்டல்.
•. பண்பாட்டு அம்சங்களை வெளிக்கொணரல்.
•. வரலாற்றுப் பெறுமானத்தை ஞாபக மூட்டல்.
•. இயந்திரமயமான வாழ்க்கைத்தன்மையிலிருந்து விலகி சரித்திரத்தை மீட்டிப் பார்த்து இன்புறல்.
•. தேசத்தின் பண்பாட்டு சிறப்பம்சங்களை ஏனைய நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்தல்.

**●. ஊர்வலங்கள் நடத்தப்படும் காலப்பகுதி (தேடியறிக)**

•. வேல் ஊர்வலம் - ..........................................................................
•. கதிர்காம ஊர்வலம் - ..........................................................................
•. கிறிஸ்தவதேவாலய ஊர்வலம் - ..........................................................................
•. கரோல் பாடல் நிகழ்வுகள் - ..........................................................................
•. தலாதா ஊர்வலம் - ..........................................................................
•. மிஹிந்து ஊர்வலம் - ..........................................................................
•. வெசக் பக்திப்பாடல்கள் - ..........................................................................

**●. ஊர்வலங்களின் பண்பாட்டு அம்சங்களின் முக்கியத்துவம்**

01. தலதா ஊர்வலம் :புத்தபெருமானின் தாதுவை ஜூலை ஆகஸ்ட் காலப்பகுதியில் கண்டி மாநகரில் தொடர்ந்து 8 நாட்கள் யானைகள் ஊர்வலத்தோடும் கலாசார பாரம்பரிய நடனங்களுடனும் தியவடன நிலமே மூலம் கொண்டு செல்லப்படும்.

02. மிஹிந்து ஊர்வலம் : மே, ஜூன் மாத காலப்பகுதியில் மகிந்ததேரரின் வருகையை நினைவூட்டம் செய்வதற்காக இவ்வூர்வலம் நடத்தப்படும்.

03. மீலாத் விழா : நபி முஹம்மது (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தின் நினைவாக போட்டி நிகழ்ச்சிகளை நடத்தி பரிசுகள் வழங்குதல்.

04. கிறிஸ்தவ தேவாலய ஊர்வலங்கள்: மடுமாதா ஊர்வலம் ஜூலை மாதம் நடைபெறும்


05. வேல் ஊர்வலம் : மார்ச் மாதக்காலப்பகுதிகளில் நடைபெறும்.

**●. ஊர்வலங்களின் போது பயன்படுத்தப்படும் வாத்தியக்கருவிகள்**


தம்பட்டம்


தவில்


மேளம்



கொம்பு


இவையனைத்தையும் காண் ஒளி மூலம் வீடியோக்காட்சிகளில் மாணவர்களுக்கு சமர்ப்பிக்குக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● வெவ்வேறு சமயங்கள் சார்ந்த அலங்காரிப்புகள்


கோலம் போடுதல்


வெசக்கூடு செய்தல்


நத்தார் மாட்டுத்தொழுவம் அமைத்தல்

● ஒவ்வொரு இனத்தவரின் பண்டிகைகளின் போது ஏனைய சமயத்தினர் உதவும் முறைகளை கலந்துரையாடல்.

**செயற்பாடு 5**

❖. இலங்கையில் வாழும் வெவ்வேறு மக்கள் பிரிவினர் தொடர்பாக கலந்துரையாடல்.

● வெவ்வேறு இனமக்களின்

- உணவுகள், பானங்கள்
- ஆடையணிகள்
- பண்பாடு மற்றும் சமய உற்சவங்கள்
- பிறவிடயங்கள் (வெவ்வேறு இனத்தவர்களின் பெயர்கள்)

**சிங்களவர்**





உடைகள்


உணவுக்

**தமிழர்**




உணவுகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம்கள்











உணவுகள்

## பறங்கியர்கள்





உணவுகள்



பைபிள் வாசித்தல்

- சகல இன மக்களும் ஒற்றுமையாக, இலங்கையர்களாகச் செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்திப்பாடல் ஒன்றைப் பாடுதல்.

Lowe sema
ekama deye
dudaruvan weva..
Vada nethi
Beda nethi
Lassana lowa heta apata uda weva..

Manusskam ahaka dama
Jathevadayen udamwela
Sathurukamin pilbedila
Menisa mulawela..
Manu daye minisune
waada weela pala nathe
eka raane ekwu daa
lowa lassana wanne

Lowe sema
ekama deye
dudaruvan weva..
Vada nethi
Beda nethi
Lassana lowa heta
apata uda weva..

Vetunu keneku hata nege sittinata
atha dennata pekelennepa
Ohuge rata jathiya agama kula
gotha gena hoyanna epa..
Samaye getheka
pathurala mulu lo thale
Eka yaye.. vasawemu
semada ekata bendi..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Lowe sema<br>ekama deye<br>dudaruvan weva..<br>Vada nethi<br>Beda nethi<br>Lassana lowa heta apata uda weva.. | Lowe sema ekama deye<br>dudaruvan weva<br>for unity<br>peace and harmony<br>may we live tomorrow together as one |
| Lowe sema ekama deye<br>dudaruvan weva..<br>waadaam illei<br>beedam illei<br>alagiya ulaham<br>naalei mala hirada | Lowe sema ekama deye<br>dudaruvan weva<br>Vada nethi<br>Beda nethi<br>Lassana lowa heta apata uda weva.. |

**செயற்பாடு 6**

❖. எமது நாடு தொடர்பாக மாணவர்கள் அறிந்து வைத்துள்ள விடயங்களைக் கலந்துரையாடல்

**●. நாட்டின் மீது அன்பு செலுத்தக்கூடிய வழிகள்**

- சூழல் சுத்தம் பேணல்.
- இன மத பேதமின்றி ஒற்றுமையாக ஒருவருக்கு உதவி, ஒத்தாசை செய்து வாழுதல்.
- சகல சமயங்களையும் மதித்தல்.
- தீய பழக்கங்களையும் விட்டு விலகி நற்பழக்கவழக்கங்களை கடைப்பிடித்தல்
- பொதுச்சொத்துக்களைப் பாதுகாத்தல்.
- மரங்களை நடுதல்.

**●. நாட்டிற்கு சேவை செய்யக் கூடிய வழிகள்**

- சிறந்த முறையில் கல்வி கற்றல்.
- தாய் நாட்டிலே தொழில் புரிதல்.
- சமூக சேவைகளில் ஈடுபடுதல்
- பாடசாலையின் அபிவிருத்திக்கு உதவுதல்.
- வளங்களை வீண்விரயமின்றி பயன்படுத்தல்.

**●. தாய் நாட்டை மதிக்கத்தக்க வழிகள்**

- வரலாற்று பண்பாட்டு அம்சங்களைப்பாதுகாத்தல்.
- அனைவரதும் சமயத்தளங்களைப் பாதுகாத்தல்.
- அரச நிறுவனங்களின் வீண்விரயத்தை தடுத்தல்.
- சூழலை அழகுப்படுத்தல்
- பிற நாட்டவர்களுக்கு எமது நாட்டின் பெருமைகளை எடுத்துக்கூறல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- . தேசியக்கொடி தேசியக்கீதம் ஆகியவற்றுக்கு மதிப்பளித்தல்.
- . எவ்விடத்திலும் இலங்கையன் என்ற உணர்வோடு வாழப்பழகுதல்.

☞. நேர்மையான, பணிவான, நம்பகமான ஒரு மாணவராக / பிரசையாக செயற்படுவதால் குடும்பம், பாடசாலை, நாடு பெருமைப்படத்தக்க விதம் பற்றி கலந்துரையாடல்.

- **ஏனையோருக்கு இடைஞ்சலோ, தடங்கல்களோ, அழுத்தங்களோ ஏற்படாதவாறு வாழுவது பற்றி கலந்துரையாடல்.**


☞. 1815 இல் இலங்கை பிரித்தானியர்களால் முழுமையாகக் கைப்பற்றப்பட்ட பின்னர் நாட்டை அவர்களது பிடியிலிருந்து விடுவிப்பதற்காக அரும்பணிகள் ஆற்றிய தியாகங்கள் செய்த வீரதீரம் மிக்க தலைவர்கள் இன மத பேதங்களின்றி செயற்பட்ட விதங்கள் தொடர்பான தகவல்களை தேடி வரச் செய்தல்.

☞. அவர்களின் ஒருவரை தெரிவு செய்து வகிபாகம் ஏற்று நடித்துக்காட்டச் செய்தல்

**வீரதீரமிக்க தலைவர்கள்.**



D.S. சேனாநாயக்க




C.W.W. கன்னங்கரா




D,P.ஜயா



சேர்.பொன். இராமநாதன்



M.C. சித்திலெப்பை



அநகாரிகதர்மபால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 7

◆. **தமது பிரதேசத்தில் உள்ள வெவ்வேறு நிறுவனங்களும் அந்நிறுவனங்களால் ஆற்றப்படும் சேவைகளும்**

| அரச நிறுவனங்கள் | தனியார் நிறுவனங்கள் |
|---|---|
| பிரதேசச் செயலகம் | தனியார் வங்கி |
| மாவட்டச் செயலகம் | சிறப்பு அங்காடி |
| அஞ்சல் அலுவலகம் | டையலொக்(Dialog) நிறுவனம் |
| இலங்கை மின்சார சபை | கார்கில்ஸ் புட்சிட்டி |
| நீர் வழங்கல், வடிகால் அமைப்புச்சபை | சிங்கர் நிறுவனம் |
| இலங்கை டெலிகொம் நிறுவனம் | தம்ரோ நிறுவனம் |
| இலங்கைப் போக்குவரத்துச்சபை | தனியார் பல்கலைக்கழகங்கள் |
| இலங்கை மத்திய வங்கி | செலின்கோ இன்சூரன்ஸ் |
| கிராம சேவகர் அலுவலகம் | காப்புறுதி நிறுவனங்கள் |
| விவசாய சேவை மத்திய நிலையம் | தனியார் வைத்தியசாலைகள் |
| பொலிஸ் நிலையம் | |
| குடி வரவு, குடியகழ்வுத்திணைக்களம் | |
| ஆட்பதிவு திணைக்களம் | |
| பிரதேச சபை | |
| நகர சபை | |
| மாகாண சபை | |

- அந்நிறுவனங்களால் ஆற்றப்படும் சேவைகள் தொடர்பாக கலந்துரையாடல்.
- அரச நிறுவனமொன்றின் பிரதிநிதி மற்றும் அரச சாரா நிறுவனமொன்றின் உயர் அதிகாரி ஒருவரை அழைத்து தமது நிறுவனத்தினால் ஆற்றப்படும் சேவைகளைக் குறித்து மாணவர்களுக்கு அறிவூட்டம் செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **சேவைகளும் வழங்கும் நிறுவனங்களும்.**

| | |
|---|---|
| 01. போக்குவரத்துச் சேவை | இலங்கை போக்குவரத்துச் சபை |
| 02. ஆள் அடையாள அட்டை | ஆட்பதிவு திணைக்களம் |
| 03. கடவுச்சீட்டு | குடிவரவு குடியழ்வுத் திணைக்களம் |
| 04. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் | பிறப்பு, இறப்பு. திருமணம் பதிவுசெய்யும் |
| 05. வருமானத்தை உறுதிப்படுத்தல் | கிராம சேவகர் அலுவலகம் |
| 06. நற்சான்றுப்பத்திரம் வழங்குதல் | கிராம சேவகர் அலுவலகம் |
| 07. வதிவிடத்தை உறுதி செய்தல் | கிராம சேவகர் அலுவலகம் |
| 08. காணாமல் போன ஆள் அடையாள அட்டை பற்றிய அறிக்கையைப் பதிவு செய்தல் | பொலிஸ் நிலையம் |
| 09. சேமிப்புக்கணக்கொன்றை ஆரம்பித்தல் | வங்கி |
| 10. வாக்காளர் இடாப்பில் பிரதியொன்றை பெற்றுக் கொள்ளல் | மாவட்டத்தேர்தல் ஆணையாளர் |
| 11. குழந்தைகளுக்கு போலியோ ஊசி வழங்குதல் | சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் |
| 12. மரப்பலகை வெட்டுவதற்கு அனுமதிப்பத்திரம் | மாவட்டச்செயலகம் |
| 13. தென்னை பயிர்ச்செய்கைக்கான பசளையை அறிதல் | விவசாய சேவை மத்திய நிலையம் |
| 14. சைக்கிள் வண்டிக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல். பொது நூலகங்களைப் பராமரித்தல், சூழலைச் சுத்திகரித்தல் வியாபார அனுமதிப்பத்திரங்களை வழங்குதல். | பிரதேச சபை அலுவலகம் |
| 15. முத்திரை வாங்குதல், தந்தி அனுப்புதல் கடிதம் அனுப்புதல், தபால் அட்டை வாங்குதல், பொதி அனுப்புதல், காசு கட்டளைகள் மூலம் பணம் அனுப்புதல், நீர், மின்சாரம், தொலைபேசி கட்டணங்களை செலுத்துதல் | அஞ்சல் அலுவலகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 8

❖. **பருந்து மாமி விளையாட்டை விளையாடுதல்**

பருந்து மாமி பறந்து வந்து மான் குட்டி பிடித்தாள்
பருந்து மாமி பறந்து வந்து எலிக்குஞ்சு பிடித்தாள்
பருந்து மாமி பறந்து வந்து முயற்குட்டி பிடித்தாள்
ஆனாலும் என்னைப் பிடிக்க முடியாது - முடியாது




## செயற்பாடு 9

• ஒரே தேசம் என்ற வகையில் எமது பெருமையை எடுத்துக்கூறும் பாடல்கள், கவிதைகள் பாடுதல்.

**தேசப்பற்றுப் பாடல்கள்**

மகாவலி பாய்வதும் இந்நாடே
மாணிக்கம் விளைவதும் இந்நாடே
பாவலர் இசைப்பதும் இந்நாடே
பாவளம் நிறைந்ததும் இந்நாடே

செந்தமிழ் வாழ்வதும் இந்நாடே
சிங்களம் வாழ்வதும் இந்நாடே
ஆழ்கடல் சூழ்ந்ததும் இந்நாடே
அகிம்சை வாழ்வதும் இந்நாடே

மலைகள் உணர்ந்ததும் இந்நாடே
வயல்கள் நிறைந்ததும் இந்நாடே
தேயிலை வளர்வதும் இந்நாடே
தெங்குகள் நிமிர்வதும் இந்நாடே

\- நல்லை அமிழ்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<table>
<tr><th colspan="3">Activity Based Oral English</th></tr>
<tr>
<td>02. We are SriLankans<br><br>01. Sri Lankans<br>02. Sinhalese<br>03. Tamils<br>04. Muslims<br>05. Burghers<br>06. Food<br>07. dress<br>08. Language<br>09. Hand in hand<br>10. national anthem<br>11. national flag<br>12. national bird<br>13. national flower<br>14. national tree<br>15. national game<br>16. national dress<br>17. national hero<br>18. temple<br>19. church<br>20. mosque<br>21. kovil<br>22. crib<br>23. Christmas tree<br>24. Kolam<br>25. wesak lantern<br>26. jungle fowl<br>27. blue waterlily<br>28. 'Na' tree<br>29. vollyball</td>
<td>Song<br><br>We are Sri Lankans //<br>We are sons and daughters of you.<br><br>We are Sinhalese, we are Tamils,<br>We are Muslims or Burghers.<br>We are Sri Lankans //<br>We are sons and daughters of you.<br><br>Though our food, though our dress,<br>though our language is different<br>let`s live happily //<br>Let`s live happily in hand in hand.</td>
<td>Useful Expressions<br><br>05. Where do you live?<br>I live in Maharagama.<br><br>06. How many Sisters do you have?<br>I have one sister / two sisters / no sisters<br><br>07. How many brothers do you have?<br>I have one brother / two brothers / no brothers</td>
</tr>
</table>



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு வினாக்கள்

**பயிற்சி 01**

**(01) தொடர்புபடுத்துக**

| | |
|---|---|
| 01. தர்மச் சக்கரம் | தன்னிறைவு |
| 02. சூரியச் சந்திரன் | உலக நிலைத்திருப்பு |
| 03. பூரணக் கும்பம் | தூய்மை |
| 04. மலரிதழ் | சௌபாக்கியம் |
| 05. நெற்கதிர் | தார்மீகம் |

**(02) இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை தெரிந்து நிரப்புக.**

01. தேசியக்கொடியில் பச்சை நிறப்பட்டி .................................................. மக்களை பிரதிநித்துவப்படுத்தும்.
02. தேசியக் கொடியைச் சுற்றியுள்ள மஞ்சள் நிறங்கள் தேசத்தின் ........................................ வெளிப்படுத்தும்.
03. சிங்கத்தின் வாள் நேர்மையான ........................................ வெளிப்படுத்தும்.
04. செம்மஞ்சள் நிறப்பட்டி ................................................ மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும்.
05. தேசியக்கொடியிலுள்ள மூலைகளில் உள்ள அரச இலைகள் ................................சார்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தும்.
06. ஒரு நாட்டின் தனித்துவத்தை ............................................................ காட்டி நிற்கும்.
07. ............................................................................................ தினத்தன்று தேசியக்கொடி ஏற்றப்படும்.
08. தேசியகீதத்தினைப் பாடும் போது ............................................................... நிற்க வேண்டும்.
09. இலங்கையின் தேசிய மரம் ........................................................ஆகும்.
10. இலங்கை நாட்டின் தேசியப்பறவை ........................................ ஆகும்.

**(03) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

01. நீலோற்பலம் ஊதா நிறத்தில் காணப்படும். ( )
02. வொலிபோல் விளையாட்டில் ஒரு அணியில் ஆறுபேர் பங்குபற்றுவர். ( )
03. தேசிய கீதத்தை ஆனந்த சமரகோன் இயற்றியுள்ளார். ( )
04. ஆள் அடையாள அட்டையில் அரச இலச்சினைக் காணப்படும். ( )
05. செலிங்கோ இன்சூரன்ஸ் ஓர் அரச நிறுவனம் ஆகும். ( )
06. இரத்தினபுரி மாவட்டத்தில் மாணிக்கம் அகழ்ந்தெடுக்கப்படும். ( )
07. இலங்கை மூன்று பக்கம் கடலால் சூழப்பட்ட நிலமாகும். ( )
08. கிராம அலுவலர் வதிவிடத்தை உறுதி செய்வார். ( )
09. மத்திய வங்கி இலங்கை அரசுக்கு சொந்தமானதாகும். ( )
10. தலாதா ஊர்வலம் ஆகஸ்ட் மாதம் நடைபெறும். ( )







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(04) பொருத்தமாக இணைக்குக**

| | |
|---|---|
| 01. மாட்டுத்தொழுவம் | தமிழர் |
| 02. வெசக் கூடு | கிறிஸ்தவர் |
| 03. கோலம் போடுதல் | மீலாதுன் நபி |
| 04. கரோல் பாடல்கள் | மகிந்த தேரர் வருகையின் நினைவு |
| 05. முஹம்மது நபியின் பிறப்பு | கண்டி மாநகரம் |
| 06. மிஹிந்து ஊர்வலம் | சிங்களவர் |
| 07. மடுமாதா ஊர்வலம் | மன்னார் |
| 08. தலதா ஊர்வலம் | நத்தார் |

**(05) பின்வரும் உருக்களுக்குப் பெயரிடுக.**

1.................................. 2.................................. 3.................................. 4..................................

**(06) வினாக்களுக்கு விடை தருக.**

01. நாணயங்களையும் தாள்காசுகளையும் அச்சிட்டு வெளியிடும் நிறுவனம் எது?

.................................................................................................................................

02. அரச இலச்சினைக் காணப்படும் இடம் இரண்டு எது? ..........................................................

03. அரச இலைகள் நான்கினதும் பண்புகளை எழுதுக? ..........................................................

.................................................................................................................................

04. இலங்கை நாட்டில் காணப்படும் நீளமான ஆறு எது? ..........................................................

05. இலங்கையில் வளரும் பிரதான பயிர்கள் 3 தருக? ..........................................................

06. கத்தோலிக்க மக்களின் பெயர்கள் 2 தருக? ..........................................................

07. தேசியக்கொடி ஏற்றப்படும் சந்தர்ப்பம் ஒன்றை தருக? ..........................................................

08. இலங்கையின் தேசிய விளையாட்டு எது? ..........................................................

09. வேத நூலாக அல்குர்ஆனை பயன்படுத்துவர் யார்? ..........................................................


10. கோலம் போடுவதற்கு பயன்படும் பொருள்கள் எவை? ..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 6156

**(07) கீழே தரப்பட்டுள்ள தேசியக்கொடிக்குப் பொருத்தமான நிறங்களைப் பயன்படுத்தி நிறந்தீட்டுக.**



Arasady Public Library
Municipal Council
Batticaloa.

**(08) மிகச் சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

01. அரச இலச்சினையில் உள்ள குறியீடுகளில் அடங்காதது எது?
    1) தர்மச்சக்கரம் 2) நிறைகுடம் 3) பூவிதழ்கள் 4) தென்னம்பூ
02. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
    1) வலைப்பந்து 2) வொலிபோல் 3) கிரிக்கட் 4) எல்லே
03. இலங்கையின் அரச இலச்சினையில் 'சௌபாக்கியத்தைக்' குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள குறியீடு யாது?
    1) நிறைகுடம் 2) நெற்கதிர்கள் 3) தர்ம சக்கரம் 4) சூரியனும் சந்திரனும்
04. 'தேசிய கீதத்தைப் பாடும் போது' உடலை வைத்திருக்க வேண்டிய சரியான நிலை அல்லாதது
    1) கவனமாக நிற்றல் 3) உடலை நேராக நிமிர்த்தி வைத்திருத்தல்
    2) இலகுவாக நிற்றல் 4) கண்களைத் திறந்து வைத்திருத்தல்
05. படத்தில் தரப்பட்டுள்ள இலச்சினையினால் குறிக்கப்படுவது



    1) ஸ்ரீ லங்கா விமான சேவை
    2) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்
    3) இலங்கை கனிய எண்ணெய்க் கூட்டுத்தாபனம்
    4) இலங்கை அஞ்சல் சேவை
06. இலங்கையின் தேசிய பறவையாகக் காட்டுக்கோழியைத் தெரிவு செய்தமைக்கான பிரதான காரணம் யாது?
    1) எமது நாட்டில் அதிகமாகக் காணப்படுகின்றமை.
    2) இந்நாட்டிற்கே உரித்தானதாக இருக்கின்றமை.
    3) எல்லாப் பிரதேசங்களிலும் காணப்படக்கூடியதாக உள்ளமை.
    4) மிக்க பயனுடையதாக இருக்கின்றமை.
07. மிகிந்து ஊர்வலம் நினைவூட்டுவது
    1) புத்தரின் வரலாறு 2) மகிந்த தேரரின் வருகை
    3) சங்கமித்தை வருகை 4) அசோக மன்னன் வரலாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. இலங்கையின் தேசியக்கொடி, அரச இலச்சினை ஆகிய இரண்டிலும் காணப்படும் குறியீடு

1) பூவிதழ்கள் 2) நிறைகுடம்

3) அரச இலைகள் 4) வாளேந்திய சிங்கம்

09. இலங்கை மக்களால் சுதந்திர தினம் கொண்டாடப்படுவது

1) ஜனவரி 1ஆந் திகதி 2) பெப்ரவரி 4ஆந் திகதி

3) ஏப்பிரல் 13ஆந் திகதி 4) மே 1ஆந் திகதி

10. இலங்கையின் தேசியப் பறவை

1) குயில் 2) கிளி 3) காட்டுக்கோழி 4) புறா

11. தேசிய கீதத்தைப் பாடும்போது நாம் நிற்க வேண்டிய முறை

1) இலகுவாக நிற்றல் 2) கவனமாக நிற்றல்

3) பொறுமையாக நிற்றல் 4) ஒழுங்காக நிற்றல்

12. இலங்கை அரச இலச்சினையில் சூரியனும் சந்திரனும் அடையாளப்படுத்துவது

1) சௌபாக்கியத்தை ஆகும். 2) தன்னிறைவை ஆகும்.

3) நிலைத்திருத்தலை ஆகும் 4) கட்டுப்பாடான நாட்டு மக்களை ஆகும்.

13. நாணயங்களையும், தாள்காசுகளையும் அச்சிட்டு வெளியிடும் நிறுவனம்

1) இலங்கை மத்திய வங்கி 2) இலங்கை வங்கி

3) தேசிய சேமிப்பு வங்கி 4) இலங்கை மக்கள் வங்கி

14. இலங்கையின் அரச இலச்சினையில் காணப்படும் குறியீடு

1) அரச இலை 2) அன்னம் 3) சூரியன் 4) நாகப்பாம்பு

15. இலங்கை தேசியக் கொடியில் தமிழ் மக்களைக் குறித்து நிற்பது

1) செம்மஞ்சள் நிறப் பகுதி 2) செந்நிறப் பகுதி

3) பச்சை நிறப் பகுதி 4) மஞ்சள் நிறப் பகுதி

16. இலங்கை அரசாங்க இலச்சினையில் உள்ள நிறைகுடத்தினால் குறிப்பிடப்படுவது

1) சௌபாக்கியம் 2) தன்னிறைவு 3) தார்மீகம் 4) நிலைத்திருத்தல்

17. இலங்கை அரசாங்க இலட்சினையில் நிலைத்திருப்பதைக் குறிப்பது

1) தர்மச் சக்கரம் 2) நிறைகுடம்

3) பூவிதழ்கள் 4) சூரியனும், சந்திரனும்

18. நத்தார் பண்டிகையை கொண்டாடும் இனத்தவர்

1) சிங்களவர் 2) தமிழர் 3) முஸ்லிம்கள் 4) கிறிஸ்தவர்

19. ஒருவர் வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழைப்பெறச் செல்ல வேண்டியது

1) பிரதேசச் செயளாலரிடம் 2) கிராம அலுவலரிடம்

3) பொலீஸ் நிலைய அலுவலரிடம் 4) சமுர்த்தி அலுவலரிடம்

20. "சகல சௌபாக்கியங்களையும் கொண்ட தன்னிறைவான இந்நாட்டில் சூரியனும் சந்திரனும் நிலைத்திருக்கும் காலமெல்லாம், தார்மீகத்தைக் காத்தவாறு நாட்டு மக்கள் யாவரும் இருப்பார்களாக!" இக்கருத்தை வெளிப்படுத்துவது இலங்கையின்

1) தேசியக்கொடி 2) அரச இலச்சினை 3) தேசிய மரம் 4) தேசிய கீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருப்பொருள் 03 மரஞ்செடி கொடிகள்

## செயற்பாடு 01

❖. வீட்டுத்தோட்டத்தில் பூக்கும் தாவரங்களை அவதானித்தல்

| வருடத்தில் ஒரு குறித்த காலத்தில் பூப்பவை | காலவேறுபாடு இன்றி பூப்பவை |
|---|---|
| மரமுந்திரி | தென்னை |
| ஜனவரிப்பூ | பாக்கு |
| மாம்பூ | பப்பாசி |
| கொய்யா | வாழை |
| கொன்றை | அலரி |
| ஆவரசு | செவ்வரத்தை |
| முள்முருங்கை | போகன்விலா |
| வேம்பு | ரோஸா |
| முருங்கை | டேலியா |
| கார்த்திகை | சூரியகாந்தி |


செவ்வரத்தம் பூ



நித்தியகல்யாணி


நந்தியாவட்டை


அலரி


நாகலிங்கம்


பவள மல்லிகை


நாக மலர்


வெட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

•. பூப்பூக்கும் காலம் பற்றிக் கூறும் பாடல்கள் / கவிதைகளை சந்தத்திற்கு இசைவாக அங்க அசைவுகளுடன் பாடுதல்.

**பூப்பூக்கும் மாதம்**

தை மாதம் பிறந்தது
புதிய ஆண்டு மலர்ந்தது

மாசி மாதம் பிறந்தது
மா மரம் பூத்தது

பங்குனி மாதம் பிறந்தது
பாலை கீரை பூத்தது

சித்திரை மாதம் பிறந்தது
முருங்கை வேம்பு பூத்தது

வைகாசி மாதம் பிறந்தது
வகை வகை ஓக்கிட் பூத்தது

ஆனி மாதம் பிறந்தது
வாகை, விளா பூத்தது

ஆடி மாதம் பிறந்தது
நாவல் நன்றே பூத்தது

ஆவணி மாதம் பிறந்தது
இலுப்பை கொன்றை பூத்தது

புரட்டாசி மாதம் பிறந்தது
பிறைப்பூ பூத்தது

ஐப்பசி மாதம் பிறந்தது
அன்ன முன்னா பூத்தது

கார்த்திகை பிறந்தது
கார்த்திகைப்பூ பூத்தது

மார்கழி மாதம் பிறந்தது
தாமரைக் குளம் பூத்தது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 2

❖. மாணவர் ஒவ்வொருவருக்கும் ஒரு வகையைச் சேர்ந்த பூக்கள் இரண்டு வீதம் கொண்டு வரச்செய்தல்

•. பூக்கள் பற்றிய தகவல்களை சேகரிக்கச் செய்தல்.

1) 

தாவரத்தின் பெயர் : ரோசாச்செடி
பூதோன்றியுள்ள இடம் : கிளை உச்சியில்

2) 

தாவரத்தின் பெயர் : கொய்யா மரம்
பூதோன்றியுள்ள இடம் : கிளை இடையில்

3) 

தாவரத்தின் பெயர் : நாகலிங்கம்
பூதோன்றியுள்ள இடம் : தண்டில்

4) 

தாவரத்தின் பெயர் : நாகமரம்
பூதோன்றியுள்ள இடம் : சூரியஒளி நன்கு கிடைக்கும் கிளைகளில்

5) 

தாவரத்தின் பெயர் : காம்பரம்காய் மரம்
பூதோன்றியுள்ள இடம் : நிழலான இடங்களில் உள்ள கிளைகளில்


•. பூ தோன்றியிருக்கும் இடம்

| தண்டில் | கிளை உச்சியில் | கிளையின் நடுப்பகுதியில் | சூரிய ஒளி நன்கு கிடைக்கும் கிளைகளில் | நிழலான இடங்களில் உள்ள கிளைகளில் |
|---|---|---|---|---|
| பலா<br>கொக்கோ<br>நெல்லி<br>பூநெல்லி<br>பப்பாசி<br>நாகலிங்கம் | மா<br>ரம்புட்டான்<br>ரோஸா<br>கானேஷன்<br>கனேரு | கோப்பி<br>ஜம்பு<br>மல்லிகை<br>கொய்யா<br>கத்தரி<br>வெண்டி | போகன்விலா<br>செவ்வரத்தை<br>நாகமரம்<br>திருக்கொன்றை<br>பொன்னாவரை | கொக்கோ<br>காம்பரங்காய்<br>அதமணக்கு |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒரு வகைப் பூவை படிப்படியாகப் பகுதிகளாக வேறாக்கி பெயரிட்டு தகவல்களை சேகரித்தல்.





1. பூ இதழ்களின் வடிவம் சமனானதா?
2. பூ இதழ்களின் நிறம் சமமானதா? நிறங்கள் யாவை?
3. ஒரு பூவில் எத்தனை இதழ்கள் உள்ளன?
4. எந்தந்தப் பூக்களில் இதழ்களின் தொகை சமமாக உள்ளன?
5. எல்லாப் பூக்களிலும் கேசரங்கள் உள்ளனவா? அவை ஒத்த வடிவமுடையனவா?

(கைவில்லையைப் பயன்படுத்தி அவதானிக்க வழிப்படுத்தல்) உ-ம் : செவ்வரத்தம் பூ

| பூ இதழ்களின் வடிவம் சமமானதா? | பூ இதழ்களின் நிறம் சமமானதா? நிறங்கள் யாவை? | ஒரு பூவில் எத்தனை இதழ்கள் உள்ளன? | கேசரங்கள் உள்ளனவா? ஒத்த வடிவம் உடையவையா? |
|---|---|---|---|
|  இதழ்கள் சமமானது | சமமானது<br>சிவப்பு நிறம் | 05 |  கேசரங்கள் உள்ளன<br>ஒத்தவடிவமுடையவை |

## செயற்பாடு 3

- பூக்கள் எவ்வாறு நிறத்தைப் பெற்றன என்பது குறித்து செயற்பாட்டில் ஈடுபடல்




(நான்கு நாட்கள் சூரிய ஒளிபடுமாறு வைத்து அவதானித்தவற்றை அறிக்கைப்படுத்துக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- காசித்தும்பை போன்ற ஒரு தாவர வகையின் இரண்டு தாவரங்களை வேர்கள் அறாதவாறு கவனமாகப் பிடுங்கியெடுக்க.( வெண்ணிறப் பூக்கள் பூக்கும் தாவரங்கள் பெரிதும் பொருத்தமானது.)
- அவற்றுள் ஒரு தாவரத்தை நிறமூட்டிய நீர் பாத்திரமொன்றினுள்ளும் மற்றைய தாவரத்தை தெளிவான நீருள்ள பாத்திரமொன்றினுள்ளும் இட்டு (வேர்ப்பகுதி மாத்திரம் அமிழுமாறு ) நான்கு நாட்கள் வரை வைத்துக்கொள்க.
- என்ன நிகழுமென எதிர்வுகூறுமாறு மாணவரை வழிப்படுத்தச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவர் தெளிவாகப் பார்க்ககூடியவாறு ஓர் இடத்தில் இரண்டு பாத்திரங்களையும் வைத்து நிகழுபவற்றை அவதானித்துக் கருத்துத் தெரிவிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- பூக்கள் எவ்வாறு நிறத்தைப் பெற்றன என்பது குறித்து மாணவருடன் கலந்துரையாடுக.




## செயற்பாடு 4

❖. **காய் தோன்றும் போது பூவில் ஏற்படும் மாற்றங்களை அவதானித்தலும் அறிக்கைப்படுத்தலும்**


(வெண்டி, பூசணி, பயற்றை, மிளகாய், தக்காளி)

- விரைவில் வாடிப் போனது பூவின் எப்பகுதி?
- கேசரங்களுக்கு என்ன நடந்துள்ளது?
- காய் தோன்றியதாயின் அப்பகுதி பூ இதழ்களால் மறைக்கப்பட்டிருந்ததா? அல்லது மறைக்கப்படாதிருந்ததா?
- காயாக வளர்ச்சியடைந்த பகுதி, இதழ்களுக்கு மேலே இருந்ததா? கீழே இருந்ததா? இதழ்களின் நடுவே இருந்ததா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூ காயாக மாறும் விதம்






பூசணிப் பூ பூ காயாக மாறும் விதம்

### செயற்பாடு 5

❖. வெவ்வேறு வகைப் பூக்களையும், இலைகளையும் உலர்த்தி ஒட்டி, வாழ்த்து மடல்கள் ஆக்குதல். (இவ்வாறு ஆக்கங்களைச் செய்து மகிழ்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு 6**

❖. தாவரங்களுக்கும் பிராணிகளுக்கும் இடையிலான தொடர்புகளை தேடியறிதல்.

- பறவைகள் எங்கே கூடு கட்டும்?
- செவ்வெறும்பு எந்த மரத்தில் கூடு கட்டும்? தாவரத்தின் எந்தப்பகுதியில் கூடு கட்டும்.
- பறவைகள், அணில், குரங்கு போன்ற பிராணிகள் தாவரத்தின் எப்பகுதிகளை உணவாக உட்கொள்கின்றன.
- பூக்களில் தேன்பருக வரும் பிராணிகள் எவை?
- அப்பிராணிகளால் தாவரங்களுக்குக் கிடைக்கும் பயன்கள் எவை?
- மயிர்கொட்டி, நத்தை, மாடு போன்ற பிராணிகள் தாவரங்களில் எந்தப் பகுதிகளை உண்ணும் அவற்றில் தாவரங்களுக்கு ஏற்படும் தீங்கு / பாதிப்பு யாது?
- **இவற்றை காணொளிக் காட்சிகளாக காட்சிப்படுத்திக்காட்டுக**
- **பறவைகள் கூடுகட்டும் இடங்கள்** : கிளைகள் சேரும் இடங்களில்
  மரத்தண்டுகளில் (பொந்தமைக்கும் )
  இயற்கையான மரப்பொந்துகளில்
- **செவ்வெறும்பு கூடுகட்டும் மரங்கள்** : ஜம்பு, கொய்யா, மா, கோப்பி, பலா, கொக்கோ, ஆனைக்கொய்யா
  (இலைகளைச் சுருட்டிக்கட்டும்)

| **பழங்களை உண்பவை** | **பூக்களை உண்பவை** | **இலைகளை உண்பவை** |
|---|---|---|
| அணில் | மயிர் கொட்டி | நத்தை |
| குரங்கு | வண்டு | ஆடு |
| கிளி | மீலி முட்டைப்பூச்சி | மாடு |
| மைனா | | மயிர்கொட்டி |
| காகம் | | வெட்டுக்கிளி |
| வௌவால் | | அவுக்கலபோரா |
| இருவாச்சி | | இலையட்டை |
| | | இலைப்பூச்சி |

◆. **பூக்களில் தேன்பருகுபவை**

01. வண்டு
02. தேனீ
03. தேன்சிட்டு
04. குளவி
05. வண்ணத்துப்பூச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆. **தாவரங்களால் பிராணிகளுக்கு கிடைக்கும் நன்மைகள்**

01. உணவு கிடைக்கும்
02. வாழிடம் அமைக்க உதவும்
03. பாதுகாப்பு கிடைக்கும்
04. நிழல் கிடைக்கும்
05. சூழல் அழகு பெறல்
06. சுத்தமான வளி கிடைத்தல்.
07. எரிபொருட்களைப் பெற்றுக்கொள்ளல்.
08. நீருற்றுக்கள் வற்றாது பாதுகாத்தல்.
09. ஔடதமாகப் பயன்படுத்துதல்.

◆. **பிராணிகளால் தாவரங்களுக்கு கிடைக்கும் நன்மைகள்**

01. பூக்களின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும்.
02. வித்துக்களை பரம்பலடையச் செய்யும்.
03. பிராணிகளின் மலம், சலம் பசளையாகும்.
04. மண்புழு மண்ணை வளப்படுத்தும்.

◆. **பிராணிகளால் தாவரங்களுக்கு ஏற்படும் தீங்குகள்**

01. தாவரப்பகுதிகளை உண்ணல்.
02. தாவரங்களின் கிளைகளை முறித்தல். இதனால் தாவர வளர்ச்சி குறைவடைதல்,
03. தாவர இலைகளை சுருட்டி கூடமைத்தல்.

## செயற்பாடு 7

❖. தாவரமொன்றின் வெவ்வேறு பகுதிகள் மூலம் மனிதன் பெற்றுக்கொள்ளும் பயன்கள்

❖. உணவாகப் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்

| தாவரத்தின் இலை | காய் | பூ | வேர் | தண்டு |
|---|---|---|---|---|
| வல்லாரை | போஞ்சி | அகத்தி | நன்னாரி | கொகில |
| அகத்தி | வெண்டி | வாழை | கடல் பாசி | வாழைத்தண்டு |
| பொன்னாங்கன்னி | கத்தரி | வெங்காயம் | | கரும்பு |
| முருங்கை | வாழை | கோவா | | |
| கோப்பை இலை | பூசணி | வேம்பு பூ | | |
| இலைப்பசளி | பப்பாசி | | | |
| சிறுகீரை | பயற்றை | | | |
| குறிஞ்சா | பாகல் | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **ஔடதப் பானங்கள்**


| | | | |
|---|---|---|---|
| 01. | வில்லம் பூ பானம் | - | பூ |
| 02. | பொன்னாவரைப்பூ பானம் | - | பூ |
| 03. | மரமஞ்சள் கொடி பானம் | - | தண்டு |
| 04. | கோப்பி பானம் | - | வித்து |
| 05. | கொக்கோ பானம் | - | வித்து |
| 06. | கற்றாளைப் பானம் | - | தண்டு |
| 07. | கொத்தமல்லிப் பானம் | - | வித்து |
| 08. | தூதுவலை இலைப்பானம் | - | இலை |

- **ஔடதங்கள்**

- வெட்டி வேர், ஆடா தோடை, நொச்சி, கறிவேப்பிலை, மரப்பட்டை, கருவா, எலுமிச்சம் இலை, கற்பூரவள்ளி, முத்தாமணக்கு, இலுப்பம் வித்து, குப்பைமேனி, சாத்தாவாரி

### செய்றபாடு 8

❖. மரஞ்செடி கொடிகளின் பெயர்களைக் கூறி விளையாடுதல்.



முன்னே ஒருவர் செல்லல்

அவர் பின்னே ஏனைய மாணவர்கள் செல்லல்

- முன்னே செல்பவர் மரத்தின் பெயரைக் கூறுதல்.
- பின்னே செல்லும் மாணவர்கள் மரத்தின் பெயரைக் கூறக்கேட்டதும் அதே இடத்தில் தரித்து நின்று மரம் காற்றில் ஆடுவது போன்று அசைந்தாடுதல்.
- முன்னே செல்பவர் கொடியின் பெயரைக் கூறவேண்டும்.
- பின்னே செல்லும் மாணவர்கள் அதே இடத்தில் தரித்து நின்று குனிந்து இரு கைகளாலும் நிலத்தை தொட்டபடி வில் வளைவு போன்று நிற்றல்.
- முன்னே செல்பவர் செடியின் பெயரை கூறினால்
- பின்னே செல்லும் மாணவர்கள் அதே இடத்தில் நிலத்தில் அமர்ந்து தலையைச் சற்று பதித்து வைத்திருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றாளையின் பயன்களும், உற்பத்திகளும்.



எண்ணெய்




குளிர் பானம்




ஹெயார் ஜெல்




தேநீர்



சவர்க்காரம்



முகம் கழுவும் சவர்க்காரம்

## Activity Based Oral English

**03. Plants Trees & Creepers**

01. Large plants
02. small plants
03. climbers
04. creepers
05. bushes
06. flowers
07. leaf/ leaves
08. roots
09. trunk
10. branch/ branches
11. bud/ buds
12. stem
13. petals
14. marigold
15. shoe flower
16. rose
17. nectar
18. bloom
19. colour of the petal
20. number of petals
21. squirrel
22. snail
23. monkey

**Song**

Large plants, small plants

Climbers, creepers, bushes ///

trees// green everywhere

(John Brown`s .... tune)

**Game : Find my name**

I am white.

I have five petals.

(teacher shows the picture of a jasmine) Who am I?

*Answer : Jasmine / you are a jasmine*

I am yellow.

I have many petals.

(teacher Shows the picture of a sunflower) Who am I ?

*Answer : Sunflower / you are a sunflower*

**Useful Expressions**

08. What is this?

It`s a bush



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## கணிப்பீட்டு வினாக்கள்

**பயிற்சி**

**(01) தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 01. இலுப்பை பூ | சித்திரை மாதம் |
| 02. முள்முருங்கை | புரட்டாசி மாதம் |
| 03. வாகை | ஆவணி மாதம் |
| 04. பிறைப்பூ | ஆனி மாதம் |
| 05. நாவல் பூ | ஆடி மாதம் |

**(02) பின்வரும் பூக்களின் பெயர்களை எழுதுக.**

1.............................. 2.............................. 3.............................. 4..............................

**(03) பின்வரும் தாவரங்களை அட்டவணைக்கேற்ப வகைப்படுத்துக.**

(கொய்யா, மா, றம்புட்டான், கொக்கோ, பலா, செவ்வரத்தை, எக்சோரா, கத்தரி, வெண்டி)

| தண்டில் பூப்பவை | கிளை உச்சியில் பூப்பவை | கிளையில் நடுப்பகுதியில் பூப்பவை |
|---|---|---|
| | | |

**(04) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளப்படுத்துக.**

01. பொன்னவரைப்பூ பானம் தயாரிக்க உதவும். ( )
02. பூக்களின் மகரந்தச்சேர்க்கைக்கு வண்டு உதவும். ( )
03. அணில் வாழைப்பூவை உண்ணும். ( )
04. மயிர்க்கொட்டி இலைகளை உணவாக உட்கொள்ளும். ( )
05. சில பிராணிகள் மரபொந்துகளை தமது வாழிடங்களாக கொள்ளும். ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(05) மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. பூக்களின் மகரந்த சேர்க்கைக்கு உதவுவது
   1) வண்டு 2) தேனீ 3) குளவி 4) கிளி

02. பூவில் விரைவாக வாடிப்போகும் பகுதி
   1) கேசரம் 2) புல்லி 3) இதழ் 4) காம்பு

03. சூரியஒளி நன்கு கிடைக்கும் கிளைகளில் பூக்கக் கூடிய தாவரம்
   1) கொன்றை 2) கொக்கோ 3) அந்தூரியம் 4) பப்பாசி

04. வருடந்தோறும் பூத்துக் காய்க்கக்கூடிய தாவரம்
   1) செவ்வரத்தை 2) எலுமிச்சை 3) தென்னை 4) பலா

05. நான்கு இதழ்களைக் கொண்ட பூ
   1) அந்தூரியம் 2) தென்னை 3) கொன்றை 4) நாகமலர்

06. நந்தியாவட்டை மலருக்கு இருக்கக்கூடிய இதழ்களின் எண்ணிக்கை யாது?
   1) 5 2) 4 3) 6 4) 3

07. பின்வரும் தாவரங்களுள் ஔடத தாவரம் எது?
   1) வெண்டி 2) ஆடாதோடை 3) எக்கேசியா 4) கட்டாமணக்கு

08. தாவரங்களில் பிரதானமாகப் பின்வரும் எந்தப்பகுதியில் உணவு உற்பத்திச் செய்யப்படும்
   1) பூ 2) காய் 3) வேர் 4) இலை

09. தாவரத்தில் உள்ள இலைகளைக் கொண்டு கூடு அமைத்துக்கொள்ளும் பிராணி
   1) அணில் 2) முசுறு 3) காகம் 4) துக்களாங்குருவி

10. பூக்களின் பகுதிகளை உரியவாறு இனங்காண்பதற்கு உதவக்கூடிய உபகரணம் எது?
   1) திசைக்காட்டி 2) தொலைக்காட்டி
   3) கைவில்லை 4) ஊசித்துளைக் கமரா

11. நிலத்தில் வளரும் தாவரம் ஒன்று நீரையும் பசளையையும் பெறுவது
   1) வேர்களினால் 2) பூக்களினால் 3) வித்துக்களினால் 4) இலைகளினால்

12. தாவர இலைகளை உணவாக உட்கொள்ளும் பிராணி
   1) தேனீ 2) சிட்டுக்குருவி 3) வெட்டுக்கிளி 4) வண்ணத்துப்பூச்சி

13. உலர்த்திய பூக்களை அவிப்பதால் ஓர் ஔடதப் பானம் தயாரிக்கப்படத்தக்க தாவரம்
   1) ஆவரசு 2) கோப்பி 3) கொத்தமல்லி 4) தேயிலை

14. இளஞ்சிவப்பு நிறத் தளிர்களை உருவாக்கும் தாவரம்
   1) எலுமிச்சை 2) நாகமரம் 3) வெற்றிலை 4) பலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. ஒரு வித்தினை மாத்திரம் கொண்ட பழம்

1) நெல்லி 2) விளாம்பழம் 3) மங்குஸ்தான் 4) மாதுளை

16. ஒரு குறித்த காலத்தில் அன்றி வருடம் முழுவதும் பூக்கள் பூக்கும் தாவர வகை பின்வருவனவற்றுள் எது?

1) இறப்பர் 2) தென்னை 3) முள்முருக்கு 4) ரம்புட்டான்

17. தாவர இலைகளை உணவாக உட்கொள்ளும் விலங்கு

1) ஆந்தை 2) பருந்து 3) வண்ணத்துப்பூச்சி 4) நத்தை

18. நான்கு இதழ்கள் உள்ள மலருக்கு உதாரணம்

1) மல்லிகை 2) காட்டு மல்லிகை 3) வெட்சி 4) பவளமல்லிகை

19. பயிர்களைச் சேதப்படுத்தும் விலங்கினமாக அமையாதது


1) பனிப்பூச்சி 2) அழுக்கணவன் 3) நெல் தண்டுகோதி 4) தும்பி

20. பிராணிகளால் தாவரங்களுக்கு கிடைக்கும் நன்மை ஒன்று

1) அழகு பெறுதல் 2) பாதுகாப்புக் கிடைத்தல்

3) வித்துப்பரம்பலடைதல் 4) நோய்கள் உண்டாகுதல்

**(06) பூவின் பகுதிகளை பெயரிடுக**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(07) வினாக்களுக்கு விடை தருக.**

01. தாவரத்தின் பழங்களை உண்ணக் கூடிய பிராணிகள் எவை?

.......................................................................................................

02. வெள்ளை நிறப்பூக்கள் இரண்டைக் குறிப்பிடுக?

1) .................................... 2) ....................................

03. ஐந்திதழ்கள் கொண்ட பூக்கள் இரண்டை எழுதுக?

1) .................................... 2) ....................................

04. வருடம் தோறும் பூக்கக்கூடிய தாவரங்கள் எவை?

.......................................................................................................

05. சமமான இதழ்களைக் கொண்ட பூக்கள் இரண்டு தருக?

1) .................................... 2) ....................................

06. ஔடத தாவர வகைகள் நான்கை எழுதுக?

.......................................................................................................

07. பானம் தயாரிக்கக்கூடிய பூ வகைகள் எவை?

.......................................................................................................

08. கிளி, மைனா போன்ற பிராணிகள் தாவரத்தின் எந்த பகுதிகளில் வாழ்கின்றன?

.......................................................................................................

09. பூக்களுக்கு சேதம் விளைவிக்கும் பிராணிகள் இரண்டு தருக?

1) .................................... 2) ....................................

10. கொடி வகை தாவரங்கள் இரண்டை எழுதுக?

1) .................................... 2) ....................................

11. ஒரு தாவரத்தின் கிளையின் உச்சியில் பூக்ககூடிய பூக்கள் எவை?

.......................................................................................................

12. உணவுக்காகப் பயன்படும் பூக்கள் எவை?

.......................................................................................................

13. தாவரத்தின் இலைகளை உண்ணும் பிராணிகள் எவை?

.......................................................................................................

14. வெள்ளை நிறப் பூவின் நிறத்தை மாற்றுவதற்கு யாது செய்யலாம்?

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருப்பொருள் 04 எம்மைச் சூழவுள்ள பிராணிகள்

## செயற்பாடு 01

◆. பிராணிகளின் இயல்புகள், பிராணிகளின் நடத்தைகள் தொடர்பாக தேடியறிதல்.


•. களப்பயணம் ஒன்றை ஒழுங்கு செய்து பிராணிகளை அவதானிக்கச் செய்து தகவல்களைத் திரட்டச்செய்தல்.

உதாரணம் :

| குழு | இடம் | அவதானித்த பிராணிகள் | அப்பிராணிகள் செய்து கொண்டிருந்த செயல் |
|---|---|---|---|
| 1 | மரத்தின் மேல் | குரங்கு | பழத்தை கையில் எடுத்துச் சாப்பிடுதல் |
| 2 | | | |
| 3 | | | |

◆. அவதானிக்கப்பட்ட சில பிராணிகளின் செயல்கள்


தும்பி


எறும்பு


அணில்


தேனீ


முசுறு


வண்ணத்துப்பூச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஓணான்


கரப்பான்


கறையான்

- **அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு வினாக்களை வினவி கலந்துரையாடல்.**
- மிகக் கூடுதலாகக் காணப்பட்ட பிராணி வகை எது?
- உங்களது கருத்தின்படி அவை அதிக அளவில் அவதானிக்கப்பட்டமைக்குக் காரணம் அவை பெருந்தொகையாகக் காணப்பட்டமையா?
- இல்லையேல் நீங்கள் அவதானித்தது போன்ற சூழலில் அவை எப்போதும் சஞ்சரிக்கின்றமையா?
- நீங்கள் அவற்றை அவதானித்த வேளையில் அவை செய்துகொண்டிருந்த வேலைகள் /செயல்கள் யாவை?
- வெவ்வேறு பிராணி வகைகள் ஒரே வேலையை / செயலைச் செய்து கொண்டிருந்தனவா?
- **மாலை வேளைகளில் வீட்டுச் சூழலில் சஞ்சரிக்கும் பிராணிகளை அவதானித்து அறிக்கைப்படுத்துக.**
- நுளம்புகள், கரப்பான்பூச்சிகள், எலிகள், தவளைகள், வண்டுகள், கீரி, வெளவால், ஆந்தை, நத்தை, தேவாங்கு
- **பகல் வேளையில் அவதானித்த பிராணிகளிலும் மாலை வேளையில் அவதானித்த பிராணிகளிலும் விஷேடமாகக் காணப்பட்டவை**
- வெளவால், ஆந்தை ஆகியவற்றின் கண்பார்வை இரவு வேளையில் கூர்மையாகும்.
- நுளம்புகள் இருளை விரும்புபவை.
- தவளைகள் இரவு வேளையில் கிளம்பும் நுளம்புகளை உண்ண வரும்.
- கீரி மாலையானதும் உணவு தேடி திரியும்.
- எலிகள் இரவில் உணவு தேடி ஓடித்திரியும்.
- தேவாங்குகள் மரத்துக்கு மரம் தாவும்.
- மின்மினிப்பூச்சிகள் ஒளிவிட்டுக் கொண்டு பறக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 02

◆. **பிராணிகளின் புற இயல்புகள்**

நாய், கிளி, மீன், மண்புழு

- கால்கள் உண்டு
  - நாய்
  - கிளி
- கால்கள் இல்லை
  - மீன்
  - மண்புழு


சிறகுகள் உண்டு — கிளி

சிறகுகள் இல்லை — நாய்

செட்டைகள் உண்டு — மீன்

செட்டைகள் இல்லை — மண்புழு






| கால்கள் உள்ளவை | கால்கள் இல்லாதவை | சிறகுகள் உள்ளவை | சிறகுகள் இல்லாதவை | செட்டைகள் உள்ளவை | செட்டைகள் இல்லாதவை |
|---|---|---|---|---|---|
| தவளை | பாம்பு | மைனா | நாய் | மீன் | மண்புழு |
| எறும்பு | நத்தை | ஆந்தை | பூனை | வண்ணத்து-ப்பூச்சி | பாம்பு |
| மரவட்டை | .................... | மயில் | ஓணான் | தும்பி | .................... |
| பூரான் | .................... | குயில் | மாடு | ஈ | .................... |
| தேள் | .................... | காகம் | ஆடு | .................... | .................... |
| வண்ணத்து-ப்பூச்சி | .................... | அன்னம் | வௌவால் | .................... | .................... |
| ஓணான் | | தேனீ | சிலந்தி | .................... | |
| ஆமை | | வண்டு | .................... | .................... | |
| நரி | | கரப்பான் | .................... | | |
| வண்டு | | .................... | .................... | | |
| .................... | | .................... | .................... | | |
| .................... | | .................... | | | |
| .................... | | | | | |
| .................... | | | | | |



A.K.S. றிஸானா ஹில்மி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **பிராணிகளின் பகல் வேளை நடத்தைகளுக்கும் மாலை வேளை நடத்தைகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்**

- பகல் வேளைகளில் வீட்டுக்குள் உலாவித்திரியும் பூனை மாலையானதும் கண்பார்வை கூர்மையாகும் வேளை இரவிலே உலாவித்திரியும் எலிகளைப் பிடிக்க முற்படும்.
- நாய் பகலில் உறங்கும். இரவில் பிராணிகளை வேட்டையாடும்.
- இரவில் ஆந்தைக்கு பார்வை தெரியும் போது பிராணிகளை பிடித்து உண்ணும்
- நத்தை ஒளியை விரும்புவதில்லை. இருளை பெரிதும் விரும்பும்.

- **பிராணிகளை வகைப்படுத்தல்.**

| தாவர உணவுகளை உட்கொள்பவை | இறைச்சியை உண்பவை | அனைத்தையும் உண்பவை |
|---|---|---|
| ஆடு | புலி | கோழி |
| மாடு | சிங்கம் | சேவல் |
| எருமை | சிறுத்தை | பூனை |
| முயல் | கழுகு | நாய் |
| அணில் | கொக்கு | குரங்கு |
| கிளி | ஆந்தை | மைனா |
| புறா | மீன்கொத்தி | |
| தேசப்பறவை | கீரி | |

- முலையூட்டிகள் - குட்டிகளை ஈன்று பால் ஊட்டக்கூடிய பிராணிகள் முலையூட்டிகள் / பாலூட்டிகள் எனப்படும்.
- நாய், பூனை, வெளவால், ஆடு, மாடு, இராமபாணம், குரங்கு, அணில், கீரி, புலி, சிறுத்தை, சிங்கம், ஒட்டகம், கழுதை, குதிரை, மான், மரை, முயல்
- முட்டையிடுபவை - முதலை, ஆமை, பல்லி, உடும்பு, தேனீ, எறும்பு

**செயற்பாடு 03**

◆. **முதுகில் பொருத்தப்பட்டுள்ள பிராணியின் உருவத்தை வினாக்கேட்டல் மூலம் கண்டுபிடித்தல்.**




மாணவர் ஒருவரை அழைத்து அவரது முதுகுப் புறத்தில் உடையின் மீது பிராணி உருவத்தைப் பொருத்துதல்.

அம்மாணவர் பல வினாக்களை வினவி அப்பிராணியை அனுமானித்துக் கூறல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இது எதை உண்ணும்?
- எவ்வாறான இடங்களில் வாழும்?
- அதன் நிறம் என்ன?
- பறக்க முடியுமா?
- எத்தனை கால்கள் உள்ளன?
- நீந்த முடியுமா?
- ஓட முடியுமா?
- அது ஒரு பூச்சியா?



- **சுற்றுப்புறச்சூழலில் வாழும் பிராணிகள்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **பூச்சிகளை இனங்காண்போம்.**

•. கால்கள் 6 உடம்பு 3 பகுதிகளாக்கப்பட்டிருக்கும்.




- தேனீ
- குளவி
- வண்டு
- எறும்பு
- இராமபாணம்
- தும்பி
- வண்ணத்துப்பூச்சி
- வெட்டுக்கிளி
- தத்துவெட்டி
- அந்துப்பூச்சி
- கரப்பான் பூச்சி
- வீட்டு ஈ
- நுளம்பு

## செயற்பாடு 4

❖. **மனிதரைப் போன்றே பிராணிகளுக்கும் வாழும் உரிமை உண்டு என்பதை விளங்கிக்கொள்வோம்.**

•. பின்வரும் கதையை படியுங்கள்.

❖. ஒரு நாள் சாந்தியும் ராஜாவும் மாலாவும் ரமணனும் பாடசாலை விட்டு வந்து, தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருந்தனர். திடீரென மாலா கூச்சலிடத் தொடங்கினாள்.

மாலா : ஐயோ...... என்னை ஏதோ கடித்துவிட்டது.

மாலாவின் கூச்சலைக் கேட்ட அவளது தந்தை அவ்விடத்திற்கு ஓடி வந்தார்.

தந்தை : மாலா....... மகள் மாலா ................ என்ன நடந்தது பார்ப்போம் .............
இது ஒரு முசுறு (மகளின் காலைப் பார்த்த தந்தை)
மரத்தில் நிறைய முசுறுக் கூடுகள் உள்ளன.
பொறுங்கள் நான் அந்தக் கிளைகளை வெட்டி விடுகின்றேன்.

ரமணன் : வெட்ட வேண்டாம் அப்பா ...................... எங்களைப் போன்றே பிராணிகளும் சூழலில் சுதந்திரமாக வாழ வேண்டும் என ஆசிரியர் சொல்லித்தந்தார். நாங்கள் வேறோர் இடத்திற்குப் போய் விளையாடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**• பிராணிகளின் இருப்புக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய மனிதச் செயற்பாடுகள்**

- மரங்களை வெட்டுதல்
- தீமூட்டுதல்
- காடுகளை அழித்தல்
- வாழிடங்களை அழித்தல்
- மனிதனின் வெவ்வேறு தேவைகளுக்காகப் பிராணிகளைக் கொல்லுதல்
- கொதிநீரை நிலத்தில் கொட்டுதல்
- இரசாயனப் பசளையிடுதல்

**• சுற்றுப்புறச் சூழலில் நிதமும் சஞ்சரிக்கும் பிராணிகளின் இருப்புக்குத் தீங்கு விளையும் சந்தர்ப்பங்களை எடுத்துக் கூறுதல்.**

**01. மண்புழு**

- நான் மண்புழு
- நீங்கள் குப்பைகளை எரிப்பதாலும் நிலத்தில் வெந்நீர் கொட்டுவதாலும் நானும் எனது குஞ்சுகளும் இறந்து விடுவோம்.
- நாங்கள் இறந்துவிட்டால் உங்களது தோட்டத்திலுள்ள குப்பைகளைப் பசளையாக மாற்றித் தருவது யார்?

**02. கிளி**

- நான் கிளி
- நீங்கள் மரங்களைத் தறித்தால், அம்மரங்களில் பொந்துகளில் வாழும் நாமும் எமது குஞ்சுகளும் அழிந்து விடுவோம். நாங்கள் இருப்பதால்தான் சூழல் அழகு பெறுகின்றது.

- இவ்வாறாகி முன்வைப்புகளாக செய்வதற்கு அனைவருக்கும் சந்தரப்பமளித்தல்.

**• பிராணிகள் வாழும் உரிமைப்பற்றியும் அதன் மூலம் மனிதருக்கு கிடைக்கும் பயன்கள் பற்றியும் கலந்துரையாடல்.**

| | | |
|---|---|---|
| தேனீ | - | மகரந்தச் சேர்க்கைக்கு உதவுதல் |
| வண்ணத்துப்பூச்சி | - | மகரந்தச் சேர்க்கைக்கு உதவுதல் |
| தேன் சிட்டு | - | மகரந்தச் சேர்க்கைக்கு உதவுதல் |
| சிலந்தி | - | தீங்கு செய்யும் பூச்சிகளை பிடித்து உண்ணும் |
| முசுறு | - | தீங்கு செய்யும் பூச்சிகளை அழிக்கும் |
| ஓணான் | - | தீங்கு செய்யும் பூச்சிகளை உண்ணும் |
| பாம்பு | - | எலிகளை உணவாகக் கொள்ளும் |
| மண்புழு | - | மண் வளமாக்கி |
| தவளை | - | தீங்கு பயக்கும் பூச்சிகளைப் பிடித்து உண்ணும் |
| நாய் | - | பாதுகாப்புத் தரக்கூடிய பிராணி |
| பறவைகள் | - | கண்டதும் மனதுக்கு மகிழ்ச்சி தரக்கூடியவை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 05

●. **பிராணிகள் யாவும் மனிதனால் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு வளம் என்பதை உணர்த்த பொருத்தமான கதை**

ஒரு வீட்டுத் தோட்டத்தில் மாமரமொன்று இருந்தது. அம்மரப் பொந்தில் கிளிகள் வாழ்ந்தன. ஒரு நாள் ஒருவர் அம்மாமரத்தை வெட்டி வீழ்ந்தினார். அவ்வேளையில் தாய்க்கிளியும் தந்தைக்கிளியும் உணவு தேடச் சென்றிருந்தன. கிளிகள் இரண்டும் திரும்பி வந்து பார்த்த போது கிளிக்குஞ்சுகள் இருந்த பொந்து சிதறிப் போய் இருந்தது. அதைக் கண்ட தாய், தந்தைக் கிளிகள் பெருங்கவலையடைந்தன. தாய்க்கிளியும், தந்தைக்கிளியும் கீச்சிட்டவாறு தமது குஞ்சுகளைத் தேடின.

•. **இவ்வாறான சம்பவத்தைக் கண்ட உங்களுக்கு என்ன தோன்றியிருக்கும் என்பதை எழுதுக.**

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

•. **இக்கதையில் மனதைத்தொட்ட சந்தர்ப்பம் ஒன்றை சித்திரமாக வரைக.**

•. மாணவர்களால் வரையப்பட்ட சித்திரங்கள் ஏன் மனதைத் தொட்டது என்பது பற்றி கலந்துரையாடல்.

•. மனிதனைப் போன்றே பிராணிகளும் தமது குஞ்சுகள், குட்டிகள் மீதும் தமது இனத்தைச் சேர்ந்த ஏனைய உறுப்பினர்கள் மீதும் அன்பு காட்டுகின்றன. எனவே அவற்றின் இருப்புக்குத் தீங்கு விளையக் கூடியவாறாக நாம் செயற்படலாகாது என்பதை வலியுறுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

•. பறவைகள் பற்றிய பாடலைப் பாடுக.

காக்கையும் சேவலும்
காலையில் எழும்பிடும்
எம்மையும் எழுப்பிடுமே
கா....... கா........ கா......
கொக் கொக் கோ................

குயிலும் மயிலும் ஆடிப்பாடி
மழையை அழைக்குமே
கூ........ கூ.......... கூ.........
சோ....... சோ...... சோ..........

புறா கூட்டமும் கிளிக் கூட்டமும்
வயலில் திரியுமே.........
கீ.......... கீ.......... கீ..........

## செயற்பாடு 06

### ❖. வண்ணத்துப் பூச்சியின் வாழ்க்கை வட்டம்



•. அகத்தி போன்ற தாவர இலைகளின் கீழ் புறத்தில் வண்ணத்துப் பூச்சிகளின் முட்டைகளைக் காணலாம்.

•. முட்டைகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு கவனமாக ஒரு கண்ணாடி போத்தல் ஒன்றினுள் இட்டு இன்னும் சில இலைகளையும் இட்டு மூடி விடவேண்டும். மூடியில் சில துளைகள் இட வேண்டும்.

•. போத்தலில் உள்ள முட்டைகளில் ஏற்படும் மாற்றங்களைத் தினமும் அவதானிக்க வேண்டும்.

•. அவதானிப்புகளை அட்டவணையில் குறித்துக் கொள்க.

| திகதி / நாள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவதானிப்பவை பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1) அவதானிக்க ஆரம்பித்து எத்தனை நாட்களின் பின்னர் முட்டையிலிருந்து புழு / புழுக்கள் வெளியே வந்தன? ..........

2) புழுக்களின் நிறம் யாது? ..........

3) புழு எதனை உணவாக உண்டது ..........

4) புழு இலைகளை உண்டதா? எவ்வளவு உண்டது.

(இலைகளில் அரைவாசி / முழு இலை என்றவாறாக)

5) புழு நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்ததா? ..........


6) புழுக் கூட்டின் வடிவம் யாது? அதன் நிறம் என்ன? ..........

7) எத்தனை நாட்களின் பின்பு வண்ணத்துப்பூச்சி வெளியே வந்தது? ..........

- வண்ணத்துப்பூச்சியின் பிறப்பில் வெவ்வேறு சந்தர்ப்பங்களை ஒழுங்குமுறைப்படி எழுதுதல்.

  - முட்டையிலிருந்து புழு வெளி வந்தது.
  - புழு இலை உண்ணத் தொடங்கியது
  - சவ்வு கழன்றது
  - புழு, கூட்டை அமைத்தது
  - கூடு வெடித்தது
  - வண்ணத்துப்பூச்சி வெளியே வந்தது

- வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டப்பருவங்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 07

◆. **அசைக்கக் கூடிய பிராணி ஆக்கமொன்றை ஆக்குதல்.**

- A4 உள்ள பிரிஸ்டல் போட் அட்டை துண்டொன்றை எடுத்து சரி மத்தியில் இரண்டாக மடித்தல்.
- மடித்த அட்டையின் மடிப்புக் கோட்டின் மீது பறவை படம் வரைதல்.
- வரைந்த படத்தை வெட்டி எடுத்தல்.
- மடிப்புக் கோடு வேறாகாதவாறு சிறகுகளைச் சுயாதீனமாக அசைக்கக்கூடியதாகப் பிராணி உருவத்தை முண்டத்தில் இருபுறத்திலும் ஒட்டிக் கொள்க.
- பானக்குழாய் ஒன்றினை இரண்டாக மடித்து அதன் இரண்டு அந்தங்களையும் பறவையின் சிறகுகளுடன் பொருத்திக் கொள்க.
- பிராணி உருவின் முண்டப் பகுதியை ஒரு கையால் பிடித்தவாறு மற்றைய கையினால் பானக்குழாயை மேலும் கீழுமாக இழுத்தல்.
- பறவை பறப்பது போன்று காட்சித்தரும்.



செயற்பாடு 08

- மாணவரை இரு சம குழுக்களாகப் பிரிக்குக.
- முதலாம் குழுவினருக்குத் தமது கைகளின் நீட்டிய தூரத்திற்கமைய வட்டமாக நிற்குமாறு கூறுக.
- இரண்டாவது குழுவில் இருப்போர் எலிகளாவர். எலிகள் வட்டத்திற்கு வெளியே இருப்பர்.
- வட்டமாக இருப்போர் எலிப்பொறி ஆவர்.
- மூன்று கட்டங்களில் சமிக்ஞை வழங்கப்படும். முதலாம் சமிக்ஞை வழங்கியவுடன் எலிகள் சுயாதீனமாகக் கால்களை மாற்றியவாறு, துள்ளிப்பாய்ந்தவாறு ஒரு சுற்றுச் செல்வர்.
- இரண்டாவது சமிக்ஞையின்போது எலிப்பொறியினர் கைகளைச் சேர்த்தவாறு உயர்த்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அப்போது வட்டத்துக்கு (எலிப்பொறிக்கு) வெளியே இருக்கும் எலிகள் உள்ளே புகுவதும் வெளியே வருவதுமாக ஓடித்திரிவர்.
- மூன்றாவது சமிக்ஞை வழங்கிய உடனேயே எலிப்பொறியினர் உயர்த்தி வைத்திருக்கும் கைகளை ஒரேயடியாகக் கீழே பதித்தல் வேண்டும்.
- அப்போது வட்டத்தினுள் இருப்போர் பொறியில் அகப்பட்ட எலிகள் ஆவர். வட்டத்தின் வெளியே இருப்போர் (பொறியில் அகப்படாதோர்) வெற்றி பெற்றவர்களாவர். பொறியில் அகப்பட்டோர் வட்டத்தில் உள்ளோருடன் சேர்த்து கைகோர்த்துக் கொள்வர்.

## செயற்பாடு 09.

- பிராணிகளில் பல்வேறு நடத்தைகளைக் கூறும் பாடல்கள் / கவிதைகளைப் பாடுதல்

**மயிலே! குயிலே!**

ஆடிக்களிக்கும் மயிலே வா
ஆடி மகிழும் வழி சொல்லித்தா!

பறந்து திரியும் காக்கையே வா
பகிர்ந்து உண்ணச் சொல்லித்தா!

பாடிக் களிக்கும் குயிலே வா
பாட்டுப் பாடச் சொல்லித்தா!

தாவும் மானே அருகே வா
தாவிக் குதிக்கச் சொல்லித்தா!

கூவும் சேவலே இங்கே வா
காலை எழுந்திடச் சொல்லித்தா!

தாவித் திரியும் அணிலே வா
காய் கனி பறிக்கச் சொல்லித்தா!

குதித்து ஓடும் முயலே வா
'கரட்' உண்ணச் சொல்லித்தா!

பாலைத்தரும் பசுவே வா
சாதுப் பண்பைச் சொல்லித்தா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## Activity Based Oral English

| 04. Animals around us | Song | Useful Expressions |
|---|---|---|
| 01. beak<br>02. horns<br>03. fins<br>04. tail<br>05. whiskers<br>06. trunk<br>07. wings<br>08. eyes<br>09. nose<br>10. mouth<br>11. tongue<br>12. antenna<br>13. dog<br>14. cat<br>15. elephant<br>16. cow<br>17. goat<br>18. fish<br>19. iguana<br>20. snake<br>21. parrot<br>22. peacock<br>23. sparrow<br>24. woodpecker<br>25. Crane | They are animal friends of mine //<br>Who says meow meow<br>cat says meow meow<br>Who says bow wow<br>Dog says bow wow<br>Meow//// bow wow wow<br><br>Who says quack quack<br>Duck says quack quack<br>Who says moo moo<br>Cow says moo moo<br>quack //// moo ///<br><br>Who says cheep cheep<br>Bird says cheep cheep<br>Who says oink oink<br>pig says oink oink<br>Cheep //// Oink ///<br>They are animal friends of mine //<br>(Eskimo.....tune) | 09. Can you sing?<br>yes, I can. / I can`t.<br><br>10. Do you have a pet?<br>yes, I have a cat.<br>No, I don`t have. |

### கணிப்பீட்டு வினாக்கள்

**பயிற்சி (04)**

*(01)* பூச்சியின் பகுதிகளுக்குப் பெயரிடுக.





A.K.S. றிஸானா ஹில்மி
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(02) தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 01. இரவு வேளையில் கூரிய கண்பார்வை | வெளவால் |
| 02. எலிகளை உணவாக்கிக் கொள்ளும் | பூனை |
| 03. இரவு வேளையில் வேட்டையாடும் | ஆந்தை |
| 04. கூட்டமாக வாழும் | நாய் |
| 05. வித்து பரம்பலுக்கு உதவும் | கறையான் |

**(03) இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை எழுதுக.**

01. ...................................... பழங்களைக் கொறிக்கும்.
02. வெப்பமான காலங்களில் ...................................... உணவை சேமித்து வைக்கும்.
03. பகல் வேளைகளில் தெரு ஓரங்களில் ...................................... உறங்கும்.
04. ...................................... கூட்டமாக பகல் வேளையில் சூழலில் சஞ்சரிக்கும்.
05. இரவு வேளைகளில் ...................................... மரத்திற்கு மரம் தாவும்.
06. மாலை வேலைகளில் கோழிகளையும் குஞ்சுகளையும் .................. பிடித்து உண்ணும்.
07. செட்டை இல்லாத பிராணி ...................................... ஆகும்.
08. ...................................... செட்டைகளைப் பயன்படுத்தி நீந்தக் கூடியன.
09. அகத்தி இலையின் கீழ் புறத்தில் ...................................... முட்டையிடும்.
10. ................................ இருக்கும் புற்றுகளின் அருகில் குப்பைகளை எரிப்பது நல்லது அல்ல.

> புளுணிக்குருவிகள், எறும்புகள், வண்ணத்துப்பூச்சிகள், தேவாங்கு, கீரி, மண்புழு, அணில், நாய்கள், கறையான் , மீன்கள்

**(04) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

01. மழை முகிலைக் கண்டதும் மயில் ஆடத்தொடங்கும். ( )
02. முயல்கள் கரட்டை விரும்பி உண்ணும். ( )
03. மயிர்கொட்டி நுளம்பின் ஒரு பருவமாகும். ( )
04. மயிர் கொட்டிகள் இலைகளை உண்ணும். ( )
05. கால்கள் இல்லாத பிராணி தவளையாகும். ( )
06. நத்தை ஒளியை விரும்பக்கூடிய ஒரு பிராணியாகும். ( )
07. எலிகள் இரவு வேளையில் உணவு தேடும். ( )
08. சிலந்திக்கு எட்டு கால்கள் உள்ளன. ( )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. தேனீக்கு ஆறு கால்கள் உள்ளன. ( )

10. வண்டுகள் இரவு வேளைகளில் இரையத்தொடங்கும். ( )

**(05) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

01. வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கைப் பருவங்களைக் குறிப்பிடுக.

.................................................................................................................................

02. ஆறு கால்கள் உள்ள பிராணிகள் இரண்டைக் குறிப்பிடுக.

1) .............................................. 2) .............................................................

03. முசுறு எந்ததாவர இலைகளை சுருட்டி கூடமைக்கும். ..................................................

04. ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு பாய்ந்து செல்லக்கூடிய பிராணிகள் எவை?

.................................................................................................................................

05. நிலத்துக்கு இரசாயனப் பசளை இடுவதால் அழிவுக்கு உட்படும் பிராணிகள் எவை?

.................................................................................................................................

06. கால்கள் இல்லாத பிராணிகள் இரண்டைத் தருக.

1) .............................................. 2) .............................................................

07. பிராணிகளுக்கு நாம் எவ்வாறு அன்பு காட்டலாம்.

.................................................................................................................................

08. அழுக்கடைந்த இடங்களிலில் பெருகக்கூடிய பிராணிகள் எவை?

.................................................................................................................................

09. குப்பைகளை கிளரி தமக்குத் தேவையான உணவை பெற்றுக்கொள்பவை எவை?

.................................................................................................................................

10. நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய உயிரிகள் எவை?

.................................................................................................................................

**(06) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. வயல்களில் உள்ள தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை இரையாகக் கொள்ளும் பிராணி எது?

1) ஆந்தை 2) நத்தை 3) மண்புழு 4) வண்ணத்துப்பூச்சி

02. முலையூட்டி வகைப் பிராணிகள் மாத்திரம் அடங்கியுள்ள தொகுதி எது?

1) மரங்கொத்தி, மயில், மாடு 2) முதலை, நரி, யானை

3) ஆமை, புலி, கரடி 4) மாடு, நரி, புலி

03. கீழே தரப்பட்டுள்ள பிராணிகளுள் பூச்சி அல்லாத பிராணி எது?

1) வெட்டுக்கிளி 2) சிலந்தி 3) கரப்பான் 4) தேனீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. முலையூட்டிப் பிராணியொன்றினை இனங்காண்பதற்கான ஓர் இயல்பு எது?
1) தாவரப் பகுதிகளை மாத்திரம் உணவாக உட்கொள்ளல்.
2) தாய் பாலூட்டிக் குட்டிகளை வளர்த்தல்.
3) முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தல்.
4) தரையில் மாத்திரம் காணப்படுதல்.

05. தாவரங்களுக்குப் பிராணிகள் செய்யும் நன்மையான செயல்
1) செவ்வெறும்புகள் தாவர இலைகளைச் சேர்த்துக் கூடு அமைத்தல்.
2) வௌவால்கள் பழங்களை உண்டபின் வித்துக்களை வெவ்வேறு இடங்களிற் போடுதல்.
3) முள்ளம்பன்றிகள் தாவரங்களின் கிழங்குகளையும் வேர்களையும் உண்ணுதல்.
4) சில பிராணிகள் காடுகளில் உள்ள தாவரங்களை வீழ்த்துதல்.

06. நிலத்தில் ஒன்றுசேரும் பல்வேறு கழிவுப்பொருள்களைச் சிறு துண்டுகளாக்கி, அவை உக்குவதற்குத் துணை புரியும் பிராணி,
1) நத்தை 2) செவ்வெறும்பு 3) கறையான் 4) கரப்பான் பூச்சி

07. குழந்தைப் பருவத்தில் பால் குடித்து வளரும் பறவை எது?
1) தீக்கோழி 2) ஆந்தை 3) வௌவால் 4) ஆட்காட்டிக்குருவி

08. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பறவைகளில் இரவு நேரங்களில் நடமாடும் பறவை எது?
1) ஆள்காட்டிக்குருவி 2) பெரிய ஆந்தை
3) கொக்கு 4) கானாங்கோழி

09. பின்வரும் பிராணிகளில் ஊர்வன அல்லாதது
1) பாம்பு 2) தவளை 3) ஆமை 4) உடும்பு

10. இரவு வேளையில் நடமாடாத பிராணி
1) ஆட்காட்டிக்குருவி 2) வௌவால்
3) கொசு 4) மின்மினிப்பூச்சி

11. மழைபெய்யப் போவதை உணர்ந்து கொள்ளத்தக்க விலங்கின் நடத்தை
1) பூனை கத்தும் 2) நரி ஊளையிடுதல்
3) நாய் குரைத்தல் 4) ஈசல் பறக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. இரவில் திரியும் பறவை

1) ஆந்தை 2) மரங்கொத்தி 3) மீன்கொத்தி 4) கானாங்கோழி

13. இரவில் திரியும் பறவையாக அமையாதது

1) கோட்டான் 2) சாக்குருவி
3) இரட்டைச் சொண்டுக் குருவி 4) ஆந்தை

14. முலையூட்டி விலங்கு

1) பல்லி 2) ஓணான் 3) உடும்பு 4) கீரி

15. மண்ணை வளமாக்க உதவும் விலங்கு

1) மட்டைத்தேள் 2) மண்புழு 3) மரவட்டை 4) அட்டை

16. தனது வீடாகப் புற்றை அமைக்கும் விலங்கு எது?

1) குளவி 2) பாம்பு 3) கறையான் 4) தேள்

17. இரவில் உலாவித் திரியும் விலங்கு

1) ஊர்க்குருவி 2) மலைநாகணவாய் 3) காகம் 4) நத்தை

18. நாம் ஏன் விலங்குகளைத் துன்புறுத்தலாகாது?

1) விலங்கிலிருந்து பயனைப் பெற்றுக்கொள்ள முடியுமாதலால்
2) விலங்குகளிடமிருந்து நாம் பாடம் படிக்கத்தக்கதாக இருக்கின்றமையால்
3) விலங்குகளும் எம்மைப் போல் வாழ விரும்புகின்றமையால்
4) விலங்குகள் அழகானவையாக இருக்கின்றமையால்

19. நீரில் மாத்திரம் வாழும் விலங்கு

1) ஆமை 2) இறால் 3) தவளை 4) முதலை

20. பூச்சை இனங்காண்பதற்கான ஓர் இயல்பு எது?

1) தாவரத்தில் தேன் குடிக்கும்
2) முட்டையிட்டு இனம் பெருக்கும்
3) ஆறு கால்களைக் கொண்டிருக்கும்
4) உடம்பு இரு பகுதிகளைக் கொண்டிருக்கும்

21. தவளை முட்டையிடுவது

1) கற்களின் மேல் 2) கற்களின் கீழ் 3) நீரினுள் 4) மண்ணினுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருப்பொருள் 05 நாம் பயன்படுத்துபவை


**செயற்பாடு 01**

◆. பல்வேறு தொழில்களுக்குப் பயன்படுத்தும் பொருள்கள் உபகரணங்கள்


●. மேசன் வேலை


தூக்குகுண்டு


மட்டப்பலகை


மணியாசு


மேசன் கரண்டி



சம்மட்டி


வீல்பரோ


நீர்மட்டம்


அளவு நாடா


சவள்


அலவாங்கு


●. கடற்றொழில்


கரை வலை


அத்தாங்கு


தூண்டில்



கரப்பு


வீச்சுவலை

●. இரத்தினக்கல் அகழ்வு / சுரங்கம் அகழ்வு



பிக் கோடரி



சவால்


இரத்தினக்கல் உறை


வாளி


அரிதட்டு



அரிதட்டு


நாம்புவ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


- **மர வேலை**



கைவாள்



கவர் சுத்தியல்



சீவுளி



திருகாணிச்செலுத்தி


உளி



மூலைமட்டம்



அரம்



வரைகம்பு



தட்டுப்பொல்லு


- **விவசாயம்**



மண் வெட்டி



அரிவாள்


கலப்பை



மரக்கால்


பரம்புப் பலகை


முள்ளு



பரம்புக் கட்டை



நெல் களஞ்சியம்



குல்லம்



நுகத்தடி


- **கொல்லன் பட்டறை**


பட்டடை


தகடு வெட்டி


தணல் இடுக்கி




துருத்தி


பாதுகாப்பு கண்ணாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


- உபகரணங்கள் தொழில்களுக்கு ஏற்றவாறு வகைப்படுத்தப்படும் விதம் மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் விதம் பற்றிய தகவல்களை சேகரித்தல்.
- பயன்படுத்தப்படும் ஒவ்வொரு உபகரணத்தினதும் சிறப்பியல்புகளையும் கலந்துரையாடுதல்.
- **உபகரணங்களை சரியாக பயன்படுத்துவது தொடர்பான திறனைப் பெற்றுக்கொள்ளல்.**


கத்தியைப் பயன்படுத்தும் முறை



கத்தியைப் வழங்கும் முறை





கத்திரியைப் பிடிக்கும் முறை




குறடைக்கையாளும் விதம்




நகம் வெட்டும் முறை



சுத்தியலைப்பிடிக்கும் முறை




ஆணி அறையும் விதம்




ஆணி பிடுங்கும் முறை



தும்புத்தடி / விளக்குமாறு பிடிக்கும் முறை



கிளை வெட்டும் கத்திரியைப் பிடிக்கும் முறை



மண்வெட்டியைப் பிடிக்கும் முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **வீட்டில் பல்வேறு நடவடிக்கைகளுக்கென பயன்படுத்தப்படும் உபகரணம் அவற்றை பாதுகாப்பாக கையாளும் முறைகள்**

- கத்தி - வெட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட பின் சிறுபிள்ளைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்தல்.
- பாக்குவெட்டி - பாக்கு, மாசி என்பவற்றை வெட்டிய பின் உயரமான இடத்தில் வைத்தல்.
- உரல், உலக்கை - தானியங்களை இடித்த பின் துடைத்து மறுபுறம் கவிழ்த்தி வைத்தல்
- கத்தரிக்கோல் - புடவைகளை வெட்டியபின் பாதுகாப்பாக இலாச்சுக்குள் போடுதல்.
- தும்புத்தடி - வீட்டைக் கூட்டிய பின் கொழுவிக் கொண்டிருக்கும் நூல்,தலை மயிர் முதலியவற்றை நீக்கி பின்பக்க சுவரில் கொழுவி வைத்தல்.
- விளக்குமாறு - முற்றத்தைக் கூட்டிய பின் மழைக்கு நனையாதவாறு பின்புற சுவரில் மாட்டி வைத்தல்.

குறிப்பு : உபகரணங்களைப் பாதுகாப்பாகக் கையாள்வதன் மூலம் வேலைகளைச் சிறப்பாக செய்து கொள்ளலாம்.

உபகரணங்களை அவதானமின்றி கையாள்வதால் விபத்துக்கள் ஏற்படலாம்.

## செயற்பாடு 02

❖. **நாம் அன்றாடம் பயன்படுத்தும் உபகரணங்கள்**

- **தனிப்பட்ட ரீதியில் பயன்படுத்தும் உபகரணங்கள்**

- சீப்பு, பற்தூரிகை, செருப்பு, பாதணி, துவாய், சவர்க்காரம், கைக்குட்டை, ஆடைகள், மூக்குக்கண்ணாடி, கைத்தொலைபேசி, தலையணை, போர்வை, காலுறை, சப்பாத்து,

- **வீட்டிலும் பாடசாலையிலும் பொதுவாக பயன்படுத்துபவை**

- கதிரை, மேசை, தேநீர்த்தட்டு, பெட்டி, சட்டி, பானை, மின்அழுத்தி, பீங்கான், அலுமாரி, தொலைக்காட்சி, தொலைபேசி, பிணைக்கருவி, துளைக்கருவி, துடைப்பான், பென்சில், பேனை, குப்பைக் கூடை, தும்புத்தடி, விளக்குமாறு, துருவலை, மூடி திறப்பான், பாக்கு வெட்டி

- **உபகரணங்கள் ஆக்கப்பட்டுள்ள மூலப்பொருட்களின் அடிப்படையில் வகைப்படுத்தல்.**

கதிரை மேசை அலுமாரி

இரும்பு, மரம்

| | | |
|---|---|---|
| • சீப்பு | - | பிளாத்திக் |
| • தேநீர்தட்டு | - | பிளாத்திக் / சில்வர் |
| • சட்டி / பானை | - | களி / அலுமினியம் |
| • துவாய் | - | துணி |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- களியினால் செய்யப்பட்ட பொருட்கள்












களிமண் அடுப்பு, அரிக்கும்சட்டி, குடம், நீர்கூசா, பூச்சாடி, சட்டி, பானை

- துணியினால் செய்யப்பட்ட பொருட்கள்









உடைகள், காலுறைகள், கைக்குட்டை, பைகள், தலையணைகள், துடைப்பான்

- அரி மரத்தால் செய்யப்பட்ட பொருட்கள்








மேசை, கதிரை, அலுமாரி, கதவு, கட்டில், யன்னல், உரல், உலக்கை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கண்ணாடியினால் செய்யப்பட்ட பொருட்கள்




மீன் தொட்டி, கண்ணாடி போத்தல், குவளை, தளவாடி, மூக்குக்கண்ணாடி

- பிளாத்திக்கினால் செய்யப்பட்ட பொருட்கள்




தட்டுகள், கரண்டிகள், பேசன், வாளி, கூடை, கதிரை, பை, இறாக்கைகள்

- பிரம்பினால் செய்யப்பட்ட பொருட்கள்



கதிரைகள், பைகள், களகுகள், இடியப்பத்தட்டுகள், கூடைகள்

- பன்புல்லினால் செய்யப்பட்ட பொருட்கள்



பணப்பெட்டி, தொப்பி, பாய், காற்றுவீசி, கூடைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**●. உபகரணங்களை சுத்தப்படுத்தி ஒழுங்காக அடுக்கி பராமரிக்கும் முறைகளை எழுதுக.**


- சீப்பு - ........................................
- பற்தூரிகை- ........................................
- செருப்பு / சப்பாத்து - ........................................
- துவாய் - ........................................
- சவர்க்காரம் - ........................................
- கைக்குட்டை - ........................................
- மூக்குக்கண்ணாடி- ........................................
- கைத்தொலைபேசி - ........................................
- மின் அழுத்தி - ........................................

**●. அன்றாடம் பயன்படுத்தும் உபகரணங்களைத் தொடர்ச்சியாகக் கையாளும் போது உடையும் விதம் பற்றி கலந்துரையாடல் அதனைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

- நாள் தோறும் சுத்தம் செய்தல் (உணவுப் பாத்திரங்கள் / கோப்பைகள்)
- உடைந்திருத்தலை திருத்துதல் (கதிரை / மேசை / இறாக்கை / பை)
- கிழிந்திருந்தால் தைத்தல். (திரைச்சீலை / மேசை விரிப்பு / உடைகள்)
- தேய்வுற்றிருந்தால் எண்ணெய் இடல் அல்லது உதிரிப்பாகங்களை இட்டுத் தயார் செய்தல். ( மோட்டார், கப்பி, இயந்திரம், சப்பாத்து)

**●. பாதணிகளை பயன்படுத்தல், சரியாக நடத்தல் அவற்றைப் பராமரித்தல் ஆகிய சுகாதாரப்பழக்கங்களைப் பேணுதல்.**

●. சரியான கொண்ணிலையில் நடப்பது எப்படி?




 A.K.S. றிஸானா ஹில்மி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **பாதணிகளைப் பயன்படுத்துவது தொடர்பான நற்பழக்கங்கள்**
- வீட்டினுள் நுழைவதற்கு முன்பதாகப் பாதணிகளைக் கழற்றுதல்.
- பாதணிகளை பொருத்தமானவாறு சுத்தப்படுத்தி வெயிலில் உலர வைத்தல்.
- பயன்படுத்துவதற்கு முன்பதாக (polish) பண்ணுதல்.
- காலுக்கு அளவான பாதணிகளைப் பயன்படுத்தல்.
- குதிக்காலில் இருந்து விரல்கள் வரையில் நிறையைச் சமமாக மாற்றியவாறு விரல்களை முன்னோக்கி வைத்துச் சரியாக நடத்தல்.
- உபகரணங்களை சரியாகக் கையாளுவதன் மூலம் நீண்ட காலத்திற்கு பயன்படுத்த முடியும்.

**செயற்பாடு 03**

◆. **பொருளொன்றைக் கொள்வளவு செய்யும் போது கவனித்துக் கொள்ள வேண்டிய விடயங்கள்**

- லேபல்கள், பொதி சுத்திகள், கொள்கலன்கள், வெற்றுப்பைகற்றுகள் முதலியவற்றை சேகரித்துக் கொள்க.
- அவற்றைப் பயன்படுத்தி பின்வரும் விடயங்களைக் கவனித்தல் வேண்டும்.

✎ காலாவதியாகும் திகதி உள்ளதா?

✎ தரச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளதா? (SLS / ISO)

✎ உற்பத்தித் திகதி உள்ளதா?

✎ பொருளை பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

✎ பொருளில் அடங்கியுள்ள போசணைப் பெறுமானம், பதார்த்தங்கள்

- என்பவற்றை கண்டறிவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல்.
- **யோகட், தயிர், பால் போன்றவை காலாவதியாகும் போது ஏற்படும் மாற்றங்கள்**
- யோகட் - நீர் விட்டுக் காணப்படும், பூஞ்சணம் பிடித்திருக்கும், புளிப்புச்சுவை
- தயிர் - நீர் விட்டுக் காணப்படும், பூஞ்சணம் பிடித்திருக்கும், புளிப்புச்சுவை
- பால் - திரண்டுபோய்க் காணப்படும், புளிப்புச் சுவை உண்டாகும்.
- **பொருளொன்றை வாங்கும் போது கவனிக்க வேண்டியவை.**
  - பொருளின் தரம்
  - பொருளின் விலை
  - தேவையான பொருளாக இருத்தல்
  - பிரயோசனமான பொருளாக இருத்தல்
  - தேவையற்ற பொருள்களை வாங்குவதால் பண வீண்விரயம் ஏற்படும்
  - வீட்டின் நேர்த்தியும் பாதிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 04

◆. **கம்பளித்தையல், சங்கிலித்தையல் ஆகியவற்றைப் பயன்படுத்தி அன்றாடம் பயன்பாட்டிற்குத் தேவையான உபகரணங்களைத் தயாரித்தல்.**

•. கைக்குட்டை ஒன்றை தைத்தல்.

✍ 30 x 13 cm அங்குல அளவுடைய இளநிறப் பருத்திப் புடைவைத் துண்டு

✍ 5 சென்றிமீற்றர் (கையில் பிடிக்கக்கூடிய அளவான) தையல் ஊசி


✍ கடும் நிறம் கொண்ட நூல்கள் சில

•. நூல் 30 சென்றி மீற்றரை விட நீளாதவாறு இரண்டு பட்டு நூலை இட்டுக்கொள்க.


•. உருவில் காட்டப்பட்டவாறு புடவைத் துண்டின் ஒரு சென்ரிமீற்றர் அளவில் சுற்றிவர மடித்துக் கொள்க.

✍ தையல் ஊசியை மேலும் கீழுமாகச் செலுத்தி நூலோடுக.

✍ பின்னர் கம்பளித் தையலை சுற்றிவரத் தைத்துக் கொள்க.




நூலோடித்தையல்





கம்பளித்தையல்


✍ தரப்பட்டவாறு சிறிய பூவொன்றைக் கைக்குட்டையின் அந்தத்தில் வரைக.

•. அதனைச் சுற்றிவர நெருக்கமாகச் சங்கிலித் தையலைத் தைத்து பூ, பூக்காம்பு, இலை ஆகியவற்றைத் தைத்துக் கொள்க.












பெருநூலோடி




சிறுநூலோடி




நிரப்புத் தையல்



மீன்முள்ளுத் தையல்



சங்கிலித்தையல்



குறுக்குத் தையல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## செயற்பாடு 05

❖. **தலைவர்கள் பந்து கைமாற்றி அனுப்புதல்.**

•. தலைவர்கள் இருவரையும் வட்டத்தில் ஒரே இடத்தில் அருகருகே நிறுத்தி பெரிய பந்துகளிரண்டை அவர்களுக்கு வழங்குக.

•. ஆசிரியர் சமிக்ஞை வழங்கியவுடன் தலைவர்கள், தம்மிடமுள்ள பந்தை வட்டத்தில் நிற்கும் தமது குழு உறுப்பினர்களுக்கு வட்டத்தின் வழியே கைமாற்றி அனுப்புமாறு அறிவுறுத்துக.

வட்டத்தின் வழியே அனுப்பப்படும் பந்து மீண்டும் தலைவரை வந்தடையும். அத் தலைவரின் குழு வெற்றிபெற்ற குழுவாகும்.





## செயற்பாடு 06

❖. **நாம் பயன்படுத்திய பின்னர் வீணாகும் பொருட்கள் சிலவற்றை சேகரித்து ஆக்கங்கள் செய்தல்.**

•. சேகரிக்க வேண்டியவை - சிரட்டை, தகரப்பேணி, குமிழ்முனைப்பேனா, கண்ணாடி, பிளாத்திக் போத்தல், போத்தல் மூடி

**சிரட்டைகள்**











தகரப்பேணி



போத்தல் மூடி



பிளாத்திக் போத்தல்



குமிழ்முனைப்பேனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தயாரிக்கப்பட்ட புத்தளிப்புக் கருவிகளின் ஒலியை நன்கு செவிமடுத்தல்.
- அதிக ஒலி எழுப்பும் உபகரணங்களை மெதுவாகவும் குறைவான ஒலியெழுப்பும் உபகரணங்களை அதிகமாகவும் இசைத்தல் நன்கு.
- மழை, தொழிற்சாலை, புகையிரதம் போன்ற ஒலிகளைப் போலச் செய்து வாத்தியக்கருவியை இசைத்தல்.
- வாத்தியக் கருவிகளை தேவையான போது மட்டும் வாசிப்பதன் மூலம் ஏற்படும் ஒலியின் தெளிவு இனிமைமிக்கது.

| **Activity Based Oral English** | | |
|---|---|---|
| **05. What we Use**<br><br>01. needle<br>02. thread<br>03. Knife<br>04. spoon<br>05. fork<br>06. cup<br>07. saucer<br>08. plate<br>09. pan<br>10. broom<br>11. ekel broom<br>12. saw<br>13. ruler<br>14. mommoty<br>15. plough<br>16. hanky (handkerchief)<br>17. blackboard<br>18. table<br>19. chair<br>20. duster<br>21. desk<br>22. dustbin<br>23. bed<br>24. comb<br>25. toothbrush | **Song**<br><br>Books in the library - desks and chairs in the classroom<br>All in our school //<br>Let`s protect them lovingly<br>(Bingo ...... tune)<br><br>Game : What am I ?<br><br>I help you to cut vegetables.<br>(teacher can mime & show the picture of a Knife)<br>*Answer : Knife*<br><br>I help you to sit.<br>*Answer : chair/ you are a chair*<br><br>I help you to comb your hair.<br>*Answer : Comb/ you are a comb*<br><br>I help you to brush your teeth.<br>*Answer : Toothbrush / you are a toothbrush.*<br><br>I help you to sweep<br>*Answer : Broom / you are a broom*<br><br>. | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## கணிப்பீட்டு வினாக்கள்

**பயிற்சி**

**(01) தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 01. தச்சன் | அத்தாங்கு |
| 02. கொல்லன் | கலப்பை |
| 03. மேசன் | சீவுளி |
| 04. மீனவன் | துருத்தி |
| 05. குயவன் | வனைசில்லு |
| 06. கமக்காரன் | மணியாசு |

**(02) பின்வரும் உபகரணங்களின் பெயர்களை எழுதுக.**

1............................ 2............................ 3............................ 4............................ 5............................

**(03) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

01. உபகரணங்களைப் பயன்படுத்தும் போது பாதுகாப்பாக கையாள வேண்டும். ( )
02. உபகரணங்களைப் பயன்படுத்திய பின்னர் உரிய இடத்தில் வைப்பது நல்லது. ( )
03. கத்தியை ஒருவருக்கு வழங்கும் போது முதலில் பிடிப்பகுதியை வழங்க வேண்டும். ( )
04. ஒரு மூக்குக்கண்ணாடியை பொதுவாக எல்லோரும் அணிய முடியும். ( )
05. சீப்பு பிளாத்திக்கைப் பயன்படுத்தி செய்யப்படுகிறது. ( )
06. நடக்கும் போது முதலில் விரல்கள் பூமியைத் தொட வேண்டும். ( )
07. பாதத்துக்கு அளவில்லாத சப்பாத்துக்கள் அணிவதால் உடலில் சமநிலைப் பாதிப்படையும். ( )
08. பாதணிகளை அணிந்துக் கொண்டு வீட்டினுள் நுழைவது சிறப்பானது. ( )
09. பொருளின் தரத்தை SLS குறியீடு உறுதிப்படுத்தும். ( )
10. கலாவதியாகும் யோகட் பூஞ்சணம் பிடித்துக் காணப்படும். ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(04) இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை எழுதுக.**


01. கைக்குட்டையின் ஓரத்தைத் தைப்பதற்கு .......................................... தையல் உதவும்.
02. சங்கிலித் தையலைப் பயன்படுத்தி ........................................................... தைக்கலாம்.
03. தகரப்பேணியைப் பயன்படுத்தி ....................................................... ஒன்றை ஆக்கலாம்.
04. தனியொருவர் ................................................ ஒன்றை தனியாக பயன்படுத்த வேண்டும்.
05. ............................................. கலப்பையை எருதுகளில் கழுத்தில் இணைக்க உதவும்.
06. அகழ்வுத் தொழிலில் ........................................................ பயன்படுத்தப்படும்.
07. ................................................. மூலம் பலகையில் குழி குடைய முடியும்.
08. மீனவர்கள் சிறுமீன்களைப் பிடிக்க ................................... பயன்படுத்துவர்.


(பூக்களை, மேளம், அத்தாங்கு, உளி, துலா, நுகத்தடி, கைக்குட்டை, கம்பளித்தையல்)


**(05) பின்வரும் உபகரணங்கள் எக்கைத்தொழில்களில் பயன்படுத்தப்படுகின்றன.**


01. வனை சில்லு : ..........................................................................................
02. பரம்புப் பலகை : ..........................................................................................
03. பட்டடை : ..........................................................................................
04. மணியாசு : ..........................................................................................

**(06) ஒவ்வொரு கருவியினாலும் செய்யத்தக்க மிகப் பொருத்தமாக வேலையை தெரிவுச் செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**


......................


......................


......................


......................

01. பாரம் தூக்குதல்
02. திருகாணியை இறுக்குதல்.
03. கத்தி தீட்டுதல்.
04. சுரையை இறுக்குதல்.
05. பலகையில் குழி குடைதல்.
06. யாதாயினும் ஒன்றை இறுக்கமாகப் பிடித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**(07) மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. சில்லுவண்டி, பாக்குவெட்டி ஆகியவற்றினால் செய்யப்படும் வேலைகள் முறையே எவை?

1) பாரமான பொருள்களைக் கொண்டு செல்லல், போத்தல் மூடி திறத்தல்.
2) ஆணி கழற்றல், போத்தல் மூடி திறத்தல்.
3) பொருள்களைத் துண்டுகளாக்குதல், ஆணி கழற்றுதல்.
4) பாரமான பொருள்களைக் கொண்டு செல்லல், பொருள்களைத் துண்டுகளாக்குதல்



02. 
படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணம் பின்வரும் எதனைச் செய்வதற்கு மிகப் பொருத்தமானது?

1) இரும்பு ஆணி அறைவதற்கு 2) திருகு ஆணி கழற்றுவதற்கு
3) தகடு வெட்டுவதற்கு 4) தகட்டைத் துளைப்பதற்கு

03. 
படத்தில் காட்டப்பட்டுள்ள தையல் எது?

1) காம்புத் தையல் 2) சங்கிலித் தையல்
3) கம்பளித் தையல் 4) நரம்புத் தையல்

04. வீட்டுத்தோட்டச் செய்கையின் போது பயன்படும் உபகரணத்தைக் காட்டும் படம் எது?

1)  2)  3)  4) 

05. பின்வருவனவற்றுள் மண்ணில் உள்ள பொருள்களை அவதானிப்பதற்கு மிகப் பொருத்தமான உபகரணம் எது?

1) ஊசித்துளைக் கமரா 2) திசைகாட்டி
3) கைவில்லை 4) தொலைகாட்டி

06. பாரமான ஒரு பொருளை ஓர் இடத்திலிருந்து மற்றுமோர் இடத்துக்குக் கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஓர் உபகரணம் அல்லாதது

1) பாரம் தூக்கி 2) கப்பி 3) சில்லு வண்டி 4) குறடு

07. வயல் வேலைகளின்போது பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்கள் மாத்திரம் அடங்கும் 'விடையத் தெரிவு செய்க.

1) மண்வெட்டி, வனைசில்லு, நுகத்தடி 2) நுகத்தடி, அரிவாள், கலப்பை
3) கலப்பை, செக்கு, முட்கலப்பை 4) கைவலை, மண்வெட்டி, அரிவாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. "உலைத்துருத்தியைப்" பயன்படுத்துபவர்

1) தச்சன் 2) மீனவர் 3) மேசன்மார் 4) கொல்லர்

09. பாரமான பொருட்களைக் கொண்டு செல்ல உதவுவது

1) துவிச்சக்கரவண்டி 2) ஒற்றைச்சில்லு வண்டி



3) தேங்காய் துருவி 4) மின்விசிறி

10. தனிப்பட்ட வகையில் ஒருவர் பயன்படுத்த வேண்டிய பொருள்கள் இரண்டு

1) தொலைபேசி, பேனை 2) சீப்பு, பற்தூரிகை

3) சீப்பு, குடை 4) குடை, பற்தூரிகை

11. தச்சுத் தொழிலில் பயன்படுத்தப்படும் உபகரணம்

1)  2)  3)  4) 

12. நுகத்தடி பயன்படுத்தப்படுவது

1) மட்பாண்டக்கைத்தொழிலில் 2) விவசாயக் கைத்தொழிலில்

3) ஆடைக்கைத்தொழிலில் 4) உலோகக் கைத்தொழிலில்

13.  உருவில் உள்ள உபகரணம் யாது?

1) சாவணம் 2) இடுக்கி

3) துறப்பனம் 4) சீவுளி

14. கைக்குட்டையில் பூவைத் தைக்கும் போது பூவின் காம்பைத் தைப்பதற்கு மிக உகந்த தையல் முறை யாது?

1) நரம்புத் தையல் 2) வெட்டுக்குத்துத் தையல்

3) விசுப்பத் தையல் 4) கம்பளித் தையல்

15. கைக்குட்டையின் மூலைப்பகுதியில் பூவொன்றைத்தைப்பதற்கு பொருத்தமான தையல் வகை?

1) சங்கிலித் தையல் 2) நரம்புத்தையல்

3) கம்பளித்தையல் 4) வெட்டுக்குத்துத் தையல்

16. வனைசில்லு பயன்படுத்தப்படுவது

1) வனைதல் தொழிலில் 2) வயல் வேலைகளில்

3) சுரங்கக் கைத்தொழிலில் 4) இரத்தினக்கல் துலக்குவதற்கு

17. மரங்களைச் செதுக்கப் பயன்படுத்தத்தக்க மிக உகந்த உபகரணம்

1) துறப்பணம் 2) கத்தரிக்கோல் 3) உளி 4) சீவுளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. வீட்டுத் தோட்டத்தில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மாத்திரம் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

1) மண்வெட்டி, முள்ளு, தூக்குக்குண்டு 2) துருத்தி, கலப்பை, குப்பைவாரி

3) சீவுளி, மண்வெட்டி, சுத்தியல் 4) மண்வெட்டி, முள்ளு, குப்பைவாரி

19. பட்டடை பயன்படுத்தப்படுவது

1) தச்சன் வேலைத்தலத்தில் 2) கொல்லன் கம்மாலையில்

3) வயலில் 4) சுரங்கத்தில்

20. சோறு சமைப்பதற்காக அரிசியைக் களைவதற்கு மிகப் பொருத்தமான பாத்திரம்

1) மட்கோப்பை 2) பானை

3) அரிக்குஞ்சட்டி 4) பெரிய மட்பானை

21. களிமண்ணினால் செய்யப்பட்ட உபகரணம்?

1) உரல், உலக்கை 2) அம்மி,குளவி 3) துருவலை 4) அரிக்கன்சட்டி

22. பிளாஸ்டிகினால் செய்யப்பட்ட உபகரணம்

1) குப்பைக்கூடை 2) மேசன் கரண்டி 3) கத்தி 4) மண்வெட்டி

23. கைக்குட்டையின் ஓரத்தை தைக்க உதவும் தையல் வகை

1) கம்பளி 2) சங்கிலி 3) நரம்பு 4) புள்ளடி

24. விரைவாக காலாவதியாகும் உணவுப்பொருள்

1) பிஸ்கட் 2) யோகட் 3) செமன் 4) பால்மா

25. கழுவாமல் பயன்படுத்த வேண்டியது?

1) பழவகை 2) காய்கறிவகை 3) உப்பு 4) கருவாடு

26. எல்லோராலும் பொதுவாக பயன்படுத்தக்கூடிய உபகரணம்

1) சீப்பு 2) செருப்பு 3) போர்வை 4) வானொலி

27. சரியான நடையின் போது நிலத்தில் பட வேண்டியது?

1) கால்விரல் 2) குதி 3) பாதம் 4) முழங்கால்

28. உற்பத்தி பொருட்களுக்கான இலங்கையின் தரச்சான்று

1) ISO 2) ISBN 3) SLV 4) SLS

29. நாம்புவ பயன்படுத்தப்படுவது?

1) கொல்லன் கம்மாலையில் 2) தச்சன் வேலைத்தளத்தில்

3) இரத்தினக்கல் அகழ்வில் 4) கமத்தொழிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருப்பொருள் 06 எமது உணவு

## செயற்பாடு 01

❖. **ஆரோக்கியமான வளர்ச்சிக்குக் கலப்பு வேளை உணவில் முக்கியத்துவம்**

•. அதற்கான அறிவூட்டம் பெறுவதற்காக பின்வரும் கற்பனை கதையை வாசிக்க.

அமலன் பாடசாலைக்கு இடையிடையே வருவார். வந்தபோதிலும் அவர் வேலை செய்தல், விளையாடுதல் போன்றவற்றின் போது சோம்பலாக இருப்பார். வகுப்பாசிரியர் சில நாட்களாக அமலனை அவதானித்தார். பின்னர் ஆசிரியர் அமலனின் அம்மாவை பாடசாலைக்கு அழைத்து அமலனின் மாற்றத்திற்கான காரணத்தைக் கலந்துரையாடினார். அமலனை வைத்தியர் ஒருவரிடம் காட்டுமாறு ஆசிரியர் அம்மாவுக்கு ஆலோசனை கூறினார்.

வைத்தியர் : பிள்ளைக்கு என்ன வருத்தம்?

அம்மா : மகனை வைத்தியரிடம் காட்டுமாறு ஆசிரியர் கூறியுள்ளார்.

வைத்தியர் : மகனே உங்களுக்கு என்ன பிரச்சினை என்று கூறுங்கள்.

மகன் : எனக்கு ஒரே தூக்கமாக இருக்கிறது. சோம்பலாக இருக்கிறது. கைகளும் கால்களும் வலிக்கின்றன.

அம்மா : மகன் எப்போதும் நித்திரை கொள்வார். எப்போதும் வயிறு வலிக்குது எனக் கூறுவார். வாந்தி எடுப்பார்.

வைத்தியர் : மகனுக்கு எவற்றை உணவாகக் கொடுப்பீர்கள்?

அம்மா : காலையில் மரக்கறி ரொட்டி, பாண் போன்ற உணவுகளையே கேட்பார். சோறு சாப்பிட விருப்பமில்லை.

வைத்தியர் : அப்படியானால் இலைக்கறி வகைகள்?

அம்மா : இலைக்கறி வகைகள் மட்டுமல்ல, காய்கறிகள் எதனையும் சாப்பிடுவதில்லை. பருப்பு வகைகளை வாயில் தொட்டுக்கூடப் பார்க்க மாட்டார்.

வைத்தியர் : அப்போது, மகனே! உங்களுக்கு என்ன சாப்பிட விருப்பம்?

மகன் : எனக்குச் சோறு சாப்பிட விருப்பமில்லை. பாண், ரொட்டி, இடியப்பம் என்றால் ....... சாப்பிடுவேன்.

வைத்தியர் : ஆம், இதனால்தான் இந்த வருத்தம் ஏற்பட்டுள்ளது. மலம் கழிப்பதில் ஏதும் பிரச்சினை உள்ளதா?

அம்மா : 2 அல்லது 3 நாட்களுக்கு ஒரு தடவையே மலம் கழிக்கின்றார். மலம் கழிக்கும் போது சிரமப்படுவார். நான் பப்பாசிப்பழம் கொடுத்தாலும் உண்ண மாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **போசாக்கான உணவை உட்கொள்ளாமைக் காரணமாக ஏற்படும் அசௌகரியங்கள் எவை என்பது பற்றி கலந்துரையாடல்**

01. சோம்பல் ஏற்படுதல்
02. விளையாட விருப்பமிருக்காது
03. ஒரே தூக்கமாக இருத்தல்
04. கைகால்கள் வலித்தல்
05. அடிக்கடி நித்திரைக் கொள்ளல்
06. வயிறு வலித்தல்
07. வாந்தி எடுத்தல்
08. மலம் கழிப்பதில் பிரச்சினை

- **மேலுள்ள நிலைமைகளைத் தவிர்த்து நாள்தோறும் உணவாகக் கொள்ள வேண்டிய போசாக்கான உணவுகள்**

01. தவிட்டரிசிச் சோறு
02. மரக்கறிகள்
03. கீரை வகைகள்
04. தானியங்கள்
05. பழங்கள்
06. பால்
07. முட்டை
08. இறைச்சி வகைகள்

| போசணைக் கூறுகள் | குறைபாட்டு நோய்கள் |
|---|---|
| புரதம் | மரஸ்மஸ், குவாஸியக்கோர் |
| விட்டமின் A | மாலைக்கண் |
| விட்டமின் B | பெரிபெரி |
| விட்டமின் C | ஸ்கேவி |
| விட்டமின் D | என்புருக்கி |
| அயடீன் | கண்டமாலை |
| இரும்புச்சத்து | குருதிச்சோகை |

- **போசாக்கான உணவுகள்**

01. உடலை வளர்ச்சியடையச் செய்யும்
02. உடலுக்கு பலம் கிடைக்கும்.
03. உடலை நோய்களில் இருந்து பாதுகாக்கும்.
04. உடலின் தோல் பளபளப்படையும்
05. கட்டான உடல் உண்டாகும்.

**செயற்பாடு 02**

❖. **போசாக்கான வேளை உணவில் அடங்கியிருக்க வேண்டிய உணவு வகைகள்**

- சோறு, கீரை வகைகள், இரண்டு நிறங்கள் கொண்ட காய்கறிகள் - 2(போஞ்சி, பூசனி)
- இறைச்சி, மீன், முட்டை, கருவாடு, காளான் போன்ற உணவுகளில் ஒன்று
- அவரை வகை (பருப்பு, பயறு) போன்றவை
- ஈற்றுணவாகப் பொருத்தமான பழவகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **மாணவர்களுக்கு வழங்கவுள்ள உணவு வகைகள் அடங்கிய அட்டவணையை பூர்த்தி செய்தல்.**

| மாணவரின் பெயர் | சோறு | மரக்கறி 1 போஞ்சி | மரக்கறி 2 பூசணி | கீரை வகை | இறைச்சி மீன் கருவாடு முட்டை | அவரை வகை | ஈற்றுணவு |
|---|---|---|---|---|---|---|---|
| பாலன் | | | | | | | |
| அமீன் | | | | | | | |
| விமலன் | | | | | | | |
| பாமா | | | | | | | |

- மேற்குறித்த அட்டவணையை ஒவ்வொரு மாணவர் குழுவிடமும் வழங்கி மாணவர்களின் பெயர்களுக்கு எதிரேயுள்ள கட்டங்களைப் பூர்த்திச் செய்யப்படல்.
- இன்றை நாள் மாணவர்களுக்கான வேளை உணவு தயாரிக்கப்பட்டுள்ளது.
- வேளையுணவில் அடங்கியுள்ள உணவுகள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.
- மாணவர்கள் உணவாக உட்கொள்ளும் உணவு வகைக்கு எதிரே ✓ அடையாளம் இடுக.
- ஒவ்வொரு உணவு வகையையும் வேளையுணவில் சேர்த்து கொள்ள வேண்டியதன் முக்கியதுவம் பற்றி கலந்துடையாடல்.

- **ஒவ்வொரு வகை உணவையும் உட்கொள்ள வேண்டிய சார்பளவிலான அளவை வரிப்படம் காட்டுகிறது.**




1. புரதம் - பால், மீன், முட்டை, இறைச்சி வகை, தானியவகை
2. மாப்பொருள் - பலா, ஈரப்பலா, கிழங்கு வகை, பாண்
3. விற்றமின்கள் - மரக்கறிகள், பழவகைகள்
4. கொழுப்பு - நிலக்கடலை, தேங்காய், எண்ணெய் வகைகள், வெண்ணெய்
5. கனியுப்புக்கள் - கீரை வகைகள், அயடின் உப்பு, அவரை வித்துக்கள்

- மாணவர்கள் உட்கொள்ள உள்ள உணவுடன் ஏதேனும் உணவொன்றை உட்கொள்ளாது இருப்பதனால் ஏற்படும் நிலைமைகள் பற்றி கலந்துரையாடல்.
- உட்கொள்ளாத உணவு வகைகள் உள்ளனவாயின் அது தொடர்பான விபரங்களை வினவி அவ்வுணவு வகைகளை உணவாக உட்கொள்ள ஆர்வம் ஊட்டல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவர்கள் உணவைப் பரிமாறி அனைத்து வகையான உணவுகளையும் உட்கொள்கின்றனரா? என்பதைக் கவனித்தல்.
- பெற்றோர் கூட்டத்தில் பிள்ளைகளின் போசணை மட்டத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல்.
- பிள்ளைகளுக்குப் பல்வகைமைக் கொண்ட உணவுகளைப் பழக்கப்படுத்த வேண்டும் என அறிவுறுத்தல்.

## செயற்பாடு 03

❖. **ஆரோக்கியமான வாழ்க்கைக்குப் போசணை மிக்க உணவுகளையும் போசணை மிக்க மருத்துவ குணம் கொண்ட பான வகைகளை உட்கொள்வதன் முக்கியத்துவம்.**

- **இலைக்கஞ்சி**



→ பொன்னாங்கண்ணி
→ வல்லாரை
→ முடக்கொத்தான்
→ சாத்தாவாரி
→ வட்டுக் கத்தரி இலை
→ முருங்கையிலை
→ கறிவேப்பிலை

- இது போன்ற இலை வகைகளைப் பயன்படுத்தி கஞ்சி தயாரிக்க முடியும்.

- **பானம் தயாரித்தல்**

→ வில்வம் பூ
→ பொன்னாவரசு
→ தேங்காய்ப்பூக்கீரை
→ நன்னாரி



பொன்னாவரசுப் பானம்





தேங்காய்ப்பூக்கீரை

- போன்றவற்றை அவித்து பானம் தயாரிக்கலாம்.



நன்னாரிப் பானம்




வில்வம்பூப் பானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

•. அம்பரல்லா, விரலிக்காய், நெல்லி, கெக்கரி போன்றவற்றைப் பயன்படுத்தி பான வகைகள் தயாரிக்கலாம்.



நெல்லி அம்பரல்லா விரலிக்காய் கெக்கரி

•. இப்பானங்களை வகுப்பறையில் தயாரித்து மாணவர்களுக்கு வழங்குதல் சிறந்தது.

•. இப்பானங்களைப் பருகுவது உடலுக்கு நல்லது சில நோய்களும் இல்லாமலும் குறைவடைந்தும் போகும்.

•. மற்றும் செயற்கையாக தயாரிக்கப்பட்டுள்ள பான வகைகளைப் பருகுவது உடலுக்கு நல்லதல்ல. அவற்றில் அதிகளவு இரசாயன பதார்த்தங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

•. அதிகளவு சுவையூட்டிகளும் நிறமூட்டிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

•. ஆதலினால் பலவகையான பெயரறியாத நோய்களுக்கு ஆளாகலாம்.

## செயற்பாடு 04

◆. **உணவுகள் பானங்கள் ஆகியவற்றை பரிமாறும் போது கைக்கொள்ளப்பட வேண்டிய சரியான நடைமுறைகள்**

•. உணவுவகை அல்லது பானவகைக்குப் பொருத்தமான பாத்திரங்கள்

→ குளிரான பானவகைக்கு கண்ணாடித் தம்ளர்

→ சூடானப் பானவகைக்கு கைப்பிடி கொண்ட தேநீர்க் கோப்பை

01. பாத்திரம் ஒன்றில் உணவை அல்லது பானத்தை இடுவதற்கு முன் நன்கு கழுவிக்கொள்ளல்.

02. ஈரலிப்பு நீங்க நன்கு துடைத்தல்.

03. உணவுப் பானங்களைப் பாத்திரனுள் இடும் அளவு கவனிக்கப்பட வேண்டும்.

04. கைப்பிடிக் கொண்ட கோப்பைகளில் பரிமாறுவதெனின் அந்த கோப்பையின் கைப்பிடி பெறுபவரின் வலது பக்கத்தில் அமையுமாறு பரிமாறுதல்.

05. பரிமாறும் விதத்துக்கு அமைய கைத்துண்டை வைத்தல்

06. கைத்துண்டை கவர்ச்சிகரமாக மடித்தல்

07. பரிமாறும் பாத்திரங்களில் சுத்தம் மற்றும் அதன் மீது உணவு பானங்கள் சிந்தி விடாமல் கவனித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குளிரான பானத்திற்கான பாத்திரங்கள்



சூடான பானத்திற்கான பாத்திரங்கள்


- **இவ்வாறான பாத்திரங்களை தெரிவு செய்வதன் காரணம்**

- உணவுகள் பானங்களைச் சரியாகப் பரிமாறுவதன் மூலம் அவற்றைப் பெற்றுக் கொள்வோரிடம் எம்மைப் பற்றிய நல்லெண்ணம் உருவாகும்.
- உணவுகள், பானங்களை உண்பதற்கு விருப்பம் ஏற்படும்.
- சந்தோஷம் உண்டாகும்
- கண்ணுக்கு கவர்ச்சியாக இருக்கும்.
- புதிதான ஆக்க முறைகள் எம்மிடத்தே வளரும்.
- மன அழுத்தங்கள் குறைக்கப்படும்.

- **உணவு பரிமாறும் பாத்திரங்களின் தன்மை**



பாத்திரங்களின் தன்மை




கைத்துடைத்துண்டு மடிக்கும் முறை

- மேற்படி உணவு பரிமாறுதலை மாணவர்களுக்கு செய்துக்காட்டல் அல்லது காணொளி காட்சிகள் மூலம் காட்டுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 05

### ❖. உணவை நீண்டகாலம் பேணும் பல்வேறு முறைகள்

•. விளைச்சல் அதிகம் உள்ள காலங்களில் அல்லது அந்த உணவு அதிகளவில் உற்பத்தியாகும் பருவ காலங்களில் அவற்றை வருங்கால நுகர்வுக்குப் பயன்படுத்தல்.

•. உணவை உட்கொண்ட பின்னர் எஞ்சியுள்ள உணவைப் பாதுகாத்தல்.

•. உணவு வீண்விரயத்தைத் தடுத்தல்.

•. முற்காலத்தில் எஞ்சிய உணவுகளை அடுப்பில் வைத்து நன்கு சூடாக்கிக் கொள்வர்.

•. உணவைப் பேணும் பல்வேறு முறைகள் இருப்பினும் ஆரோக்கியமான வாழ்விற்கு எப்போதும் புதிய உணவுகளைப் பயன்படுத்துவது சிறந்தது.

**•. உணவைப் பேணும் முறைகள்**

- உலர்த்துதல் - பாகற்காய், பலா, ஈரப்பலா, பனங்கிழங்கு, மரவள்ளி
- மணலினுள் புதைத்தல் - எலுமிச்சம் பழம், இஞ்சி, பலாக்கொட்டை
- புகையூட்டல் - மீன், இறைச்சி
- தகரத்தில் அடைத்தல் - இறைச்சி வகை, பழவகை, மீன்வகை, தானிய வகை
- பைக்கற்றுக்களில் அடைத்தல் - உணவு வகை
- தேனில் இட்டு வைத்தல் - இறைச்சி
- உப்பு இடல் - மாங்காய், தேசிக்காய், விரலிக்காய், ஆம்பரங்காய், மீன்

•. உணவை நீண்டகாலம் பேணுவதற்காக பொதி செய்யப்பட்டுள்ள பொதியுறைகளில் காலவதியாகும் திகதி, உற்பத்தி திகதி ஆகியவற்றைக் கவனிக்க வேண்டும்.

## செயற்பாடு 06

### ❖. உணவை நீண்டகாலம் பேணுவதற்கு என விசேட முறைகளை கைக்கொள்ளாது விடின் ஏற்படும் மாற்றங்கள்

•. சோறு, இடியப்பம், பாண் எஞ்சினால் செய்யக்கூடியவை

•. சோறு, இடியப்பம், பாண் முதலியவற்றை நன்கு வெயிலில் உலர்த்திக் கொள்ளல்.



•. உலர்த்திய உணவுகளை எண்ணெய்யில் பொரித்து எடுத்து சீனிப்பாகு இடல்

•. பாணை உலர்த்திய பின் தூளாக்கிக்கொள்ளலாம்.ரோல்ஸ், மீன், இறைச்சி முதலியவற்றில் அதனை தடவி பொரித்தெடுத்துக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

•. இவ்வுணவுகளை உலர்த்தாது நீண்டகாலம் வைத்தால் ஏற்படும் மாற்றங்களை அவதானித்தல்.

•. உணவில் நிறம் மாறும்.
•. மனம் வீசும்.
•. மேற்பரப்பில் பூஞ்சணம் படியும்.

செயற்பாடு 07

❖. **நாம் உண்ணும் உணவுகள் பல்வேறு காரணங்களால் அசுத்தம் அடைகின்றன.**

● **விலங்குகளின் காரணமாக**

•. பூனைகள், கரப்பான் பூச்சிகள், பல்லி, எலி போன்ற வீட்டிலுள்ள விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகள்

● **சரியாகப் பொதிசெய்யப்படாமையால்**

•. நீள் மூஞ்சு வண்டுகள், புழுக்கள் போன்ற விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகள்

● **சூழற் காரணிகளால்**

•. தூசு படிதல், மழை படுதல், அதிக சூரிய ஒளி படுதல்

● **மனிதச் செயற்பாடுகள் காரணமாக**

•. கவனமின்றி உணவுகளை மூடாது வைத்தல், கவனமின்றி உணவுகளைப் பொதி செய்தல், கவனமின்றி உணவுகளைச் சமைத்தல், பாதுகாப்பான இரசாயனங்களை இடல் (பழுக்க வைத்தல், நீண்ட காலம் பேணுதல் போன்றவற்றுக்காக)

● **உணவு பழுதடைவதைத் தவிர்ப்பதற்காகச் செய்யக்கூடியவை**

•. உணவு தயார் செய்யுமிடத்தை / சமயலறையைச் சுத்தமாகப் பேணுதல்.
•. உணவு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருள்கள், உபகரணங்களின் சுத்தம் பேணுதல்.
•. உணவுத் தயாரிப்போரின் தனிப்பட்ட சுத்தம் பேணுதல்.
•. உணவு தயார்செய்யும் சந்தர்ப்பங்களில் அதற்குப் பொருத்தமான மேலங்கி (Apron) தலைக்கவசம், கையுறை போன்ற உடைகளையும் மறைப்புகளையும் பயன்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖. **சமயலறையைச் சுத்தமாகப் பேணுதல்.**

- நீர்த் தொட்டியில் பாத்திரங்களை சேரவிடாது உடனுக்கு உடன் கழுவுதல்.
- பாத்திரங்களை கழுவியதும் நீர் தொட்டியில் கொதித்த நீரை ஊற்றுதல்.
- சமையல் தயாரிக்கும் போது கழிவுகளை நிலத்தில் வீசாது குப்பைக் கூடைக்குள் போடுதல்
- உபகரணங்களை பயன்படுத்திய பின் உரியவாறு சுத்தம் செய்து உடனுக்கு உடன் துடைத்து வைத்தல். ( குளிர்சாதனப்பெட்டி , தணலடுப்பு, இடியப்ப உரல், பிட்டு குழல் , ஐஸ்சிங் நொஸ்ல்ஸ் )
- எலி, பல்லி கரப்பான் பூச்சிகள் சமையல் அறையினுள் நடமாடாதப்படி சுத்தம் பேணுதல். ( எலி வரும் இடங்களை அடைத்தல் )
- சமையல் அறையில் பொருட்களை சீராக வைக்க வேண்டும்.
- கழிவுப்பொருட்ளை அறையில் வைக்காது அப்புறப்படுத்த வேண்டும்
- உணவுப் பொருட்களை மூடிவைத்தல்.
- கைத்துடைப்பான்கள் பயன்படுத்தல்.

●. **உணவுகளைச் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் பேணாமைக்காரணமாக ஏற்படும் பிரதிகூலங்கள்**

- நோய்நொடிகள் ஏற்படல் (வயிற்றுக் கோளாறு, வயிற்றோட்டம், ஒவ்வாமை, வாந்தி, புழு நோய், கழிச்சல், வாந்திபேதி போன்ற நோய்களும் நோய்க்குறிகளும்)
- தேவையற்ற பணச் செலவு ஏற்படல்
- சுகவீன நிலைமையைப் போக்க மருந்து பெறுதல், உணவு விரயமாதல் காரணமாக மீண்டும் உணவை வாங்க வேண்டிய தேவை ஏற்படல்.
- நாளாந்த நடவடிக்கைகளுக்குத் தடை ஏற்படல்.
- பாடசாலைகளுக்குச் செல்ல முடியாமை, கடமைகளுக்குச் செல்ல முடியாமை, நேரம் வீணாகுதல்.

**அன்றாடம் பருகும் நீரின் சுத்தத்தை பேணுதல் மற்றும் சுத்தமான நீரை பருகுவதன் முக்கியத்துவம் பற்றி கலந்துரையாடல்**

**செயற்பாடு 08**


◆. **ஏப்ரன் ஒன்றைத் தயாரித்தல்.**


- சதுர வடிவ புடைவைத்துண்டைப் பெற்றுக்கொள்க. கரையைத் தைத்துக் கொள்க
- இடுப்பின் சுற்றளவை அளந்து அந்த அளவினை விட *30cm* இலும் கூடுதலான நீளத்தில் புடவைத் துண்டினை நீளமாக வெட்டிக்கொள்க
- அதனை முன்னர் வெட்டிக்கொண்ட புடவைத்துண்டில் வைத்து தைத்துக்கொள்க. (உரு 1)
- உடலின் மேற்பகுதிக்குப் பொருத்தமான அளவு புடைவைத்துண்டைப் பெற்றுக் கரையைத் தைத்துக்கொள்க.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அதன் மேற்பகுதியில் கட்டுவதற்குப் போதுமான நீளம் கொண்ட நாடாக்கள் இரண்டைப் பொருத்திக்கொள்க. (உரு 2)
- பின்னர் இரண்டு புடையைத் துண்டுகளையும் ஒன்றாக வைத்துப் பொருத்திக் கொள்ளுங்கள் (உரு 3)


உரு 1


உரு 2


உரு 3

- இச் செயற்பாட்டில் கரையை மடித்தல், நூலோடுதல் கரையை தைத்தல் போன்ற ஆற்றல்களை மாணவர்களிடையே வளர்த்தல்.
- அலங்கார தையல் முறையான சங்கிலித்தையலை பயன்படுத்தி மேலங்கியை அலங்கரித்துக்கொள்க.

**செயற்பாடு 09**

❖. **உணவை உட்கொள்ள பயன்படுத்தப்படும் பாத்திரங்கள் / தட்டங்களைக் கடதாசிக் கூழைப் பயன்படுத்திச் செய்தல்.**

- பிளாத்திக்குக் கோப்பையை எடுக்க.
- அதனைத் தலைகீழாகப் புரட்டி வைக்க.
- கடதாசித் துண்டுகளைக் கிழித்து நீர் கொண்ட பாத்திரத்தில் இடுக.
- சிறிதளவு மாப்பசையைத் தயார்செய்து கொள்க.
- ஆரம்பத்தில் நீரில் நனையவிட்ட கடதாசித் துண்டுகளை கோப்பைகளின் மீது இடுக. ( பசை பூசப்படாத ஈரலிப்பான கடதாசிகள் எனின் நன்று)
- கோப்பையின் மீது இடப்பட்ட கடதாசித்துண்டுகளின் மீது பசையைப் பூசுக. மீண்டும் ஈரலிப்பான கடதாசித் துண்டுகளை அதன் மீது இடுக.
- இவ்வாறு தடிப்பான படையொன்று உருவாகும் வரை மீண்டும் மீண்டும் ஈரக்கடதாசிகளை ஒட்டிக்கொள்க.
- ஒட்டும்போது சுருக்கங்கள் ஏற்படாதவாறு கையால் நன்கு தடவிக்கொள்க.
- இறுதியில் ஒட்டும் கடதாசியைப் பெரிய துண்டுகளாக ஒட்டிக்கொள்க. அது பல நிறம் கொண்டதாயின் மிக நன்று.
- இவ்வாறு தயாரிக்கப்பட்ட தட்டத்தை உலர்த்தி (ஒரு நாளின் பின்னர்) கழற்றிக் கொள்க.
- அவரவர் விரும்பியவாறு நிறங்கள், கோலங்கள், ஆகியவற்றைப் பயன்படுத்தி அலங்கரித்துக் கொள்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





செயற்பாடு 10

- மாணவர்களை இரு குழுக்களாக்குக.
- இரு குழுவிலும் உள்ளவர்களுக்கு உணவுப் பெயர்களை வழங்குதல்.
- இரு குழுவையும் பிரிப்பதற்கு கோடு ஒன்றை வரைதல்.
- குறித்த உணவின் பெயரைக் கூறும் போது இரு குழுக்களிலும் இருந்து குறித்த பெயர் கூரிய நபர்கள் இருவர் கோட்டிற்கு அண்மையில் வந்து இரண்டு கைகளையும் பிடித்தவாறு தத்தமது குழுவின் பக்கம் இழுத்தல்.
- பலம் குறைவான மாணவர் எதிர் பக்கத்துக்கு இழுக்கப்பட்டு சென்றால் அந்தக் குழுவினர் அந்த மாணவரை தமது குழுவில் சேர்த்துக் கொள்வர்.
- தமது நேரத்தினுள் அதிக எண்ணிக்கையான மாணவர்களைச் சேர்த்துக் கொண்ட குழுவினர் வெற்றிப் பெறுவர்.

செயற்பாடு 11

❖. **உணவுகள், பானங்களை உட்கொள்ளும் போது பேணப்பட வேண்டிய நற்பழக்கங்கள் பற்றிக் கூறும் பாடல்கள்**

உணவில் பேராசை கொள்ளாதே
உண்ண இன்னும் என்று கேளாதே
கிளறிச் சிந்திச் சிதறாதே
நின்ற நிலையில் உண்ணாதே!

உணவில் வைத்த கை எடுக்காதே
உரத்துச் சப்புக் கொட்டாதே
அழுதபடியே உண்ணாதே
அமர்ந்து சுவைத்து (மகிழ்ந்து) உண்பாயே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## • எமக்குத் தேவையான போசணைகள்


- உடலுக்குச் சக்தி தரும் போசணை - மாப்பொருள்
- உடல் வளர்ச்சிக்கு உதவும் போசணை - புரதம்
- நோயிலிருந்து பாதுகாக்கும் போசணை - விற்றமின்கள்
- உடல் உறுப்புகளின் நலனுக்கு உதவும் போசணை - கனியுப்புகள்
- கனியுப்புகளின் பிரிவுகள். - இரும்புச்சத்து, கல்சியம், அயடீன்

| புரதம் | விற்றமின் | மாப்பொருள் | கனியுப்புகள் |
|---|---|---|---|
| பால் | கரட் | பலா | வல்லாரை |
| முட்டை | போஞ்சி | ஈரப்பலா | பொன்னாங்கண்ணி |
| இறைச்சி | வெண்டி | உருளைக்கிழங்கு | சிறுகீரை |
| மீன் | லீக்ஸ் | வற்றாளை | |
| கருவாடு | கத்தரி | மரவள்ளி | பாதம் பயறு |
| யோகட் | பப்பாசி | ராசவள்ளி | பசளி |
| தயிர் | மாம்பழம் | கோதுமை | |
| பாற்கட்டி | வாழைப்பழம் | சோறு | சிறகவரை |
| பயறு | சபதில்லா | பீட்றூட் | அயடீன் உப்பு |
| கௌப்பி | முள்ளங்கி | பாண் | |
| பருப்பு | தக்காளி | இடியப்பம் | முருங்கைக்கீரை |
| அவரை | தோடை | ரொட்டி | சிறுமீன்கள் |
| கடலை | எலுமிச்சை | பிட்டு | நெத்தலி |


**புரதக்குறைபாட்டு நோய்கள்** **அயடீன் குறைபாட்டு நோய்**



குவாசியக்கோர்



மரஸ்மஸ்



கண்டக்கழலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Activity Based Oral English

| 06. Our Food | Song | Useful Expressions |
|---|---|---|
| 01. healthy food<br>02. fatty food<br>03. spicy food<br>04. homemade food<br>05. junk food<br>06. banana<br>07. pineapple<br>08. mango<br>09. rose apple<br>10. pawpaw<br>11. fruit juice<br>12. wood apple<br>13. olive<br>14. water melon<br>15. custard apple<br>16. potato<br>17. cabbage<br>18. tomato<br>19. jak<br>20. carrot<br>21. beet<br>22. drumsticks<br>23. brinjal<br>24. cucumber<br>25. rice and curry<br>26. bread<br>27. hoppers<br>28. buns<br>29. tea<br>30. milk<br>31. ice cream<br>32. string hoppers<br>33. egg<br>34. fish<br>35. meat<br>36. coconut | To be a healthy - boy or girl<br>A boy or a girl //<br>To be a healthy - boy or girl<br>you need to eat good food//<br><br>Homemade food like rice and curry,<br>rice and curry//<br>Homemade food like rice and curry<br>will make you a healthy boy.<br>Will make you a healthy girl.<br><br>But you should eat - fatty food<br>or spicy food or fatty food<br>But you should not eat - fatty food<br>or spicy food - too much<br>spicy food - too much<br><br>**Game : What am I?**<br><br>It is a fruit.<br>It is sour.<br>It is juicy.<br>We can eat or drink it.<br>What is it?<br>It begins with letter 'o'<br>(Teacher shows the picture of an orange)<br>*Answer : Orange*<br><br>We eat with curries.<br>It grows in the paddyfield.<br>What is it?<br>It begins with letter 'r'<br>(Teacher shows the picture of rice )<br>*Answer : Rice*<br><br>It is made of flour.<br>We can cut into slices.<br>We can eat with curries, butter or jam.<br>What is it?<br>It begins with letter 'b'<br>(teacher shows the picture of a loaf of bread.)<br>*Answer : bread* | 14. What do you like?<br>I like buns.<br><br>15. Do you like ice cream?<br>yes, I do./ No, I don`t.<br><br>16. How much is it?<br>It`s ten rupees |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு வினாக்கள்

பயிற்சி

**(01) தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 01. இலைக்கஞ்சி | வல்லாரை |
| 02. கீரை வகை | பயறு |
| 03. புரத உணவு | உப்பிடல் |
| 04. பானம் தயாரித்தல் | வில்வம்பூ |
| 05. உணவைப் பேணும் முறை | நிறையுணவு |

**(02) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக**

01. பழங்கள் உண்ணாவிட்டால் மலம் கழிப்பதற்கு சிரமம் ஏற்படும். (   )
02. போசணைக் குறைபாடு உள்ள பிள்ளை அடிக்கடி நித்திரை செய்யும். (   )
03. போசாக்கான உணவுகளை உண்பவர் ஆரோக்கியமாக இருப்பர். (   )
04. சிறு பிள்ளைகள் புரத உணவுகளை அதிகமாக உட்கொள்ள வேண்டும். (   )
05. பருப்பு வகைகளில் மாச்சத்து அதிகம் காணப்படும். (   )
06. பழவகைகளில் அதிகமாக விற்றமின்கள் உள்ளன. (   )
07. இறைச்சியை தேனில் இட்டு பாதுகாக்கலாம். (   )
08. காலாவதியான பாணில் இருந்து ஒரு வகை நீர் வடியும். (   )
09. ஏப்ரனின் பூவைத் தைப்பதற்கு சங்கிலித்தையல் உதவும். (   )
10. தானிய வகைகளை நீள்மூஞ்சு வண்டுகள் தாக்கும். (   )

**(03) இடைவெளிக்கு பொருத்தமான சொல்லை எழுதுக.**

01. உணவுப் பொருட்களை ............................................ மொய்ப்பதால் அசுத்தமடையும்.
02. சுத்தமான உணவுகளை உண்பதால் ............................................ ஏற்படாது.
03. தினமும் நாம் ............................................ நீரையே பருக வேண்டும்.
04. முற்காலத்தில் தேனிலிட்டு ............................................ பேணிக்கொள்வர்.
05. உணவு பரிமாறும் போது பொருத்தமான ............................................ தெரிவுச் செய்யபட வேண்டும்.
06. நிலக்கடலையில் ............................................ சத்து அதிகமாகும்.
07. உடல் வளர்ச்சிக்கு ............................................ அவசியமாகும்.
08. இலைக்கஞ்சி தயாரிக்க ............................................ உதவும்.

| |
|---|
| பாத்திரங்கள், ஈக்கள், இறைச்சியைப், நோய்நொடிகள், சத்தாவாரி, புரதம், கொழுப்புச, கொதித்தாறிய |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(04) மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. சக்தி தரும் உணவுக் கூட்டத்தில் அடங்கியுள்ள உணவு எது?
1) பால் 2) பசளி 3) முட்டை 4) பலாக்காய்

02. உலர்த்துவதாலும் மணலில் புதைத்து வைப்பதாலும் நீண்ட காலம் வைத்திருக்கக் கூடிய உணவுப் பொருள் எது?
1) எலுமிச்சப்பழம் 2) பிலிங்பழம் 3) புளியம்பழம் 4) கொறுக்காப்புளி

03. அசுத்தமான நீரைப் பருகுவதால் ஏற்படக்கூடிய நோய்
1) யானைக்கால் 2) டெங்கு 3) வாந்திபேதி 4) சிக்குன்குன்யா

04. கொழுப்பு அதிகம் அடங்கியுள்ள ஓர் உணவுக்கான உதாரணம்
1) கடலை 2) சோயா அவரை 3) நிலக்கடலை 4) கவ்பி

05. உலர்த்திய பூக்களை அவிப்பதால் ஓர் ஔடதப் பானம் தயாரிக்கப்படத்தக்க தாவரம்
1) ஆவரசு 2) கோப்பி 3) கொத்துமல்லி 4) தேயிலை

06. செயற்கை நிறப்பொருள்கள், சுவையூட்டிகள் ஆகிய சேர்க்கப்பட்ட உணவுகளை உட்கொள்வதால் ஏற்படக்கூடிய நோய்,
1) நீர்வெறுப்பு நோய் 2) புற்றுநோய் 3) நெருப்புக்காய்ச்சல் 4) நீரிழிவு

07. உடல் வளர்ச்சியில் கூடிய பங்களிப்புச் செய்யும் உணவுப் பொருள்களின் கூட்டம்
1) சோறு, சீனி, பாசிப்பயறு 2) பருப்பு, பசளி, வல்லாரை
3) பருப்பு, பாசிப்பயறு, சோயா அவரை 4) மாம்பழம், அன்னாசி, தோடம்பழம்

08. இறைச்சியை நீண்ட காலம் வைத்திருப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பண்டைய முறை.
1) உப்புக் கரைசலில் அமிழ்த்தி வைத்தல். 2) அவித்தல்
3) தேனில் அமிழ்த்தி வைத்தல் 4) சுவையூட்டிகளைச் சேர்த்தல்.

09. சக்தியைத் தரும் உணவு
1) பசளி 2) போஞ்சி 3) வெண்டி 4) ஈரப்பலா

10. உணவு உட்கொள்ளல் தொடர்பாக எம்மிடம் இருக்க வேண்டிய சிறந்த பழக்கம்
1) உடனடி உணவுகளை அடிக்கடி பயன்படுத்துதல்.
2) இனிப்புச் சுவையுடைய உணவுகளை அதிகமாக உண்ணல்.
3) பிரதான உணவு வேளைகளில் கீரை வகையொன்றைச் சேர்த்துக் கொள்ளல்.
4) ஓய்வு கிடைக்கும் எல்லா வேளைகளிலும் உணவு உட்கொள்ளல்.

11. உடல் வளர்ச்சிக்கு உரிய உணவு
1) சோறு 2) கரட் 3) அன்னாசி 4) பயறு

12. மரவள்ளி கிழங்கில் அதிக அளவில் அடங்கும் போசணைப் பொருள
1) விற்றமின்கள் 2) காபோவைதரேற்றுகள் 3) உப்புகள் 4) புரதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. துப்புரவற்ற நீரைப் பருகுவதனால் பீடிக்கும் நோய்

1) தடிமன் 2) குக்கல் 3) கூகைக்கட்டு 4) செங்கன்மாரி

14. விற்றமின் அதிகம் இருக்கும் உணவு

1) கடலை 2) வற்றாளை 3) சோயா 4) தக்காளி

15. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு மிக உகந்த உணவு

1) பாண் 2) நூடில்ஸ் 3) கௌப்பி 4) மரவள்ளி

16. வத்தாளைக் கிழங்கில் அதிக அளவில் அடங்கும் போசணைப் பொருள்

1) புரதம் 2) மாப்பொருள் 3) விற்றமின் 4) இலிப்பிட்டு

17. மணலின் கீழ் வைப்பதன் மூலம் நெடுங்காலத்திற்குப் பேணத்தக்க உணவு வகைகளுக்கு உதாரணம்.

1) எலுமிச்சம்பழம், மீன் 2) மாம்பழம், கிழங்கு

3) வெங்காயம், ஈரப்பலா 4) எலுமிச்சம்பழம், பலாக்கொட்டை

18. அசுத்தமான நீரைக் குடிக்கும் போது பீடிக்கத்தக்க நோய்

1) மலேரியா 2) கயரோகம் 3) எலிக்காய்ச்சல் 4) மஞ்சக்காமாலை

19. கஞ்சி தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் இலை வகையாக அமையாதது

1) வல்லாரை 2) சிறுநாரத்தை இலை

3) கோப்பை இலை 4) வட்டுக்கத்தரி இலை

20. அசுத்த நீரைப் பருகுவதனால் ஏற்படத்தக்க நோய்

1) டெங்குக் காய்ச்சல் 2) மலேரியா 3) யானைக்கால் நோய் 4) வாந்திபேதி

21. கண்டமாலை நோய்க்குப் பிரதான காரணம் யாது?

1) அயடீன் குறைபாடு 2) இரும்புச் சத்துக் குறைபாடு

3) விட்டமின் குறைபாடு 4) கல்சியம் குறைபாடு

22. பின்வருவனவற்றுள் அயடீன் குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?

1) தோண்டைக்கரப்பான் 2) நீரிழிவு 3) கண்டமாலை 4) யானைக்கால்

23. எலுமிச்சப் பழச்சாற்றில் அதிகளவில் இருக்கும் போசணைப் பதார்த்தம் யாது?

1) கொழுப்பு 2) புரதம் 3) விற்றமின் C 4) கல்சியம்

24. உணவுப் பழக்க வழக்கங்களில் பொருத்தமற்றது.

1) மென்று சாப்பிடுதல் 2) சப்புக்கொட்டி சாப்பிடுதல்

3) சுவைத்து உண்ணுதல் 4) அமர்ந்து உண்ணுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(05) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

01. ஏப்ரன் தைக்கும் போது அதன் ஓரத்தைத் தைக்க பயன்படும் தையல் வகை எது?

........................................................

02. பாதுகாப்பற்ற உணவுகளை உட்கொள்வதால் ஏற்படும் நோய்கள் இரண்டைக் குறிப்பிடுக.........................................................

03. உணவு தயாரிக்கும் போது தவிர்த்துக் கொள்ளக் கூடிய சுகாதார பழக்கங்கள் 2 தருக ........................................................

04. உணவு அசுத்தமடைவதற்கான காரணங்கள் இரண்டு தருக?

........................................................

05. நீள்மூஞ்சு வண்டுகள் அரிக்கும் உணவுகள் எவை?

........................................................

06. பூஞ்சணம் பிடிக்கக்கூடிய உணவு வகைகள் நான்கை குறிப்பிடுக

........................................................

07. உலர்த்துவதன் மூலம் பேணக்கூடிய உணவுப் பொருட்கள் 3 தருக?

........................................................

08. எவ்வகையான பூக்களை உலர்த்திப் பானம் தயாரிக்கப்படுகின்றன.

........................................................

09. இலைக்கஞ்சி தயாரிப்பதற்குப் பொருத்தமான கீரை வகைகள் எவை?

........................................................

10. போசணைக் குறைபாட்டின் தன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக.

........................................................

11. விருந்து உபசாரம் ஒன்றில் உணவு வகைகளை விரும்பி உண்பதற்கு செய்யக் கூடிய விடயங்கள் 2 தருக?

........................................................

12. இயற்கையாகவும் ஔடதத் தன்மையுடையதாகவும் பானங்களைத் தயாரிக்க உதவும் காய் வகைகள் எவை? ........................................................

13. புரத உணவுகள் நான்கை எழுதுக.

........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருப்பொருள் 07 பாதுகாப்பும் கரிசனையும்

## செயற்பாடு 01

**❖. இயற்கையான காரணங்களால் நிகழக்கூடிய விபத்துக்கள்**

- பல்வேறு விபத்துக்கள் தொடர்பாகச் செய்தித்தாள்கள் மற்றும் சஞ்சிகைகளில் வெளியாகிய தகவல்கள், ஒளிப்படங்கள், ஏனைய படங்களைச் சேகரித்து வகுப்பிற்கு கொண்டு வரல்.
- இயற்கையான காரணங்களாலும் மனிதன் செய்யும் பல்வேறு செயல்கள் காரணமாகவும் நிகழத்தக்க விபத்துக்கள் தொடர்பாக கலந்துரையாடல்.
- மாணவர்கள் சேகரித்து வந்த தகவல்களை வகைப்படுத்த விடுக.

| இயற்கையான விபத்துக்கள் | மனிதனின் செயற்பாடுகள் காரணமாக நிகழ்ந்த விபத்துக்கள் |
|---|---|
| மண்சரிவு | வாகன விபத்து |
| சூறாவளி | மின்சாரம் தாக்குதல் |
| கடும் மழை | பிராணிகளால் தாக்கப்படல் |
| வெள்ளம் | பாம்பு தீண்டுதல் |
| சுனாமி | சுடுநீர் கொட்டுதல் |
| புவி நடுக்கம் | தீக்காயம் |
| வரட்சி | கிணற்றில் விழுதல் |
| மின்னல் தாக்கம் | நீரில் மூழ்குதல் |
| காட்டுத் தீ | நஞ்சுப்பொருள் அருந்துதல் |
| | பட்டாசு வெடித்தல் |
| | குண்டு வெடிப்பு |
| | ஆர்ப்பாட்டங்கள் |
| | மரத்தில் விழுதல் |
| | மரம், கிளை சரிந்து விழுதல் |
| | வழுக்கி விழுதல் |

- **இயற்கையாக நிகழும் சில விபத்துகளுக்கு மனிதனின் பல்வேறு செயற்பாடுகள் காரணமாக அமைந்துள்ளன.**
- மரம் தறித்தல், மலைப் பகுதிகளில் மண்ணை வெட்டி அப்புறப்படுத்துதல் காரணமாக மண்சரிவு ஏற்படல்.
- தாழ் நிலங்களை நிரப்புதல், மணல் அகழ்தல் போன்றவை காரணமாக வெள்ளம் ஏற்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மரங்களை தொடர்ந்து வெட்டுவதால் வரட்சி ஏற்படல்.
- இரசாயனப்பொருள் பாவனைக் காரணமாக குறித்த காலம் இன்றி மழை பெய்தல்.
- மழைக்காலங்களில் மின்னல் வெட்டுகின்ற போது பிழையான நடத்தைகளை மேற்கொள்வதால் மின்னல் தாக்கம் காரணமாக விபத்துகள் ஏற்படுதல்.

## செயற்பாடு 02

**❖. பாதுகாப்பற்ற இடங்கள், பாதுகாப்பற்ற சந்தர்ப்பங்கள்**

**●. பாதுகாப்பற்ற சந்தர்ப்பங்கள்**

- வெள்ளம் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் வெள்ள நீரில் நீராடச் செல்லல்
- படகோட்டச் செல்லல்
- மின்னல் மின்னும் வேளைகளில் திறந்த வெளியில் சஞ்சரித்தல்.
- மின்னல் மின்னும் வேளையில் மின்சார உபகரணங்களை கையாளுதல்.
- மின்னல் மின்னும் வேளையில் மின் வேலைகளில் ஈடுபடுதல்.
- மின்னல் மின்னும் வேளையில் தொலைபேசியில் உரையாடுதல்.
- வாகன நெரிசல் உள்ள வேளைகளில் பாதயைக் கடத்தல்.
- புகையிரதம் வருவது தெரிந்தும் தண்டவாளத்தைக் கடத்தல்.
- புகையிரதப்பாதை வழியே நடந்து செல்லல்.
- பாதையின் இடது புறத்தால் நடந்து செல்லல்.
- பட்டாசு கொளுத்துதல்
- கண்ணாடிப் பாத்திரத்தை கையில் ஏந்தியவாறு ஓடுதல்.
- கூரிய உபகரணங்களை கையில் ஏந்தியவாறு ஓடுதல்.

**●. பாதுகாப்பற்ற இடங்கள்**

- மாற்றுக் கடவை வழியோ, பாதுகாப்புப் படலையோ (Gate) இன்றி, பெருந் தெருக்களுக்குக் குறுக்காகப் புகையிரதப் பாதை அமைந்துள்ள இடங்கள்
- நீர்ச் சுழி, கூரிய முட்கள், கண்ணாடித் துண்டுகள் போன்றவை உள்ள நீர் நிரம்பியுள்ள இடங்கள்
- படிவரிசை / வழுக்கும் தன்மையுள்ள இடங்கள்
- மண்சரிவு ஏற்படத்தக்க இடங்கள்
- யானைகள் பாதையைக் கடக்கும் இடங்கள்
- பாம்புப் புற்று / பாம்புகள் சஞ்சரிக்கும் இடங்கள்
- குளவி, தேனீ இருக்கும் இடங்கள், கூடுகள்
- பட்டுப்போன கிளைகள் உள்ள மரம்
- நாய்கள் கூட்டமாக உள்ள இடம்

> பாம்பு தீண்டுதல், நாய், பூனை, அணில், குரங்கு போன்ற பிராணிகள் கடித்தல் இவற்றிற்கு முதலுதவி செய்யும் போது காயத்தை சவர்க்காரமிட்டு ஓடும் நீரில் கழுவுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நிகழக்கூடிய விபத்துக்களில் இருந்து பாதுகாப்புப் பெறுதல், ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக் கொள்ளல் அல்லது முற்றாகத் தவிர்ப்பதற்கு செய்யத்தக்கவை**

| விபத்து | ஏற்படக்கூடிய பாதிப்பு | அதிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக / அதனைத் தவிர்ப்பதற்காக செய்யத்தக்கவை |
|---|---|---|
| 01. காலில் பாம்பு தீண்டல் | - உடலில் நஞ்சேறல்<br>- வைத்தியசாலையில் தங்கியிருக்க நேரிடுதல்<br>- அதிக நோவு<br>- உயிரிழப்பு | - திறந்தவெளியிலும் பாதுகாப்பற்ற இடங்களிலும் சஞ்சரிக்கும்போது கவனமாக இருத்தலும் பொருத்தமான பாதணிகள் அணிந்திருத்தலும்<br>- இரவில் பயணம் செய்வதாயின் ஒளியேற்று வதற்காக மின்சூள் போன்ற ஒரு சாதனத்தைப் பயன்படுத்தல். |
| 02. சூடேறிய சமையல் பாத்திரம் காரணமாக சுடுகாயம் ஏற்படல் | - கையில் தீக்காயம் ஏற்படல்<br>- அதிக நோவு | - சூடேறிய பாத்திரங்களைப் பிடிப்பதற்காகப் பொருத்தமான துணித்துண்டு / குறடு / இடுக்கி பயன்படுத்துதல் |
| 03. வாகனங்களில் மோதிப்படல் | - மரணம் ஏற்படல்<br>- உடல் உறுப்புகள் இழக்கப்படல்<br>- காயங்கள் ஏற்படல் | - பாதையின் வலது புறத்தால் நடந்து செல்லல்<br>- வாகன நெரிசல் உள்ள வேளைகளில் அவதானமாகச் செல்லல்<br>- பாதசாரிகள் கடவை உள்ள இடத்தால் பாதையைக் கடத்தல் |

- **மேலே கூறப்பட்ட அனைத்து விபத்துக்களில் இருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு செய்யக்கூடிய விடயங்களை கலந்துரையாடி மேலும் அட்டவணையைப் பூர்த்தி செய்க**
- **இதன் மூலம் உயிர்ச்சேதங்களையும் அதன் இழப்புகளையும் குறைத்துக் கொள்ள முடியும்.**

## செயற்பாடு 03

❖. **அறிமுகம் இல்லாதோரிடம் செயற்படும் போது தாம் பாதுகாப்பாகவும் கவனமாகவும் செயற்பட வேண்டிய விதங்கள்**

- இத்தலைப்பை விளங்கிக் கொள்வதற்காக சில நிகழ்வுகளை உதாரணங்களாக முன்வைக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் 1:சரண் பாடசாலை விட்ட பின்னர், தன்னை அழைத்துச் செல்வதற்காகத் தாயார் வரும் வரை காத்திருக்கிறான். அண்டை வீட்டார் ஒருவர் அவனருகே சென்று தான் வீட்டில் கொண்டுபோய் விடுவதாகக் கூறி, அவனை அழைக்கின்றார்.

உதாரணம் 2 : பவானி வீட்டில் தனியாக இருக்கின்ற ஓர் சந்தர்ப்பத்தில் வியாபாரத்திற்காக வந்த ஒருவர் டொபி / சொக்கலேட் வாங்கித் தருவதாக அருகில் உள்ள கடைக்குத் தம்முடன் வருமாறு பவானியை அழைக்கின்றார்.

உதாரணம் 3 : மாலன் பாடசாலை விட்டு, வீட்டிற்கு நடந்து செல்லும் வேளையில் வாகனமொன்றில் வந்த அறிமுகமில்லாத நபர் ஒருவர் வாகனத்தை நிறுத்தி, வாகனத்தில் ஏறுமாறும் வீட்டருகே கொண்டுபோய் விடுவதாகவும் கூறுகின்றார்.

- மேற்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பிள்ளைகள் செயற்பட வேண்டிய விதம் தொடர்பாக கருத்துக்களை கலந்துரையாடல்.
- மேலும் பத்திரிகையில் வெளியான சில தகவல்கள், சந்தர்ப்பங்கள் குறித்து கலந்துரையாடல்.

## செயற்பாடு 04

◆. **சுற்றுப்புறச் சூழலில் இருக்கும் விசேடமான உபகரணங்கள் / கருவிகள் / சீருடை / பயன்படுத்தும் தொழில்களும் விளையாட்டுக்களும் தொடர்பாக கலந்துரையாடல்**

| தொழில் / விளையாட்டு | தொழிலின் போது / விளையாட்டின்போது அணிபவை | பயன்படுத்தும் உபகரணங்கள் / கருவிகள் |
|---|---|---|
| கிரிக்கெற் வீரர் | வெள்ளை நிற சேட், நீண்ட காற்சட்டை, தலைக்கவசம், கையுறை, காற்காப்பு | துடுப்பு |
| கருங்கல் உடைப்பவர் | தலைக்கவசம் | வெட்டுளி, கல்லுடைக்கும் சுத்தியல் |
| ஹோட்டல் சமையற்காரர் | நீளமான மேற்சட்டை, ஏப்ரன், தொப்பி, கையுறை | கத்தி வகைகள், அடுப்பு வகைகள், அரைக்கும் கருவிகள் |
| வைத்தியசாலை தாதி | வெள்ளைச் சட்டை, வெள்ளை தொப்பி, கையுறை, சப்பாத்தும் காலுறையும் | தடுப்பு ஊசிகள், மருந்து பொருட்கள், கத்திரிக்கோல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| இரும்பு ஒட்டுவோர் | பாதுகாப்புக் கண்ணாடி, நீளமான மேற்சட்டை, காற்சட்டை, கையுறை | காய்ச்சி ஒட்டும் மின்சார கருவி, தகடு வெட்டி |
| பொலிஸ்காரர் | காக்கி நிற மேற்சட்டை, நீண்ட காற்சட்டை, கறுப்புத் தொப்பி, கறுப்பு இடுப்புப் பட்டி | கவண், கைத்துப்பாக்கி |

•. மேற்படி உடைகள், பயன்படுத்தும் உபகரணங்கள், கருவிகளால் கிடைக்கும் பயன்கள் மற்றும் பாதுகாப்புப் பற்றி கலந்துரையாடல்.

**•. தொழிலாளர்களின் உடைகள், உபகரணங்கள், கருவிகள் இவற்றைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் பயன்கள்.**

•. பாதுகாப்புக் கிடைக்கிறது.

•. விபத்துக்கள் ஏற்படாது பாதுகாக்கிறது

•. சுத்தம் பேண உதவுகிறது.

•. குறித்த தொழிலாளர்களைச் சீருடை மூலம் அறிந்துக் கொள்ளலாம்.

•. சிக்கல்களைத் தவிர்த்து இலகுவாக வேலைகளைச் செய்யலாம்.

•. தொழில் தூய்மை மனத்தூய்மை ஏற்படும்.

•. ஏற்றத் தாழ்வுகள் இன்றி ஒற்றுமை ஏற்படும்.

## செயற்பாடு 05

**◆. வெவ்வேறு தொழில்களுக்காக பயன்படுத்தப்படும் தொழினுட்பச் சாதனங்களால், ஏற்படத்தக்க விபத்துக்கள்**

•. நெல் அறுவடை இயந்திரம், நெல் சூடுமிதிக்கும் இயந்திரம், நெல் குற்றும் இயந்திரம், மரம் அரியும் இயந்திரம், புல் வெட்டும் இயந்திரம் மற்றும் அன்றாட வேலைகளை இலகுபடுத்துவதற்காகப் பயன்படுத்தும் மின் அழுத்தி, கலக்கி *(Blender)*, சோறு சமைப்பான் *(Rice Cooker)* போன்ற உபகரணங்கள்

•. மேலும் வீடுகளில் பயன்படுத்தப்படுகின்ற கத்தி, கத்திரிக்கோல், கோடரி, மின் அடுப்பு, வாயு அடுப்பு, அரைக்கும் இயந்திரம், அமிழ்ப்பு வெப்பமாக்கி, மண்வெட்டி, அம்மி குளவி போன்றவற்றாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

•. **விபத்துக்கள் உண்டாகும் முறைகள்** - இயந்திரத்தினுள் கைவிரல்கள், கை, கால் போன்றவை சிக்கிக்கொள்ளல், மின் தாக்கு ஏற்படல் போன்றவை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மேலே தரப்பட்ட ஒவ்வொரு உபகரணங்களினதும் படங்களை வழங்கி அவற்றின் பயன்களையும், பயன்படுத்தும் முறைகளையும் எதிர்பாராத முறையில் ஏற்படும் விபத்துக்களையும் பட்டியல்படுத்த விடுக, வகிபாகம் ஏற்று நடித்துக் காட்டுக.

## செயற்பாடு 06

◆. **பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய தையல் ஊசி தாங்கியைத் தயாரித்தல்.**


- வட்டவடிவத்தில வெட்டிய துணித்துண்டுகள் இரண்டு விதம் எடுத்தல்.
- சிறிய அளவுள்ள ஒரு துணி வட்டம் எடுத்தல்.
- பெரிய வட்டங்களுள் ஒன்றில் வெளிப்பக்கத்தின் மீது உரு 1 இல் காட்டியுள்ளவாறு சிறிய வட்டத்தை வைத்து கம்பளித் தையல் மூலம் தைத்துக் கொள்ளல்.
- பெரிய துணி வட்டங்கள் இரண்டினதும் உட்பக்கங்கள் வெளிப்புறமாக இருக்குமாறு வைத்து இரண்டு அங்குல அளவான வட்டப்பகுதி தவிர ஏனையப்பகுதிகளைப் படத்தில் காட்டியபடி நூலோடுதல்.
- தைத்த பகுதிகளின் சரியான பக்கம் வெளியே வருமாறு புறட்டி வாய்ப்பகுதியின் வழியே மென்மையான துணித்துண்டுகளைப் புகுத்தி இறுக்கமாக நிறப்பிக்கொள்க.
- இவ்வாறாக உரு 3 இல் காட்டியுள்ளவாறு நூலை நன்கு இறுக்கி ஆக்கத்தைப் பூர்த்தி செய்க.



உரு 1



உரு 2



உரு 3



## செயற்பாடு 07

◆. **தொற்றும் நோய்கள் மற்றும் தொற்றாத நோய்கள் ஏற்படுவதில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகச் செய்யத்தக்கவை.**

- தொற்றுநோய் என்பது மனிதர்கள் அல்லது விலங்குகளிடமிருந்து இன்னொருவருக்கு எளிதாக தொற்றிப் பரவும் நோயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

•. இது பக்டீரியா, வைரசு போன்ற கிருமிகளே நோய்க்காவிகள் ஆகும்.

•. காற்று நீர் குருதி ஆகியன மூலம் எளிதாகப்பரவும்.

•. ஓட்டுண்ணிகள், விலங்குகள், ஈக்கள், நுளம்புகள் இவையே நோய்க்காவிகளை பரப்புகின்றன.

| நோய் | நோய் பரவும் வழி |
|---|---|
| டெங்கு | நோய்க்காவி நுளம்பு தீண்டுவதால் |
| யானைக்கால் நோய் | நோய்க்காவி நுளம்பு தீண்டுவதால் |
| மலேரியா | நோய்க்காவி நுளம்பு தீண்டுவதால் |
| வாந்திபேதி / கொலரா | அசுத்தமான உணவு, நீர் உட்கொள்ளல் |
| கழிச்சல் நோய் | அசுத்தமான உணவு, நீர் உட்கொள்ளல் |
| சீதபேதி | அசுத்தமான உணவு, நீர் உட்கொள்ளல் |
| சின்னமுத்து | நோய்க் காவிகளான ஆட்கள் மூலம் |
| கொப்பளிப்பான் | நோய்க் காவிகளான ஆட்கள் மூலம் |

•. **தொற்றாத நோய்கள்**

| நோய் | நோய் ஏற்பட ஏதுவாகத்தக்க காரணங்கள் |
|---|---|
| நீரிழிவு | - இனிப்பான உணவுகள், மாப்பொருள் உணவுகள் அதிகம் உண்ணுதல் |
| இரைப்பையழற்சி | - உடன் உணவுகள், எண்ணெய் மற்றும் மிளகாய் அதிகம் அடங்கிய உணவுகள் உட்கொள்ளல்<br>- குறித்த வேளையில் உணவு உண்ணாதிருத்தல் |
| உயர் குருதி அமுக்கம் இதயநோய் / பருத்த உடல் | - எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகள் அதிகளவில் உண்ணல் |

•. தொற்றாத நோய்கள் ஏற்படுவதற்கான பிரதான காரணங்கள் மனிதனின் தவறான வாழ்க்கைக் கோலங்களாகும்.

•. மேலும் தற்காலத்தில் பாடசாலை மாணவர்கள் பரவலாக இவ்வாறான நோய்களுக்கு ஆளாகின்றனர்.


•. ஆரோக்கியமாக வாழ்வதற்கு இவ்வாறான நோய்களில் இருந்து விலகியிருப்பதற்கும் தேவையான ஆலோசனைகளை முன்வைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு 08**

நகரங்களின் பெயர்கள்



- வட்டத்தில் இருந்து 10m வெளியில் நகரங்கள் நான்கிளை பெயரிடல்.
- மாணவர்கள் நடந்து செல்லும் வேளையில் ஆசிரியர் நகரொன்றின் பெயரைக்கூறல்.
- அந்நகரின் பெயருக்குரிய இடத்தை நோக்கி மாணவர்கள் ஓடிச் செல்லவேண்டும். (பாய்தல், கைத்தட்டுதல், நின்ற இடத்தில் ஓடுதல் முதலியன)
- மேலும் நகரத்தின் பெயரை மாறி மாறி கூறுதல்.

**செயற்பாடு 09**

❖. **பாதுகாப்புத் தொடர்பான செய்திகள், தகவல்களைக் கொண்ட பாடல்கள் கவிதைகள்**

- பரமார்த்த குரு - சீடர் கதைப்பாடல்கள்

மட்டி : கிணற்றடிக்குப் போன பாட்டி தடுக்கி வழுக்கி விழுந்தார்.

குரு : கிணற்றடியில் பாசிப்படிவைக் கழுவித்தள்ளச் சரியாகும்.

மடையன் : அடுப்பில் இருந்த பானையை கவனமின்றிப் பிடித்தேனே

குரு : துணித்துண்டால் பிடித்திருந்தால் சூடுபட்டு இருக்காதே.

மூடன் : தெருவில் ஓடிச் சென்ற நாய் வெகுண்டு துரத்தி வந்ததே

குரு : கட்டாக்காலி நாய்க்கு நீர் கல்லெறிந்தாய் அல்லவா?

மிலேசகன் : உயர்ந்த மரத்தில் ஏறினேன். கால் வழுக்கி விழுந்து விட்டேன்.

குரு : உயர மரத்தில் காய் பறிக்க நீண்ட தடி (கொக்கி) உதவுமே

பேதை : ஊஞ்சல் உயரச் சென்றதே தங்கை தவறி விழுந்தாளே

குரு : ஊஞ்சல் ஆடும் போதிலே பற்றிப் பிடிக்க வேண்டுமே

குரு : சீடர்களே வாருங்கள்
கூறுவதைக் கேளுங்கள்
கரிசனையுடன் செயற்பட்டாலே!
பாதுகாப்புப் பெற்றிடுவீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Activity Based Oral English

| 07. Safety & Protection | Song | Useful Expressions |
| --- | --- | --- |
| 01. fire<br>02. strangers<br>03. slip<br>04. fall<br>05. accident<br>06. safe/ safety<br>07. dangerous<br>08. stranger | Don`t play with fire //<br>Don`t speak with strangers //<br>Don`t eat from strangers //<br>Think of you - wherever go<br>Think of you - wherever do<br><br>**Song**<br><br>Be careful, be careful<br>When you light crackers.<br>Be careful, be careful<br>When you cross the road.<br>Be careful, be careful<br>When you climb steps.<br>Be careful, be careful | 17. Be careful<br>you may fall.<br>you may slip |

### தொழில்களிலும் , விளையாட்டுகளிலும் ஈடுபடுவோர் பயன்படுத்தும் உபகரணங்கள் ,ஆடை அணிகள்


கிரிகெட் வீரர்


தீயணைப்பாளன்


கல்லுடைப்போன்



பாதை வேலை செய்பவர்


தாதி


சுகாதார பரிசோதகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு வினாக்கள்

**பயிற்சி**

**(01) தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 01. சுனாமி | கடும்மழை பெய்தல் |
| 02. வெள்ளம் | மரங்களை வெட்டுதல் |
| 03. வரட்சி | மரங்கள் உராய்தல் |
| 04. நிலநடுக்கம் | ஆழிப்பேரலை |
| 05. காட்டுத்தீ | கட்டிடங்கள் சரிதல் |

**(02) பின்வருவனவற்றுள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

01. மனிதன் மரங்களை வெட்டுவதனால் மழை சரளமாக பெய்யும். ( )
02. வெள்ளம் ஏற்படும் போது பயிர் நிலங்கள் அழியும். ( )
03. புகையிரதப் பாதையில் நடப்பது பாதுகாப்பான செயலாகும். ( )
04. சமையலறையில் வேலைசெய்யும் போது தீக்காயம் ஏற்படும். ( )
05. தாதிமார் நேர்த்தியான சீருடை அணிவர். ( )
06. நுளம்பின் மூலம் ஸ்கேவி நோய் உருவாகும். ( )
07. இனிப்பான உணவுகள் உடல் நலனைக் காக்கும். ( )
08. தையல் ஊசியை கண்ட கண்ட இடங்களில் வைப்பது நல்லதாகும். ( )

**(03) இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புக.**

01. ஈடிஸ் ............................................................. மூலம் டெங்கு நோய் பரவும்.
02. இயந்திரங்களை பயன்படுத்தும் போது ............................................................. வேண்டும்
03. கருங்கல் உடைப்பவர் ............................................................. அணிவார்.
04. காலில் ............................................................. தீண்டும் போது உடலில் நஞ்சு ஏறும்.
05. யானைகள் பாதையைக் கடக்கும் ..................................... ஆபத்தானவை
06. மின்னல் தாக்கம் ஒரு .................................... அனர்த்தமாகும்.
07. இன்று இலங்கையில் அதிகமாக நடைபெறுவது ...................................விபத்தாகும்.
08. உயர் குருதியமுக்கம் உள்ளவர்கள் .............................. அடங்கியுள்ள உணவுகளை தவிர்த்தல் வேண்டும்.


அவதானம், நுளம்புகள், தலைக்கவசம், பாம்புகள், இடங்கள்,
வாகன, இயற்கை, கொழுப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(04) பின்வரும் தொழிலாளர்களுக்கு பொருத்தமான உபகரணங்களை தொடர்புபடுத்திக் காட்டுக.**

01. தாதி
02. வைத்தியர்
03. பொலிஸ்காரர்
04. கிரிக்கட் வீரர்
05. விவசாயி
06. சமையற்காரர்

(1)

(2)

(3)

(4)

(5)

(6)


**(05) உணவுகள் அசுத்தமடையும் படிமுறைத் தொடர்பான கூற்றுகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குப்படுத்தி அடைப்புக்குள் இலக்கங்களை இடுக.**

| | |
|---|---|
| 01. ஈக்கள் உணவில் அமருகின்றன. | |
| 02. அசுத்தமான உணவை உண்பதனால் கிருமிகள் உடம்பில் சேருகின்றன. | |
| 03. குப்பை கூளங்களினால் ஈக்கள் பெருகுகின்றன. | |
| 04. சிலர் வீடுகளின் அருகில் குப்பை கூளங்களைக் குவித்து வைக்கின்றனர். | 1 |
| 05. உடலினுள் கிருமிகள் செல்வதால் வயிற்றுவலி ஏற்படுகின்றது. | |
| 06. ஈக்களின் காலில் இருக்கும் அசுத்தங்கள் உணவில் சேருகின்றன. | |

**(06) சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

01. மழையுடன் மின்னலும் ஏற்படும் வேளையில் பாதுகாப்புக்காக நாம் பின்பற்ற வேண்டிய சரியான நடவடிக்கை யாது?

1) வீட்டினுள்ளேயே இருத்தல்
2) வீட்டினுள்ளேயும் பாதணிகளை அணிந்திருத்தல்
3) நிலத்துடனான தொடர்பை தவிர்த்தல்
4) உலோக வகைகளைத் தொடுவதைத் தவிர்த்தல்

02. பேருந்துத் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த பேருந்திலிருந்து இறங்கிய பிரயாணி ஒருவர் அந்தப்பேருந்தின் முன்னே பாதையைக் கடந்து செல்வது ஆபத்தானதாயிருப்பதற்குக் காரணம்

1) வலப் பக்கத்தால் வரும் வாகனங்களைத் தெளிவாகக் காணமுடியாமை
2) இடப் பக்கத்தால் வரும் வாகனங்களைத் தெளிவாகக் காணமுடியாமை
3) வீதியின் இரு பக்கங்களையும் தெளிவாகக் காணமுடியாமை
4) பேருந்தின் சாரதிக்குப் பிரயாணியைக் காணமுடியாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. அணிந்திருக்கும் உடையில் தீப்பிடித்த ஒருவரைக் காப்பற்றுவதற்கு உடனடியாக எடுக்கப்படவேண்டிய மிகப்பொருத்தமான நடவடிக்கை

1) தடித்த துணியினால் போர்த்துதல்
2) நிலத்தில் உருளச் செய்தல்
3) உடையின் தீப்பிடித்த பகுதியைக் கிழித்தெறிதல்
4) வைத்தியரிடம் கொண்டு செல்லுதல்.

04. நாய் கடித்தால் உடனடியாகச் செய்ய வேண்டிய முதலுதவி

1) காயத்தைத் துணியினால் கட்டுதல்
2) காயத்தை சவர்க்காரத்தினால் கழுவுதல்
3) காயத்தின் மீது தேங்காய் எண்ணெய் பூசுதல்
4) தேங்காய்ப்பாலைக் குடிக்கக் கொடுத்தல்

05. சந்தேகத்திற்கிடமான பொதியைக் கண்டவுடன் பாதுகாப்பிற்காக அறிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்

1) 119 2) 147 3) 456 4) 1919

06. மின்னல் தாக்கத்தக்க சாத்தியம் கூடுதலாக இருப்பது

1) வாகனத்தில் செல்லும் போது
2) திறந்த மைதானத்தில் நிற்கும் போது
3) பலகையிடப்பட்ட தரையில் நிற்கும் போது
4) தார் வீதியில் செல்லும் போது

07. பிளாத்திக்குக் கோப்பையில் அடைக்கப்பட்ட யோகட்டை உண்பதற்கு முன்பாக விஷேடமாகக் கவனத்தில் கொள்ள வேண்டியது

1) அடைக்கப்பட்ட திகதி 2) காலாவதியாகும் தேதி
3) அடங்கும் பொருள் 4) தர நிர்ணய இலட்சினை

08. கொள்ளை நோய் பரவுவது

1) நுளம்பின் மூலம் 2) எலியின் மூலம் 3) ஈயின் மூலம் 4) கோழியின் மூலம்

09. டெங்குநோய் தொடர்பான பின்வரும் கூற்றுகளிடையே பிழையான கூற்றைத் தெரிவு செய்க

1) எந்த நுளம்பினாலும் டெங்கு நோய் பரப்பப்படலாம்.
2) டெங்கு நோய் பரவுதலைத் தடுக்கலாம்.
3) டெங்கு நோயைக் குணப்படுத்தலாம்.
4) டெங்கு நோய் காரணமாக இறப்பும் ஏற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு மிக உகந்த உணவு

1) பாண் 2) நூடில்ஸ் 3) கௌபி 4) மரவள்ளி

11. நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்கு இலகுவான உகந்த முறை

1) வீட்டில் உள்ள நுளம்புகளை அழித்தல்
2) நுளம்பு முட்டைகளை அழித்தல்.
3) நுளம்புக்குடம்பிகளை அழித்தல்
4) சுற்றாடலில் நீர் தேங்குவதற்கு இடமளிக்காதிருத்தல்.

12. தொற்றுநோய் (பிரதேசம் பூராகவும்) பரவும்போது உடனடியாக எவருக்கு அறிவிக்க வேண்டும்?

1) பொலீஸ் நிலையப் பொறுப்பு அலுவலருக்கு
2) மருத்துவமனையின் மருத்துவ அலுவலருக்கு
3) பாடசாலை அதிபருக்கு
4) பொது சுகாதாப் பரிசோதகருக்கு

13. நிலநடுக்கத்தின் போது ஒருவர் தன்னைப் பாதுகாப்பதற்கு உடனடியாகச் செய்ய வேண்டியது.

1) இருக்கும் இடத்திலேயே இருத்தல் 2) மரத்திற்குக் கீழே இருத்தல்
3) உயரமான கட்டடத்திற்குச் செல்லல் 4) திறந்த வெளிக்குச் செல்லல்

14. கழிச்சல் நோயை உண்டாக்குவது

1) இலையான் 2) சிலந்தி 3) நுளம்பு 4) வண்டு

15. பின்வருவனவற்றில் எது பாதுகாப்பு அற்ற சந்தர்ப்பமாகும்?

1) நடைபாதையில் நடந்து செல்லல்
2) வீதி சமிக்ஞைப் பலகையில் 'பச்சை நிற மனிதன்' காட்சிப்படுத்தப்படும்போது பாதையைக் கடத்தல்.
3) வீதியில் நடந்து செல்லும் போது தமது வலப்பக்கத்தில் செல்லுதல்
4) புகையிரதப் பாதையில் நடத்தல்

16. நீரில் மூழ்கிய ஒருவருக்கு முதலுதவி அளிக்கும் போது முதலில் செய்ய வேண்டியது யாது?

1) ஈர உடையை அகற்றல்
2) போர்வையினால் உடலின் வெப்பத்தைப் பாதுகாத்தல்
3) நன்றாகச் சுவாசிப்பதைச் சோதித்தல்
4) சூடான பானத்தைக் குடிக்கக் கொடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. நுளம்புகள் காரணமாகப் பரவும் நோய்கள் மாத்திரம் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

1) மலேரியா, டெங்கு, யானைக்கால் நோய்
2) மலேரியா, கழிச்சல், கொள்ளை நோய்
3) கழிச்சல், கொள்ளை நோய், டெங்கு
4) டெங்கு, மலேரியா, கழிச்சல்

18. ஆபத்து ஏற்படுவதற்கு அதிக சாத்தியம் உள்ள சந்தர்ப்பம் ஒன்று

1) மின்னல் ஏற்படும் போது வீட்டினுள் கட்டிலில் இருத்தல்
2) உலர்ந்த இறப்பர் பாதணி அணிந்து துணிகளை அழுத்தல்
3) விழாக்களின் போது பட்டாசு கொளுத்துதல்
4) மின் சமிக்ஞையில் சிவப்பு மனிதன் ஒளிரும் போது வாகனங்கள் செல்லுதல்.

19. ஒருவருடைய காலில் பாம்பு தீண்டினால் முதலில் செய்ய வேண்டியது

1) பாம்பைக் கண்டுபிடித்தல்
2) கடித்த இடத்தை தூய நீரினால் கழுவுதல்
3) கடித்த இடத்தை அசையாது வைத்தல்
4) சூடான பானத்தை குடிக்க கொடுத்தல்.

20. எலியின் உடலில் வாழும் தெள்ளு மூலம் பரவும் நோய்

1) கழிச்சல் 2) யானைக்கால்
3) நீர் வெறுப்பு 4) கொள்ளை

21. நீர் வெறுப்பு நோய் ஏற்படுவதற்குக் காரணமான நோய்க் கிருமிகளை மனித உடலினுள் பின்வரும் எப்பிராணி புகுத்துகின்றது?

1) நுளம்பு 2) கரப்பான் பூச்சி 3) பூனை 4) வீட்டு ஈ

22. இலங்கையில் பரவும் பெரும் எண்ணிக்கையான கொள்ளை நோய்களுக்குக் காரணமாக அமையும் பிராணி வகை

1) எலி 2) நாய் 3) நுளம்பு 4) ஈ

23. பின்வரும் எந்த விளையாட்டில் கைக்கவசம், காற்கவசம் என்பன அணியப்படுகின்றன?

1) எல்லே 2) கரப்பந்து 3) கிரிக்கெற் 4) பட்மின்டன்

24. "நீராடுவது ஆபத்தானது" என குளமொன்றிற்கு அருகே அறிவித்தலொன்றைக் காட்சிப்படுத்துவதற்குக் காரணமாக இருக்க முடியாதது எது?

1) நீரைக் குடிப்பதற்குப் பயன்படுத்துதல் 2) ஆழமானதாக இருத்தல்
3) முதலைகள் இருத்தல் 4) சேறு இருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருப்பொருள் 08 நீர்

### செயற்பாடு 01

❖. எமக்குத் தேவையான நீரை பெற்றுக் கொள்ளும் வழிகள்

•. ஆறுகள், ஓடைகள், தடாகம், கிணறு, குழாய்க்கிணறு, குழாய் நீர்

•. தூய்மையான நீரை இனங்காணல்




குழாய் நீர் / கிணற்று நீர் — சேற்று நீர் — இலை உக்கலுடன் கூடியநீர்

•. ABC ஆகிய கண்ணாடிக் குவளைகளில் உள்ள நீர் மாதிரிகளில் நிறம், மணம் ஆகியன தொடர்பாக மாணவர்களின் கவனத்தை ஈர்த்தல்.

•. BC ஆகிய குவளைகளில் உள்ள நீருடன் A குவளையில் உள்ள நீரை ஒப்பிடல்.

•. அதனூடு தூய்மையான நீருக்கு மணமோ, நிறமோ இல்லை என்பதைக் கண்டறியலாம்.


•. நீருக்கு திடமான வடிவம் இல்லை என்பதைக் கண்டறிதல்

•. வெவ்வேறு அளவு கொண்ட ஊடுகாட்டக்கூடிய பாத்திரங்களைப் பெற்றுக் கொள்ளல்.

•. பாத்திரங்களில் கொள்ளக்கூடிய நீரின் அளவு பற்றி வினவுதல்.

•. பாத்திரங்களில் நீரை நிரப்பி அவதானித்தல்.

•. நீருக்கு குறித்த வடிவம் இல்லை என்பதை அறிவதுடன் பாத்திரத்தின் வடிவத்தை அது பெறும் என்பதை அறிந்துக்கொள்ளல்.




### செயற்பாடு 02

❖. உலோகக் கரண்டியில் நீரை ஊற்றி சூடாக்கும் போது நடப்பவற்றை அவதானித்தல்

•. நீர் சூடாகும்

•. நீர் ஆவியாகும்

•. நீர் படிப்படியாகக் குறையும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 03

அவதானிப்பு - 1

- **நன்கு சூடாக்கப்பட்ட உலோகக்கரண்டி மீது நீர் துளி ஒன்று இட்டு அவதானித்தல்.**
- ஒலி எழும் விதத்தை அவதானித்தல்
- நீர் ஆவியாகும் முறையை அவதானித்தல்

அவதானிப்பு - 2

- **உலோகக் கரண்டியை சிறிது நேரம் மெழுகு சுவாளையில் பிடித்த பின்னர் நீர்த்துளி ஒன்றை கரண்டி மீது விழச்செய்து அவதானத்தை மேற்கொள்ளச் செய்தல்.**
- அவதானித்த இரு செயற்பாடுகளையும் ஒப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கவிடல்

அவதானிப்பு - 3

- **நீராவி குளிரும் போது ஏற்படும் மாற்றத்தை அவதானித்தல்**
- மர அல்லது பிளாத்திக் பிடி கொண்ட உலோகக்கரண்டியின் சிறிதளவு நீரை எடுத்து அதனை மெழுகுதிரி சுவாலை மீது பிடிக்கவும்.
- அப்போது வெளியேறும் நீராவிக்கு மேல் தகரப்பேணி மூடியை அல்லது உலோகத்தகட்டினை அல்லது கண்ணாடித் தட்டை பிடித்து அதன் மீது நீராவியைப்படச் செய்க.
- நீரைக் கொதிக்கும் வரை சூடாக்கும் போது அது நீராவியாக மாறும் விதம் மற்றும் நீராவியை குளிரச்செய்யும் போது அது மீண்டும் நீராக மாறும் விதம் ஆகியவற்றை அவதானிக்க.
- **நீராவி மூலம் பெறத்தக்க பயன்கள்**
- பிட்டு, இடியப்பம் அவிப்பதற்கு நீராவி பயன்படல்.
- உள்நாட்டு மூலிகைகளை நீராவியில் அவித்தல்.
- தடிமன், காய்ச்சல் ஏற்படும் போது ஆவிபிடித்தல்.
- முகத்தை தூய்மைப்படுத்தும் போது ஆவிப்பிடித்தல்.
- நீராவி மூலம் படகில் பயணித்தல்


## செயற்பாடு 04

❖. **பனிக்கட்டிகளை மூன்று வகை தன்மைக்கொண்ட நீரில் இட்டு அவதானித்தல்.**

- பனிக்கட்டிகளை கையில் எடுத்து உணரப்படும் உணர்வை வெளிப்படுத்தவிடல்.
- குளிர்ச்சியாக உள்ளது
- ஈரலிப்பை உணர முடிகிறது
- வெற்று முகவையில் பனிக்கட்டிகளையிடுதல்
- குளிர் நீர் கொண்ட முகவையில் பனிக்கட்டிளையிடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- சூடான நீர் கொண்ட முகவையில் பனிக்கட்டிளையிடுதல்
- நடப்பவற்றை அவதானித்துக்கூற வழிப்படுத்தல்
- வெற்றுமுகவையில் பனிக்கட்டிகள் மெதுவாக உருகும்.
- முகவை குளிர்ச்சியடையும்
- முகவையில் வெளிப்பாகத்தில் நீர்த்துளிகள் படியும்
- நீருள்ள பாத்திரத்தில் பனிக்கட்டிகளையிடும் போது
- பனிக்கட்டியில் ஒரு பகுதி மிதக்கும்
- பனிக்கட்டி படிப்படியாக உருகும்.
- நீர் குளிர்ச்சியடையும்
- பாத்திரத்தில் வெளிப்பகுதியில் வெளிப்பகுதியில் நீர் துளிகள் படியும்.
- சூடான நீருள்ள பாத்திரத்தில் பனிக்கட்டிகளையிடும் போது
- பனிக்கட்டி நீரில் மிதக்கும்
- பனிக்கட்டி வேகமாக உருகும்.
- பனிக்கட்டிகளை உருகாது நீண்ட காலம் பேணுதல்
- ரெஜிபோம் பெட்டியில் இட்டு மூடிவைத்தல்.
- மேலே மரத்தூளைப் பரவி மூடி வைத்தல்.
- பனிக்கட்டிகளின் மீது உமியை பரப்பி மூடி வைத்தல்.
- பனிக்கட்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்
- பானம் தயாரிக்கையில் குளிர்ச்சிக்காக இடல்.
- மீனை பழுதடையாது பேணுதல். (நற்காப்புச்செய்தல்)
- மருந்து பொருட்களை இட்டு வைத்தல்.

## செயற்பாடு 05

❖. **நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.**

- வரட்சியான பிரதேசங்களில் வீடியோ காட்சிகளை மாணவர்களுக்கு காண்பித்தல்.
- நீரின் முக்கியத்துவம் பற்றி கலந்துரையாடல்
- வீட்டிலும், பாடசாலையிலும், பொது இடங்களிலும் நீர் விரயமாகும் சந்தர்ப்பங்களை கலந்துரையாடல்.
- நீர் வளம் விரயமாவதைத் தவிர்ப்பதற்கு மாணவரால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை கலந்துரையாடல்.
- நீர் விரயமாகும் சந்தர்ப்பங்கள்
- நீர் குழாயை நன்கு மூடாமை.
- குழாய்களில் வெடிப்பு ஏற்பட்டு நீர் விரயமாதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீர் குழாயை திறந்து வைத்துக் கொண்டு முகம் கழுவுதல், பாத்திரங்கள் கழுவுதல்
- தேவைக்கு மீதமாக குடிப்பதற்கு நீரை எடுத்து எஞ்சியதை வீசுதல்.
- நீர் குழாய் திருகுதலில் நீர் கசிவு ஏற்படல்
- நீர் தாங்கியில் நீர் நிரம்பி கொட்டுதல்.
- குழாயை திறந்து வைத்துக் கொண்டு நீரைப்பருகுதல்.

- **நீர் வளம் விரயமாவதை தவிர்த்தல்**

- பாவனையின் பின் நீர் குழாயை இறுக மூடுதல்
- நீர் குழாய்களில் உடைவுகள் ஏற்பட்டால் உடனே சரிசெய்தல்.
- தேவைக்கு போதுமான நீரை குடிப்பதற்கு எடுத்தல்.
- முகம் கழுவும் போது, பாத்திரங்களை கழுவும் போது ஒரு பெரிய பாத்திரத்தில் நீரை எடுத்து கழுவுதல்.
- குழாய் வாயிலை திறந்து வைத்துக் கொண்டு வேறுவேலைகளில் ஈடுபடாதிருத்தல்
- நீரை சேமிக்கும் போது நன்றாக மூடி வைத்தல்.
- நீர் தாங்கியில் நீரை சேகரிக்கும் போது நிறைந்ததும் மூடிவிடல் வேண்டும்.

## செயற்பாடு 06

### ❖. நீர் மாசடையும் வழிகள்

- மனிதச் செயற்பாடுகளின் விளைவாக வெளியேற்றப்படும் கழிவுகள் நீருடன் சேர்தல்.
- கழிவுகள் குவிக்கப்பட்டிருக்கும் இடங்களிலிருந்து வெளிப்படும் பாதகமான பதார்த்தங்கள் நீருடன் சேர்தல்
- எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் நீருடன் சேர்தல்.
- விவசாய நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படும் பீடை நாசினிகள், இரசாயனப் பசளைகள் நீருடன் கலத்தல்.
- வெள்ளப்பெருக்கு ஏற்படும் போது நீர் மாசடையும்.
- பிராணிகளின் எச்சங்கள் நீரில் விழுதல்.
- செத்தப்பிராணிகளை நீருக்குள் போடுதல்.
- குப்பைக்கூளங்களை வடிகாலுக்குள் போடுதல்.

- **நீர் மாசடைவதைத் தவிர்த்து சூழலைப் பாதுகாத்தல் எமது கடமையாகும்.**

- நீரில் கழிவுகள் சேராது பாதுகாத்தல்.
- கிணறுகளை வலையிட்டு மூடிப் பாதுகாத்தல்.
- விவசாயத்திற்கு இரசாயனப்பசளைகள் சேர்த்தலை தவிர்த்து இயற்கைப் பசளையைப் பயன்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குடி நீருக்கு குளோரின் இடல்.
- ஆற்றங்கரைகள், கடற்கரைகள், வடிகால்களில் தேங்கிக் காணப்படும் பொலித்தீன், பிளாத்திக் கழிவுகளை உரியவாறு அகற்றி மேலும் போடாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**● அசுத்த நீரைப்பருகுவதால் ஏற்படும் நோய்கள்**


- வயிற்றோட்டம்
- செங்கண்மாரி
- ஈரலழற்சி (மஞ்சட்காய்ச்சல்)
- வாந்திபேதி
- கழிச்சல்

◆ **மாசடைந்த நீரை பருகுவதால் மனிதனுக்கு மட்டுமன்றி விலங்குகளுக்கும் பாதிப்பு ஏற்படுவதுடன் சூழலின் அழகும் குறையும்.**

## செயற்பாடு 07

◆. **அசுத்தமான நீரைப் பருகுவதால் ஏற்படக்கூடிய பாதகமான நிலைமைகள் குறித்து சுகாதார ஆலோசகர் ஒருவரின் வழிக்காட்டல் நிகழ்ச்சி திட்டமொன்றை ஏற்படுத்தல்.**


- அது தொடர்பான துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டி ஆகியவற்றை தயாரித்தல்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 08




- சம அளவான, ஊடுகாட்டும் தன்மையுள்ள மூன்று பாத்திரங்களைப் பெறுக.
- உணவு வகைச் சாயத்தைப் பயன்படுத்தி நீலம், சிவப்பு, மஞ்சள் நிறம் சேர்த்து நிறமூட்டிய நீரின் சம அளவுகளைத் துனித்தனியே அம்மூன்று பாத்திரங்களிலும் இடுக.
- படத்தில் காட்டியவாறு பாத்திரங்களையும் அருகருகே வரிசையாக வைத்து அப்பாத்திரங்களில் உள்ள மூன்று நிறமூட்டிய நீருடன் தொடுகையடையுமாறு ரிசூத்தாள்களை இடுக.
- நிறமூட்டிய நீர் செல்லும் விதம், நிறங்கள் ஒன்றுடனொன்று கலக்கும் விதம், புதிய நிறங்கள் தோன்றும் விதம் ஆகியவற்றை அவதானிக்க வழிப்படுத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| நீலம் | + | மஞ்சள் | - | பச்சை |
| சிவப்பு | + | மஞ்சள் | - | செம்மஞ்சள் |
| சிவப்பு | + | நீலம் | - | ஊதா |
| சிவப்பு | + | கறுப்பு | - | கபிலம் |
| சிவப்பு | + | வெள்ளை | - | இளஞ்சிவப்பு |
| கறுப்பு | + | வெள்ளை | - | சாம்பல் |

## செயற்பாடு 09

❖. பாய்ந்தோடும் நீர் விழுவதால் சுழலும் நீர் சுழலியைத் தயாரித்தல்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீரோட்டத்தின் வேகம் அதிகரிக்கும் போது சக்கரம் வேகமாக சுழலும்
- நீரோட்டத்தின் உயரம் கூடும்போது சக்கரம் வேகமாக சுழலும்
- கரண்டிகளின் எண்ணிக்கை கூடும் போது சக்கரம் வேகமாக சுழலும்






- பயிர்களை விலங்குகளிடம் இருந்து காப்பாற்றுவதற்கு இவ்வாறான செயற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட நீர்வெருளியை அறிமுகம் செய்தல்

செயற்பாடு 10

❖. **பீங்கான் களியினால் செய்யப்பட்ட ஒரே அளவான பாத்திரங்கள் 6 இனைப் பெற்று நீர் ஊற்றி இசைத்தல்**





- ஆறு பாத்திரங்களிலும் *100ml - 600ml* வரையிலான நீரை நிரப்புக.
- இசைப்பதற்குப் பொருத்தமான தடி அல்லது முள்முனை வட்டவடிவமாக அமைக்கப்பட்ட கரண்டி ஒன்றைப்பயன்படுத்துக
- மாணவர்கள் ஒவ்வொருவரும் இந்தப்பாத்திரங்களில் தட்டி ஒலியெழுப்புவதற்கு சந்தர்ப்பத்தை அளித்தல்.
- எழுப்பப்படும் ஒலியின் தன்மை பாத்திரத்தில் உள்ள நீரின் அளவுக்கு அமைய வேறுபடும் என்பதை உணரச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 11

◆. **போத்தல்களில் நீர் நிரப்பும் விளையாட்டு**

•. 6 x 6 x 6 *cm* அளவிலான ஸ்பொன்ஜ் துண்டுகளை மாணவர்களுக்கு வழங்குதல்.

•. ஒவ்வொரு மாணவருக்கு முன்பாக 5m தூரத்தில் புனலுடன் கூடிய *500ml* வெற்று போத்தல்களை வைக்குக.

•. போதியளவு நீர் நிரப்பப்பட்ட *03* பாத்திரங்களை ஆரம்பிப்புக் கோட்டிற்கு அண்மையில் வைக்க.

•. ஆசிரியரது சமிக்ஞைக்கு அமைய மாணவரது கையிலுள்ள ஸ்பொன்ஜ் நீரிலிட்டு நன்கு நனைத்து (நீரை உறிஞ்சிக்கொள்ளச் செய்து) ஓடிச்சென்று தனக்குரிய போத்தலை நிரப்பிக்கொள்ள வேண்டும். போத்தல் நிரம்பும் வரை இந்த விளையாட்டில் ஈடுபடச் செய்க.

•. முதலில் போத்தலை நிரப்பிய மாணவர் வெற்றி பெறுவர்.

| Activity Based Oral English | | |
|---|---|---|
| **08. Water** | **Song** | **Useful Expressions** |
| 01. bathe<br>02. cook<br>03. wash<br>04. drink<br>05. water<br>(the plants)<br>06. well<br>07. river<br>08. pond<br>09. tank | Water // we need you<br>Water // we like you<br>Water // without you<br>We can`t bathe-we can`t cook<br>We can`t wash or we can`t live<br>We protect you//<br>Wasting no - no wasting.<br>Water // we need you<br>Water // we like you<br>Water // without you<br>We can`t live//<br><br>(Jameica......tune) | 18. Don`t waste water. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு வினாக்கள்

பயிற்சி

**(01) தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 01. அசுத்தமான நீரைப்பருகுதல் | நீரை சூடேற்றுதல் |
| 02. நீர் ஆவியாகும் | மஞ்சட்காய்ச்சல் |
| 03. நீர் குளிர்ச்சியடையும் | பனிக்கட்டிகளைப் பேணுதல் |
| 04. இடியப்பம் அவித்தல் | நீர் மாசடைதல் |
| 05. மரத்தூளில் வைத்தல் | நீரினுள் பனிக்கட்டிகளையிடல் |
| 06. இரசாயனப் பசளைகள் கலத்தல் | நீராவியின் பயன்பாடு |

**(02) பின்வருவனவற்றுள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

01. மீனைப் பழுதடையாது பேணுவதற்கு பனிக்கட்டி உதவும். ( )
02. சுத்தமான நீரைப் பருகுவதால் வயிற்றோட்டம் ஏற்படும். ( )
03. நிறச்சாயத்தை டிசுத்தாள்கள் உறிஞ்சிக்கொள்ளும். ( )
04. நீரின் மூலம் இசையை உருவாக்கலாம். ( )
05. சூடாக்கப்பட்ட உலோகக்கரண்டியினுள் நீர்துளியை விடும் போது சத்தம் உண்டாகும். ( )
06. நீராவி மூலம் அப்பம் தயாரிக்க முடியும். ( )
07. தூய்மையான நீருக்கு பலவகையான சுவை உண்டு. ( )
08. பனிக்கட்டிகளை இறுகப் பிடித்தால் ஒட்டிக்கொள்ளும். ( )

**(03) இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை எழுதுக.**

01. நீல நிறத்தையும் மஞ்சள் நிறத்தையும் சேர்க்கும் போது .................................................... நிறம் தோன்றும்.
02. மாசடைந்த நீரை நுகர்வதால் .................................................................. அசுத்தமடையும்.
03. பனிக்கட்டிகளை சூடான நீரில் இடும் போது விரைவாக ....................................................
04. நீர் சுழலியைத் தயாரிக்க ........................................................................................ உதவும்
05. நீர் உள்ள பாத்திரங்களைத் தடியினால் தட்டும் போது ................................ உண்டாகும்.
06. நீர் குழாயை திறந்து வைத்து நீர் பருகும் போது நீர் ..................................................
07. நீரை சூடாக்கி பெறும் ஆவி மூலம் ........................................................ தயாரித்துக் கொள்ளலாம்.
08. நீராவியைக் குளிரச் செய்யும் போது அது ........................................................ மாறும்

| விரயமாகும், நீராக, பிட்டு, ரெஜிபோம், பச்சை, உருகும், சூழல், இசை |
|---|



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(04) மிகச் சரியாக விடையின் கீழ் கோடிடுக.**

01. நீரில் கொண்டிஸ் தூளையிட்டால் கிடைக்கும் திரவத்தின் நிறம் யாது?

1) சிவப்பு 2) மஞ்சள் 3) ஊதா 4) பச்சை

02. நீர் வெருளி என்பது

1) நீர் நிலைகளுக்கு அருகே வாழும் ஒரு பிராணி

2) இரவு வேளைகளில் பயிர் நிலங்களுக்கு வரும் ஒரு பிராணி

3) பண்டைய கதையொன்றில் இடம்பெற்றுள்ள மாயக் கதாபாத்திரம்

4) பிராணிகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்காகப் பயன்படும் ஓர் அமைப்பு

03. பனிக்கட்டிகள் சிலவற்றை ஒரு கண்ணாடிக் குவளையினுள் இட்டு, சிறிது நேரம் வெளியே வைத்திருந்த பின்னர் அதில் அவதானிக்க முடியாதது,

1) பனிக்கட்டி உருகியிருத்தல்

2) குவளையில் நீர் சேர்ந்திருத்தல்

3) குவளையிலிருந்து வளிக்குமிழிகள் வெளியேறுதல்.

4) குவளையில் வெளிப்புறம் ஈரமாக இருத்தல்.

04. நீருக்கு இருக்கக்கூடிய ஓர் இயல்பாக அமையாதது

1) நிலையான வடிவம் இருத்தல்

2) வெப்பமாக்கும்போது நீராவி வெளியேறல்

3) கொண்டிஸ் தூளினால் நிறமூட்டப்படல்

4) குளிர்த்தும் போது பனிக்கட்டியாக மாறுதல்.

05. பின்வரும் பொருள்களை நீரில் இடும்போது நீரில் மிதக்கும் பொருள் யாது?

1) பனிக்கட்டி 2) கண்ணாடித் துண்டு

3) கல் 4) இரும்பு ஆணி

06. பித்தளை மேசைக்கரண்டியில் சிறிதளவு நீரையிட்டு மெழுகுவர்த்தி சுவாளையில் பிடிக்கும் போது

1) நீரின் நிறம் மாறும் 2) நீரின் இயல்பு மாறமாட்டாது

3) நீர் ஆவியாகும் 4) நீர் உள்ள கரண்டி வெப்பமாகாது




07. நீலச்சாயத்தையும் சிவப்புச்சாயத்தையும் கலந்து தயாரிக்கப்படும் நிறம் யாது?

1) பச்சை 2) ஊதா 3) மஞ்சள் 4) கறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. கண்ணாடிப் பாத்திரம் ஒன்றில் பனிக்கட்டியொன்றையிட்டு அப்பாத்திரத்தில் நீரை நிரப்பினால் அப்பனிக்கட்டியின் அமைவை சரியாகக் காட்டும் உரு

1)  2)  3)  4) 

09. நீரைக்கொண்டுள்ள கண்ணாடிக்குவளையில் சிறிதளவு தேங்காய் எண்ணெய்யை ஊற்றினால்

1) மிதக்கும் 2) அமிழும் 3) நடுவில் தேங்கும் 4) உறையும்

10. நீருள்ள போத்தலில் மண்ணெண்ணெய் சிறிதளவு இட்டு கலக்கினால்

1) மண்ணெண்ணெய் நீருக்கு அடியில் செல்லும்

2) மண்ணெண்ணெய் நீருக்கு மேல் மிதக்கும்

3) மண்ணெண்ணெய் நீருடன் கரையும்

4) மண்ணெண்ணெய் போத்தலில் அடியில் படியும்.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

11. பனிக்கட்டிகளை கையில் வைக்கும் போது முதலில் அவதானிக்கமுடிவது

1) பனிக்கட்டியின் குளிர்ச்சியை 2) பனிக்கட்டி உருகுவதை

3) பனிக்கட்டியில் ஆவி செல்வதை 4) பனிக்கட்டி சிறிதாவதை

12. நீரில் மிதக்கக் கூடியது?

1) கைஊசி 2) இரும்பாணி 3) தேங்காய் 4) செங்கல்

13. நீரில் கலக்கும் போது நிறமாற்றத்தை ஏற்படுத்தாதது?

1) கோழிச்சாயம் 2) கொண்டீஸ் 3) மஞ்சள் 4) வினாகிரி

14. நீரை சுத்திகரிக்க குளோரினை சேர்த்த உடன் நீரானது

1) ஆவியாகும் 2) கட்டியாகும்

3) வெள்ளை நிறமாகும் 4) சுவை அதிகரிக்கும்.

15. தோட்டங்களில் நீர் வெருளியை பயன்படுத்துவதன் நோக்கம்

1) மண்ணை வளமாக்க 2) பயிர்கள் செழிப்பாக வளர

3) நீர் பாய்ச்ச 4) பீடைகளை கட்டுப்படுத்த

16. நீர்ச் சுழலியின் வேகத்தை அதிகரிப்பதற்கு செய்ய வேண்டியது?

1) நீர் விழும் வேகத்தை குறைத்தல்

2) பற்சில்லுகளின் எண்ணிக்கை அதிகரித்தல்

3) நீர் விழும் தூரத்தை குறைத்தல்

4) பற் சில்லுகளின் எண்ணிக்கையைக் குறைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருப்பொருள் 09 போக்குவரத்து

### செயற்பாடு 01

◆. நடந்து செல்வோர் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்

•. வீதியின் வலது / இடது ஆகிய இரண்டு பக்கங்களையும் நன்கு அவதானித்துப் பாதுகாப்பாக வீதியைக் கடப்பதற்கான சந்தர்ப்பம் வரும் வரை பொறுமையாக, வீதியின் ஓரத்தில் நிற்றல்.

•. வாகனங்கள் அடிக்கடி பயணிக்கும் வீதியில் வாகனங்களை செலுத்தும் சாரதிகள் நீங்கள் கடப்பதற்கு ஆயத்தமாக உள்ளீர்கள் என்பதைக் கவனிக்கின்றார் என்பதை உறுதிப்படுத்திய பின்னர் மட்டும் வீதியைக் கடக்க வேண்டும்.

•. தனக்குக் கடக்கப் பொருத்தமான சந்தர்ப்பம் கிடைத்த பின்னர் இயலுமான விரைவில் வீதியைக் கடக்க வேண்டும்.

Public Library Municipal Council

•. வீதியைக் கடக்கும் சந்தர்ப்பங்களில் வேறு செயல்களில் ஈடுபடாது போதிய கவனத்துடன் அதனை மேற்கொள்ள வேண்டும்.


உதாரணம் : •. மற்றுமொருவருடன் உரையாடிக்கொண்டு செல்லல்

•. தொலைபேசியைப் பயன்படுத்தியவாறு செல்லல்

•. குழுமமாகப் பாதுகாப்பற்ற வகையில் செல்லல்

●. படிமுறை - 2


•. ஒளிச் சமிக்ஞை விளக்கின் பொருளை அறிதல்



வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டும்
பாதசாரிகள் பாதையை கடந்து செல்லலாம்

வாகனங்கள் செல்வதற்கு ஆயத்தம் செய்யலாம்

வாகனங்கள் பயணிக்க முடியும்
(பாதசாரிகள் பாதையைக் கடக்க கூடாது)



சிவப்பு நிறமனிதன் ஒளிரும் போது வாகனங்கள் பயணிக்கலாம், பாதசாரிகள் பாதையைக் கடக்க முடியாது, பாதசாரிகள் தரிக்க வேண்டும்.

பச்சை நிற நடக்கும் மனிதன் ஒளிரும் போது வாகனங்கள் பயணிப்பதை நிறுத்த வேண்டும் அப்போது பாதசாரிகள் பாதையைக் கடக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 02

**❖. பெருந்தெருவில் செல்லும் போது நடந்துக் கொள்ள வேண்டிய விதம்**

| வீதியில் செல்லும் போது செய்யத்தக்க செயல்கள் | வீதியில் செல்லும் போது செய்யத்தகாத செயல்கள் |
|---|---|
| 01. வீதியில் வலது பக்க ஓரத்தினால் செல்லுதல் | 01. குழுமமாகச் செல்வதைத் தவிர்த்தல் |
| 02. பாதசாரிகள், வீதியை கடப்பதற்கெனக் குறிக்கப்பட்டுள்ள இடங்களில் மட்டும் விரைவாக வீதியைக் கடத்தல் | 02. வீதியில் பல்வேறு பொருள்களை எரிவதைத் தவிர்த்தல் |
| 03. வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடித்தல் | 03. வீதியின் இரு பக்கங்களிலும் உள்ள சொத்துகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது |
| 04. வீதி சமிக்ஞை விளக்கில் பொருளை நன்கு விளங்கியிருத்தல் | 04. தொலைப்பேசியில் கதைத்தவாறு பயணித்தல் |
| 05. தனிமையான இடங்கள், விலங்குகள் வீதியைக் கடக்கும் இடங்கள் பற்றிய விளக்கத்துடன் பாதுகாப்புடன் பயணித்தல் | 05. பத்திரிகை வாசித்தவாறு பயணித்தல் |
| | 06. உணவு உண்டவாறு பயணித்தல் |
| | 07. கேலி செய்தவாறு பயணித்தல் |
| | 08. விளையாடியவாறு பயணித்தல் |
| | 09. வாய்ப்பார்த்தவாறு பயணித்தல் |

**●. வீதியில் பயணிக்கும் போது செய்யக்கூடாத விடயங்களை செய்யும் போது ஏற்படும் விபத்துக்கள் சேதங்கள்**

| | |
|---|---|
| •. வாகனங்களுக்கு மோதிப்படலாம் | காயங்கள், மரணங்கள் ஏற்படலாம், வீணான பிரச்சினைகள் ஏற்படலாம், சாரதியை வீதியில் உள்ளோர் தாக்கலாம், பயணத்தாமதம் ஏற்படலாம், நேரம் வீண்விரயமாகலாம் |
| •. மனிதர்களோடும் மோதிப்படலாம் | -அடிதடி பிரச்சினைகள் வரலாம், காயங்கள் ஏற்படலாம் |
| •. குழிகளில் விழலாம், தடுக்கி விழலாம் | காயங்கள் ஏற்படும், வாகன நெரிசல் உண்டாகும், பயணத்தாமதம் ஏற்படும், நேரம் வீண்விரயமாகும். |
| •. விளையாடும் போது | அருகில் உள்ள கட்டிடங்களில் யன்னல் கண்ணாடிகள் உடையலாம், சண்டைகள் ஏற்படலாம், வந்திப்பணம் கேட்கலாம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 03

❖. **வீதியில் பயணிக்கும் போது ஏற்படக்கூடிய விபத்துக்களை தவிர்ப்பதற்குச் செய்யக்கூடியவை**

•. விபத்து தொடர்பாக வெளிவந்த செய்தி அடங்கிய பத்திரிகை தகவலை வைத்து கலந்துரையாடுக.

| விபத்து | தவிர்ப்பதற்குச் செய்யத்தக்கவை |
|---|---|
| 8 வயது மாணவர் வீதியைக் கடக்கும்போது பேருந்துடன் மோதிக் காயப்பட்டார். | • மஞ்சள் / வெள்ளை கோடுகளினூடாக வீதியைக் கடத்தல்.<br>• மஞ்சள் / வெள்ளைக் கோடுகளைப் (பாதசாரிக் கடவை) பயன்படுத்தல்.<br>• சாரதிகள் அவதானத்துடன் வாகனத்தைச் செலுத்தல்<br>• வலது பார்த்து பின் இடது பார்த்து மீண்டும் வலது பார்த்து பாதையைக் கடக்க வேண்டும்.<br>• பாதையில் பயணிக்கும் போது மிகுந்த அவதானம் தேவை |

## செயற்பாடு 04

❖. **போக்குவரத்துக்குப் பயன்படும் வாகனங்களின் சேவையின் முக்கியத்துவம்**

●. போக்குவரத்துக்குப் பயன்படும் வாகனங்கள்

- பேருந்து
- வேன்
- முச்சக்கரவண்டி
- புகையிரதம்
- விமானம்

●. போக்குவரத்திற்காக வாகனங்கள் கிடைக்காத அசௌகரியமான சந்தர்ப்பங்கள்

- பாடசாலைக்கு வரும் பேருந்து இடையில் செயலிழத்தல்
- ஆற்றுக்கு அப்பால் செல்லப் பயன்படுத்தப்படும் தோணி உடைந்திருத்தல்
- அப்பா வெளிநாட்டிலிருந்து வருகைதரவுள்ள விமானம் வருகைதரத் தாமதம் அடைதல்
- சுற்றுலா செல்ல ஏற்பாடு செய்த பேருந்து செயலிழத்தல்
- பாட்டியின் வீட்டிற்குப் புகையிரதத்தில் செல்லக் காத்திருக்கும் புகையிரதம் வராமை.

●. இவ்வாறான சிக்கலின் போது முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் வசதியீனங்கள் பற்றி கலந்துரையாடல்

- உரிய நேரத்தில் பாடசாலைக்கு வர முடியாமை.
- பொதிகளை எடுத்துக் கொண்டு நடக்க வேண்டி ஏற்படும்
- அமருவதற்கு இடம் எதுவும் கிடைக்காமல் போகும்.
- இன்னும் ஒரு பேருந்தில் செல்ல பணவசதி இல்லாமல் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ●. வீதி ஒழுங்குகளைப் பேணும் போது கவனிக்க வேண்டிய வீதிக்குறியீடுகள்


முன்னால் சிறுவர் கடவை


பாதசாரிகள் கடக்குமிடம் முன்னால்


முன்னால் பாதுகாப்பற்ற புகையிரதக்கடவை


முன்னால் பாதுகாப்பான புகையிரதக்கடவை


வழுக்கும் வீதி முன்னால்


முன்னால் பாதை வேலை


முன்னால் சுற்றுவளைவு


பஸ்தரிப்பிடம்


பாதசாரி கடவை




வாகனத் தரிப்பிடம்


ஒலி எழுப்பத் தடை


சாய்வான பாதை


ஒடுக்கமான பாலம் முன்னால்


நாற்சந்தி


T வடிவ சந்தி


வைத்தியசாலை


அபாயகரமான ஏற்றம்


மு.துவிச்சச்சர வண்டிக்கடவை


முன்னால் வீதி ஒடுங்குகிறது



முன்னே கற்கள் உருண்டு விழும் அபாயம்

## பொலிஸ் அதிகாரிகள் பயன்படுத்தும் சைகைகள்


வலது இடது பக்கத்திலிருந்து வரும் வாகனங்களை வரும் படி அழைத்தல்.


முன்னால் வரும் வாகனத்தை வரும் படி காட்டுதல்


முன்னாலும் பின்னாலும் வரும் வாகனங்களை நிறுத்தும்படிக்காட்டும் சமிக்ஞை


பின்னால் வரும் வாகனத்தை நிறுத்துதல்


முன்னால் அணுகி வரும் வாகனத்தை நிறுத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் அனுகூலங்கள்**
- பொருள்களைக் கொண்டுசெல்லல்
- குறைந்த செலவில் பயணிக்க முடிதல்
- அதிகளவானோரால் பயணிக்க முடிதல்
- பாதுகாப்பு

**செயற்பாடு 05**

❖. **பொது வாகனங்களில் பயணிக்கும் போது பேணவேண்டிய நற்பழக்கவழக்கங்கள்**

- வகுப்பறையில் ஒரு பேருந்து பயணத்தை மேற்கொள்ளல்.
- பேருந்தில் பயணிப்பதற்காக ஏறும் சிலர் ஏனையோரின் உதவித் தேவைப்படுவோராக இருக்கலாம். (ஆசனம் தேவைப்படுவோர்)
  - ☛. மதகுருமாருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
  - ☛. கர்ப்பிணித் தாய்மார்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
  - ☛. அங்கவீனர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
- இவ்விடயங்கள் குறித்து மாணவர்களுடன் கலந்துரையாடல்
- **இவ்வாறான நபர்கள் பேருந்தில் ஏறும்போது பின்பற்ற வேண்டிய நற்பழக்கங்கள்**
- வயோதிபர் / கர்ப்பிணிப் பெண்கள் / குழந்தையைக் கையிலேந்தியிருக்கும் தாய்மார் போன்றோருக்கு ஆசனத்தை வழங்குதல்.
- வரிசையாகப் பேருந்தில் ஏறுதல்
- கட்டாயமாகப் பயணச்சீட்டுப் பெறுதல்
- வெளியே பிற பொருள்களை எறியாதிருத்தல்
- உதவி தேவைப்படுவோருக்கு உதவுதல்
- பேருந்தில் பயணிக்கும் பிறருக்குத் தொல்லை கொடுக்ககாதிருத்தல்
- மிதிபலகையில் பயணம் செய்யாதிருத்தல்
- பாரமானப் பொதிகளை சுமந்து வருவோரிடம் அமர்ந்திருப்போர் பொதிகளைப் பெற்றுக் கொள்ளல்.
- உரத்து கைத்தொலைபேசியில் பேசுவதைத் தவிர்த்தல்.
- உரிய இடம் வந்ததும் இறங்கும் நபரிற்கு ஆசனத்தில் இருந்து எழுந்து செல்வதற்கு இடமளிக்க வேண்டும்.
- வாகனத்தில் இருந்து இறங்கும் போது தள்ளிக்கொண்டு இறங்காதிருத்தல்
- மேலுள்ள விடயங்களைப் பேருந்தில் நடைபெறும் விடயங்களாகக் கருதி பாத்திரமேற்று நடிப்பதற்கு ஒழுங்கு செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 06

- **பொதுப் போக்குவரத்து வாகனங்களைப் பாதுகாத்தல் தொடர்பாக கலந்துடையாடல்**
- வாகனங்களைச் சேதப்படுத்துவதைத் தவிர்த்தல்
- ஆசன உறைகளைக் கிழித்தல், கிறுக்குதல், வாகனங்களில் பல்வேறு வாசகங்களை எழுதுதல், ஆசனங்களின் பிடிகளில் சுரண்டுதல், வாகனங்களுக்குக் கல்லெறிதல் போன்றவை

**பேருந்து கவலையோடு பேசுகிறது**

நான் ஒவ்வொரு நாளும் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்வேன். ஆனால் சிலர் எனக்குப் பாதிப்பை ஏற்படுத்துவர். ஆசன உறையைக் கிழிப்பர். பேனாவால் கிறுக்குவர். தாள்களைக் கிழித்துப் போடுவர். என்னை அசுத்தமாக்குவர். இந்த நிலை குறித்து நான் கவலையடைகிறேன்.

- " பேருந்து பேசுகிறது" எனும் தலைப்பின் கீழ் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்குக.
- பின்வரும் கவிதையைத் தாளத்துடன் பாடுக.

பின்னால் ஏறுங்கள்
முன்னே செல்லுங்கள்
உடலில் மோதாது
உடையை மிதிக்காது
முன்னால் இறங்குங்கள்


தற்செயலாக உடலில் மோதினால்
சட்டெனக் கோபம் கொள்ளாதீர்,
சௌகரியமாய் பயணஞ்
செய்ய ஒத்துழைப்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 07

◆. வீதியில் பயணிக்கும் போது தனது பாதுகாப்பைத் தானே உறுதி செய்வது தன்னுடைய பொறுப்பாகும் என்பதை வலியுறுத்தி சுயபாதுகாப்புத் தொடர்பாக செய்திகள் அடங்கிய சுவரொட்டிகளைத் தயாரிக்கவிடல்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 08

◆. **குதிரைப் போன்று பாய்ந்து பாய்ந்து செல்லும் விளையாட்டு**

- மாணவர்களைத் திறந்தவெளிக்கு அழைத்துச்சென்று செயற்பாட்டை மேற்கொள்க.
- குதிரை வண்டியில் செல்வது போன்று, ஒருவர் முன்னே செல்லும்போது மற்றையவர் முதலாமவரின் தோளைப் பிடித்தவாறு பாய்ந்து பாய்ந்து செல்வார்.
- இவ்வாறாக இருவர் இருவராகச் சோடி சேர்ந்து எல்லாக் குழுக்களையும் இதனை மேற்கொள்ளச் செய்க.
- ஆசிரியரின் கட்டளைக்கமைய முதலில் நிற்கின்றவர் குதிரை போன்று பாய்ந்து பாய்ந்து செல்வார்.
- முன்னே உள்ள கோடு வரை சென்று பின்னர் இருவரும் இடம் மாறி மீண்டும் வரச் செய்க.
- பின்னால் நிற்பவர் தோளைப் பிடித்தவாறு பாய்ந்து பாய்ந்து வருவார்.
- இருவரும் மாறி மாறி விளையாட்டில் ஈடுபடச் செய்க.

| Activity Based Oral English | | |
|---|---|---|
| **09. Transport** | **Song** | **Useful Expressions** |
| 01. left<br>02. right<br>03. cross<br>04. road<br>05. bus<br>06. car<br>07. lorry<br>08. van<br>09. train<br>10. aeroplane<br>11. helicopter<br>12. ship | Look to the right - look to the left<br>look to the right again.<br>Cross the road, if the road is clear.<br><br>Look to the right - look to the left<br>look to the right again<br>Cross the road, if the road is clear.<br><br>No playing - no running - no playing<br>No playing no running on the road<br>No playing - No running - no playing<br>As vehicles are moving on the road | 19. Where are you going?<br>I am going to the canteen.<br><br>20. Where is Saman?<br>In the canteen/ Saman is in the canteen/ he is in the canteen<br><br>21. Where are they?<br>They are in the canteen. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கணிப்பீட்டு வினாக்கள்


**பயிற்சி**

**(01) தொடர்புபடுத்துக.**

01. சிறுவர் கடவை
02. பாதுகாப்பான புகையிரதக் கடவை
03. பாதை வழுக்கும்
04. பயங்கரமான சரிவு
05. பேருந்து தரிப்பிடம்
06. கற்பாறைகள் விழும்

(1)

(2)

(3)

(4)

(5)

(6)


**(02) பின்வருவனவற்றுள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

01. ஒலி சமிக்ஞை விளக்கில் பச்சை விளக்கு எரியும் போது பாதையைக் கடக்கமுடியும். ( )
02. ஓய்வான வீதியில் நன்றாக விளையாடலாம். ( )
03. பொதுப்போக்குவரத்து வாகனங்களில் கட்டணம் குறைவாகும். ( )
04. பொதுப்போக்குவரத்து வாகனங்களில் மதகுருமாருக்காக ஆசனங்கள் வழங்கப்பட வேண்டும். ( )
05. மீதி பலகையில் பயணம் செய்வது பாதுகாப்பான செயலாகும். ( )
06. கட்டட வேலை நடைபெறும் கட்டடத்திற்கு அண்மையில் பயணிக்கக்கூடாது.( )
07. வாகனங்களில் பயணம் செய்யும் போது சுய பாதுகாப்பு தொடர்பாக அவதானமாக இருத்தல் வேண்டும். ( )
08. உரிய பஸ் தரிப்பிடங்களில் மாத்திரம் இறங்குதல் வேண்டும். ( )

**(03) இடைவெளி நிரப்புக.**

01. பொதுப்போக்குவரத்து வாகனங்களில் பயணிக்கும் போது ................................களுக்கு ஆசனம் வழங்கப்பட வேண்டும்.
02. பொதுப்போக்குவரத்து வாகனங்களில் நித்திரைச் செய்து கொண்டு ஏனைய பயணிகளுக்கு .................................................. செய்யக்கூடாது.
03. பாதையைக் கடக்கும் போது முதலில் ......................................... பார்க்க வேண்டும்.
04. வீதியில் பயணிக்கையில் ................................................ தேவை
05. ஒளிசமிக்ஞை விளக்கில் சிவப்பு நிறமனிதன் காட்சி தருகையில் பாதையைக் ..........................கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


06. பாதையில் பயணிக்கும் பாதசாரிகளுக்கு .......................... குறியீடுகள் பற்றிய அறிவு தேவை.

07. ........................................ முன் ஒலியெழுப்புவது தடையாகும்.

08. பேருந்து வண்டிகளில் பின்னால் ஏறி .................................. இறங்க வேண்டும்.

| |
|---|
| வீதிக், முன்னால், வைத்தியசாலை, வலது, தொந்தரவு, அவதானம், கடப்பது, வயோதிபர்) |

**(04) வீதி குறியீடுகளின் விளக்கங்களை எழுதுக.**

1) 
2) 
3) 
4) 

.................................... .................................... .................................... ....................................

**(05) மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. நீலநிறப் பலகையில் வெள்ளை நிற முக்கோணியினுள்ளே காட்டப்பட்டுள்ள பின்வரும் வீதிக் குறி வெளிப்படுத்துவது யாது?



1) வேகமாக பாதையை கடவுங்கள்.
2) பாதசாரிகள் கடக்கும் இடம் முன்னால்
3) பாதையைக் கடத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.
4) பாதசாரிகள் கடக்கும் இடம்

02. மஞ்சள் நிறப் பின்னணியுடன் காணப்படும் இவ்வீதிச் சமிக்ஞையினால் வெளிப்படுத்துவது



1) பிள்ளைகள் பாதையைக் கடக்குமிடம் முன்னால்
2) பாதசாரிகள் பாதையைக் கடக்குமிடம் முன்னால்
3) விரைவாகப் பாதைகளைக் கடக்கவும்
4) பாதசாரிகள் பாதையைக் கடக்குமிடம்

03. மஞ்சள் நிறப் பின்னணியில் காணப்படும் இவ்வீதிச் சமிக்ஞை எதனைக் குறிப்பிடுகின்றது.



1) முன்னால் புகையிரதப் பாதை மூடப்பட்டுள்ளது
2) படலையுடன் கூடிய புகையிரதக் கடவை வீதிக்கு முன்னால்
3) பாதுகாப்பில்லாத புகையிரதக் கடவை வீதிக்கு முன்னால்
4) வீதி எதிரே மூடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. உருவில் உள்ள பொலீஸ்காரரின் செய்கை எதனைக் குறிப்பிடுகின்றது.



1) முன்னால் வரும் வாகனங்களை நிறுத்துக
2) பின்னால் வரும் வாகனங்களை நிறுத்துக
3) முன்னாலும், பின்னாலும் வரும் வாகனங்களை நிறுத்துக
4) முன்னாலும் பின்னாலும் வரும் வாகனங்களை நிறுத்த வேண்டாம்

05. உருவிலுள்ள வீதிக்குறியீடு குறிப்பது



1) படலையுள்ள புயிரதப் பாதை முன்னால்.
2) படலையில்லாத புயிரதப் பாதை முன்னால்
3) பாதுகாப்பான புகையிரதக் கடவை முன்னால்
4) பாதுகாக்கப் படாத புகையிரதக் கடவை முன்னால்

06. எமது நாட்டின் பொதுப்போக்குவரத்துப் பேருந்தில் மதகுருமார் தவிர பயணிகள் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ள வேறு இரு தரப்பினர் யாவர்?

1) குழந்தைகள், நோயாளிகள்
2) நோயாளிகள், பாடசாலை மாணவர்கள்
3) வலது குறைந்தோர், கர்ப்பிணித் தாய்மார்
4) முதியோர், வலது குறைந்தோர்

07. வீதி நிறச் சமிக்ஞைக் கம்பத்தில் மேலிருந்து கீழாக நிறச் சமிக்ஞை அமைந்துள்ள சரியான ஒழுங்குமுறையைத் தெரிவு செய்க.

1) சிவப்பு, மஞ்சள், பச்சை
2) பச்சை, மஞ்சள், சிவப்பு
3) மஞ்சள், சிவப்பு, பச்சை
4) மஞ்சள், பச்சை, சிவப்பு

08. படத்தில் காட்டியுள்ள வீதிச் சைகையினால் கூறப்படும் செய்தி யாது?



1) முன்னால் ஒளிச் சமிக்ஞை
2) வாகனம் நிறுத்தும் இடம் முன்னால்
3) சாய்வான பாதை முன்னால்
4) முன்னால் பாதை மூடப்பட்டுள்ளது.

09. இலங்கையின் பெருந்தெருக்களில் ஓடும் பாதைகளின் மேல் வீதிச் சட்ட திட்டங்களுக்கு அமைவாகக் கோடுகள் வரைவதற்குப் பயன்படுத்தப்படும் நிறங்கள் எவை?

1) மஞ்சள், கறுப்பு
2) கறுப்பு, வெள்ளை
3) மஞ்சள், வெள்ளை
4) மஞ்சள், சிவப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. மின் சமிக்ஞை விளக்கில் பச்சை நிற விளக்கு ஒளிர்வதால் உணரப்படுவது
   1) வாகனங்கள் செல்க   2) பாதசாரிகள் பயணிக்குக
   3) பாதசாரிகள் பாதையை கடக்கவும்   4) வாகனம் செல்ல ஆயத்தமாகவும்

11. மின் சமிக்ஞை விளக்கைப் பயன்படுத்துவதால்
   1) நேரம் வீண்விரயமாகும்   2) பாதுகாப்பாக பாதையைக் கடக்கலாம்
   3) விபத்துக்கள் ஏற்படலாம்   4) அவசரமாக பாதையைக் கடக்கமுடியாது

12. பருவகால பற்றுச் சீட்டு வழங்கப்படுவது
   1) பொதுப் பேருந்துகளில்   2) முச்சக்கர வண்டிகளில்
   3) புகையிரத வண்டிகளில்   4) பாடசாலை சேவை வாகனங்களில்

13. பாதைகளில் விளையாடுவதால்
   1) மகிழ்ச்சி ஏற்படும்   2) விபத்துக்கள் ஏற்படும்
   3) வாகனங்கள் நிறுத்தப்படும்   4) வாகனங்கள் மெதுவாகப் பயணிக்கும்

14. ஒலிசமிக்ஞை விளக்கில் பச்சை விளக்கு ஒளிர்வதால்,
   1) வாகனங்கள் செல்ல ஆயத்தமாதல்   2) வாகனங்கள் நிறுத்தப்படல்
   3) பாதசாரிகள் பாதையை கடத்தல்   4) வாகனங்கள் பயணித்தல்

15. மோட்டார் சைக்கில்களில் பயணம் செய்வோர் பாதுகாப்புக்காகச் செய்யவேண்டியது?
   1) தலைக்கவசம் அணிதல்   2) காப்புறுதி அட்டையை எடுத்துக்கொள்ளல்
   3) கைக்கவசம் அணிதல்   4) ரேங் கோட் அணிதல்

16. பாதுகாப்பு அற்ற செயல்
   1) முச்சக்கர வண்டியில் பயணித்தல்   2) பேருந்து மிதிப்பலகையில் பயணித்தல்
   3) மஞ்சட் கடவையைப் பயன்படுத்தல்   4)பேருந்தில் நின்றுக்கொண்டு பயணித்தல்

17. பின்வரும் வாகனங்களுள் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாதது?
   1) வேன்   2) சைக்கில்   3) மோட்டார் சைக்கில்   4) பேருந்து

18. பேருந்தை பயன்படுத்தும் போது மேற்கொள்ளத்தக்க பொருத்தமான செயல்,
   1) முன்பக்கத்தால் ஏறுதல்   2) பின்பக்கத்தால் இறங்குதல்
   3) முன் பக்கத்தால் இறங்குதல்   4) எதனையும் பொருட்படுத்தாது இருத்தல்

19. பொது போக்குவரத்து வாகனங்களில் காணக்கூடியது அல்லாதது?

1) 

2) 

3) 


4) 




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருப்பொருள் 10 வீட்டுத்தோட்டம்

### செயற்பாடு 01

**❖. தாவர வளர்ச்சியில் வெவ்வேறு காரணிகளில் தாக்கம்**


•. தாவர வளர்ச்சிக்கு நீர், சூரியஒளி, வளமான மண் அவசியமாகும்.

•. வித்து முளைப்பதற்கு தேவையான காரணிகள் - நீர், சூரியஒளி (வெப்பம்), வளி

**●. வித்து முளைப்பதற்கு வளி அவசியம் என்பதை பரிசோதனை மூலம் கண்டறிதல்.**

1) ஒரே அளவான நான்கு சாடிகளைப் பெற்றுக் கொள்ளல்.

2) அச்சாடிகளில் நீரில் அமிழும் வித்து வகை ஒன்றையிடுதல்.(பயற்றை, கௌப்பி, போஞ்சி)




A - பொது அரைவெப்பநிலையில் உள்ள நீர் இடல்

B - பொது அரைவெப்பநிலையிலுள்ள நீர் இட்டு அதன் மீது தேங்காய் எண்ணெய்ப் படை இடல்

C - கொதித்தாறிய நீர் இடல்

D - கொதித்தாறிய நீரில் இட்டு அதன் மீது தேங்காய் எண்ணெய்ப் படை இடல்

•. A சாடியில் உள்ள வித்துக்கள் ஓர் இரு நாட்களில் முளைத்திருக்கும்.

•. காரணம் -: வித்து முளைப்பதற்குத் தேவையான நீர், வளி, வெப்பம் முதலியன கிடைக்கப்பெற்றன.

•. B சாடியில் வித்துக்கள் சில நாட்களின் பின் தாமதமாக முளைத்திருக்கும்

•. காரணம் -: நீரில் எண்ணெய்ப் படையை விட்டதால் வித்துக்கு வளி சரியாகக் கிடைப்பதில் இடர்பாடு ஏற்பட்டுள்ளது நீர், வெப்பநிலையில் மாற்றம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

•. C சாடியில் வித்துக்கள் சில நாட்களின் பின்னர் ஓரளவு முளைத்திருக்கும்.

•. காரணம் -: நீரில் வெப்பம் என்பவற்றுடன் தேங்காயெண்ணெய் இடப்படாததால் நீரில் கலந்துள்ள வளி வித்துகளுக்கு கிடைத்தது. நீர் வெப்பநிலையில் மாற்றம் இல்லை.

•. D சாடியில் வித்துக்கள் முளைத்திருக்காது.

•. காரணம் -: நீரை கொதிக்க வைக்கும் போது வளிக் குமிழிகள் மூலம் வளிவெளியேறி விட்டதால் வளி மேலும் வந்து சேர்ந்து விடாமல் இருப்பதற்கு எண்ணெய்ப் படை இடப்பட்டது. ஆதலால் நீர், வெப்பநிலை மட்டும் கிடைக்கப்பெற்றதால் வித்து முளைக்கவில்லை.

•. இப்பரிசோதனையை மேற்கொள்ளும் போது பின்வரும் வினாக்களுக்கு விடை காண வழிப்படுத்தல்

☞ எண்ணெய்ப்படை இட்டதனால் நிகழ்ந்தது யாது?


☞ நீரைக் கொதிக்க வைத்ததனால் நிகழ்ந்தது யாது?

☞ அதன் மூலம் வித்து முளைப்பதற்கு எக்காரணியின் செல்வாக்கு சோதிக்கப்பட்டது?

**❖. பாடசாலையில் மாதிரி வீட்டுத்தோட்டம் ஒன்று அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**

•. மண்ணை தூர்வையாக்குதல், வரம்பு அமைத்தல் வீட்டுத் தோட்டத்தின் அடிப்படையான திட்டத்தைத் தயாரித்தல்.

•. திட்டத்தன் படி நிலத்தைப் பண்படுத்தும் வடிவங்கள்




•. இடவசதி குறித்து கவனம் செலுத்திப் பயிர் நிலத்தைத் தயார்ப்படுத்தல்.

•. நிலவசதி இல்லையாயின் கழித்தொதுக்கப்பட்ட தகரப்பேணிகள், பாத்திரங்களைப் பயன்படுத்தல்.


•. வித்துக்கள், நாற்றுக்கள் நடுவதற்கு நிலத்தைத் தயார்ப்படுத்தல்.

•. பயிர்களுக்கு தினமும் காலையில் நீரூற்றல், களைப்பிடுங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுத்தோட்டம் அமைத்தல்




- வீட்டுத் தோட்டத்தை அமைக்கும் போது தெரிவுச்செய்ய வேண்டிய இடத்தின் பண்புகள்
- நன்கு சூரிய ஒளிப்படக்கூடிய இடமாக இருத்தல்
- சமநிலப்பரப்பாகவும் நீர் வடிந்து செல்லக்கூடிய இடமாகவும் இருத்தல்
- கற்கள் வேர்கள் போன்றவை இல்லாத இடமாக இருத்தல்
- மரக்கிளைகள் உள்ள நிழலான இடமாக இருத்தல் கூடாது

### செயற்பாடு 03

- வீட்டுத் தோட்டத்தில் ஒவ்வொரு குழுவுக்கும் உரிய பகுதியை வித்துக்களை நட்டு செழிப்பாக வளர ஆர்வமூட்டல்
- கூட்டெரு, மாட்டெரு, உக்கிய இலைகள்போன்ற சேதனப் பசளைகளைப் பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் அளித்தல்.
- பாடசாலைத் தோட்டத்தில் கூட்டெரு பாத்திரமொன்றினை அல்லது கூட்டெருக் குழியொன்றினை அமைத்து அதிலிருந்து பெரும் கூட்டெருவை வீட்டுத்தோட்டப் பயிர்களுக்கு இடுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இவ்வாறான பாத்திரங்களை அமைத்து அதனுள் இலைகுழைகளை மாத்திரம் இடச் செய்தல்.
- கற்களையோ, பொலீத்தின், பிளாத்திக் துண்டுகளையோ இடாது பாதுகாத்தல் வேண்டும்.
- இலைகள் குறித்த காலத்தில் உக்கியப்பின் கீழ்பகுதியில் உள்ள எருவை எடுத்து பயிர்களுக்கு போடுவது சிறந்தது.

**செயற்பாடு 04**

❖. **இரசாயனப்பசளை பயன்படுத்தல், கூட்டெருபயன்படுத்தல் ஆகியன குறித்து கலந்துரையாடல்**

- **இரசாயனப்பசளை பயன்படுத்துவதன் நன்மைகள், தீமைகள்**

- இரசாயனப் பசளைப் பயன்படுத்துவதால் பயிர்கள் விரைவாக வளரும், பூக்கள் பூக்கும், காய்கள் காய்க்கும், விளைச்சல் அதிகரிக்கும்.
- இரசாயனப் பசளைகளை உரியமுறையில் பயன்படுத்த தெரியாவிட்டால் பயிர்கள் முழுமையாக அழியும்.
- இரசாயனப் பசளைகள் இடப்பட்ட நிலம் காலப்போக்கில் வளம் இழக்கும்.
- இரசாயனப் பசளைகளில் உள்ள நச்சுத் தன்மைகள் உணவு உற்பத்திப் பொருள்களுடனும் சேர்ந்து விடும்.
- இரசாயனப் பசளைகளைப் பயன்படுத்தும் போது மிகுந்த பாதுகாப்புத் தேவை.
- மண்ணில் உள்ள சிறு நுண்ணங்கிகளுக்கும் அழிவு ஏற்படும்.

- **சேதனப்பசளைகள் பயன்படுத்துவதன் நன்மைகள்**
  **(கூட்டெரு, மாட்டெரு, கோழியெரு, ஆட்டெரு)**

- சேதனப்பசளைகளை பயிர்களுக்கு இடுவதால் பயிர்கள் மெதுவாக செழிப்பாக வளரும்.
- சேதனப் பசளைகளை பயிர்களுக்கு எளிதாகப் பயன்படுத்தலாம்.
- சேதனப் பசளைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.
- சேதனப் பசளைகள் மூலம் நிலம், வளம் பெருகும்.
- தொடர்ச்சியாக பயிர்களை வளர்க்க முடியும்.
- நச்சுத் தன்மையற்ற உணவுப் பொருள் கிடைக்கும்.
- மண்ணில் உள்ள (மண்புழு) மற்றும் நுண்ணங்கிகளின் பெருக்கமும் தொழிற்பாடும் அதிகரிக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 05

**◆. பிராணிகளில் இருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்கு காற்றுக்கிலுக்கியைப் பயன்படுத்தல்.**

- பின்வரும் பொருள்களைத் தேடிப்பெற்று வகுப்புக்குக் கொண்டுவருமாறு மாணவருக்கு அறிவுறுத்துக. (குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப போதுமான அளவுக்கு)
- ஏறத்தாழ 15 சென்ரிமீற்றர் (6 அங்குலம்) உயரமான உடற்பகுதி அகன்ற, வாய் சிறிய போத்தல்
- ஏறத்தாழ 7 சென்ரிமீற்றர் (3 அங்குலம்) நீளமான இரும்பு ஆணிகள் இரண்டு
- ஏறத்தாழ 10 சென்ரிமீற்றர் (4 அங்குலம்) நீளமான நைலோன் நூல் துண்டு
- ஏறத்தாழ 15 சென்ரிமீற்றர் (6 அங்குலம்) நீளமான பலகைக்கீலம்
- எமது வீட்டுத்தோட்டம் என அழகாக எழுதப்பட்ட 60 சென்ரிமீற்றர் x60 சென்ரிமீற்றர் (2 அடிx 2 அடி) அளவுள்ள பெயர்ப்பலகை (Name Board)
- நீண்ட கயிறும் ஏறத்தாழ 3 மீற்றர் (10 அடி) நீளமான வளையும் தன்மையுள்ள மெல்லிய தடியும்
- மாணவரைத் திறந்தவெளியான ஓர் இடத்திற்கு அழைத்துச்செல்க.
- இப்போது நாம் காற்றுக்கிலுக்கி செய்யப்போகின்றோம் எனக் கூறுக.
- அதற்கமைய கொண்டுவந்த பொருள்களைப் பயன்படுத்தி, காற்றுக் கிலுக்கியொன்றைச் செய்யுமாறு மாணவர் குழுக்களை வழிப்படுத்துக.





போத்தலினுள் ஆணிகளை இட்டு போத்தலின் கழுத்துப் பகுதியில் கயிற்றைக் கட்டி இழுத்து அசைத்து ஒலியெழுப்பச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு 06**

❖. **"நாம் வளர்த்த காய்கறிகளைச் சுவைப்போம்" எனும் செயற்பாட்டில் கீழ் வேளை உணவு ஒன்றை தயாரித்தல்**

- வீட்டுத் தோட்டத்தில் வெண்டி, கத்தரி மற்றும் கீரை வகைகளைப் பறித்தெடுக்க வழிப்படுத்தல்.
- குறித்த காய்கறிகளைச் சீராகச் சமைக்கும் விதத்தை அவதானிக்க வழிப்படுத்தல்.
- தவிட்டரிசிச்சோறும் சமைத்து பகலுணவுக்காக "நாம் வளர்த்த காய்கறிகளைச் சுவைப்போம்." என்பதை நடைமுறையில் அனுபவிக்கவும் அதனை கூறவும் சந்தர்ப்பம் அளித்தல்.
- பயிர்களை வளர்க்கும் போது காய்கறிகள், கீரை வகைகளைப் பறிக்கும் போதும்தாம் வளர்த்த காய்கறிகள் சுவைக்கும் போதும் மாணவர்களுக்கு ஏற்பட்ட உணர்வுகளை கலந்துரையாடல்.

**செயற்பாடு 07**

❖. **காய்கறிகள், பழவகைகளின் பெயர்களைப் பயன்படுத்திச் சிறு விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கு வழிப்படுத்தல்.**

**செயற்பாடு 08**

**வீட்டுத்தோட்டப்பாடல்**

முற்றிய வித்து நாற்றாய் முளைக்கும்
துளிர்கள் இலைகள் மெதுவாய் வளரும்
வளமுள்ள மண்ணில் அதனை நடுவோம்.
செழித்து வளர ஆவன செய்வோம்.

செவ்வந்திப் பூ பல நிறமுண்டு
பூச்சியை ஓட்டும் பயிர்களைக் காக்கும்
காய்கறிப் பயிர்களில் பூக்கள் பூக்கும்
வீட்டுத் தோட்டத்தில் காய்கனி கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டவடிவ வீட்டுத்தோட்டத்தின் அமைப்புகள்



வட்டவடிவ அமைப்பு



சதுரவடிவ அமைப்பு

## Activity Based Oral English

| 10. Home Garden | Song | Useful Expressions |
|---|---|---|
| 01. sunflowers<br>02. roses<br>03. jasmine<br>04. bees<br>05. butterflies<br>06. humming birds<br>07. fruit trees<br>08. flowers<br>09. home garden<br>10. shoe flowers<br>11. sweet potatoes<br>12. yams<br>13. manioc<br>14. curry leaves | sunflowers and roses jasmine and bees<br>Butterflies and humming birds on my fruit trees.<br>Cool breeze, shady trees, flowers<br>with sweet smell<br>All kinds of green leaves in my garden<br>(All kinds... tune)<br><br>Roseapple, pineapple<br>Mangoes and pawpaw.<br>Longbeans and wingebeans,<br>Curry leaves and spinach<br>Jasmine and roses,<br>Shoeflowers and lotus. These are<br>the things in my beautiful garden<br>(Favourite things....) | 22. How many flowers are there?<br>Two flowers / There are Two flowers |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு வினாக்கள்

பயிற்சி

**(01) தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 01. சேதனப் பசளை | காற்றுக்கிலுக்கி |
| 02. அசேதனப் பசளை | கூட்டெரு |
| 03. செடி வகை | இலைகுழைகள் |
| 04. பயிர்களைப் பாதுகாத்தல் | வீட்டுத்தோட்ட காய்கறிகள் |
| 05. கூட்டெரு தயாரித்தல் | கத்தரி |
| 06. சுவைப்பதில் மகிழ்ச்சி | இரசாயனப் பசளை |

**(02) பின்வருவனவற்றுள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

01. இரசாயனப் பசளைகளை உபயோகிப்பதால் மண் வளம் கெடும் ( )
02. கூட்டெரு பயன்படுத்தி வீட்டுத்தோட்டம் செய்வதால் இலாபம் அதிகம். ( )
03. வீட்டுத்தோட்ட உணவுகளை உணவாக எடுக்கும் போது கவலை உண்டாகும்.( )
04. சேதனப்பசளை பயன்படுத்துவதன் மூலம் மண்வளமாக்கிகள் அதிகமாக உற்பத்தியாகும். ( )
05. பிஞ்சு வித்துக்கள் நன்றாக முளைக்கும். ( )
06. செவ்வந்திப் பூக்கள் வீட்டுத்தோட்டத்தில் பீடைகளை விரட்டும். ( )
07. சேதனப்பசளையாக யூரியாவைப் பயன்படுத்துவோம். ( )
08. இரசாயனப் பசளைகளைப் பயன்படுத்துவது எளிதாகும். ( )
09. சேதனப்பசளையில் விளையும் பயிர்களில் உண்டாகும் காய்கறிகள் சுவையானவை. ( )
10. வீட்டுத்தோட்டம் அமைக்க முன் நிலத்தைப் பண்படுத்த வேண்டும். ( )

**(03) இடைவெளிக்கு பொருத்தமான சொல்லை எழுதுக.**

01. வீட்டுத் தோட்டம் ஒன்றை அமைக்கும் போது ............................அமைத்தல் வேண்டும்.
02. வீட்டுத் தோட்டத்தில் ....................................................வகை ஒன்று வளர்ப்பது சிறந்தது.
03. கூட்டெரு தயாரிப்பதற்கு .......................................................................... தேவையாகும்.
04. இரசாயனப் பசளைகள் உபயோகிக்க உணவுகளை உண்பதால் .....................ஏற்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. வீட்டுத்தோட்டத்தில் பறிக்கும் கீரைகளின் மூலம் உயர் ............................................ பெறமுடியும்.

06. வித்து ஒன்று முளைப்பதற்கு கட்டாயம் ............................................ அவசியமாகும்.

07. தாவரம் செழிப்பாக வளர்வதற்கு ............................................ தேவையாகும்.

08. உரிய ............................................ கிடைக்காவிட்டால் வித்து முளைக்காது.

| |
|---|
| இலைகுழைகள், நோய்கள், போசணையைப், வளமான மண், வளி, வெப்பம், காற்றுக்கிலுக்கி, மூலிகை |

**(04) மிகச் சரியாக விடையின் கீழ் கோடிடுக.**

01. பயிர்ச் செய்கையைப் பாதுகாப்பதற்கு உதவுவது

1) கூட்டெருப் பாத்திரம் 2) வளமான மண்
3) காற்றுக்கிலுக்கி 4) குப்பைக்கூளம்

02. வீட்டுத்தோட்ட செய்கையின் போது பயன்படும் உபகரணம்

1) மேசன் கரண்டி 2) கைவாள்
3) கைமுள்ளு 4) சுத்தியல்

03. நீரை கொதிக்க வைக்கும் போது வெளியேறுவது

1) வளி 2) கனியுப்பு 3) நீராவி 4) மனம்

04. வித்து முளைப்பதற்கு தேவையானவை

1) நீர், சூரியஒளி, மண் 2) மண், வளி, வெப்பம்
3) வெப்பம், குளிர், வளி 4) வளி, வெப்பம், நீர்

05. நாற்று மேடை பயிரொன்று

1) பாகல் 2) பீர்க்கு 3) கரட் 4) கத்தரி

06. கூட்டுப்பசளையைச் செய்யப்பயன்படும் பொருள்

1) பொலித்தின் 2) இலைகுழைகள்
3) தகரத்துண்டுகள் 4) கண்ணாடித்துண்டுகள்

07. மண்ணை வளமாக்க உதவும் விலங்கு

1) மட்டைத்தேள் 2) மண்புழு 3) மரவட்டை 4) அட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. வீட்டுத்தோட்டத்தில் பயிர்ச்செய்கைக்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் வருவதைத் தடுப்பதற்கு வளர்க்கப்படும் தாவரம்

1) துளசி 2) நாயுண்ணி
3) காவட்டம்புல் 4) செவ்வந்தி

09. ஒத்த நிலைமைகளின் கீழ் பயிரிடப்படும் பின்வரும் வித்துக்களிடையே விரைவில் முளைக்கும் வித்து

1) மிளகாய் 2) கடுகு 3) பாகல் 4) வெண்டி

10. பாடசாலையில் வீட்டுத்தோட்டம் அமைக்கும் போது நடக்கூடிய மரம்

1) ஆலமரம் 2) மரமுந்திரி 3) பப்பாசி 4) பலா

**(05) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

01. வீட்டுத்தோட்டத்தில் நடப்படும் பீடைக்கொல்லித்தாவரம் எது? ..........................................
02. வித்து முளைப்பதற்கு தேவையான காரணிகள் எவை? ..........................................
03. வித்து முளைத்தல் பரிசோதனைக்காக எடுக்கக்கூடிய வித்துக்கள் எவை? ....................
04. சேதனப்பசளை வகைகளைக் குறிப்பிடுக ..........................................................
05. இரசாயனப் பசளை பயன்படுத்துவதன் தீங்குகள் 2யை எழுதுக

..........................................................................................................

06. பயிர்களை முளைக்கச் செய்ய எவ்வகையான வித்து தேவைப்படும்? ..........................

**(06) பின்வரும் தாவரங்களை அட்டவணைக்கேற்ப வகைப்படுத்துக.**

பாகல் , வெண்டி . கத்தரி , தக்காளி , முருங்கை , வாழை, பப்பாசி
சிறுகீரை , கொய்யா , கரட் , புடோல் , பீர்க்கு , அகத்தி, கறிவேப்பிலை ,
மிளகாய், அவரை , பயற்றை

| செடி | கொடி | மரம் |
|---|---|---|
| 1........................ | 06........................ | 11........................ |
| 2........................ | 07........................ | 12........................ |
| 3........................ | 08........................ | 13........................ |
| 4........................ | 09........................ | 14........................ |
| 5........................ | 10........................ | 15........................ |







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருப்பொருள் 11 வேலையை இலகுபடுத்திக் கொள்ளும் வழிகள்

### செயற்பாடு 01




❖. **முற்காலத்தில் இருந்தே வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக பல்வேறு உத்திகளை கையாண்ட விதம்**








01. பாரமான ஒரு பொருளைத் தூக்கிச் செல்லுதல்
02. அதனை நிலத்தில் வைத்துக் கயிற்றினால் கட்டி இழுத்துச் செல்லல்
03. அதனைப் பலகையொன்றின்மீது வைத்துப் பலகையைக் கயிற்றினால் இழுத்துச் செல்லல்
04. அப்பலகையின் கீழ் உருளை வடிவ மரக்குற்றிகள் சிலவற்றை வைத்து அதன் மீது இழுத்துச்செல்லல்
04. அப்பலகையுடன் சில்லுகளைப் பொருத்தி இழுத்துச்செல்லல்


•. படங்களின் துணையுடன் படிப்படியாக விருத்தி செய்து கொண்ட முறையை கலந்துரையாடுக.

•. **வெவ்வேறு வகை சில்லுகள்.**



•. சைக்கிள் ஒன்றின் பின் சில்லுடன் இணைக்கப்பட்டுள்ள பற்சில்லுச்சோடி



•. சைக்கிளில் உள்ள பெரிய பற்சில்லு, சிறிய பற்சில்லு அவற்றை இணைக்கும் சங்கிலி ஆகியன தொடர்பாக கலந்துரையாடுக.

•. மிதியினால் பெரிய பற்சில்லைச் சுழற்றி அது ஒரு முறை முழுச்சுற்று சுழலும் போது சிறிய பற்சில்லு ஒருசுற்றுச் சுற்றுகிறதா? அல்லது அதிலும் கூடுதலாக சுற்றுகிறதா? என அவதானிக்கவிடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


•. சிறிய பற்சில்லுடன் இணைக்கப்பட்டுள்ள சில்லு சில தடவைகள் சுழல்வதால் சைக்கிளை இலகுவாக ஓட்டிச்செல்வதற்குப் பற்சில்லுகளும் அவற்றுடன் இணைந்த சங்கிலியும் துணையாகின்றது என்பதை எடுத்துக் காட்டல்

## செயற்பாடு 02

❖. **எளிமையான ஒரு கப்பியை அமைத்துச் சாய்தளம் ஒன்றின் வழியே பொருள் ஒன்றினை மேல் நோக்கி இழுப்பதை இலகுபடுத்திய சந்தர்ப்பம் பற்றி கலந்துரையாடல்.**

•. செய்து பார்க்கும் செயற்பாடு

1) சற்றுப் பாரமான ஒரு பொருளைப் பெறுக.
2) முதலில் அதனைச் சுற்றி ஒரு கயிற்றைக் கட்டி அதன் மூலம் அப்பொருளை உயர்ந்த முடியுமா என முயற்சித்துப் பார்க்கவும்.
3) அப்பொருளின் பாரம் தொடர்பாக கருத்துக்களைத் தெரிவிக்க.
4) பின்னர் பாரமான பொருள் கட்டப்பட்ட கயிற்றை உலோக அல்லது மரக்கப்பி ஒன்றின் வழியே செலுத்துக.
5) கயிற்றின் சுயாதீனமான அந்தத்தைப் பிடித்து கீழ்நோக்கி இழுப்பதன் மூலம் அப்பொருளை உயர்த்துவதற்கு சந்தர்ப்பமளிக்குக



•. இரண்டு சந்தர்ப்பங்களுள் எந்தச் சந்தர்ப்பத்தில் பாரத்தை இலகுவாக உயர்த்த முடிந்தது என வினவுதல்.

•. பாரமான பொருள் ஒன்றினை நேரடியாக மேல்நோக்கி உயர்த்துவதைவிட, கப்பியொன்றின் துணையுடன் கீழ்நோக்கி இழுத்து உயர்த்துவது பெரிதும் இலகுவானது என்பதை மேற்படி அனுபவத்தையும், அன்றாட வாழ்வில் எதிர்ப்படும் இவ்வாறான வேறு உதாரணங்களையும் முன்வைத்து எடுத்துக்காட்டுக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## செயற்பாடு 03

◆. குறடு, பாக்குவெட்டி, கத்தரிக்கோல் ஆகிய உபகரணங்கள் எவ்வாறு தொழிற்படுகிறது என்பதை அறிதல்.

•. இவ்வுபகரணங்களை வெவ்வேறு வேலைகளுக்காக பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள்








- கத்திரிக்கோல்- கடதாசி வெட்டல், துணி வெட்டல்
- குறடு- யாதேனும் ஒன்றை இழுத்தல், கம்பி வெட்டுதல்.
- ஒற்றைச் சில்லு வண்டி- பாரமான பொருட்களை எடுத்துச் செல்ல உதவும்
- பாக்கு வெட்டி- பாக்கு, மாசி, பலாவித்து முதலியவற்றை நறுக்குதல்

## செயற்பாடு 04

◆. LED மின்குமிழ்கள் மற்றும் மின்சூள் மின்குமிழ்கள் என்பவற்றின் சிறப்பியல்புகளை இனங்காணல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அதிக ஒளித்தரக்கூடியவை, இலகுவாக தாங்கி ஒன்றுடன் இணைக்க முடியும்.
- நீண்டகால பாவனையுடையது.

மின்குமிழ்களை உரிய மின்குமிழ் தாங்கிகளின் பொருத்துவதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் அளித்தல். (பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்துதல் வேண்டும்) வளர்ந்தவர் ஒருவரின் மேற்பார்வை அவசியம், மின்குமிழை தாங்கியில் பொருத்தும் போது பிரதான ஆளியை (off) தொடர்பறுப்பது அவசியமாகும்.



Screw வகை
தாங்கியும் மின்குமிழும்





Pin வகை
தாங்கியும் மின்குமிழும்

செயற்பாடு 05


◆. உலர் மின்கலங்களை அவதானிப்பதற்கு சந்தர்ப்பத்தை அளித்தல்

- உலர்மின்கலங்களில் இரு முனைகளினதும் வேறுபாடுகளை அவதானித்து கூறுதல்.



- உலர்மின்கலங்களுடன் மின்சூள் மின்குமிழ் அல்லது **LED** மின்குமிழ் அவற்றை கம்பித்துண்டுகளால் இணைத்து மின்குமிழ்களை ஒளிரச்செய்யும் முறைகளை செய்து காட்டுவதற்கு சந்தர்ப்பம் அளித்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


•. உலர்மின்கலம், மின்குமிழ், கம்பித்துண்டுகள் இணைக்கப்பட்ட விதம் பற்றி வரைந்து காட்டுக.

## செயற்பாடு 06

◆. **காந்தங்களின் இயல்புகளை இனங்காண்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுதல்**


•. காந்தமொன்றினை உலோகப் பொருள்கள் மற்றும் உலோகமல்லாத பொருள்களின்மீது வைத்து காந்தத்தினால் இழுக்கப்படும் பொருள்களையும் இழுக்கப்படாத பொருள்களையும் இனங்காணச் சந்தரப்பமளிக்குக. **(காந்தம் இரும்புப் பொருட்களையும் காந்தத்தையும் கவரும்)**

| கவரும் பொருட்கள் | கவராத பொருட்கள் |
|---|---|
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |






•. இரண்டு காந்தங்களை மேசைமீது வைத்து, ஒரு காந்தத்தின் ஒரு முனையை மற்றைய காந்தத்தின் ஒரு முனைக்கு அருகே கொண்டுச்செல்லும்போது அது இழுக்கப்படுவதை (கவர்ச்சி) அல்லது அப்பால் தள்ளப்படுவதை (தள்ளுகை) அனுபவம் மூலம் இனங்காண மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.




தள்ளுதல்





கவருதல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


- காந்தமொன்றின் கவரும் தன்மை அதிகமான இடங்களைக் கண்டறிதல்.
- காகிதத் தாளொன்றின்மீது குண்டூசிகளை / காகிதக் கவ்விகளைப் பரப்பியவாறு அவற்றின் மீது சட்டக்காந்தமொன்றை வைத்து அக்காந்தத்தின் பகுதியில் அதிகமான குண்டூசிகள் / காகிதக் கவ்விகள் ஈர்க்கப்பட்டுள்ளன என்பதை அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக.

**மின்காந்தம்**

- பெரிய இரும்பு ஆணியொன்றின்மீது காவலிட்ட செப்புக் கம்பியொன்றினைப் பல தடவைகள் சுற்றுக. படத்தில் காட்டியுள்ளவாறு அதனை உலர்கலமொன்றுடன் தொடுக்குக. இரும்பு ஆணியின் முனைகளுக்கு அருகே குண்டூசிகளைக் கொண்டுசெல்க. நிகழ்பவற்றைஅவதானிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்குக.





- சட்டக்காந்தம் ஒன்றினைப் பயன்படுத்திச் செய்த முதலாவது சந்தர்ப்பத்தையும் இரும்பு ஆணிகளையும் பயன்படுத்திச் செய்த இரண்டாவது சந்தர்ப்பத்தையும் ஒப்பிட்டுக் கருத்துக்களைக் கூறுக

## செயற்பாடு 07

- **எந்த ஒரு வேலையைச் செய்யும் போதும் திட்டமிட்டு முறையாக ஒழுங்காகச் செய்வதால் நேரத்தையும் உழைப்பையும் மீதப்படுத்திக் கொள்ளலாம் என்பதை நாளாந்த வாழ்க்கை உதாரணங்களின் துணையுடன் அறிதல்.**
- பாடசாலைச் சீருடை, புத்தகங்கள், பாதணிகள் போன்றவற்றை ஒழுங்காக உரிய இடங்களில் வைப்பதற்கு பழகுதல்.
- அவ்வாறான வாழ்க்கைக் கோலத்தை சிறுவயது முதலே பழக்கப்படுத்திக்கொள்ளுதல் சிறந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அதனால் வீட்டில் தம்முடன் வாழும் ஏனையோரது சமூகத்தினதும் ஒட்டுமொத்த பாராட்டையும் பெறமுடியும்.
- ஒரு நிலையத்தில் யாதேனும் சேவையைப் பெறும் வேளைகளிலும் சேவையை வழங்கும் வேளைகளிலும் மரியாதையாகவும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டும் நடந்துக்கொள்ள வேண்டும்.
- அதனை வகிபாகம் ஏற்று நடித்துக் காட்டல்.
- நற்பழக்கங்களைத் தனது வாழ்க்கை கோலத்துடன் இணைத்துக்கொள்வதுடன் வேலைகளை இலகுவாக செய்யும் திறனை பெறலாம்.

01. பாடசாலைச் சீருடையை தினமும் கழுவி சுத்தம் செய்து காயவைத்து அழுத்தி உரிய இடத்தில் வைத்தல்.
02. பாடசாலை சீருடைக்கான கழுத்துப்பட்டி, பாடசாலை இலச்சினை முதலியவற்றை அங்கும் இங்கும் போடாது அதற்கென ஓர் இடத்தில் கவனமாக வைக்க வேண்டும்.
03. பாடசாலைப் புத்தகங்களை இறாக்கைகளில் அடுக்கி வைத்தல்
04. படிக்கும் மேசையை எப்போதும் ஒழுங்காக வைத்துக் கொள்ள வேண்டும்.
05. பாதணிகளை தினமும் சுத்தம் செய்தல், வெயிலில் காயவைத்தல் போன்ற வேலைகளை தாமே ஓர் ஒழுங்குக்கு கொண்டு வருதல் வேண்டும்.

- **பண்டைக்காலம் முதல் மனிதன் வெவ்வேறு வேலைகளில் ஈடுபடுவதால் ஏற்படும் களைப்பை போக்கிக் கொள்வதற்காக பாடல்கள் அல்லது கவிதைகள் பாடுவர்.**

1. அரிவி வெட்டல்
2. சுரங்கம் அகழ்தல்
3. சேனை காத்தல்
4. படகு ஓட்டல்
5. வண்டியோட்டல்
6. மீன் பிடித்தல்

- **உழவன் பாடலைப் பாடி மகிழ்தல்**

1. ஏரைக் கொண்டு நிலம் உழுவான்
எல்லோருக்கும் உணவளிப்பான்
பாரை உயர்த்த உழைத்திடுவான்
பட்டினி யின்றிக் காத்திடுவான்

2. காலைக் கருக்கலில் எழுந்திடுவான்
கலப்பை தோளில் சுமந்திடுவான்
ஓலைக் குடிசையில் வாழ்ந்தாலும்
ஓயாமல் உழைப்பை ஈந்திடுவான்

3. கால்நடை காத்து மகிழ்ந்திடுவான்
கவலை மறந்தே வாழ்ந்திடுவான்
தோல் கறுப்பாக இருந்தாலும்
தூய உள்ளம் பெற்றிருப்பான்

4. உழவர் உழைப்பை மதித்திடுவோம்
உண்மை அன்பால் வாழ்த்திடுவோம்
மழையைப் போலே பலன்கருதா
மாண்பைப் போற்றி வணங்கிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **ஏலேலோ ஐலசா**

ஏலேலோ ஐலசா......ஏலேலோ ஐலசா...
ஏலேலோ ஐலசா......ஏலேலோ ஐலசா...

கட்டு மரத்தோணியிலே ஏலேலோ ஐலசா
துடுப்பு போட்டு தோணி ஓட்டி ஏலேலோ ஐலசா
வங்கக் கடலில் வல வீசி ஏலேலோ ஐலசா
மீன்புடிக்க போகையிலே ஏலேலோ ஐலசா
கைவலிச்சும் பாடலியே ஏலேலோ ஐலசா

ஏலேலோ ஐலசா......ஏலேலோ ஐலசா...
ஏலேலோ ஐலசா......ஏலேலோ ஐலசா...

| Activity Based Oral English | | |
|---|---|---|
| **11. Ways of Making Work Easy**<br><br>01. hole puncture<br>02. stapler machine<br>03. pencil sharpener<br>04. hammer | **Song**<br><br>Let`s save time // la la.....<br>Let`s do work // la la....<br>Let`s play and work // la la....<br>Don`t waste time// la la...<br>(hey ho ..... tune)<br><br>**Game**<br>**What am I?**<br>I help you to make a hole.<br>What am I?<br>Begins with letter 'p'<br>*Puncture / you are a puncture.*<br><br>I help you to sharpen the pencil.<br>What am I?<br>*Pencil Sharpener / you are a pencil Sharpener.*<br><br>I help you to hit a nail.<br>What am I?<br>*Hammer. / You are a hammer* | **Useful Expressions**<br><br>23. Don`t Waste time. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு வினாக்கள்

**பயிற்சி**

**(01) தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 01. பாரமான பொருளைத் தூக்கிச் செல்லல் | கப்பியின் பயன் |
| 02. எளிதாக பாரம் ஒன்றை தூக்கலாம் | பண்டையகாலம் |
| 03. பற்சில்லுகளின் தொழிற்பாடு | புள்ளி |
| 04. ஒரு பொறி ஒன்றின் சுழலும் இடம் | சைக்கிள் |
| 05. ஒத்த முனைகள் தள்ளுதல் | வேலையை இலகுவாக்கலாம் |
| 06. இரும்பாணி காந்தமாக மாறுதல் | முனைப்பகுதிகள் |
| 07. கவரும் தன்மை கூடிய இடங்கள் | மின்காந்தம் |
| 08. பொருட்களை உரிய இடத்தில் வைத்தல் | வடமுனை வடமுனை |

**(02) பின்வருவனவற்றுள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

01. புத்தகங்கள், பாதணிகளை உரிய இடத்தில் வைப்பதால் நேரத்தை மீதப்படுத்திக் கொள்ளலாம். ( )
02. காந்தத்தின் எதிர்முனைகள் ஒன்றையொன்று தள்ளும் ( )
03. பாக்குவெட்டியின் சுழலும் இடம் நடுவில் உள்ளது. ( )
04. பாரமான ஒரு பொருளை கப்பி மூலம் இலகுவாக இழுத்துக்கொள்ளலாம். ( )
05. சைக்கிளில் பற்சில்லுகள் சங்கிலியுடன் தொடர்புப்பட்டுள்ளது. ( )
06. மனிதன் படிப்படியாக வேலைகளை பல உத்திகளைப் பயன்படுத்தி எளிதாக்கிக் கொண்டான். ( )
07. பலவகையான சில்லுகள் மூலம் இன்று வேலைகள் இலகுவாக்கப்படுகின்றன.( )
08. மின்குமிழ்களை தாங்கிகளில் பொருத்தும் போது பிரதான ஆளியை தொடர்பறுப்பது கட்டாயமானது. ( )

**(03) இடைவெளிக்கு பொருத்தமான சொல்லை எழுதுக.**

01. குறடு ஒன்றின் மூலம் ................................................ வெட்டியெடுக்கமுடியும்.
02. மாசியை நறுக்குவதற்கு ...................................... பயன்படும்.
03. கத்திரியொன்றின் சுழலும் இடம் ........................................ காணப்படுகிறது.
04. பொறி ஒன்றின் மூலம் வேலை செய்யும் போது அதனை இயக்க .....................தேவை
05. ஒருகாந்தத்தின் வடமுனையும் தென்முனையும் இணையும் போது .................................... ஏற்படும்.
06. இரும்பாணி மின்காந்தமாக செயற்படுவதற்கு ...................................... தேவை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


07. ஏரைக்கொண்டு நிலம் உழுது பயிர் காப்பவன் ............................ ஆவான்.


08. ஏலேலோ ஐலசா எனத்தொடங்குவது ................................................... பாடலாகும்.

| |
|---|
| பாக்குவெட்டி, மீனவப் , மின்னோட்டம், உழவன், விசை, நடுவில், கவர்ச்சி, கம்பியை |

**(04) பின்வரும் மின்குமிழ்களையும் மின்கலங்களையும் கம்பியின் மூலம் ஒளிரச் செய்யும் முறையை சரியாக இணைத்துக் காட்டுக.**







**(05) வினாக்களுக்கு விடை தருக.**

01. ஒரு காந்தத்தின் கவரும் தன்மை கூடிய இடங்கள் எவை? ..................................................


02. பாரமான பொருளை எளிதாக எதன் மூலம் தூக்கமுடியும்? ..................................................

03. மின்குமிழ் தாங்கிகள் எத்தனை வகைப்படும் அவை எவை? ..............................................
........................................................................................................................................................


04. பற்சில்லுகள் கொண்ட ஒரு உபகரணத்தைக் குறிப்பிடுக. ....................................................


05. பண்டைய காலத்தில் வேலைக்களைப்பை நீக்கிக்கொள்வதற்கு பாடப்பட்ட பாடல்கள் எவை? ........................................................................................................................


**(06) பின்வரும் காந்தங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**


..............................


..............................


..............................


..............................


..............................

(வட்டவடிவ, U வடிவ, வளையல் வடிவ, சட்டக்காந்தம், பரியிலாட)

**(07) பொருத்தமான விடையின் கீழ்க்கோடிடுக.**

01. ஒரு காந்தத்துண்டின்முனையை இன்னொரு காந்தத்துண்டின் முனைக்கு அருகில் பிடித்த போது முன்னைய காந்தத்துண்டு விலகிச் சென்றது. இதனைக் குறிக்கும் சொல்

1) கவர்தல் 2) கடத்துதல் 3) விரிவடைதல் 4) தள்ளுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. காந்தத் துண்டை நோக்கி கவரப்படும் பொருள் சோடி

1) பித்தளையும், இரும்பும் 2) அலுமினியமும், பித்தளையும்

3) இரும்பும், உருக்கும் 4) இரும்பும், அலுமினியமும்

03. பித்தளைத் தகட்டிற்கு அருகில் காந்தத் துண்டினைக் கொண்டு செல்லும் போது

1) பித்தளைத் தகட்டை நோக்கி காந்தத் துண்டு இழுக்கப்படும்

2) பித்தளைத் தகட்டிலிருந்து காந்தத் துண்டு தள்ளப்படும்

3) பித்தளைத் தகட்டுக்கும் காந்தத் துண்டுக்கும் இடையில் மாற்றம் எதுவும் ஏற்பட மாட்டாது.

4) ஒரு முனை கவரப்படும் அதே வேளை அடுத்த முனை தள்ளப்படும்.

04.




இவ்வமைப்பில் ஆணியைச் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்

1) பித்தளை 2) அலுமினியம்

3) இரும்பு 4) பிளாத்திக்

05. ஆழமான கிணற்றிலிருந்து நீரை மேலே எடுப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற, வேலையை இலகுவாக்கும் பொறி எது?

1) நீர்ச்சில்லு 2) பற்சில்லு 3) திருகுபிடி 4) கப்பி

06. வேலையை இலகுவாக்கும் பொறிகளையும் அப்பொறியுடன் தொடர்புபட்ட தொழிற்பாட்டையும் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1) கப்பி - இழுத்தல் 2) கைவண்டி - இழுத்தல்

3) பாக்குவெட்டி - தள்ளுதல் 4) திருகாணிச்செலுத்தி - இழுத்தல்


07. கடதாசிச் சுற்றப்பட்ட ஒரு திண்மம் A யும் சுருள் கம்பி சுற்றப்பட்ட ஓர் இரும்பாணி B யும் உரு 1 இல் காணப்படுகின்றன. கம்பியின் இரு நுனிகளையும் ஓர் உலர் மின்கலத்துடன் தொடுக்கும் போது A இருக்கும் விதம் உரு 2 இல் காணப்படுகினறது. A ஆனது


1) பித்தளைத் துண்டாகும்

2) இரும்புத் துண்டாகும்

3) அலுமினியத் துண்டாகும்

4) காந்தத் துண்டாகும்




08. காந்தம் கவரும் பொருள் ஒன்று

1) அழிறப்பர் 2) பலகைத்துண்டு

3) தையல் ஊசி 4) பிளாத்திக் பந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. களைப்பை நீக்கி வேலையை இலகுவாக்கும் பாடல் வகை ஒன்று

1) கும்மிப் பாடல் 2) விளையாட்டுப் பாடல்

3) கரகாட்டப்பாடல் 4) அரிவி வெட்டுப்பாடல்

10. காந்தத் துண்டொன்றை நோக்கி மண்ணிலுள்ள இரும்புத் துணிக்கைகள்

1) தள்ளும் 2) கவரும் 3) கடத்தும் 4) உருகும்

11. இருமின்கலங்களுடன் ஒரு மின்குமிழை இணைக்கும் போது மின்கலங்கள் இணைக்கப்பட வேண்டியது

1) நேர் முனையும் நேர் முனையும்

2) மறை முனையும் மறை முனையும்

3) நேர் முனையும் மறை முனையும்

4) நேர் முனையும் மின்குமிழின் கண்ணாடியும்

12. காந்தம் கவராத பொருள்

1) இரும்பாணி 2) கைஊசி 3) சவர அலகு 4) பென்சில்

13. காந்தம் பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு பொருள்

1) குளிர் சாதனப்பெட்டி 2) காற்றாடி 3) கணினி மேசை 4) மின்மணி

14. மின்காந்தம் பயன்படுத்தப்பட்டடுள்ள ஒரு பொருள்

1) மின்மணி 2) வானொலி 3) பென்சில் பெட்டி 4) கைப்பை

15. பற்சில்லு பயன்படுத்தப்பட்டுள்ள உபகரணம்

1) ஊசித்துளைக் கமெரா 2) கடிகாரம் 3) மின்மணி 4) வானொலி

16. கம்பிகளை வெட்ட உதவுவது

1) கத்தரிகோல் 2) பாக்கு வெட்டி 3) குறடு 4) தகடு வெட்டி

17. ஒரு பொருளை இலகுவாக மேலே உயர்த்திக் கொள்வதற்கு உதவுவது

1) கப்பி 2) சாய்தளம் 3) ஏணி 4) கலப்பை

18. மாசியை நறுக்க உதவுவது

1) குறடு 2) உரல் 3) அம்மி 4) பாக்கு வெட்டி

19. சுழலிடம் நடுவில் இருக்கும் உபகரணம்

1) கத்தரிக்கோல் 2) பாக்கு வெட்டி 3) கத்தி 4) சாய்தளம்

20. ஒரு காந்தத்தில் கவரும் தன்மை கூடிய இடம்

1) முனைப்பகுதி 2) நடுப்பகுதி 3) மேல் பகுதி 4) கீழ்பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கருப்பொருள் 12 மனித நடத்தைகள்

## செயற்பாடு 01


❖. **ஒவ்வொருவரிடமும் மறைந்துள்ள திறமைகளும் அடுத்தவர்களின் திறமைகளை மதித்தலும்**


●. தனக்கு மிகப்பிடித்த ஆக்கமொன்றை மேற்கொள்க. (தேவையான பொருட்களை கொண்டுவரச் செய்தல்)


- சித்திரம் வரைதல்
- கொலாஜ் ஆக்கம் செய்தல்
- அலங்கார உருக்கள் செய்தல்
- உருவங்கள் செதுக்குதல்
- உருவங்கள் செய்தல்.











•. தனது ஆக்கம் தவிர்ந்து வேறு மாணவர்களது ஆக்கங்களையும் மெச்சுவதற்கு வழிப்படுத்தல்.

☛. மெச்சும் போது

- சித்திரங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள நிறங்கள்
- தளவுருவங்கள்
- அமைவு
- ஆக்கப்பட்ட விதம்
- முடிப்பு
- தூய்மை
- பொருத்தப்பாடு

போன்ற விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துக.

•. பிறரது ஏதேனும் சிறப்பான (ஆற்றல்கள், பண்புகள்) விடயங்களை மதிக்கும் பழக்கத்தை வலியுறுத்தல்.

•. அதற்கான சொற்கள் - அழகானவை, சரியான முடிப்பைக் கொண்டவை, அழகியற் திறமைக் கொண்டவை, எப்போதும் இனிமையானவை, மனம் கவர்த்தன்மை கொண்டவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குறைப்பாடுகளைச் சுட்டிக் காட்டும் போது நண்பர்களின் மனதில் பாதிப்பு ஏற்படாதவாறு கூறவேண்டும்.
- ஒவ்வொருவரது ஆற்றல்களும் வித்தியாசமாகும். அவற்றை விளங்கிப் பக்குவமாக நடந்துக்கொள்ள வேண்டும்.
- பின்னர் அனைவரும் இணைந்து பாடலைப்பாடுக

| | |
|---|---|
| உடல் வலிமை இருந்தென்ன | - அழகு முகம் இருந்தென்ன |
| வியர்வை சிந்த உழைக்காத | - நீ நாட்டுக்குச் சுமையாவாய்! |
| மனிதம் மலர் போல் மணம் பரப்பும் | - அறிவோ எங்கும் ஒளி பரப்பும் |

- தாம் விரும்பியவாறு விரும்பிய தலைப்பில் சித்திரம் வரைதல், கவிதை ஆக்குதல், கேலிச் சித்திரம் வரைதல், பூ ஒன்று வரைதல், வாழ்த்து மடல் செய்தல் போன்ற ஏதேனும் ஒரு ஆக்கத்தை செய்ய அவகாசம் வழங்குக.
- அவை அனைத்தையும் காட்சிப்படுத்துக.
- ஆக்கங்கள் தொடர்பான அவர்களது கருத்துக்களை மதித்து சிநேகப்பூர்வமாகக் கலந்துரையாடச் செய்க.
- இறுதியில் பின்வரும் கருத்துக்களை வலியுறுத்துக.
  - ☞. ஒவ்வொருவரிடமும் ஏதேனுமொரு விசேட ஆற்றல் உள்ளது.
  - ☞. நாம் இனங்கண்ட ஆற்றலைப் பற்றிப் பாராட்டிப் பேசுதல் வேண்டும்
  - ☞. எல்லோருக்கும் தனது ஆற்றல்களைச் சமர்ப்பிக்கச் சந்தரப்பம் உள்ளது.
  - ☞. தனது ஆற்றல்கள் மற்றையோருக்குக் காட்சிப்படுத்துவதால் அந்த ஆற்றல்களை மேலும் விருத்தி செய்து கொள்ள முடியும்.
  - ☞. வகுப்பறையே தனது ஆற்றல்களை வெளிக்காட்ட மிக உகந்த இடமாகும்
- ஒருவரை மெச்சுவதன் மூலம் அவர் மேலும் தனது ஆற்றல்களை வளர்த்துக்கொள்ள முனைவார் என்பதை வலியுறுத்துக.

## செயற்பாடு 02

### ❖. அடுத்தவரிடம் காணும் சிறந்த இயல்புகள்

- மாணவர்களுக்கு A4 நிறக்கடதாசிகளை வழங்குக.
- தாளை இரண்டாக மடித்து முதற் பக்கத்தில் மேற்பகுதியில் தனது பெயரை எழுதச்செய்க.
- ஆசிரியர் சமிக்ஞை வழங்கியதும் தனது பெயர் கொண்ட தாளை வலது கைப்பக்கம் இருக்கும் மாணவரிடம் கொடுக்கச்செய்தல்.
- அந்த மாணவர் தாளில் பெயர் குறிப்பிட்ட மாணவரின் ஒரு சிறப்பான இயல்பை எழுத வேண்டும் எனக் கூறல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தாளைப் பரிமாறி எல்லோரும் எழுதி முடித்த பின்னர் தன்னைப் பற்றி பிறர் எழுதிய விடயங்களை வாசிக்கும் போது அவர்கள் உள்ளத்தில் ஏற்படும் உணர்வு பற்றி கலந்துரையாடல்.
- பிறர் எழுதிய விடயங்களில் தமக்கு மிகவும் விருப்பமான விடயத்தை சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குக
- பிறர் தன்னை மதிப்பதன் மூலமாகத் தனக்குக் கிடைத்த மகிழ்ச்சியைப் போன்றே பிறரை மதிப்பதனால் மகிழ்ச்சி கிடைக்கும் என வலியுறுத்தி ஒருவரது செயல்களை மதிப்பதன் முக்கியத்துவத்தை விளக்குக

## செயற்பாடு 03

❖. **பாடசாலைக்கல்வி பெறுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்காத மாணவர் ஒருவர் பற்றிய தகவல்களை மாணவர்களுக்கு வழங்குக.**

- எல்லாப் பிள்ளைகளுக்கும் பாடசாலைக் கல்வி கட்டாயமானதாகும்.
- அன்பு, கருணை ஆகியன உரியவாறு கிடைக்க வேண்டும்.
- உணவு, பானங்கள், உடைகள் ஆகியன உரியவாறு வழங்கப்பட வேண்டும்.
- மற்றும் அரவணைப்பும் முக்கியமானவை
- பொருத்தமான பாத்திரம் ஏற்று நடிக்கச் செய்க.
  - ☛. காலில் ஊனம் ஏற்பட்டுள்ள மாணவரொருவர் படிகளில் ஏறுவதற்கு உதவுதல்
  - ☛. கதைக்கும்போது திக்கிப் பேசும் பிள்ளைக்கு உதவுதல்
  - ☛. கண் தெரியாத பிள்ளைக்கு வீதியைக் கடப்பதற்கு உதவுதல்



- பல்வேறு குறைபாடுகள் கொண்டுள்ளோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடல்.
- அவை தமக்கு ஏற்பட்டால் உணரும் விடயங்கள் பற்றி கலந்துரையாடல்
- **அவ்வாறே தனக்கு விருப்பமற்ற எதனையும் பிறருக்குச் செய்யக்கூடாது என எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உடல் ஊனம் கொண்ட மாணவர்கள் தமது வாழ்க்கையில் வெற்றி பெற்ற சந்தர்ப்பங்கள் பற்றி கலந்துரையாடல்.





அங்கவீனர்களுக்காக நடத்தப்பட்ட பரா ஒலிம்பிக்போட்டிகளில் சாதனையாளர்கள்



கைகள் இல்லை காலினால் எழுதும் பிள்ளை

## செயற்பாடு 05

- பாத்திரமேற்று நடித்தல்
- காகத்தின் கூட்டினுள் பெண் குயில் முட்டையிட்டுள்ளதை அறிந்த காகம் பெண் குயிலிடம் அது பற்றி வினவுகிறது.

  காகம் - ஏன் நீ என் கூட்டில் முட்டை இட்டாய்?

  பெண்குயில் - மன்னிக்கவும், எனக்குக் கூடு கட்டத் தெரியாது.

  காகம் - அது சரிவராது. நான் எவ்வாறு இவ்வளவு குஞ்சுகளுக்கும் இரை தேடுவது?

- உரையாடலை மேலும் வளர்த்துச் செல்ல வழிப்படுத்துக.
- எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிறரது கருத்துக்கள், நடத்தைகளின் போது முரண்பாடு ஏற்படாதவாறு துலங்களைக்காட்ட வேண்டும், நிதானமாக கருத்து தெரிவிக்க வேண்டும். என வலியுறுத்தல்
- இதன்மூலமாக
  - முரண்படுகளைத் தவிர்த்தல்
  - நட்பைத் தொடர்ச்சியாகப் பேண முடிதல்
  - பொறுப்புக்களை ஏற்பதற்குப் பழகிக்கொள்ளல்
  - பிறரது கௌரவம் பாதுகாக்கப்படல்
  - சமூகத்தில் நல்ல ஒருவராகத் திகழ்தல்
- பாடசாலையில் / வீட்டில் / வீதியில் பல்வேறு உடல் ரீதியான சித்திரவதைகளுக்கு உள்ளாகும் மாணவர்கள் பற்றி கலந்துரையாடல்.
- அவ்வாறு அறிந்த விடயங்கள் இருப்பின் வகுப்பாசிரியரிடம் அல்லது அதிபரிடம் முறையிடுவது பொறுப்பாகும் என்பதை நினைவூட்டுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **இலவசக்கல்வியில் இருந்து நாம் உச்ச பயனைப் பெறுவோம்.**
- எனும் கருப்பொருளின் கீழ் நாடகப் போட்டியொன்றை ஒழுங்கமைக்க
- எமது நாட்டின் இலவசக் கல்வி அனைத்துப் பிள்ளைகளுக்கும் கிடைக்க வேண்டும்.
- இலவசப்பாட புத்தகங்கள், சீருடைகள், உணவு
- **கடுமையான சட்டங்களும் தண்டனைகளும்**
- கற்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்காது மாணவர்களை பிழையான வழிகளுக்கு ஊக்குவிக்கும் நபர்கள்.
    - ☛. சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல் (பாடசாலைக்கு அனுப்பாது)
    - ☛. சிறுவர்களுக்கு போதை பொருளைப் பழக்குதல்
    - ☛. சிறுவர்களுக்கு உடல் உள தண்டனைகள் வழங்குதல்
    - ☛. சிறுவர்களை பிச்சை வாங்குவதற்கு அனுப்புதல்.
    - ☛. சிறுவர்களை கொண்டு திருடவைத்தல்
    - ☛. சிறுவர்களை மோசமான செயல்களுக்கு ஈடுபடுத்தல்
    - ☛. சிறுவர் இல்லங்களில் பல்வேறு தொல்லைகளுக்கு உட்படுத்தல்
    - ☛. சிறுவர்களை துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தல்
- இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனைகள் உள்ளன என்பதை வலியுறுத்திக் கூறுக.
- **சிறுவர் இல்லம் ஒன்றிற்கு களப்பயணம் ஒன்றை மேற்கொள்ளல்.**
- சிறுவர் நன்நடத்தை மற்றும் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் பராமரிக்கப்படும் சிறுவர் இல்லங்களில் பாதுகாப்பு வழங்கப்பட்டு தேவையான கல்வி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனூடு

| |
|---|
| **உலகிலுள்ள எந்தப் பிள்ளைக்கும் கல்வி பெறுவதற்கான உரிமை உள்ளதென வலியுறுத்தல்.** |

செயற்பாடு 04

❖. **எமக்கு கிடைக்கப்பெற்றுள்ள வாழ்க்கைப்பற்றி கண்களை மூடிக்கொண்டு சிந்திக்கச் செய்தல்**

- ஐம்புலன்களில் குறைகள் எதுவும் இல்லாது நாம் பிறந்துள்ளோம் என்பது (அவ்வாறான குறைபாடு கொண்ட பிள்ளைகள் இருப்பின் அது பற்றி கவனிக்குக)
- இந்த வாழ்க்கையில் எமக்கு இயலுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பிறருக்கு உதவ வேண்டும்.
- விசேடமாக ஏதேனும் குறைப்பாட்டைக் கொண்ட நபர்களைக் காணும்போது தயக்கமின்றி உதவ வேண்டும்.
- அவ்வாறு உதவும்போது இவ்வாறான நிலைமை தனக்கு ஏற்பட்டுள்ளது போன்று நினைத்து நடந்துக்கொள்ளல்

| |
|---|
| • **"இன்றிலிருந்து நான் பிறரது குறைபாடுகள் / ஊனங்கள் தொடர்பாக மிதவாதப் போக்குடன் நடந்துகொள்வேன்"** என உறுதியெடுத்துக்கொள்ளச் செய்யுங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 06

❖. **எமது வாழ்க்கையில் நாம் வாழ்த்துக்களை தெரிவிக்கும் சந்தர்ப்பங்கள்**

☞. பிறந்தநாள் வாழ்த்து

☞. வெசாக் வாழ்த்து

☞. நத்தார் வாழ்த்து

☞. விசேட நிகழ்வுக்கான வாழ்த்து

☞. பதவியுயர்வு அல்லது விசேட சிறப்புகள் பெற்றவர்களுக்கான வாழ்த்து அட்டை

☞. அனுதாப வாழ்த்து

☞. நன்றி நவிலல்

☞. நலம்பெறப் பிரார்த்தித்தல்

•. **வாழ்த்துக்களை வாழ்த்தட்டைகளில் அனுப்புவதன் மூலம் நிகழும் அனுகூலமான விடயங்கள்**

☞. நட்பு புதுப்பிக்கப்படல், சொந்த பந்த உறவு புதுப்பிக்கப்படல்

☞. நம்பிக்கை கட்டியெழுப்பப்படல்

☞. உளச் சுகம் கிடைத்தல்

☞. பிறரது மதிப்புக்கு உட்படல்

☞. பரஸ்பர நல்லுறவு விருத்தியடைதல்


☞. பொறுப்புக்களை நிறைவேற்ற முடிதல்

☞. குறைந்த செலவில் அதிக மகிழ்ச்சி கிடைத்தல்

☞. புதிதாக யாதேனுமொன்றை ஆக்கி மகிழ்வுறுதல்

•. குறைந்த செலவில் வாழ்த்தட்டை செய்தல்

**கீழே தரப்பட்டுள்ள வாழ்த்தட்டை போல் விசித்திரமான வாழ்த்தட்டைகளை தயாரிக்கவும்.**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 07

❖. "பந்தைக் கொண்டு செல்வோம், வளையத்தினூடாக நுழைந்து செல்வோம்" விளையாட்டில் ஈடுபடுக.

## செயற்பாடு 08

❖. "பசியுடன் நான் மகனின் வீட்டிற்குச் சென்ற வேளை" எனத் தொடங்கும் பாடலைச் செவிமடுக்க வழிப்படுத்துக.

> பசியுடன் நான் சென்றேன் - அன்பு மகன் வீட்டிற்கு
> அவனோ தந்தான் அளந்து இரண்டு சுண்டு நெல்லு
> எடுக்க வா வேண்டாமா என்றது என் மனசு
> அளந்து தானோடா - பாலூட்டினேன் நான் உனக்கு

•. மேலுள்ள சந்தர்ப்பம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக.

•. பெற்றோரை கவனிக்காத பிள்ளைகள் உள்ள இன்றைய சமூகத்தில் பெற்றோரைப் பற்றி பஞ்சாதாபம் காட்டும் சந்தர்ப்பத்தினை கலந்துரையாடல்.

| Activity Based Oral English | | |
|---|---|---|
| **12. Human Behaviour**<br><br>01. innocent<br>02. helpful<br>03. clever<br>04. kind | **Song**<br><br>If you`re happy and you know it<br>clap your hands//<br>If you`re happy and you know it<br>and you really want to show it<br>If you`re happy and you know it<br>clap your hands.<br>If you`re angry and you know it, no<br>no fight//<br>if you`re angry and you know it<br>and you really want to show it<br>If you`re angry and you know it no<br>no fight<br>If you`re sad and you know it,<br>share with friends//<br>If you`re sad and you know it<br>and you really want to lessen it<br>if you`re sad you know it share<br>with friends//<br><br>**Song**<br>you`re my best friend,<br>you are so kind<br>you make me happy<br>you are innocent and very helpful<br>(you`re my sunshine.. ) | **Useful Expressions**<br><br>24. Who is this?<br>This is my father<br><br>25. What are you doing?<br>I am reading a book. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு வினாக்கள்

பயிற்சி

**(01) தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 01. சிறுவர் உரிமை மீறல் | வெள்ளைப் பிரம்பு |
| 02. பிறரது ஆக்கங்களை மதித்தல் | அன்பும், அரவணைப்பும் கிடைக்காமை |
| 03. வாழ்த்துக்களைத் தெரிவித்தல் | 5 - 16 வயது |
| 04. கண்பார்வையற்றோர் | 1929 |
| 05. போதைப்பொருளுக்கு அடிமையாதல் | வெசாக் வாழ்த்தட்டை |
| 06. கல்வி கற்பது உரிமையாகும் | திறமைகளை பாராட்டுதல் |

**(02) பின்வருவனவற்றுள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

01. பிறரது ஆக்கங்கள் பற்றி மனம் நோகாதவாறு கருத்து தெரிவிக்க வேண்டும். ( )
02. குறைபாடுகளை கூறுவதற்கு முன் நிறைகளைக் கூற வேண்டும். ( )
03. கண்பார்வையற்றோருக்கு பாதையை கடப்பதற்கு உதவ வேண்டும். ( )
04. கடதாசிகளை கிழித்து ஒட்டுவதால் ஒரிகாமி ஆக்கம் செய்யமுடியும். ( )
05. குறைபாடுடையவர்களும் இன்று பல சாதனைகளை புரிகிறார்கள். ( )
06. வயதான பெற்றோர்களைக் கவனிப்பது பிள்ளைகளது கடமையல்ல. ( )
07. இலங்கையரசு இலவசப்பாட நூல்களை மாணவர்களுக்கு வழங்குகிறது. ( )
08. பூக்களை உலர்த்தி அவற்றைப் பயன்படுத்தி வாழ்த்தட்டைகள் செய்யலாம். ( )

**(03) இடைவெளிக்கு பொருத்தமான சொல்லை எழுதுக.**

01. வாழ்த்தட்டைகள் அனுப்புவதன் மூலம் ........................................ புதுப்பிக்கப்படுகின்றது.
02. ஜனவரி மாதம் 15ஆம் திகதி ............................................ வாழ்த்துக்களை அனுப்பலாம்.
03. கண்பார்வை குறைவான மாணவர்களுக்கு அரசாங்கம் ........................................................ இலவசமாக வழங்குகிறது.
04. அநாதைப்பிள்ளைகளுக்கு சிறுவர் நன்நடத்தை மற்றும் பாதுகாப்பு திணைக்களம் தேவையான ....................................................................... வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.
05. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது சிறுவர் ................................................ அடங்கும்.
06. ஒவ்வொரு பிள்ளையிடத்திலும் விஷேடமான ........................................ பொதிந்திருக்கும்.
07. உடற்குறைபாடுகள் வாழ்க்கையில் எதையோ ஒன்றை சாதிப்பதற்கு ............................... அல்ல.
08. சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறும் போது அறிவிக்க வேண்டிய தொலைபேசி எண் ...................................................................... ஆகும்.

> கல்வியை, நட்பு, தைப்பொங்கல், 1929, தடை, ஆற்றல்கள், உரிமை மீறலில், மூக்குக்கண்ணாடிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(04) வினாக்களுக்கு விடை தருக.**

01. வாழ்த்தட்டைகள் அனுப்புவதன் மூலம் ஏற்படக்கூடிய நன்மைகள் எவை?

........................................................................................................................................

02. கொலாஜ் ஆக்கம் செய்வதற்கு தேவையானவை எவை? ..........................................................

........................................................................................................................................

03. பிறரது ஆக்கங்களை நாம் எவ்வாறு பாராட்ட வேண்டும்? ..................................................

........................................................................................................................................

04. சிறுவர் இல்லங்களில் வாழும் பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை?

........................................................................................................................................

05. பிறரது ஆக்கம் தொடர்பாக கருத்து தெரிவிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய சொற்கள் எவை? ........................................................................................................

**(05) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. வகுப்பறையில் குழுவேலைகளைச் செய்யும்போது மாணவரிடம் இருக்க வேண்டிய ஒரு நல்ல பண்பு எது?
   1) இறுதி வரையில் வேலையில் ஈடுபடுதல்
   2) ஏனையோரைவிட முன்பதாகத் தமது வேலையை முடித்தல்.
   3) தமது கருத்துக்களின்படி மாத்திரம்வேலைச் செய்தல்.
   4) தமது வேலையில் மாத்திரம் கவனஞ் செலுத்துதல்

02. பிறரது ஆக்கங்களைப் பற்றி கருத்து கூறும் போது
   1) குறைகளைக் கொட்டித் தீர்க்க வேண்டும்.
   2) குறைகளை சுட்டிக்காட்ட வேண்டும்.
   3) இவ்வாறு செய்தால் இதை விட அழகாக இருக்கும் எனக்கூற வேண்டும்.
   4) நல்லதை மட்டுமே பாராட்ட வேண்டும்.

03. வாழ்த்தட்டைகள் அனுப்புவதன் மூலம்
   1) செலவு அதிகமாகும் 2) மகிழ்ச்சி ஏற்படும்
   3) நேரம் வீண்விரயம் 4) கவலை ஏற்படும்

04. கொலாஜ் ஆக்கம் என்பது
   1) நீர்ச்சாயங்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் ஆக்கம்.
   2) கோடுகளின் மூலம் வரையப்படும் ஆக்கம்.
   3) பஸ்ரலைப் பயன்படுத்திச் செய்யப்படும் ஆக்கம்
   4) கடதாசித் துண்டுகளைக் கிழித்து ஒட்டிச் செய்யப்படும் ஆக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. இயற்கையான மலர்களையும் இலைகளையும் கொண்டு வாழ்த்து அட்டை தயாரிக்கும் நான்கு படிமுறைகள் பின்வருமாறு

A - உலர்த்திய பூக்களையும் இலைகளையும் தேவைக்கேற்ப ஒட்டுதல்.

B - தேவையான அளவுள்ள அட்டைத் துண்டொன்றை வெட்டி எடுத்தல்.

C - இயற்கைப் பூக்களையும் இலைகளையும் புத்தகப் பக்கங்களுக்கு இடையே வைத்து உலர விடுதல்.

D - பொருத்தமான வாழ்த்து அல்லது நற்பிரார்த்தனையை எழுதுதல்.

இவற்றின் சரியான ஒழுங்குமுறை யாது?

1) A,D,C,B 2) B,A,C,D 3) C,B,A,D 4) C,D,A,B

06. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது தொடர்பாக அறிவிக்கவேண்டிய தொலைபேசி இலக்கம்

1) 1919 2) 1911 3) 1918 4) 1929

07. செலவு குறைந்த வாழ்த்தட்டைகளை செய்யும் போது

1) உலர்ந்த தேங்காய் பூவைப் பயன்படுத்தலாம்

2) உலர்ந்த பூக்களையும் இலைகளையும் பயன்படுத்தலாம்.

3) விலையுயர்ந்த வர்ணச்சாயங்களைப் பயன்படுத்தலாம்.

4) சிறிய தானிய வகைகளைப் பயன்படுத்தலாம்

08. பிறரது ஆக்கங்களை மெச்சும் போது பாராட்டத் தேவையற்றது

1) ஆக்கத்தின் நிறைவு 2) ஆக்கத்தின் பொருத்தப்பாடு

3) பயன்படுத்தப்பட்ட நிறம் 4) பயன்படுத்தப்பட்ட பொருட்கள்

09. குறைபாடுடையவர்கள் சாதிப்பதற்கு உதவுவது

1) நவீன ஒலிம்பிக் 2) பரா ஒலிம்பிக்

3) ஆசிய விளையாட்டு 4) சாக் விளையாட்டு

10. முரண்பாடு ஏற்படாதவாறு வாழ்வதற்கு

1) போராட்டம் தேவை 2) பிறருக்கு உதவுதல்

3) அனைத்தையும் விட்டுக்கொடுத்தல் 4) கடுமையாக பேசுதல்

11. பாடசாலை கல்வி பெறுவதற்கான வயதெல்லை

1) 4 - 10 2) 4 - 18 3) 5 - 16 4) 5 - 15

12. வாக்கு வாதங்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்குச் செய்ய வேண்டியது?

1) விட்டுக்கொடுத்தல் 2) பயமுறுத்தல்

3) கடுமையாகப் பேசுதல் 4) சிரித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருப்பொருள் 13 நிலமும் வானும்

## செயற்பாடு 01

◆. பாடசாலைச் சூழலில் அல்லது அயற்சூழலில் இலகுவாக அவதானிக்கக்கூடிய பல்வகைமையுடன் கூடிய இடங்கள்



மணற்பாங்கான தரை




பரல்கொண்ட தரை




புற்கள் கொண்ட தரை



சீமெந்துத் தரை



தரையோடு பதித்தத்தரை



களிமண் தரை

●. மேலுள்ள இடங்களில் நடந்து செல்லும் போது எதிர்கொண்ட அனுபவங்களைக் கலந்துரையாடல்

### மணற்பாங்கான தரை

•. வேகமாக நடக்க முடியாது

•. கால்கள் மண்ணினுள் புதையும்

•. பாதணி இல்லாது நடப்பது கடினம்

•. வெப்பமான காலங்களில் நடக்கும் போது கால்பாதம் சுடும்.

•. ஒட்டகங்கள் இவ்வாறான தரையில் வேகமாக நடக்கும். காரணம் கால்களில் உள்ள சவ்வாகும்.

### பரல் கொண்ட தரை

•. பாதணி இல்லாமல் நடந்தால் பாதங்களில் பரல்கள் குத்தும்

•. வேகமாக நடக்க முடியாது

•. நடப்பது கடினம் சிலவேளை சறுக்கி விழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புற்கள் கொண்ட தரை**

- வேகமாக ஓட முடியும்
- நடக்கும் போது இதமாக இருக்கும்
- வெப்பமான காலங்களிலும் பாதணி இல்லாமல் நடக்கலாம்
- மழைக்காலங்களில் நடப்பது கடினம். புல் வழுக்கும்

**சீமெந்துத் தரை**

- நடப்பது பாதுகாப்பானது
- வேகமாக நடக்க முடியும்
- வெப்ப காலங்களில் பாதணியின்றி நடப்பது கடினம்
- நடக்கும் போது இதமாக இருக்கும்

**தரையோடு பதித்த தரை**

- நடப்பது சுலபம்
- வேகமாக நடக்கலாம் (வழுக்கும் தன்மையற்ற தரையோடு)
- சில வேளைகளில் தரையோடுகள் தரமற்றதாக இருந்தால் குதிகால்கள் வலியெடுக்கும்
- மேலே கூறப்பட்ட இடங்களில் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டு அனுபவங்களை கலந்துரையாடுக.
- பந்தை உருட்டிப் பார்த்தல்
- கயிற்றில் கட்டப்பட்ட மரக்குற்றியை இழுத்துச் செல்லல்
- மரக்குற்றியை விசையைப் பயன்படுத்தித் தள்ளியபோது அது அசைந்த தூரம்
- பெற்ற அனுபவங்களை பின்வரும் வினாக்களுடன் கலந்துரையாடுக.
- அவ்வொவ்வோர் இடத்திலும் பந்து எவ்வாறு உருண்டு சென்றது?
- எந்த இடத்தில் மிக இலகுவாக மரக்குற்றியை இழுத்துச் செல்ல முடிந்தது?
- எந்த இடத்தில் அதிக தூரத்திற்கு மரக்குற்றியினால் தள்ளிச் செல்ல முடிந்தது?

**குறிப்பு :** நடந்து செல்வதற்கும் வேறு செயற்பாடுகளில் ஈடுபடவும் நிலத்தின் தன்மை குறித்து கவனம் கொள்ள வேண்டும்.

- இயற்கையான நிலங்களும் மனிதனால் தயார் செய்யப்பட்ட நிலங்களும் பெரும்பாலும் சூழலுக்கு அழகூட்டுபவையாகும்
- இயற்கையான நிலங்கள் -ஆற்றங்கரை, கடற்கரை, புல்வெளிகள், புதர்காடுகள், மலைத்தொடர்கள்
- மனிதனால் தயார் செய்யப்பட்ட இடங்கள் - வயல் நிலங்கள், பூங்காக்கள், மைதானங்கள், விளையாட்டு முற்றம், வீதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 02

### ◆. பாடசாலை தோட்டத்தில் அல்லது அயற்சூழலில் மண்ணின் தன்மையை பரீட்சித்தல்

- மண்ணின் நிறம் - கறுப்பு நிறம், கபில நிறம், கடும் கபில நிறம், வெண்நிறம், செந்நிறம், மஞ்சள் நிறம்
- மணல் / களி / பரல் - அடங்கியுள்ள மண்ணா?


### ●. மண்ணில் காணப்படும் உயிருள்ளவையும் உயிரற்றவையும்

| மண்ணில் காணப்படும் உயிருள்ளவை | மண்ணில் காணப்படும் உயிரற்றவை |
|---|---|
| சிறு வண்டுகள் | தாவர வேர்கள் |
| எறும்புகள் | தாவர இலைப் பாகங்கள் |
| மண்புழுக்கள் | வண்டுகளின் கால்கள், செட்டைகள் |
| சிறு புழுக்கள் | சிறு மரக்கட்டைகள் |
| கறையான் | பொலித்தீன் கீலங்கள் |
| | இரும்புத் துகல்கள் |
| | சிறு கற்கள் |

### ●. மண் மாதிரிகளை கைவில்லையால் அவதானித்தல்



- குறித்த இடத்தில் பெற்றுக்கொண்ட மண்மாதிரிகளை ஊடுகாட்டத்தக்க போத்தல் ஒன்றில் இட்டு நீர் நிரப்பி நன்கு குலுக்கி குறித்த நேரம் வரை மேசை மீது வைத்து அவதானிக்குக.






### ●. அவதானிக்கப்பட்ட பின்வரும் விடயங்கள் சார்பாக கலந்துரையாடுக.

- போத்தலின் அடியில் படிந்துள்ள பொருள்கள்
- அதற்கு மேலே படிந்துள்ள பொருள்கள்
- நீரில் மிதக்கும் பொருள்கள்
- நீரின் நிறம் வேறுபட்டிருக்கும் விதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 03

◆. **போதியளவு சூரிய ஒளி கிடைக்கும் நாள் மற்றும் முகில்களுடன் கூடிய இருண்ட ஒருநாள் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை கலந்துரையாடல்.**

•. சூரிய ஒளி கிடைக்கும் நாளில் செய்யக்கூடிய எனினும் மழையுடன் கூடிய நாட்களில் செய்ய மேற்கொள்ள முடியாத கடினமான நாளாந்தச் செயற்பாடுகள்

- ☞. துணிகளை காயவைத்தல்
- ☞. உப்பிட்ட மீன்கள், பழங்கள் காயவைத்தல்
- ☞. விளையாடுதல்
- ☞. பயிர்கள் நடுதல்
- ☞. உப்பு உற்பத்தி
- ☞. தோட்ட வேலைகள்

•. இயற்கை ஒளியைப் போன்று செயற்கை ஒளியும் கட்டடங்களுக்கு ஒளியூட்டுவதற்காக பயன்படுகின்றன.



●. **உப்பளங்களில் கடல் நீரில் இருந்து உப்பைப் பிரித்தெடுத்தல் நிகழும் விதம்**



•. கடல் நீர் வரம்புகள் அமைத்து தேக்கி வைக்கப்பட்டு சூரிய ஒளியினால் அதிலுள்ள நீர் ஆவியாக்கப்பட்டதும் மீதமானவை உப்புக்கட்டிகளாக மாறுகின்றது.

●. பார்ப்பதற்கு கண்கள் மட்டும் போதாது ஒளியும் தேவை என்பதை பின்வரும் அனுபவங்களுடன் கலந்துரையாடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

•. சூரிய ஒளியின் மூலம் கிடைக்கும் ஒளி, வெப்பம் ஆகியன பல்வேறு வழிகளில் எமக்குப் பயன்படும் விதம்.

**•. அதற்கான சிறிய பரிசோதனைகள்**

01. நிழலான இடம் மற்றும் போதுமான சூரிய ஒளி உள்ள இடம் ஆகிய இரண்டு இடங்களைத் தெரிவு செய்க. இரண்டு இடங்களிலும் சமனான அளவு (5 - 10ml) நீரைத் தெளிக்க. மிக விரைவில் எந்த இடத்திலுள்ள நீர் உலரும் எனக்கூற மாணவர்க்குச் சந்தர்ப்பம் வழங்குக. உலர எடுக்கும் காலத்தை அளவிட்டு மாணவரது எதிர்வுகூறல் சரியானதா எனக் கூறுவதற்கு வழிப்படுத்துக.

02. கடும் சூரிய ஒளி விழும் இடத்தில் ஈரத் துணியை விரித்து அதிலிருந்து நீர் ஆவியாகி வெளியேறுவதை அவதானிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

03. சற்றுத் தட்டையான ஒரு பாத்திரத்தில் 100 மில்லி லீற்றர் நீரை இட்டு அதில் 10 கிராம் உப்பைக் கரைக்குக. (முழுவதும் கரையும் வரை) பின்னர் அப்பாத்திரத்தை சூரிய ஒளி நன்கு படும் இடத்தில் வைக்குக. யாது நிகழும் என மாணவரிடம் வினவுக. நாளின் இறுதியில் அவதானிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

**•. இருள் பரவும் போது அல்லது மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ள போது வீட்டில் ஏற்படும் அசௌகரியங்கள்.**

- எல்லா இடமும் இருளாக இருக்கும்
- நடமாடும் போது முட்டிமோதிப்படலாம்
- பாடசாலையில் வழங்கப்படும் வீட்டு வேலைகளை செய்யமுடியாது போகும்
- பாடங்களை கற்க முடியாது
- மின்சாதனங்களை இயக்க முடியாது
- நமது அன்றாட காரியங்கள் தடைப்படும்.

**குறிப்பு :**

கண்கள் இருந்தும் ஒளி இல்லையென்றால் எமது பார்வையில் பலனில்லை. ஒளியானது எமது நாளாந்த தேவைகளுக்கு பயன்படும் விதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சூரிய ஒளியின் பயன்பாடு | சூரிய வெப்பத்தின் பயன்பாடு |
|---|---|
| •. வெளிச்சம் பெறுதல்<br>•. தாவரங்கள் பூத்தல்<br>•. மின்சாரம் தயாரித்தல்<br>•. காலை சூரிய ஒளியில் விற்றமின் D கிடைத்தல் | •. ஈரமான துணியை உலர்த்தல்<br>•. உப்பு உற்பத்தி செய்தல்<br>•. தானியங்கள் உலர்த்தல்<br>•. சூரிய கலங்களில் சேமித்தல்<br>•. உப்பிட்ட பொருட்களை உலர்த்தல் |

## செயற்பாடு 04

❖. **ஊசித்துளைக்கமரா ஒன்றைத் தயாரித்தல்**

●. **தேவைப்படும் பொருட்கள்**

•. பற்பசைப் பெட்டிகள் இரண்டு (ஒன்று பெரியதாகவும் மற்றைய அதிலும் சற்றுச் சிறியதாகவும் இருத்தல் வேண்டும்.)

•. ரிசூத்தாள், கறுப்பு நிறத்தாள்

•. குண்டூசி, கத்தரிக்கோல், பசை

●. அளவில் பெரிய பெட்டியின் ஓர் அந்தத்தில் மூடிப்பகுதியை நீக்கி, கறுப்புத்தாள் ஒட்டிக் கொள்க. அதன் சரி மத்தியில் குண்டூசியால் துளையொன்று இட்டுக்கொள்க. மற்றைய அந்தத்தில் ஒரு பகுதியை வெட்டி நீளத்தைக் குறைத்துக் கொள்க.

●. அளவில் சிறிய பெட்டியின் இரண்டு அந்தங்களிலுள்ள மூடிகளை அகற்றி ஒரு திறந்த அந்தத்தில் ரிசூத்தாள் ஒட்டிக்கொள்க.


●. ரிசூத்தாள் ஒட்டிய அந்தம் முதலில் உள்ளே செல்லும் வகையில் பெரிய பெட்டியினுள் சிறிய பெட்டியை நுழைக்க. ஒளிபடும் சூழலில் உள்ள ஏதேனும் பொருளொன்றை நோக்கி ஊசித்துளைக் கமராவைப் பிடித்து, திறந்து அந்தத்தில் கண்ணை வைத்துப் பார்க்குக.

●. ரிசூத் தாளின் மீது பொருளின் தலைகீழான விம்பம் தென்படும் வரை பெட்டிகளை உள்ளும் புறமுகமாக அசைத்து ஊசித் துளைக் கமராவைச் செப்பஞ்செய்க.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊசித்துளைக் கமராவைத் தயாரித்தல்




- ஊசித்தூளைக்கமராவினூடாக பொருளொன்றைப் பார்க்கும்போது விம்பம் தோன்றும் விதம்





செயற்பாடு 05

❖. காற்றுத் திசைக்காட்டியொன்றைத் தயாரித்தல்

- தேவையான பொருட்கள்

- பானக்குழாய், குண்டூசி, பேனைக் குழாய், தக்கையில் பொருத்திய தாங்கி, அம்புக்குறி வடிவத்தில் வெட்டிய காட்போட் துண்டுகள், திசைகள் குறிக்கப்பட்ட அட்டை ஆகியவை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 06

◆. **மழை எமக்கு முக்கியமானதாக அமையும் விதம் பற்றி கலந்துரையாடுக.**

- நீரைப் பெறுவதற்கு மழை பிரதான காரணியாகும்.
- மழை நீரைச் சேகரித்து மீண்டும் பயன்படுத்தமுடியும். (குளங்கள்)
- "வானத்தில் இருந்து விழும் ஒவ்வொரு மழைத்துளியையும் வீணாக்காது கடலில் போய் சேர விடமாட்டேன்." எனும் பராக்கிரமபாகு மன்னனின் பொன்மொழியை மறந்திடமுடியாது.

● **மழையின் பயன்கள்**

- குளங்கள், அணைக்கட்டுக்கள் அமைத்துப் பயிர்ச்செய்கைக்கான நீரைப் பெறுதல்.
- நீர்த்தேக்கங்களை அமைத்து, நீரைத் தேக்கி மின்னை உற்பத்தி செய்தல்.
- வீடுகளில் தொட்டிகள் அமைத்து மழை நீரைச் சேகரித்துப் பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தல்.

● **மழை நிலத்தில் விழும் போது மண்ணில் ஏற்படும் மாற்றங்களை அவதானித்தல்.**





- கலப்பு மண் கொண்ட நிலத்தைத் தெரிக. (மணல், களி, பரல் அடங்கிய மண்)
- தெரிவு செய்யப்பட்ட ஏறத்தாழ 30cm x 30cm அளவு நிலப்பரப்புக்கு மேலே அடியில் துளைகள் இடப்பட்ட பாத்திரத்தில் (கழிக்கப்பட்ட பிளாத்திக்குப் போத்தல்) நீரை நிரப்பிப் பிடித்திருக்குக.
- 2 -3 நிமிடங்களுக்குத் தொடர்ச்சியாக நீரை விழச் செய்க.
- நடப்பவற்றை அவதானித்துக் கருத்துத் தெரிவிக்க மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.

01. நிலம் நீரை உறிஞ்சிக் கொள்ளும்
02. நிலத்தில் குழி உண்டாகும்
03. குழியின் ஓரத்தினூடாக மண் கழுவிப்படும்
04. தொடர்ந்து மண் கழுவப்பட்டு மண்ணரிப்பு உண்டாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு 07


◆. **மழைப் பெய்யும் போது சூழலில் உருவாகும் அழகு தொடர்பான கவிதைகள் அல்லது பாடல்கள் பாடுதல்**


கொட்டுது பார் மழை!
கொண்டு வா ஒரு குடை!
வெட்டுது பார் மின்னல்!
பார்க்காதே அது இன்னல்!
முழங்குது பார் இடி!
வெளியே போவது எப்படி?
பொழியும் பார் முகில்!
விளைந்திடும் பார் வயல்!
கூவுது பார் குயில்!
ஆடுது பார் மயில்!
மழை பெய்தாலே மகிழ்வுதான்!
மறைந்திடும் நம் வறட்சிதான்!

நன்றி - பாண்டியன்

செயற்பாடு 08

◆. **புவிக்கோளம் ஒன்றில் பகற்காலம், இரவு காலம் காணப்படும் நாடுகளை கண்டறிக.**



- புவிக்கோள மாதிரியுருவொன்று தயாரித்துக் கொள்க. அதில் நாடுகள் அமைந்துள்ள இடங்களைப் பருமட்டாகக் குறித்துக்கொள்க.
- திரை அல்லது காட்போட் அட்டையினால் மறைப்பிட்டு இருட்டான ஓர் இடத்தைத் தயார்செய்க. அதில் புவிக்கோள மாதிரியுருவை வைத்து, ஒரு புறத்தேயிருந்து மின்சூள் ஒளியை அதன்மீது பாய்ச்சுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மின்சூளானது சூரியனைக் குறிக்கிறது எனக் காட்டுக.
- புவிக்கோளத்தில் மின்சூளின் ஒளி படும் பகுதி பற்றி மாணவரது கவனத்தை ஈர்க்குக. அந்தப் பிரதேசத்திலுள்ள நாடுகளுக்குப் பகற்காலம் எனக் காட்டுக.
- அந்தச் சந்தர்ப்பத்தில் இரவு காலம் காணப்படும் பகுதிகளை பூகோள மாதிரியுருவில் அவதானித்துக் கூறுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அச்சந்தர்ப்பத்தில் இலங்கையில் இரவு நேரமா அல்லது பகல் நேரமா என வினவுக.


குறிப்பு : நாம் வாழும் பூமி கோள வடிவமானது.

அது தன்னைத் தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வலம் வருகிறது. புவி தன்னைத் தானே சுற்றி வருவதற்கு 24 மணித்தியாலங்கள் எடுக்கின்றது. (1 நாள்) இவ்வாறு தன்னைத் தானே சுற்றி வருவது இரவு பகல் உண்டாகின்றது. பூமியில் சூரியனின் ஒளி விழும் பகுதியில் உள்ள நாடுகளுக்கு பகற்காலமாகவும் ஒளி

விழாத பகுதியில் உள்ள நாடுகளுக்கு இரவு காலமாகவும் இருக்கும்.


## செயற்பாடு 09

◆. இலங்கையின் மாகாணங்களும் மாவட்டங்களும்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மாகாணங்களை இனங்கண்டு அதற்குரிய நிறங்களை நிறந்திட்டுக**



**மாகாணங்களும் மாவட்டங்களும்**

வட மாகாணம் - யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார்

வட மத்திய மாகாணம் - அநுராதபுரம், பொலன்னறுவை

கிழக்கு மாகாணம் - திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை

ஊவா மாகாணம் - பதுளை, மொனராகலை

மத்திய மாகாணம் - கண்டி, மாத்தளை, நுவரெலியா

சப்ரகமுவ மாகாணம் - இரத்தினபுரி, கேகாலை

தென்மாகாணம் - காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை


மேல்மாகாணம் - களுத்துறை, கொழும்பு, கம்பஹா

வடமேல்மாகாணம் - புத்தளம், குருனாகல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இலங்கையின் தேசப்படத்தில் தமது வீடு, பாடசாலை அமைந்துள்ள பிரதான நகரத்தையும் மாவட்டத்தையும் கண்டறிக




'செயற்பாடு 10


❖. இயற்கைச் சூழலில் நடைபெறும் மாற்றங்களின் காரணமாக ஏற்பட்ட அனர்த்த நிலைமைகள்


- இயற்கை அனர்த்தங்கள்


மண்சரிவு


வெள்ளம்


சூறாவளி


சுனாமி


வரட்சி


இடி மின்னல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அனர்த்தத்தின் பெயர் - மண்சரிவு
- இதனால் ஏற்பட்டுள்ள இழப்புகள் -
  உயிர்கள் மண்ணுக்குள் புதைதல், கட்டிடங்கள் இடிந்து விழுதல்
  கால்நடைகள் மண்ணுக்குள் அடிபடுதல், மக்கள் அகதிகளாக்கப்படுதல்
  வறுமை ஏற்படல், பொருளாதாரம் பின்னடைதல்
- **இடர் ஏற்பட முன்னர் இயற்கை சூழலின் வெளிக்காட்டப்பட்ட முன் எச்சரிக்கைகளும், மாற்றங்களும்**
  - தொடர்ச்சியாக பெய்யும் அடை மழை
  - வேகமான காற்று
  - பள்ளம் நோக்கி ஓடும் நீர்
  - சாய்வான இடங்கள் மெதுவாக கரைதல்
- **இடர் ஏற்படும் போது செயற்பட வேண்டிய விதம்**
  - பதற்றப்படாது இருத்தல்
  - அவ்விடத்தை விட்டு வெளியேறுதல்
  - நீர் வடிந்து செல்லக்கூடிய வசதிகளை செய்தல்
  - அனர்த்தங்கள் தொடர்பாக 117க்கு தெரியப்படுத்தல்
- **இடரின் பின்னர் பழைய நிலைக்கு வருவதற்கு மேற்கொள்ளத்தக்கவை**
  - தாம் வாழ்ந்த இடம் தொடர்ந்தும் வாழ்வதற்கு பொருத்தமானதா என்பதை உணர்தல்
  - மண்ணரிப்பு ஏற்படத்தக்க செயற்பாடுகளை அறிந்து மண்ணரிப்பு ஏற்படாதவாறு மரங்களை நடுதல், புல் வளர்த்தல், மரங்கள் வெட்டுவதை தவிர்த்தல்
  - நீர் வழிந்தோடக்கூடிய வசதிகளை மேற்கொள்ளல்
  - வீடுகள் சேதமாகி இருந்தால் அரசு பெற்றுத் தரும் உதவிகளை பெறுவதோடு மேலதிக தேவைகளை தாம் இயலுமான வரை தாமே செய்துக் கொள்ளல்

| அனர்த்தங்கள் | ஏற்பட்டுள்ள இழப்புகள் | முன் எச்சரிக்கைகள் | செயற்பட வேண்டிய விதம் | பழைய நிலைமைக்கு வருதல் | மீண்டும் நிகழ்வதை தவிர்த்தல் |
|---|---|---|---|---|---|
| வெள்ளப்பெருக்கு | • வாகனங்கள் சேதமடைதல்<br>• வீடுகள், கட்டடங்கள் சேதமடைதல்<br>• வயல் நிலங்கள் அழிதல்<br>• தொற்று நோய் -கள் ஏற்படல்<br>• உயிர்கள் இறத்தல் | • ஈசல் பறத்தல்<br>• வண்டுகள் இரைதல்<br>• இடி மின்னல்<br>• தொடர்ச்சியான மழை<br>• தவளைகள் சத்தமிடல்<br>• ஆறு, குளங்க -ளில் மண் நிரம்புதல் | • பதற்றப்படாது இருத்தல்<br>• தமது முக்கியமான ஆவணங்களை பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்லல்<br>• குழந்தைகளை -யும் சிறுவர் -களையும் பாதுகாப்பான இடத்துக்கு அனுப்புதல் | • நீர் வழிந்தோட -க்கூடிய வழி -களை மேற் -கொள்ளல்<br>• வீட்டை நன்றாக கழுவுதல்<br>• கிணறு போன்ற -வற்றை இறைத்தல்<br>• தமது உடை -களை கழுவி காயவைத்தல்<br>• மரங்களை நடுதல் | • வீட்டுக்குள் நீர் வராமல் கட்டுகள் கட்டுதல்<br>• வசதி இருந்தால் மாடி வீடு அமைத்தல்<br>• ஆறுகளில் மண் அகழ்வதை தவிர்த்தல்<br>• ஓடைகளுக்கு குறுக்காக கட்டிடங்கள் கட்டுவதை தவிர்த்தல் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| அனர்த்தங்கள் | ஏற்பட்டுள்ள இழப்புகள் | முன் எச்சரிக்கைகள் | செயற்பட வேண்டிய விதம் | பழைய நிலைமைக்கு வருதல் | மீண்டும் நிகழ்வதை தவிர்த்தல் |
|---|---|---|---|---|---|
| சுனாமி | •. கட்டடங்கள், வீடுகள், வாகனங்கள், பாதைகள், பயிர் நிலங்கள், உயிர்கள் அனைத்தும் இழக்கப்படுதல். | •. அதிகமாக மீன்கள் கரைக்கு வருதல் •. அதிகமான மீன்கள் இறந்து கரை ஒதுங்குதல் •. இடி, மின்னலுடன் கூடிய மழை •. கடல் உள்வாங்குதல் •. கடலில் நில நடுக்கம் ஏற்படுதல் •. பிராணிகளின் வித்தியாசமான நடத்தை மாற்றங்கள் | •. உயரமான இடத்தை நோக்கி செல்லுதல் •. கரை ஓரங்களில் வசிப்பதைத் தவிர்த்தல் •. முக்கியமான ஆவணங்களை எடுத்துக் கொண்டு உயிரை பாதுகாப்பதில் கவனம் கொள்ளல் •. மீனவர்கள் கடலுக்குச் செல்வதை தவிர்த்தல் | •. சுனாமி எச்சரிக்கை அகலும் வரை தமது இல்லங்களுக்கு செல்லாதிருத்தல் •. அரச உதவியை பெறல் | •. இரசாயணக் கழிவுகளை சூழலில் கலக்காதிருத்தல் •. முருகைக் கற்பாறைகளை அகழ்வதை தவிர்த்தல் |

## செயற்பாடு 11

•. வகுப்பிலுள்ள மாணவர்களை இரண்டு குழுக்களாக்குக.

•. ஒரு குழுவை வளையத்தின் ஒரு புறத்திலும் மற்றைய குழுவை வளையத்தின் எதிர்ப்புறத்திலும் நிறுத்துக.



•. ஆசிரியரது சமிக்ஞைக்கு அமைய ரெனிஸ் பந்தை / இறப்பர் பந்தை / வித்துப் பையை வளையத்தின் ஊடாக மறுபக்கத்திலுள்ள நண்பருக்குக் எறிக.

•. அவர் பந்தை / வித்துப் பையை பிடித்து மீள மறுபக்கத்தில் உள்ள நண்பருக்கு எறிதல் வேண்டும்.

•. இனி அந்த இருவரும் விலகிச் சென்ற பின், மேலும் இருவருக்குச் சந்தர்ப்பமளித்தல் வேண்டும்.

•. தூர அளவை மாற்றியவாறு சில தடவைகள் விளையாட்டில் ஈடுபடுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| Activity Based Oral English | | |
|---|---|---|
| **13. Earth & Sky** | **Song** | **Useful Expressions** |
| 01. sky<br>02. sun<br>03. moon<br>04. stars<br>05. rainbow<br>06. wind<br>07. clouds<br>08. rain<br>09. river<br>10. hill<br>11. mountain<br>12. rain drops | Don`t throw rubbish everywhere.<br>Put them into a garbage pit.<br>Keep the classroom beautiful<br>Keep the school your beautiful<br>Keep Sri Lanka beautiful<br>Keep my country beautiful //<br><br>**Game**<br>You can see me in the sky at night<br>I am yellow and round.<br><br>Who am I?<br>*Moon / you are the moon.*<br><br>You can see me in the sky at day time.<br>I am orange, round and hot.<br>Who am I?<br>*Sun / you are the sun.* | 26. I have two eyes.<br>I have two ears.<br>I have one nose.<br>I have one mouth.<br>I have two hands.<br>I have two legs.<br>I have ten fingers.<br>I have ten toes.<br>Who am I? |

**அவசரத் தேவைகளுக்கான தொலைபேசி இலக்கங்கள்**

| | |
|---|---|
| மின்சாரத் தடங்கல் | - 1987 |
| பாதுகாப்புத் தொடர்பான | - 119 |
| சிறுவர் துஷ்பிரயோகம் | - 1929 |
| இடர் முகாமைத்துவம் | - 117 |
| போதைப்பொருள் பிரச்சினைகள் | - 1984 |
| அவசர அம்பியூலன்ஸ் சேவை | - 1990 |
| நீர் வழங்கல் தடை | - 1939 |
| இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு | - 1954 |
| கல்வி அமைச்சு | - 1988 |
| இலங்கை பரீட்சை திணைக்களம் | - 1911 |
| போக்குவரத்துத் திணைக்களம் | - 1955 |
| பெண்களுக்கு எதிரான வன்முறைகள் | - 1938 |
| சூழல் தொடர்பான பிரச்சினைகள் | - 1991 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு வினாக்கள்

**பயிற்சி**

**(01) தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 01. வேகமாக நடக்கலாம் | உக்கல் |
| 02. மண்ணின் மேற்படை | திசைக்காட்டி |
| 03. காற்று வீசும் திசை | புற்தரை |
| 04. உப்பு உற்பத்தி | ஊசித்துளைக் கமரா |
| 05. இயற்கை ஒளி | சூரிய ஒளி |
| 06. தலைக்கீழ் விம்பம் | சூரியன் |

**(02) பின்வருவனவற்றுள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

01. மணற் தரையில் ஒட்டகம் வேகமாக பயணிக்கும். ( )
02. இலங்கையின் மாவட்டங்கள் ஒன்பதாகும். ( )
03. மழை நீரைச் சேகரித்து வைப்பதற்கு குளங்கள் பெரிதும் உதவும். ( )
04. ஓடும் நீர் மண்ணரிப்பை உண்டாக்கும். ( )
05. மழைக்காலங்களில் கிளிகள் சத்தம் இடும் ( )
06. மண்ணை நீர் விட்டு குலுக்கியவுடன் அடியில் செல்வது பெருமணலாகும். ( )
07. களிமண் செந்நிறத்தில் காணப்படும். ( )
08. சுனாமி ஏற்படும் போது தாழ்நிலத்தை நோக்கிச் செல்வது பாதுகாப்பாகும். ( )

**(03) இடைவெளிக்கு பொருத்தமான சொல்லை எழுதுக.**

01. வடமாகாணத்தில் ........................................ மாவட்டம் உள்ளது.
02. ஊசித் துளைக்கமரா ஒன்றை செய்வதற்கு ........................................ தேவை.
03. பொருளொன்றை பார்வையிடுவதற்கு கண்மட்டுமன்றி ........................................ அவசியமாகும்.
04. உப்பு நீர் உப்புத்தூளாக மாறுவதற்கு ........................................ தேவையாகும்.
05. கடலில் நிலநடுக்கம் ஏற்படுவதால் ........................................ உருவாகும்.
06. தாவர வளர்ச்சிக்கு பெரிதும் உதவும் மண் ........................................ ஆகும்.
07. புவி தன்னைத்தானே சுற்றி வருவதால் ........................................ உண்டாகிறது.
08. மழைப் பெய்யப்போவதை ........................................ தெரியப்படுத்தும்.

ஒளியும், கிளிநொச்சி, சூரிய ஒளி, இருவாட்டி மண், இரவு பகல், ஈசல்கள், சுனாமி, இரண்டு பெட்டிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(04) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. மண்ணரிப்பு ஏற்படுவதில் பின்வரும் எச்செயல் செல்வாக்குச் செலுத்துகின்றது?

1) கான்களை வெட்டல் 2) மரங்களை வெட்டுதல்

3) புற்களை வளர்த்தல் 4) கல்வேலியை அமைத்தல்

02. துளைக் கமராவின் திரையைச் செய்யப்பயன்படுவது

1) நிறத்தாள் 2) வெள்ளை அட்டைத்தாள் துண்டு



3) வெள்ளைத் திசுத் தாள் 4) உலோகத் தகடு

03. இலங்கையில் ஒரு குறித்த பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. அப்பிரதேசத்திலிருந்து மக்களை விரைவாக வெளியேறுமாறு அறிவுறுத்துவதற்கு மிகவும் உகந்த ஊடகம்.

1) ஒலிபெருக்கி 2) தொலைபேசி

3) தொலைக்காட்சி 4) வானொலி

04. ஊசித்துளைக் கமராவின் ஊடாகத் தொலைவில் உள்ள ஒரு தென்னையைப் பார்க்கும் போது அது காணப்படும் விதம்

1)  2)  3)  4) 

05. தென்மாகாணத்தில் அமையப்பட்டுள்ள மாவட்டம் எது

1) கண்டி 2) காலி 3) களுத்துறை 4) கொழும்பு


06. மாவட்டங்களுள் விசாலமான மாவட்டம் எது

1) கண்டி 2) கொழும்பு 3) அநுராதபுரம் 4) அம்பாந்தோட்டை

07. மின்னல் ஏற்படும் சந்தர்ப்பத்தில் பாதுகாக்க மிகவும் உகந்த முறை

1) மரத்தின் கீழே நிற்றல் 2) நீரினுள் இருத்தல்

3) வீட்டில் கட்டிலின் மீது இருத்தல் 4) சமவெளியான நிலத்தில் உலாவுதல்

08. 

இவ்வுருவில் உள்ள உபகரணத்தைப் பயன்படுத்துவதன் மூலம்

1) காற்று வீசும் திசையை அறியலாம்.

2) காற்றின் கதியை அளக்கலாம்.

3) சுழிக்காற்றுப் பற்றி முன்கூட்டியே அறிவிக்கலாம்

4) வானிலை பற்றி முன்கூட்டியே அறிவிக்கலாம்

09. மாகாணங்களுள் சிறிய மாகாணம் எது

1) வடமத்திய மாகாணம் 2) ஊவா மாகாணம்

3) வடமேல் மாகாணம் 4) மேல் மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருப்பொருள் 14 எம்மால் செய்யக்கூடிய மாற்றங்கள்

## செயற்பாடு 01

◆. **வகுப்புச் சுற்றுப்புறத்தில் அண்மிய சில இடங்களை விருப்புக்குரிய இடங்களாக மாற்றுதல்**

- பின்வரும் இடங்களை அவதானித்து தகவல் சேகரிக்குக.
- வகுப்பறை உள், வெளிச் சூழல்
- வழிபாட்டிடம்
- பூம்பாத்தி
- நூலகம்
- போசனசாலை
- விளையாட்டுத்திடல்

அவ்வாறான இடங்கள்

- சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருப்பதால் மனநிலையில் ஏற்பட்ட உணர்வு
- அசுத்தமாகவும் நேர்த்தியின்றியும் இருப்பதால் மனதில் ஏற்பட்ட உணர்வு
- சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருக்கும் இடங்கள் மீது அனைவரது கவனமும் ஈர்க்கப்பட்ட விதத்தை கலந்துரையாடுக.
- ஒழுங்கின்றி, அசுத்தமாக இருக்கும் இடங்களை நேர்த்தியாக்குவதற்காக செய்யக்கூடியவை பற்றி கருத்துக்களை தெரிவித்தல்.
  - கூட்டிப் பெருக்குதல், கழுவுதல், சிலந்தி வலை, உடைந்த பொருட்கள் முதலியவற்றை அப்புறப்படுத்தல்
  - ஒழுங்குபடுத்தலும் பழுது பார்த்தலும்
  - குப்பைக் கூளங்களை வேறாக்கி குப்பைத் தொட்டியில் இடல்
  - ஒவ்வொருவரும் ஒழுங்காக, நேர்த்தியாக வேலை செய்தல்
  - அழகுபடுத்துவதற்குத் தேவையான பூஞ்செடிகள் / அழகியற்தாவரங்கள் / காய்கறிக்கன்றுகள் போன்றவற்றை வளர்த்தல்
  - அவ்வப்போது நீர் ஊற்றுதலும் பூண்டுகளை பிடுங்குதலும்
  - தமது சுயசுத்தம் தொடர்பாக சரியாக கவனம் செலுத்தும் போது சூழலின் சுத்தம மற்றும் ஒழுங்கு தொடர்பாகவும் கவனம் செலுத்திச் செயற்பட முடியும். என்பதை தெளிவுப்படுத்தல்.
  - தமது சுற்றுப்புறச் சூழலைச் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருப்பதால் ஈக்கள், நுளம்புகளால் ஏற்படும் தீங்குகளையும் சூழல் மாசடைவதையும் இல்லாமல் செய்வதோடு உடலுக்கும் உள்ளத்துக்கும் இதமான ஒரு சூழலில் வாழ எமக்கு வாய்ப்புக் கிடைக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 02

❖. **நேர்த்தியற்று காணப்படுகின்ற இடங்களை நேர்த்தியாக்குவதற்காக செய்யக்கூடிய வேலைத்திட்டம்**

- நாம் மாற்றி அமைக்கக்கூடிய இடங்கள் எவை என்பதை அறிதல்
- மாற்ற முடியாத இடங்கள் தொடர்பாக மாணவர்கள் கருத்து தெரிவித்த பின்னர் பின்வரும் செயற்பாட்டை முன்வைத்தல்.
- முதலில் சமமான தூரங்களில் அமையுமாறு கீழே படத்தில் காட்டியுள்ளவாறாக 9 புள்ளிகளை இட்டுக்கொள்ளுமாறு அறிவுறுத்துக.
- பென்சிலை அல்லது பேனாவைப் பயன்படுத்தி ஏதேனும் ஒரு புள்ளியில் ஆரம்பித்து, கையைத் தூக்காது ஒரு கோட்டின்மீது இரண்டு தடவைகள் பென்சிலைக் கொண்டுசெல்லாது ஒன்பது புள்ளிகளையும் நான்கு நேர்கோடுகளால் தொடுத்துக் காட்டுமாறு அறிவுறுத்துக.
- மாணவர் அப்புள்ளிகளை இணைத்துள்ள விதத்தை அவதானிக்குக.




- உரிய அறிவுறுத்தல்களின்படி புள்ளிகளைத் தொடுத்த மாணவரைப் பாராட்டுக. சரியாகத் தொடுக்க இடர்ப்படும் மாணவர்களுக்கு வழிகாட்டி விளக்கமளிக்குக.
- மாற்றங்களைச் செய்வதற்காக வரையறுக்கப்பட்ட ஒரு வரம்புக்குள் மாத்திரம் வரையறைப்பட்டு இருக்காது அவ்வரையறைக்கு அப்பாலும் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை - 2**

- **நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்குக் காரணமாகும் பிரதானமான விடயம் அதற்குப் பொருத்தமான ஒரு திட்டத்தைத் தயாரித்தல் ஆகும் என வலியுறுத்துக.**
- **அதற்காக, சிரமதான வேலைத்திட்டமொன்றைத் திட்டமிடுமாறு மாணவரை வழிப்படுத்துக.**

**சிரமதான வேலைத்திட்டம் ஒன்றை திட்டமிடுதல்.**

- பெற்றோர் கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்தல்
- சிரமதானம் செய்ய வேண்டிய இடங்களை தெரிவு செய்தல்
- அவ்விடங்களில் எவ்வாறான மாற்றங்களை செய்ய வேண்டும் என்பதை தீர்மானித்தல்
- தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளல்
- குறித்த ஒவ்வொரு இடத்திற்கும் குழுக்களை நியமித்தல்
- நேரத்தை வரையறை செய்தல்
- மாற்றங்களைக் கண்டு மகிழ்ச்சியடைதல்

**செயற்பாடு 03**

❖. **வகுப்பறையின் உள்ளேயும், வகுப்பறையின் வெளியேயும் மாற்றங்களை ஏற்படுத்தல்.**

- சுத்தம்
- தேவையற்றதை அப்புறப்படுத்தல்
- பாவனைப் பொருள்களையும் உபகரணங்களையும் உரிய இடங்களில் வைத்தல்
- அழகை மேம்படுத்தல்
- ஒழுங்குமுறைமையை / நேர்த்தியை மேம்படுத்தல்



நேர்த்தியற்ற வகுப்பறை



வகுப்பறையின் உட்புறத்தை தூய்மைப்படுத்தல்

- வெளிப்புறத் திட்டங்களையும் உட்புறத்திட்டங்களையும் வெவ்வேறாகக் கரும்பலகையில் காட்சிப்படுத்துக.
- யாதேனும் ஒன்றைச் தனியாகச் செய்வதை விட கூட்டாகச் செய்வதும் இலகுவானது. எனினும் அதை தொடர்ந்து பேணி வருவதற்கு அனைவரதும் பங்களிப்பும் அர்ப்பணிப்பும் உச்ச அளவில் கிடைப்பது அவசியமாகும்.
- இதன் போது மாணவர்களது கூட்டுணர்வு, மலர்ச்சி, மகிழ்ச்சி, அர்ப்பணிப்பு தொடர்பாக பாராட்டுக்களை வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 04


◆. **வகுப்பை அழகுபடுத்துவதற்காகச் சித்திரங்களை உள்ளடக்கிய ஆக்கமொன்றை தயாரித்தல்.**

●. சித்திரம் வரைவதற்காக :

- A4 அளவு வெள்ளைத்தாள்
- A4 அளவு காட்போட் துண்டு
- வர்ணம் தீட்டுவதற்குத் தேவையான பஸ்ரல் வர்ணக் குச்சிகள் அல்லது நீர் வர்ணம்

●. அலங்காரப் பின்னல் வேலைகளுக்காக :

- வெண்ணிறப் பசை, கத்தரிக்கோல், கறுப்ப நிற தடித்த நூல் (cord)1/2 மீற்றர்
- கறுப்பு, கடும் ஊதா, செம்மஞ்சள் 1/2 சென்றீமீற்றர் அகலமான ரிபன் 2 மீற்றர் வீதம் (சித்திரத்தின் நிறத்திற்கேற்ப கரை தெள்ளத் தெளிவாகக் காட்சியளிக்கும் வகையில் தேவையான நிறங்களைத் தெரிவு செய்து கொள்க)
- இரண்டு மீற்றர் நீளமாக மூன்று நிற ரிபன் நாடாக்களைச் சேர்த்து ஓர் அந்தத்தில் முடிச்சிடுக.
- பின்னர் தலைமுடி பின்னுவது போன்று பின்னி, இரண்டு மீற்றர் நீளமான (1/2அங்குல அகல) பின்னல் வேலைப்பாட்டைத் தயார்படுத்திக் கொள்க.
- A4 அளவுத் தாளில் காட்டுருச் சித்திரத்தைச் சுற்றிவர உள்ள 2 1/2 சென்ரிமீற்றர் பகுதி இடைவெளியில் மேலே தயாரித்த பின்னல் வேலைப்பாட்டை ஒட்டுக.
- ஆக்கத்தை A4 அளவு காட்போட் துண்டில் ஒட்டி, பொருத்தமான இடங்களில் இரண்டு சிறிய துளைகள் இட்டு நூல் கோர்த்து சுவரில் தொங்கவிடுக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 05

❖. **நாம் செய்யத்தக்க நேர் வகையான மாற்றங்கள் தொடர்பாக கலந்துரையாடல்**

- காலையில், நித்திரை விட்டெழுந்தவுடன் கட்டிலை ஒழுங்குபடுத்திய படுக்கையை / பாயை வைப்பதன் முக்கியத்துவம்
- அசுத்தமாகக் காணப்படும் வகுப்பறையைச் சுத்திகரித்து நேர்த்தியாக்குவதன் முக்கியத்துவம்
- உணவு உட்கொண்ட பின்னர் பாத்திரங்கள், தட்டங்களைக் கழுவிச் சுத்திகரித்து உரிய இடத்தில் வைத்தல்.
- களை - பூண்டுகள் வளர்ந்துள்ள ஒரு பாத்தியை நேர்த்தியாக்குதல்.'
- குப்பை - கூளங்களை உரியவாறு அப்புறப்படுத்தாமையால் ஈக்கள், நுளம்புகள் பெருகியுள்ள ஓர் இடத்தை நேர்த்தியான இடமாக மாற்றியமைத்தல்
- மாணவர்களது கருத்துக்களை அறிக்கைப்படுத்தல்.

- **நேர் வகையான மாற்றங்களின் முக்கியத்துவத்தை கலந்துரையாடல்**

- கட்டிலை நேர்த்தியாக்கும் போது சுத்தம் பேணப்படும், மகிழ்ச்சி ஏற்படும் பின்னர் சுகமான தூக்கம் கிடைக்கும்.
- வகுப்பறையை நேர்த்தியாக்குவதால் கற்பதில் ஆர்வம் ஏற்படும். மகிழ்ச்சியான கற்றல் சூழல் உண்டாகும்.
- உணவு உட்கொண்ட பாத்திரங்களை சுத்தப்படுத்தி உரிய இடத்தில் வைப்பதால் நோய்களில் இருந்து பாதுகாப்புப் பெறலாம்.
  - ஈக்கள் பெருகாது
  - பொருட்கள் உடையாது.
  - நேரம் வீண்விரயம் ஆகாது.
- களைப் பூண்டுகளை அப்புறப்படுத்துவதால் பயிர்களை நாசம் செய்யும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.
  - தோட்டம் அழகாகக் காட்சி தரும்.
  - மனதுக்கு மகிழ்ச்சி ஏற்படும்.
- குப்பைக்கூளங்களை உரியவாறு அகற்றுவதால் ஈக்கள், நுளம்புகள் பெருகுவதை இல்லாமல் செய்யலாம்.
  - துர்நாற்றம் வீசாது
  - ஈக்கள், நுளம்புகளால் பெருகும் நோய்களில் இருந்து பாதுகாப்பு பெறலாம்.
- **நேர் வகையான மாற்றங்களை நடித்துக் காட்டச்செய்தல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 06

- வகுப்பு மாணவரைச் சமமான சில குழுக்களாகப் பிரித்து, மாணவர் ஒவ்வொருவருக்கும் சிறிய ஒவ்வொரு காகிதக்கொடி வீதம் வழங்குக.
- பின்னர், ஏறத்தாழ 10 மீற்றர் எல்லையில் நின்று முன்னால் உள்ள ஓர் இடத்தில் தமது குழுவினர் தீர்மானித்த வடிவத்தை அமைத்துக்கொள்க. (வடிவத்தை அமைக்கும்போது கொடிகளுக்கு இடையே 60 சென்றி மீற்றர் (2 அடி) இடைவெளியிருப்பது அவசியமாகும்.)
- ஆசிரியர் சமிக்ஞை வழங்கிய பின்னர் தமது வரிசையில் உள்ள விளையாட்டு வீரர்கள் அனைவரும் குறித்த இடத்திற்கு ஓடிச்சென்று தாம் பிரேரித்துள்ள வடிவத்தை ஆக்கிய பின்னர் திரும்பி ஓடிவருதல் வேண்டும்.
- வடிவத்தைச் செய்து முடித்து மீண்டும் உரிய இடத்திற்குத் திரும்பி வந்த முதலாவது குழு வெற்றி பெற்ற குழுவாகும்.

| Activity Based Oral English | | |
|---|---|---|
| **14. Changes We Can Do**<br><br>01. clean<br>02. sweep<br>03. weed | **Song**<br>Keep your hair neat and clean<br>Neat and clean //<br>Keep your hair neat and clean<br>My dear friend<br>Wear your clothes tidy and clean.<br>tidy and clean//<br>Wear your clothes tidy and clean.<br>My dear friend<br>Cut your nails and keep them clean.<br>Keep them clean//<br>Cut your nails and keep them clean.<br>My dear friend.<br>Then you will become<br>healthy boys, healthy girls,<br>healthy boys<br>Then you will become healthy<br>girls.<br>My dear friend.<br>(London....tune)<br><br>**Game**<br>I help you to sweep the floor.<br>Who am I?<br>*Broom/ you are a broom.*<br><br>I help you to sweep the garden.<br>Who am I?<br>*Ekelbroom/ you are an ekel broom* | **Useful Expressions**<br><br>27. It has two eyes.<br>It has two ears.<br>It has one nose.<br>It has one mouth.<br>It has a bushy tail.<br>It has whiskers.<br>It has sharp teeth.<br>It has sharp nails.<br>It likes milk. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு வினாக்கள்

பயிற்சி

**(01) தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 01. சுத்தமும் நேர்த்தியும் இருத்தல் | சிறந்த திட்டம் வேண்டும் |
| 02. அசுத்தமாகவும் நேர்த்தியற்று இருத்தல் | மனதில் வெறுப்பு ஏற்படல் |
| 03. சுய சுத்தம் பேணுதல் | மனதில் மகிழ்ச்சி தோன்றுதல் |
| 04. சுற்றுப்புறச்சூழல் சுத்தம் | நுளம்புகள் கட்டுப்படுத்தல் |
| 05. நல்லதொரு மாற்றத்தைக் காண்பதற்கு | கௌரமாக வாழ முடியும் |

**(02) பின்வருவனவற்றுள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

01. வேலைகளை கூட்டாகச் செய்வது சிறந்தது. ( )
02. வேலைகள் இலகுவாக இருந்தாலும் தொடந்தும் அதனை பேணவேண்டும் ( )
03. வகுப்பறையை நேர்த்தியாக்குவதற்கு மாணவர்கலிடம் அர்ப்பணிப்புக் காணப்பட வேண்டும். ( )
04. நித்திரை விட்டெழுந்ததும் முதலில் தேநீர் அருந்த வேண்டும் ( )
05. குப்பைக்கூளங்களை அப்புறப்படுத்தினால் ஈக்கள் பெருகாது ( )
06. உணவு உட்கொண்ட பின்னர் பாத்திரங்களை சுத்தமாக வைப்பது நல்லது. ( )
07. அசுத்தமான வகுப்பறையை நேர்த்தியாக்குவது நல்ல மாற்றமொன்றின் அடையாளம். ( )
08. நூலகம் வருடாவருடம் புதுப்பிக்கப்பட வேண்டும். ( )

**(03) இடைவெளி நிரப்புக.**

01. மாற்றங்களை ஏற்படுத்தகூடிய இடங்களை முதலில் .................................. வேண்டும்.
02. ...........................தயாரிக்கும் போது வேலைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும்.
03. சூழலை சுத்தம் செய்யும் போது .................................. வளர்க்கப்படுதல் வேண்டும்.
04. ........................... பேணுபவர் சூழலின் ஒழுங்கையும் கவனிப்பார்.
05. .................................... செய்தால் மட்டும் போதாது அதனை தொடர்ந்து பேணவேண்டும்.

| |
|---|
| திட்டம், மாற்றங்கள், கண்டறிதல், சுய சுத்தம், பூஞ்செடிகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருப்பொருள் 15 மனிதனும் தகவல்களும்

## செயற்பாடு 01

### ❖. தொடர்பாடல் பற்றிய விளக்கத்தைப் பெறல்

- தொடர்பாடல் என்பது ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குத் தகவலைக் கடத்துவதாகும்.
  இது மொழியூடாகவே நடைபெறுகின்றது.
- பேச்சு, எழுத்து அல்லது குறியீடுகள் மூலம் செய்திகள், கருத்துக்கள், சிந்தனைகளின் பரிமாற்றம் அல்லது அறிவித்தல் தொடர்பு கொள்வதைக் குறிக்கிறது என்பதை விளக்குக.
- அதன் பின்னர், மனிதன் ஒரு தொடர்பாடும் விலங்கு. மனிதன் எப்போதும் குழுக்களாகவே வாழ விரும்புகிறான்.
- தனியாக வாழ விரும்புவதில்லை. குழுவாக வாழும்போது அங்கத்தவர்களிடையேயும் குழுக்களிடையேயும் தொடர்பாடல் செய்ய ஒரு முறை தேவைப்பட்டது.
- அதன் காரணமாகவே தொடர்பாடல் முறைகள் உதயமாகின.

### ●. பண்டைய தொடர்பாடல் முறைகள்

- அதிகால மனிதன் தொடர்பாடலை மேற்கொண்ட விதம்
  - அங்க அசைவுகள் / பேச்சு / வாய்மூலம்
  - கூக்குரலிடல்
  - முரசறைதல்
  - கொடியசைத்தல்
  - தீக்குவியல் மூட்டல்
  - பிராணிகள் மூலம் (குதிரை ஏவலாள், புறா, அன்னம் போன்ற பறவைகள்)
  - ஈட்டியில் செய்தியை இணைத்து அனுப்புதல்
- பின்வரும் விடயங்களை மாணவர்களுக்கு செய்து காட்ட வழிப்படுத்துக.

**01. அங்க அசைவுகள் மூலம் எவ்வாறு தொடர்பாடலை மேற்கொள்ளலாம்.**

- கண்களால் பேசுதல்
- கைகளால் அசைத்துக் காட்டுதல்
- வாய் அசைத்தல்
- முகபாவம் செய்தல்

**02. தீயை நெருப்பைப் பயன்படுத்தி எவ்வாறான தொடர்பாடலை மேற்கொண்டனர்**

- ஆபத்துகள் வரப்போவதை எச்சரித்துக்காட்டல்
- பாதுகாப்புப் பெறுவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 03. தொடர்பாடல் வளர்ச்சியுற்ற முறை

- பின்னைய காலங்களில் மெல்ல மெல்ல மொழிகள் விரிவாகத் தொடங்கின
- ஆரம்பத்தில் பேச்சு வடிவம் மட்டுமே பயன்பாட்டில் இருந்தது.
- காலத்தில் தேவை கருதி எழுத்து வடிவம் உருவாக்கப்பட்டது.

## செயற்பாடு 02

◆. படிமுறை - 1

- முகபாவத்தின் மூலம் எவ்வாறான உணர்வுகளை வெளிப்படுத்தலாம்.



மகிழ்ச்சி



சோகம்



கோபம்



சாந்தம்



வீரம்



வெறுப்பு



அச்சம்

- மாணவர்களை இருவர் இருவராக குழுக்களாக்கி உணர்வுகளைக் குழுவாக வகிபாகம் ஏற்று போலச் செய்துக் காட்ட வழிப்படுத்தல்.
- பட்டியல் படுத்திய உணர்வுகளை வகிபாகம் ஏற்று நடித்தல்களை செய்துகாட்ட வழிபடுத்தல்.

- பாவத்தின் மூலம் அங்க அசைவுகள் மட்டுமே வெளிப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பல்வேறு முகமூடிகளை உருவாக்கி அவற்றை அணிந்து உணர்வுகளை வெளிப்படுத்தல்.





## செயற்பாடு 03

- தொடர்பாடல் கூறுகள்
  1. அனுப்புபவர்
  2. ஊடகம்
  3. பெறுநர்
- தொடர்பாடலுக்குத் தேவையான முக்கிய கூறுகள்.

| அனுப்புபவர் | ஊடகம் | பெறுநர் |
|---|---|---|
| கடிதம் எழுதுபவர் | கடிதம் | கடிதத்தை பெறுபவர் |

- தொடர்பாடல் எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை அனுபவ ரீதியாகப் புரிந்துக்கொள்ளல்.
- மாணவர்களுக்கிடையில் கடிதங்களை எழுதி நண்பர்களின் முகவரிகளையும் எழுதி தபால் பெட்டியில் இட்டு கிடைக்கப் பெறும் கடிதங்களை வாசித்தல்.
- பின்வரும் செயற்பாட்டை நாடக வடிவில் போலச்செய்துக்காட்டல்.

கடிதம் எழுதுதல் ⟶ தபாற் கந்தோருக்குச் செல்லல் ⟶
முத்திரை வாங்குதல் ⟶ கடித உறைக்குள் கடிதத்தை இடல் ⟶
முத்திரை ஒட்டுதல் ⟶ தபாற்பெட்டிக்குள் இடல் ⟶
தபாற்காரர் கடிதங்களை தபாற் கந்தோருக்கு எடுத்துச் செல்லல் ⟶
தபால் விநியோகத்தர் கடிதங்களைப் பெற்று தெரிவு செய்து உரிய வீடுகளுக்குக் கடிதங்களைத் தெரிவுசெய்து உரிய முகவரிகளுக்கு / வீடுகளுக்கு விநியோகித்தல்

| | | |
|---|---|---|
| உள்நாட்டு சாதாரண கடிதம் ஒன்றுக்கான முத்திரை | - | ரூபா. 15.00 |
| உள்நாட்டு பதிவுத்தபால் | - | ரூபா. 45.00 |
| அஞ்சல் அட்டை | - | ரூபா. 10.00 |
| திறந்த கடிதத்துக்கான முத்திரை | - | ரூபா 12.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதங்களை இடுவதற்கான தபால் பெட்டிகளின் நிறங்கள்




உள்ளூர் தபால் - பச்சை

உள்நாட்டுத்தபால் - சிவப்பு

வெளிநாட்டுத்தபால் - நீலம்

## செயற்பாடு 04

- தன்னடக்கத்துடன் ஏனையோரின் கருத்துக்களை சகித்துத் தமது கருத்துக்களை முன்வைப்பதன் முக்கியத்துவம்.

1. குழுவாக செயற்படும் போது தமக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போது தமது கருத்துக்களை வெளியிடுதல்.
2. பிறரது கருத்துக்களை பொறுமையோடு செவிமடுத்தல்.
3. இடையில் குறுக்கிட்டு பேசுவதை தவிர்த்தல்.
4. தேவையான விடயத்தை மட்டுமே பேசுதல்.
5. இதனூடு இருவருக்குமிடையில் புரிந்துணர்வு ஏற்படும்.

❖. படிமுறை - 2

- இரு நண்பர்கள் உரையாடுகின்ற போது ஏககாலத்தில் இருவரும் தமது கருத்துக்களை கூறுவது தொடர்பாக ஓர் உரையாடலை மேற்கொள்ள செய்து அது சார்பான கருத்துக்களை கூறுவதற்கு வழி வகுத்தல்.

## செயற்பாடு 05

- நவீன கால தொடர்பாடல் முறைகள்
- மின்னஞ்சல் மூலம் எவ்வாறு தகவல்கள் படங்கள் பரிமாறலாம். என்பதை காட்டல்.
- மின்னஞ்சல் மூலம் கடிதங்கள் தயாரித்தல், மின்னஞ்சல் மூலம் கடிதங்கள் அனுப்புதல். படங்கள், ஒளிப்படங்கள் அனுப்புதல். இறுவட்டு, வீடியோக் காட்சிகள் மூலம் தகவல்களைத் தொடர்பாடுதல். குரல்வழி அஞ்சல் (Voice Mail) அனுப்புதல். என்பவற்றின் அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்தல்.
- மின்னஞ்சல் முறை மூலம் தகவல்களைப் பரிமாறல்
- சிறிய வீடியோக்கள் மூலம் தகவல்களைப் பரிமாறல். போன்ற அனுபவங்களை பெற்றுக்கொடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 06

- **தகவல்களை அறிந்துகொள்ளும் முறைகள்**
  - பத்திரிகை
  - வானொலி
  - தொலைக்காட்சி
  - கைப்பேசி , செல்லிடப்பேசி
  - கணினி , இணையம்
  - நூலகம் (நூல்கள் , சஞ்சிகைகள் )
- தகவல்கள் பெற்றுக் கொள்ளும் வழிகளைத் தமது அப்பியாசக் கொப்பியில் படங்கள் வரைந்து நிறந்தீட்டவும்.
- போலச்செய்தலின் ஊடாகத் தகவல்களை பெற்றுக்கொள்ளும் முறைகளை குழுவாக முன்வைத்தல்.
  - வானொலி - செய்தி வாசித்தல்
  - வானொலி - பத்திரிகைச் செய்தி வாசித்தல்
  - தொலைக்காட்சி - செய்தியறிக்கை
  - தொலைக்காட்சி - பத்திரிகைச் செய்தி

தொலைக்காட்சி - செய்திகள்
- விளையாட்டு
- மருத்துவம்
- சமையல்
- பொழுதுபோக்கு

(விளையாட்டு, மருத்துவம், சமையல், பொழுதுபோக்கு) நிகழ்ச்சிகள்

கைப்பேசி
- நண்பர்கள்
- உறவினர்
- அலுவலகத்தார்
- பெற்றோர்

கணினி , மடிக்கணினி, TAB
- செய்திகள்
- தகவல்கள் (மின்னஞ்சல்)
- படங்கள் ( ஒளிப்படங்கள்)
- காணொளிக் காட்சிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 07

- தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறைகளை குறித்துக் காட்டுதல்.

| கண் (கட்புலம்) | காது (செவிப்புலம்) | கண் - காது (கட்புல, செவிப்புல) |
|---|---|---|
| பத்திரிகை<br>.................................. | வானொலி<br>.......................................... | தொலைக்காட்சி<br>.......................................... |

அச்சு ஊடகங்கள் - பத்திரிகைகள் , நூல்கள், சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள்' கட்டுரைகள் , விளம்பரங்கள் , அறிவித்தல்கள்

இலத்திரனியல் ஊடகங்கள் - வானொலி , தொலைபேசி, தொலைநகல் , தொலைக்காட்சி, இணையம்.

- தொடர்பாடல் கருவிகளை தயாரித்து பாடல்களை முன் வைத்து பாடி, ஆடுதல்.

| | | |
|---|---|---|
| **15. Man & Information**<br>1. letter<br>2. newspapers<br>3. telephone<br>4. post | Song<br>Information where we find<br>Where we find//<br>Information where we find<br>My dear friend.<br>Newspapers –read ///<br>Newspapers –read /// my dear friend<br>Radio - listen to it ///<br>Radio - listen to it - my dear friend<br>Television – watch ///<br>Television – watch ///<br>But don't watch too much.<br>(London..tune) | Useful Expressions<br>28. What can you see? /<br>What can you see in this picture?<br>I can see a house. / a house, a cat.<br>29. What is in my hand?<br>a bag / an umbrella. |

**தகவல்களைப் பெற்றுக் கொள்ள உதவும் அரச நிறுவனங்கள்**

1. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (SLBC)
2. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் (SLRC)
3. ஸ்ரீ லங்கா டெலிகொம் (SLT)
4. இலங்கை தபால் திணைக்களம்
5. இலங்கை தகவல் திணைக்களம் - 1919 (DGI)
6. லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு வினாக்கள்

பயிற்சி

**(01) தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 01. பண்டய தொடர்பாடல் | திறன் பேசி |
| 02. நவீன தொடர்பாடல் | தொலைக்காட்சி |
| 03. பயத்தை காட்ட | பத்திரிகை |
| 04. இலத்திரனியல் ஊடகம் | கூக்குரலிடல் |
| 05. செவிப்புல ஊடகம் | வானொலி |
| 06. அச்சு ஊடகம் | முகபாவம் |

**(02) பின்வருவனவற்றுள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

01. மின்னஞ்சல் மூலம் ஒளிப்படங்கள் அனுப்பலாம் ( )
02. உள்நாட்டு சாதாரணக் கடிதம் ஒன்றிற்கான முத்திரை செலவு ரூபா.15.00 ஆகும்.( )
03. தகவல்களை அறிந்துக்கொள்வதற்கு பயன்மிக்க ஊடகம் நூல்களாகும். ( )
04. ஆதிகாலம் முதல் கொடி அசைத்தல் மூலம் தொடர்பாடலை மேற்கொண்டான்( )
05. முகபாவத்தின் மூலம் குறித்த விடயத்தை உணர்த்த முடியும். ( )
06. பலாப்பெத்தி அலங்காரம் நவீன காலத்திற்குரியதாகும். ( )
07. தொடர்பாடல் கூறுகள் நான்காகும். ( )
08. ஏககாலத்தில் கருத்துக்கள் கூறப்படுவது சிறந்தது. ( )

**(03) இடைவெளிக்கு பொருத்தமான சொல்லை எழுதுக.**

01. பத்திரிகை ........................................................ சாதனமாகும்.
02. உள்நாட்டு உள்ளூர் கடிதங்களை ................................ தபால் பெட்டியில் இடுவோம்.
03. முகபாவம் மூலம் மனித ........................................................ வெளிப்படுத்த முடியும்.
04. பண்டைக்காலத்தில் ஆபத்து ஏற்படுவதை .................................. மூலம் காட்டுவர்.
05. பண்டைய மக்கள் ........................................................ மூலம் கடிதங்களை அனுப்பினர்.
06. ........................................ மூலம் அதிகமானோர் பெரிதும் பயனடைவர்.

| தீக்குவியல் மூட்டல் , கட்புல , உணர்வுகளை , புறாவின் , பத்திரிகை , பச்சை நிற |
|---|

**(04) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. செவிப்புலன் மூலம் மாத்திரம் தகவல்களைப் பெறக்கூடிய இரண்டு தொடர்பாடல் ஊடகங்கள் எவை?

1) தொலைக்காட்சி, செய்திப்பத்திரிகை 2) வானொலி, ஒலிபெருக்கி
3) செய்திப்பத்திரிகை , ஒலிபெருக்கி 4) வானொலி, தொலைக்காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. எமக்கு தகவல்களை நேரடியாக வழங்கத்தக்க ஊடகம்.

1) பத்திரிகை 2) கையேடுகள் 3) வானொலி 4) அறிவித்தல்

03. வெளிநாட்டில் வசிக்கும் உமது பேனா நண்பன் தலதா பெரஹராப் படம் ஒன்றை இயன்ற வரை துரிதமாக அனுப்புமாறு உங்களிடம் கேட்டுக்கொண்டுள்ளான். இதற்காக நீங்கள் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை பின்வருவனவற்றுள் எது?

1) விமானத்தபால் 2) கடற்தபால் 3) கடுகதித்தபால் 4) மின்னஞ்சல்

04. அதிபர் ஒருவருக்குப் பாடசாலை வேளையின் போது அவசரக் கூட்டம் ஒன்றுக்காக ஆசிரியர்களையும் அனைத்து மாணவர்களையும் பிரதான மண்டபத்தில் ஒன்று கூட்டுவதற்கு அவசியமாக உள்ளது. பாடசாலையில் அனைத்து வசதிகளும் உள்ளதாயின், கூட்டத்திற்கு வருகை தருமாறு அனைவருக்கும் ஒரே தடவையில் அறிவித்தல் வழங்குவதற்கு அதிபர் பயன்படுத்தக்கூடிய தொடர்பாடல் ஊடகம் எது?

1) தொலைபேசி 2) கணனி 3) அறிவித்தல் பத்திரம் 4) ஒலிபெருக்கி

05. செவிகளின் ஊடாக மாத்திரம் தகவல்களைப் பெறுவதற்காக எமக்குத் தகவல்களை வழங்கும் ஊடகம்

1) வானொலி 2) செய்தித்தாள் 3) கணனி 4) தொலைக்காட்சி

06. தொடர்பாடலுக்குப் பயன்படுத்தும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்

1) வானொலி 2) தொலைக்காட்சி 3) செய்திப்பத்திரிகை 4) இணையம்

07. இந்நாட்டினுள்ளே பதிவு தபால் மூலம் கடிதத்தை அனுப்புவதற்க குறைந்த பட்சம் எவ்வளவு பெறுமானம் முடைய முத்திரை தேவைப்படும்.

1) ரூ.20.00 2) ரூ. 25.00 3) ரூ.45.00 4) ரூ. 35.00

08. இலங்கையில் ஒரு குறித்த பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. அப்பிரதேசத்திலிருந்து மக்களை விரைவாக வெளியேறுமாறு அறிவுறுத்துவதற்கு மிகவும் உகந்த ஊடகம்

1) ஒலிபெருக்கி 2) தொலைபேசி 3) தொலைக்காட்சி 4) வானொலி

09. ரூபா 15.00 முத்திரையை ஒட்டி அஞ்சலில் அனுப்ப வேண்டிய சாதாரண கடிதம் ஒன்றினைக் கடித உறையினை ஒட்டாது அஞ்சலில் அனுப்புவதற்கான முத்திரைக் கட்டணம் எவ்வளவு?

1) ரூபா. 10.00 2) ரூபா. 15.00 3) ரூபா. 20.00 4) ரூபா 25.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பதிவுத்தபால் ஒன்றை உள்நாட்டில் அனுப்புவதற்கு ஒட்டவேண்டிய முத்திரையின் பெறுமதி யாது?

1) ரூ. 45.00 2) ரூ. 35.00 3) ரூ.20.00 4) ரூ. 30.00

11. வெளிநாட்டுக் கடிதங்களை இடுவதற்கான தபால்பெட்டியின் நிறம்

1) பச்சை 2) சிவப்பு 3) நீலம் 4) கறுப்பு

12. பாதுகாப்பு விடயம் குறித்து பண்டைய மக்கள் ஏனையோருக்கு தெரிவித்த முறை?

1) நெருப்பெரித்தல் 2) பறையடித்தல் 3) கொடி அசைத்தல் 4) சங்கு ஊததல்

13. பின்வருவனவற்றுள் கட்புல, செவிப்புல சாதனம் எது?

1) வானொலி 2) சுவரொட்டி 3) கடிதம் 4) தொலைக்காட்சி

**(05) வினாக்களுக்கு விடை தருக.**

01. கடபுல ஊடகங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

1.............................................................. 2..............................................................

02. செவிப்புல ஊடகங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

1.............................................................. 2..............................................................

03. பண்டைய தொடர்பாடல் முறைகள் மூன்றைனை குறிப்பிடுக.

1.................................. 2..................................... 3. ..............................................

04. முகபாவனை மூலம் வெளிபடுத்ததக்க உணர்வுகள் மூன்றைக் குறிப்பிடுக.

1.................................. 2..................................... 3. ..............................................

05. தொடர்பாடல் கூறுகள் மூன்றை எழுதுக?

1.................................. 2..................................... 3. ..............................................

06. இணையத்துடன் தொடர்புடைய நவீன கால தொடர்பாடல் முறைகள் இரண்டு தருக.

1.............................................................. 2..............................................................

07. தகவல்களை பெற்றுத்தரும் அச்சு ஊடகங்கள் இரண்டு தருக?

1.............................................................. 2..............................................................

08. இலத்திரனியல் ஊடகங்கள் இரண்டு தருக,?

1.............................................................. 2..............................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருப்பொருள் 16 எமது பண்டைய தகவல்கள்


### செயற்பாடு 01

❖. **இலங்கையில் பிரபல்யம் வாய்ந்த வரலாற்று முக்கியத்துவம் உள்ள இடங்கள் (அவற்றின் தகவல் திரட்டல்.)**

- அவற்றின் பெறுமானத்தையும் வரலாற்று முக்கியத்துவத்தையும் பின்வரும் விடயங்களினூடாகக் கலந்துரையாடல்.
  - வரலாற்றுக் கதைகள்
  - கட்டப்பட்ட , ஆட்சிக்காலம்
  - அரசர்களின் அனுசரணை
  - கிடைத்த நன்மைகளும் முக்கியத்துவமும்
  - தகவல்களை உறுதிப்படுத்துவதற்கான சான்றாதாரங்கள்

யாழ்ப்பாணக் கோட்டை


நுழைவாயில்


தூக்கிலிடும் இடம்

யாழ்ப்பாணக் கோட்டை என்பது யாழ்ப்பாணத்தை ஐரோப்பியக் குடியேற்றவாத ஆட்சியாளர்கள் ஆண்ட காலத்தில் கட்டப்பட்ட கோட்டையாகும். முதலில் போத்துக்கீசரால் அமைக்கப்பட்ட இக் கோட்டை பின்னர் ஒல்லாந்தரால் இடித்து மீளவும் கட்டப்பட்டது. 1980களின் இறுதிக்காலம் வரை நல்ல நிலையில் இருந்த இக் கோட்டை பின்னர் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் தாக்கத்தால் சிதைவடைந்த நிலையில் இருந்தது. 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒல்லாந்து அரசின் உதவியுடன் திருத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண அரசு 1619 இல் போத்துக்கீசரின் நேரடி ஆட்சியின் கீழ் வந்ததும், தலைநகரத்தை நல்லூரிலிருந்து அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு மாற்றினர். கோட்டையின் கட்டிடவேலை 1625 ஆம் ஆண்டிலேயே ஆரம்பமானது.

இது கிட்டத்தட்டச் சதுர வடிவமானது. நான்கு மூலைகளிலும் அமைந்த காவலரண்களுடன், ஒவ்வொரு பக்கச் சுவர்களின் மத்தியிலும் அரைவட்ட வடிவிலமைந்த அரண்களும் இருந்தன. கோட்டைக்குள்ளே கத்தோலிக்கத் தேவாலயமொன்றும், கப்டன் மேஜரின் வீடும், வைத்தியசாலையொன்றும் மேலும் சில முக்கியமான கட்டிடங்களும் இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலிக் கோட்டை



காலிக் கோட்டை (Galle Fort) என்பது இலங்கையின் தென்மேற்கு கடற்கரையில் காலிக் குடாவில் அமைந்துள்ள கோட்டை. இது 1588 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரால் முதலில் கட்டப்பட்டு, பின்னர் ஒல்லாந்தரால் 1649 ஆம் ஆண்டுக்குப் பின்னான காலப்பகுதியில் அரணாக்கப்பட்டது. இது ஓர் வரலாற்று, தொல்லியல், கட்டடவியல் மரபுரிமை நினைவுச் சின்னமாகும்.

## சிகிரியா



சிகிரியா இலங்கையின் இணையற்ற கலைப் பாரம்பரியத்தின் சின்னமாகக் கருதப்படுகிறது. இது மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள நகரத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது. 1144-அடி உயரமான இக்குன்றினுள் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சித்திரங்கள் பல உள்ளன. இவை 6-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே இக் கோட்டையை முதலாம் காசியப்பன் (கி.பி. 477-495) அமைத்தான். கோட்டையை சுற்றி அகழியும் கட்டப்பட்டுள்ளது. சிகிரியா குன்றானது ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தால் பாதுகாக்கப்படவேண்டிய உலக பாரம்பரியக் களமாக அறிவிக்கப்பட்டுள்ளது

## பராக்கிரம சமுத்திரம்



பராக்கிரம சமுத்திரம் (அல்லது மன்னர் பராக்கிரம கடல் அல்லது பராக்கிரமபாகுவின் கடல்) என்பது ஒரு ஆழமற்ற நீர்த்தேக்கம் ஆகும். இவ் வாவி இலங்கையின் பொலன்னறுவையில் காணப்படுகின்றது. குறுகிய தடங்களால் இணைக்கப்பட்ட ஐந்து தனித்தனி நீர்த்தேக்கங்களை (தோபா, தும்புட்டுலு, எபா, ஏரம்பது வாவி) கொண்டுள்ளது. கி.பி 386 இல் கட்டப்பட்ட தோப்ப வெவ (சிங்களத்தில் வெவ ஸ்ரீ ஏரி அல்லது நீர்த்தேக்கம்) என்று வடக்கே நீர்த்தேக்கம் குறிப்பிடப்படுகிறது. நடுத்தர பிரிவு எரமுடு வெவா மற்றும் தெற்குப் பகுதி, மிக உயர்ந்த உயரத்தில், தும்புட்டுலு வெவ, இரு பிரிவுகளும் சேர்க்கப்பட்டு, பராக்கிரமபாகு I மன்னரின் ஆட்சிக் காலத்தில் நீர்த்தேக்கம் விரிவடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்னேரியா குளம்



மகாசேனன் மன்னனால் கி.மு.275 முதல் 301 வரையான காலப்பகுதிக்குள் கட்டப்பட்டது. இது பொலன்னறுவை மாவட்டத்தின் மின்னேரியா என்ற இடத்தில் அமைந்துள்ளது.

மின்னேரியாக் குளம் பிரதேச மக்கள் முகம் கொடுக்கின்ற காலநிலை மாற்றங்களையும் இயற்கை கஷ்டங்களையும் தவிர்த்துக் கொள்வதற்காக உருவாக்கப்பட்ட வெற்றிகரமான ஒரு படைப்பு என ஆளுநர் ஹென்றி வோர்ட் ஒரு முறை குறிப்பிடுள்ளார். மின்னேரியா வாவியை தழுவி புனையப்பட்ட சுவாரஷ்யமான நாட்டார் கதைகள் பல இருக்கின்றன. இக்குளத்தைக் கட்டுவித்து தமக்கு உதவிய மன்னருக்கு தமது நன்றியைத் தெரிவிக்குமுகமாக மக்கள் மகாசேன மன்னரை தெய்வ நிலையில் வைத்து "மின்னேரிய தெய்வம்" என பூஜைகளை நடத்துகின்றனர்.

## பசபக்குளம்



இலங்கையில் கட்டப்பட்ட முதலாவது குளமாகும். இதனை கி.மு. 437-367 வரை ஆட்சிப்புரிந்த பண்டுகாபய மன்னனால் கட்டப்பட்டது. இது வடமத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ளது. பசவக்குளத்தை அபயவாவி என்றும் அழைக்கப்படும்.

## இரணைமடுக்குளம்



வடமாகாணத்தில் முக்கியத்துவம் பெறும் குளமாகக் காணப்படுகிறது. இது கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்தள்ளது. கனடா- பிரித்தானிய அதிகாரியான சேர் ஹென்றிபாட் 1885 இல் அப்போதைய பிரித்தானிய அரச அதிபர் டேக்கிற்கு இரணைமடு நீர்தேக்கத்தை அமைக்கும் ஆலோசனையை முன்வைத்தார். இரணை மடுக்குளம் இலங்கையின் வட மாகாணத்தில் உள்ள மிகப்பெரிய பெரிய நீர்த்தேக்கம் ஆகும். இரணைமடு என்ற பெயர் அது இயற்கையாக கனகராயன் ஆறு பண்டைக்காலத்தில் இரு குளங்களாக இருந்ததன் அடிப்படையில் வந்தது. மடு என்பது நீர்த்தேக்கம். சிறந்த ஒரு வண்டல் வெளியான இரணைமடுப் படுக்கை தொல்லியல் மையமாகவும் உள்ளது. 3000 ஆண்டுகள் தொன்மையான தொல்பொருட்களும் இரணைமடு படுக்கையில் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவர்களைச் சில குழுக்களாகப் பிரித்து பின்வரும் தகவல்களை வெவ்வேறு முறைகளில் அறிக்கைப்படுத்த விடல்.
    1. ஆவணங்கள் தயாரித்தல்
    2. படங்கள், ஒளிப்படங்கள், வீடியோ பதிவுகளை பயன்படுத்தி மாதிரி உருக்களை ஆக்குதல்.
    3. தேடிப்பெற்ற தகவல்களுள் மனதைக் கவர்ந்த சந்தர்ப்பத்தை வகிபாகம் ஏற்று நடிக்கவிடல்.
    4. பாடல்கள், கவிதைகள் பாடுதல்
    5. பார்த்த சில இடங்கள் பற்றிய தகவல்களைச் சித்திரமாக வரைதல்.
- நகரச்சிறப்புகளை கூறும் பாடல்களைப் பாடுதல்.

**கொழும்பு நகரம்**

கொழும்பு நகரம் கோல நகரம்
கொள்ளை அழகு கொண்ட நகரம்

கட்டங்கள் நிறைந்த நகரம்
கூடி மக்கள் வாழும் நகரம்

அங்காடிகள் செறிந்த நகரம்
அகன்ற வீதிகள் பரந்த நகரம்

பரபரப்பாக இயங்கும் நகரம்
போக்குவரத்து மிகுந்த நகரம்

சுற்றுப் பயணி நாடும் நகரம்
சுற்றிப் பார்க்க நல்ல நகரம்

தாமரைக் கோபுரம் எழுந்த நகரம்
தடாக அரங்கு மலர்ந்த நகரம்

துறைமுகம் ஒன்று உள்ள நகரம்
துறைமுக பதியாகும் நகரம்

- தமது பிரதேசத்தில் வரலாற்று முக்கியத்துவம் உள்ள ஓர் இடத்தைச் பார்வையிட சென்று அவ்விடத்தில் இருந்து பெற்ற தகவல்களை முன் வைக்க சந்தர்ப்பம் அளிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 02

❖. தமது பிரதேசத்தில் உள்ள பெரிதும் பழைமைவாய்ந்த வரலாற்று முக்கியத்துவம் உள்ள சூழல் சார்ந்த முக்கியத்துவம் உள்ள இடங்களையும், தாவரங்களையும் பற்றிய தகவல்களைச் சேகரித்து ஓர் அறிக்கையை முன்வைக்க சந்தர்ப்பம் அளிக்க.


### 1. இலங்கையில் நாட்டப்பட்ட முதலாவது தேயிலைச்செடி





லூல்கந்துரை பெருந்தோட்டம் தேயிலை வளர்ப்பிற்கான ஆர்வத்தைக் கொண்டிருந்தது. பெருந்தோட்டத்துக்கு வந்திருந்த ஜேம்ஸ் டெய்ளர் 1867 தேயிலைப் பயிரிட்டார். மொத்தம் 19 ஏக்கர் நிலத்தில் தேயிலை பயிரிடப்பட்டது. வட இந்தியாவில் தேயிலை வளர்ப்பு, தேயிலை உற்பத்தி போன்றவற்றில் அனுபவம் பெற்றிருந்த டெய்ளர், தனது வீட்டின் முன்னறையில் உற்பத்தி தொடர்பான பல சோதனைகளைச் செய்தார்.

### மன்னார் பெருக்கமரம்




பெருக்க மரம் (Baobab, பாவோபாப்) என்பது அடன்சோனியா (Adansonia) எனப்படும் பேரினத்தைச் சேர்ந்த மரமாகும். பெருக்க மரத்தில் ஒன்பது இனங்கள் உள்ளன. அதில் ஆறு இனங்கள் மடககசுருக்குச் சொந்தமானவை. இரண்டு இனங்கள் ஆப்பிரிக்காவுக்கும் அரேபிய தீபகற்பத்திற்கும், இன்னொன்று ஆத்திரேலி யாவிற்கும் சொந்தமானதாகும். இது ஐந்து முதல் முப்பது மீட்டர் உயரத்திற்கு வளரக்கூடியது. ஏழு முதல் பதினொரு மீட்டர் விட்டம் கொண்டது. பெருக்க மரங்கள் தமது உடற்பகுதியில் சுமார் 120000 லீட்டர் நீரை சேமித்து வைக்கக்கூடியது. இந்த இசைவாக்கம் கடுமையான வறட்சியை தாங்குவதற்காகும். பாவோபாப் மரங்கள் அராபிய வணிகர்களால் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டன. இலங்கையில் இம்மரங்கள் இரண்டு உள்ளன. ஒன்று மன்னாரிலும், மற்றையது நெடுந்தீவிலும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரிட்டிகல - கந்தை



ரிட்டிகல மலை இலங்கையின் வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரத்தில் அமைந்துள்ளது. அநுராதபுரத்திலிருந்து தென்கிழக்குத் திசையில் 40கி.மீ தொலைவில் உள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து 765 மீற்றர்(2513அடி) உயரமான மலையாகும். இம்மலைத் தொடர் 3 மைல் நீளமும் அதன் அகலம் கூடிய இடத்தில் 2 மைல் அகலத்தையும் கொண்டது. இம் மலை செறிவான காட்டினால் மூடப்பட்டுள்ளது. இக்காட்டில் யானைகள், சிறுத்தைகள், கரடிகள் உட்பட பல விலங்குகள் காணப்படுகின்றன. மலையில் மேற்பகுதிகளில் பல அரிய தாவரங்கள் காணப்படுகின்றன. மல்வத்து ஓயா ஆற்றின் நீரேந்து பகுதியாக இம் மலை காணப்படுகிறது



அம்பலம்



ஒப்பநாயக்க பெருங்கொடி



கபலித்தாவை புளியமரம்



கேப்டன் டோசன் கோபுரம்

### நாக மரப் பூங்கா.



நாக மரப் பூங்கா வடமத்திய மகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் அமையப் பெற்றுள்ளது. இது உள்பத்தகம எனும் இடத்தில் அமைந்துள்ளது. இது 269 ஏக்கர் பரப்புக் கொண்ட நாக மரங்களைக் கொண்ட காடாகும். இங்கு காணப்படும் இளஞ்சிவப்பு படிகக்கல் மலை 550 மில்லியன் வருடங்கள் பழைமை மிக்கதாகக் கருதப்படுகிறது.

- **வரலாற்று முக்கியத்துவமுள்ள இடங்கள் மற்றும் தவரங்களை பாதுகாப்பதன் முக்கியத்துவம்.**

1. ஞாபகச் சின்னமாக அவற்றின் மீது கிறுக்குதல்.
2. கழிவுப்பொருள்களைக் கொட்டுதல்
3. தொட்டுப்பார்த்தல் மற்றும் சுற்றுப்புறத்தில் உள்ள தாவரங்களை, இலைகளை ஒடித்தல் போன்றவற்றைத் தவிர்த்தல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 03

❖. நாட்டின் நற்பெயரைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச்செய்த சிலரது சரிதத்தை கற்றாய்தல்

### கலாநிதி ஆனந்த குமாரசுவாமி



கலாநிதி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் 1877 ஆகஸ்ட் 22 ஆந்திகதி கொழும்பு கொள்ளுப்பிட்டியில் பிறந்தார். அவர் தரமிக்க நூல்களையும் ஆக்கங்கலையும் எழுதியுள்ளார். அவை 500 இற்கும் மேற்பட்டவை. தமிழ், ஆங்கிலம் பிரஞ்சு , ஜேரம்ன், லத்தீன், கிரேக்கம், சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தார். சட்ட அறிஞராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் திறமை காட்டினார். பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கும் இந்து சமய நூல்களை தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்த்தார். இவர் லண்டன் வைக்லி·்ப் கல்லூரியில் கல்வி பயின்றார். இலங்கையின் மலைகளும் காரியமும் எனும் பருவ இதழ் அவரது முதலாவது எழுத்தாக்கமாகும். 1905 இல் இலங்கை சமூக சீர்த்திருத்த சங்கத்தைத் தொடங்கிய குமாரசுவாமி, சிலோன் நஷனல் ரிவீவ் (CeylonNational Review) எனும் சஞ்சிகையின் ஆரம்பகால பிரதம ஆசிரியரும் ஆவார். இலங்கைத் திருநாடு, உலகுக்கு அளித்த பிரதானமான ஒரு தத்துவஞானி கலாநிதி ஆனந்த குமாரசுவாமி ஆவார். கீழைத்தேயப் படைப்புகளைக் காக்கும் பொறுப்பை ஏற்றிருந்த இவரது ஆக்கங்களின் கையெழுத்துப் பிரதிகள் இன்றும் கூட அமெரிக்காவில் பொஸ்டன் லலிதக் கலைகள் அரும்பொருட்காட்சிசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. மத்திய கால சிங்களக் கலை, இந்திய - இந்தோனேசிய கலை வரலாறு, தேசிய எதிர்பார்ப்புகள் போன்றவை இவரால் எழுதப்பட்ட சில அரிய நூல்களாகும். இவர் 1947 செப்டெம்பர் 09 ஆந் திகதி அமெரிக்காவில் பொஸ்டன் நகரில் இவ்வுலகைவிட்டு மறைந்தார்.

### கலாநிதி ரீ.பீ. ஜாயா



1890 ஜனவரி 01 ஆந் திகதி கண்டி, கலகெதரைப் பிரதேசத்தில் பிறந்த துவான் புர்ஹானுத்தீன் ஜாயா அவர்களின் இளமைக் காலம் கிராமப் பிள்ளைகளுடன் எளிமையாகக் கழிந்தது. இவர் கொட்டாஞ்சேனை சென் போல்ஸ் கல்லூரியிலும் பின்னர் சென் தோமஸ் கல்லூரியிலும் கல்வி பயின்றார். 1910 ஆம் ஆண்டில் கண்டி தர்மராஜ கல்லூரியில் ஆசிரியராகப் பதவியேற்ற இவர் லத்தீன், கிரேக்கம், பொருளியல், வரலாறு போன்ற பாடங்களினூடாக மாணவரது மனதில் வீரம், ஆளுமை, நாட்டுப்பற்று போன்றவற்றை ஏற்படுத்தும் வகையில் கற்பித்தலில் ஈடுபட்டார்.1917 இல் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்தில் நாட்டைப் பொறுப்பேற்க உதவும் வகையில் பூரணமான கல்வியை மாணவர்களுக்கு வழங்கினார். 1921 இல் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி அதிபராகப் பதவியேற்றார். அக்காலத்தில் ஹைரியா பெண்கள் பாடசாலை, டென்ஹாம் ஆங்கிலப் பாடசாலை ஆகியவற்றைத் தாபித்தவரும் இவரே. அளுத்கமை, கம்பளை, புத்தளம், மாத்தளை ஆகிய நகரங்களில் ஸாஹிராக் கல்லூரிகளையும் அளுத்கமை, அட்டாளைசேனை ஆகிய நகரங்களில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளையும் ஆரம்பித்தார். தேசியக் கொடிக் கமிட்டி, தேசிய கீதக் கமிட்டி ஆகியவற்றில் அங்கத்தவராக இருந்து செயற்பட்டார். 1960 மே 3 ஆந் திகதி புனித ஹஜ் கடமை நிறைவேற்றச் சென்றபோது மக்கா நகரில் இறையடி சேர்ந்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாநிதி சி. டபிள்யு. டபிள்யு கன்னங்கரா**



இலவசக் கல்வியின் தந்தை எனப் போற்றப்படும் கலாநிதி கிறிஸ்டோபர் வில்லியம் விஜேகோன் கன்னங்கரா புகழ்பூத்த கல்வியியலாளரும் தேசிய வீரருமாவார். இவர் 1894 ஒக்டோபர் 18 ஆந் திகதி பிறந்தார். கலாநிதி கன்னங்கரா அவர்கள் பாரத தேசத்தில் பிறந்திருப்பாரானால் அவர் ஒரு தெய்வம் போன்று போற்றப்பட்டிருப்பார் என 1945 இல் இலங்கையில் இருந்த இந்தியப் பிரதிநிதி திரு. எம்.எஸ். அனே கூறியுள்ளார். அம்பலாங்கொடை வெஸ்லியன் கல்லூரி, காலி ரிச்மண்ட் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்ற அவர் பிரித்தானிய ஏகாதிபத்திய நாடுகளில் மிகச் சிறந்த மாணவருக்குரிய பரிசையும் பெற்றார். ரிச்மண்ட் கல்லூரி ஆசிரியராகத் தனது வாழ்க்கையைத் தொடங்கிய இவர் மொரட்டுவை வேலஸ் குமார வித்தியாலயம், கொழும்பு வெஸ்லி கல்லூரி ஆகியவற்றிலும் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். 1931 தொடக்கம் 1946 வரையில் இலங்கையில் கல்வி அமைச்சராக அளப்பரிய சேவை ஆற்றியுள்ளார். முதலாந் தரம் தொடக்கம் பல்கலைக்கழகம் வரையில் இலவசக் கல்வி வழங்குதல், தாய்மொழியைக் கல்வி ஊடக மொழியாக்குதல், பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றல், மத்திய மகா வித்தியாலயங்கள் ஆரம்பித்தல், ஒவ்வொரு பிள்ளைக்கும் தமது பெற்றோரின் சமயத்தைக் கற்பித்தல், குறைந்த வருமானமுடைய குடும்பங்க் ளைச் சேர்ந்த பிள்ளைகளுக்குப் புலமைப்பரிசில் வழங்குதல், பொதுவான பாடத்திட்டம் தயாரித்தல், பாட வெளிவேலைகளை ஒழுங்கு செய்தல், பாடசாலைகளுக்கு விளையாட்டு மைதானங்களை அமைத்து கொடுத்தல் இசை, நடனம், மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் ஆகியவற்றைக் கற்க வாய்ப்பளித்தல், இரண்டாம் தரம் முதல் ஆங்கிலப் பாடம் கற்பதை கட்டாயமாக்கல் போன்றவை அவர் ஆற்றிய சேவைகளுள் முக்கியமானவை ஆகும். இந்த மறுசீரமைப்புகள் காரணமாக, இலங்கைக் கல்வியில் புதிய திருப்பம் ஏற்பட்டது. அக்காலப்பகுதியில் ஆசியாவில் மிக அபிவிருத்தியடைந்த நாடு எனும் நிலையை இலங்கை அடைந்தது. வெளிநாட்டவரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த ஒரு காலகட்டமாக இருந்த போதிலும் இலங்கையின் கல்விக்கோலத்தை மாற்றியமைப்பதற்காகத் தோள் கொடுத்த கலாநிதி சி. டபிள்யு . டபிள்யு கன்னங்கரா அவரக்ள் சிறந்த கல்விமானும் தேசிய வீரருமாவார். இதனாலேயே இவர் இலவசக் கல்வியின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.



**ஆதர் சி. கிளாக்**

இவர் இங்கிலாந்தின் தெற்குப் பகுதியில் ஸமர்செற் பிராந்தியத்தில் மயின்ஹெச் நகரில் 1917 டிசெம்பர் 16 ஆந் திகதி பிறந்தார். இவர் ஒரு விஞ்ஞானியும் சிறந்த எழுத்தாளருமாவார். இவர் 1945 இல் வயர்லெஸ் வெர்லட் (Wireless world) எனும் சஞ்சிகையில் வெளியிட்ட ஒரு கட்டுரை காரணமாகப் பிரபல்யமடைந்தார். தரையிலிருந்து வானில் செய்மதிகளை அனுப்ப முடியும் எனவும் அச்செய்மதிகளைப் பயன்படுத்தி செய்திப் பரிமாற்ற முறையொன்றினை உருவாக்க முடியும் எனவும் அவர் அக்கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். இவர் 1956 இல் இலங்கையில் குடியேறினார். மொரட்டுவை பல்கலைக்கழக வேந்தராகவும் இங்கிலாந்து அரச வானியலாளர் கழக அங்கத்தவராகவும் பணியாற்றினார். இவருக்கு 38 பட்டங்களும் விருதுகளும் கிடைத்துள்ளன. நையிற் பதவியும் இவருக்குக் கிடைத்துள்ளது. தனது 90 ஆம் வயதில் 2008 மார்ச் 19 ஆந் திகதி இலங்கையில் உயிர் நீத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கர்னல் ஹென்றி ஸ்டீல் ஆல்காட்**



கர்னல் ஹென்றி ஸ்டீல் ஆல்காட் ஆகஸ்ட் 2,1832- பெப்ரவரி 17,1907) பல முகங்கள் கொண்ட இவர் ஒரு அமெரிக்க இராணுவ அதிகாரி, பத்திரிகையாளர், வழக்கறிஞர் மட்டுமல்லாது இவர் பிரம்மஞான சபையின் (தியோசாபிகல் குழுமம்) நிறுவனர்களின் ஒருவராவார்.

மேலும் இவரே இந்த குழுமத்தின் முதல் தலைவரும் ஆவார் .ஐரோப்பிய வேர்களை கொண்ட பிரபலங்களில் முதன் முதலாக முறையாக பௌத்தத்திற்கு மாறிய பெருமை இவரையே சாரும். மேலும் பிரம்மஞான சங்கத்தின் தலைவராக இவர் மிக சிறப்பாக பணியாற்றி பௌத்த மத கூறுகளை புரிந்துகொள்வதில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்தினார்.

மேற்குலக பார்வையில் பௌத்தத்தை முன்னிறுத்திய இவர் ஒரு நவீன பௌத்த அறிஞராக கருதப்படுகிறார். இலங்கையில் பௌத்தத்தை மறு சீரமைப்பதில் இவருடைய பங்கு முக்கியமானது.

இன்றைய இலங்கையின் மத, கலாசார, தேசிய பண்புகளை மறுநிர்மாணம் செய்தவர் என்றும் இலங்கையின் விடுதலைப் போராட்டத்தின் நாயகர்களில் ஒருவர் என்றும் இன்றும் இலங்கையில் இவரின் பால் பெரும் மரியாதையோடு இருக்கின்றனர். மேலும் சில தீவிர விசுவாசிகள் இவரை போதிசத்துவர்களில் ஒருவர் என்றும் நம்புகிறார்கள்.

**டபிள்யூ. டி. அமரதேவா**




டபிள்யூ. டி. அமரதேவா டிசம்பர் 5, 1927 - நவம்பர் 3, 2016) இலங்கையின் சிங்கள மொழிப் பாடகரும், இசையமைப்பாளரும் ஆவார். பிலிப்பீன்சின் ரமோன் மெக்சைசே விருது (2001), இந்திய அரசின் அதி உயர் விருதுகளில் ஒன்றாகிய பத்மசிறீ விருது (1986), இலங்கை அரசின் கலாகீர்த்தி (1986), தேசமான்ய (1998) ஆகிய விருதுகளும் இவரின் திறமைகளுக்கு கிடைத்த விருதுகள் ஆகும்.

எலிசபெத் மகாராணியாரின் வேண்டுகோளை அடுத்து 1972 ஆம் ஆண்டில் மாலைத்தீவுகள் நாட்டுமண்ணிற்கு இசை அமைத்துக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வண. எஸ். மஹிந்த தேரர்**

திபெத் நாட்டில் சீக்கிம் பிராந்தியத்தில் பிறந்த எஸ்.கே. தசினம்கல் 1914 இல் தனது 12 ஆம் வயதில் கொழும்பு வித்யோதய பிரிவெனாவில் சேர்ந்து பாளி, சிங்களம், சமஸ்கிருதம் ஆகியவற்றைக் கற்றார். ஆங்கில மகாபோதி வித்தியாலயத்திலும் பொஸ்கஸ்துவை ஆராமயாவிலும் கீழைத்தேய மொழிகளைக் கற்றார். ரத்கமை, வண.சிரிசூலசுமன அவர்களின் மாணவர்கள் தெடர்ந்துவை சைலபிப்பாராமையில் சீக்கிம் மஹிந்த எனும் பெயரில் துறவறம் பூண்டார். இவர் 1934 - 1936 வரையிலான காலத்துள் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் சிங்களம், பாளி, பௌத்த சமயம் ஆகிய பாடங்கள் கற்பித்தார். பன்சாலை, கிராமம ஆகியவற்றுக்காக அரும்பணியாற்றினார். இவர் நவ லங்கா சமய பாடசாலை, ஆங்கிலப் பாடசாலை ஆகியவற்றை ஆரம்பித்தார். மேலும் அப்பிரதேச சத்தரபேறுவ கிராமங்களிலிருந்து மருந்து மூலிகைகளைச் சேகரித்து இலவச மருந்துச்சாலை ஒன்றினைத் தாபித்தார். மக்கள் மாட்டிறைச்சி உண்பதைத் தவிர்ப்பதற்க்காக அரும்பாடுபட்டார். இவர் பாணந்துறை, தொடட் கமுவை உபசம்பதா பிக்குகள் சபையின் பதிவாளராகவும் செயறபட்டார். வணக்ககத்திற்குரிய எஸ். மஹிந்த அவர்கள் கவிதை நூல்களும், உரைநடை நூல்களுமாக மொத்தம் 40 இற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். இவரது லங்கா மாதா, நிதஹசே மந்த்ரய (சுதந்திர மந்திரம்), நிதஹசே தஹன (சுதந்திர தியானம்), ஜாதிக தறு நலவில்ல (தேசிய தாலாட்டு) போன்ற புத்தகங்கள் இலங்கை மக்களிடத்தே நாட்டுப்பற்றை வளர்க்க உதவின. கொழும்பு யுகத்தின் பிரபல்யமிக்க ஒரு கவிஞராக இருந்த இவரது முதலாவது கவிதை நூல் ஒவா முத்துதம (அறிவுரை முத்துச்சரம்) என்பதாகும். இறுதியாக வெளியிட்ட நூல் ஶ்ரீபாத என்பதாகும். நாட்டுப்பற்றுடன் நாட்டுக்குப் பணியாற்றிய இவர் 1951 மார்ச் மாதம் 14 ஆந் திகதி இயற்கையெய்தினார்.



**அனகாரிக தர்மபால**

அனகாரிக தர்மபால 17 செப்டெம்பர் 1864 - 29 ஏப்ரல் 1933), 20 ஆம் நூற்றாண்டில் புத்த சமயத்தின் இரண்டு முக்கியமான அம்சங்களைத் தொடக்கி வைத்ததில் முன்னணியில் இருந்தவர் ஆவார். இந்தியாவில் பல நூற்றாண்டுகளாக ஏறத்தாழ முற்றாகவே அழிந்த நிலையில் இருந்த புத்த சமயத்துக்கு அங்கே புத்துயிர் அளிப்பதில் முன்னோடியாக இருந்தார். தற்காலத்தில் ஆசியா, வட அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களில் புத்த தர்மத்தைப் போதித்த முதல் பௌத்தரும் இவரே.

•. தலைவர்கள் போன்று பாத்திரங்கள் ஏற்று வகிபாகம் ஏற்று நடித்துக்காட்டுக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## செயற்பாடு 04

❖. பண்டைய கலைப்படைப்புக்கள்.


**பலாப்பெத்தி அலங்காரங்கள்.**



கொடி அலங்காரங்கள்.



சங்கிலி / சவடி அலங்காரம்




- . கொடி அலங்காரங்கள் / பலாப்பெத்தி அலங்காரங்கள் சிலவற்றை வரைந்து நிறந்தீட்டுக.
- . நிறம் தீட்டியவற்றை கவனமாக வெட்டி எடுத்து கறுப்புத்தாளில் காட்சிப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 05

❖. பல்லாங்குழி விளையாட்டு



- முற்காலந்தொட்டு விளையாடி வரப்படும் ஒரு விளையாட்டாகிய பல்லாங்குழி விளையாட்டானது தற்போது விளையாடப்படுவதை அரிதாகவே காண முடிகிறது. பல்லாங்குழி விளையாட்டை எவ்வாறு விளையாடுவது எனும் விளக்கம் கீழே தரப்படுகிறது.
- பல்லாங்குழி விளையாட்டுக்காக குழிகள் உள்ள ஒரு பலகை பயன்படுத்தப்படும். இது பல்லாங்குழிப் பலகை எனப்படும்.
- இவ்விளையாட்டின் சட்டதிட்டங்கள் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடும்.
- பல்லாங்குழி விளையாடுவதற்கு இருவர் தேவை. இருவரும் பல்லாங்குழிப் பலகையின் இரு புறங்களிலும் அமர்ந்துகொள்ள வேண்டும்.
- பலகையின் இரண்டு பக்கங்களிலும் ஏழு (7) குழிகள் வீதம் காணப்படும்.
- ஒரு குழியில் நான்கு (4) குன்றிமணி வித்துகள் அல்லது மஞ்சாடி வித்துகள் வீதம் உண்டு.
- விளையாடுவோர் தமது பக்கக் குழியொன்றிலுள்ள குன்றிமணி வித்துக்களை ஒரு குழிக்கு ஒன்று வீதம் அடுத்த குழிகளுக்குப் பகிர்தல் வேண்டும். இவ்வாறு பகிரும்போது வெறுமையான குழியொன்றினைச் சந்தித்தவுடன் அதற்கு எதிரேயுள்ள குழியில் இருக்கும் குண்றிமணி வித்துகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அவற்றைப் பலகையில் தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள பெரிய குழியினுள் இட்டு வைத்துக்கொள்ள வேண்டும்.
- பின்னர் மற்றையவர் தமது பக்கக் குழியொன்றில் உள்ள வித்துக்களில் ஆரம்பித்து குழிக்கு ஒரு வித்து வீதம் பகிர்ந்து விளையாட்டைத் தொடர்தல் வேண்டும்.
- இறுதியில் கூடுதலான தொகை வித்துகளை வென்றெடுத்துச் சேகரித்தவர் வெற்றி பெற்றவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 06

❖. நம் முன்னோரின் சேவைகள் அனைவருக்கும் முன்மாதிரியானவை என்பதை எடுத்துக்காட்டுக.

- மூத்தோரை மதித்தல்
- தயக்கமின்றி உதவிசெய்ய முன்வருதல்
- அறிவுரைகளையும் எச்சரிக்கைகளையும் உரியவாறு பின்பற்றுதல்
- நற்பண்புகளைப் பேணியவாறு செயற்படல்
- வாயாடித்தனமாகக் கதையாமை / வாய்காட்டாமை
- கூட்டாகச் சேர்ந்து செயற்படல்

| **16. Our Past** | Song | Useful Expressions |
|---|---|---|
| 1. history<br>2. stone carvings<br>3. timber carvings<br>4. ancient kings<br>5. palace<br>6. throne<br>7. crown | Ancient kings our fore fathers//<br>Built this world beautiful//<br>Built this world happy and safe//<br>Let's call them our heroes//<br>Let's become great like them.//<br>Game : Guess<br>I live in a palace.<br>I wear a crown.<br>I sit on the throne.<br>Who am I?<br>*Answer : King / You are a king.* | 30. I am Sahan.<br>I am eight /nine<br>I live in Nawala.<br>I go to DharmapalaVidyalaya.<br>I am in grade three/ four<br>I have one brother and one sister.<br>I like red.<br>31. I have a pet.<br>It is a cat.<br>My cat is black.<br>My cat likes milk.<br>32. My cat has four legs.<br>It has a tail.<br>It has two eyes.<br>It has two ears.<br>It has a small nose.<br>It has a small mouth.<br>It has whiskers. |



பொலன்நறுவைக்கால சந்திரவட்டக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு வினாக்கள்

**பயிற்சி**

**(01) பின்வரும் தேசிய தலைவர்களின் பெயர்களை குறிப்பிடுக.**






01........................................ 02........................................ 03........................................ 04........................................

**(02) தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 01. ஆனந்தகுமாரசுவாமி | திபத் நாடு |
| 02. டி.பி.ஜயா | செய்மதிகள் |
| 03. ஆதர்.சி.கிளாக் | இலவசக்கல்வி |
| 04. C.W.W.கன்னங்கரா | தேசியகீதக்கமிட்டி |
| 05. வண.எஸ்.மஹிந்த | மத்தியகால சிங்களக்கலை |
| 06. கேனல் ஒல்கட் | பௌத்தகொடி |

**(03) பின்வருவனவற்றுள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

01. சீகிரிய குன்று மாத்தளை மாவட்டத்தில் உள்ளது. ( )
02. இலங்கையில் முதலாவது கட்டப்பட்ட குளம் அபயவாவி. ( )
03. பராக்கிரமபாகு மின்னேரியா தெய்வம் என போற்றப்பட்டான். ( )
04. பராக்கிரமசமுத்திரம் அநுராதபுரத்தில் அமைந்துள்ளது. ( )
05. நாகமரப்பூங்கா வடமத்திய மாகாணத்தில் உள்ளது. ( )
06. மன்னார்பெருக்கமரம் அரேபிய வணிகர்களால் கொண்டு வரப்பட்டது. ( )
07. வடமாகாணத்தில் இரனைமடுக்குளம் அமைந்துள்ளது. ( )
08. மன்னார்பெருக்க மரத்தின் பழங்களை சுவைக்க குதிரைகள் செல்கின்றன. ( )

**(04) இடைவெளிக்கு பொருத்தமான சொல்லை எழுதுக.**

01. மாலைத்தீவில் தேசிய கீதத்திற்கு இசை அமைத்தவர் ........................................ ஆவார்.
02. வண.எஸ். மஹிந்த அவர்களது நாட்டு பற்றை வெளிப்படுத்தும் நூலாக ........................................ இருந்தது.
03. ஸாஹிரா கல்லூரிகளை உருவாக்கிய பெருமை ........................................ அவர்களை சாரும்.
04. ஆனந்தகுமாரசுவாமி ........................................ நகரில் காலமானார்.

| ஜாயா , பொஸ்டன் , தேசியதாலாட்டு , அமரதேவ |
|---|



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(05) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. சுவரோவியங்களுக்கு பிரசித்தமான இடம் எது?

1) இசுறுமுனிய 2) சீகிரிய 3) யாப்பகூவ 4) காலிகோட்டை

02. கிறுக்கல், கவிதைகள், சுவரோவியங்கள் காணப்படும் வரலாற்று பிரசித்திப்பெற்ற இடம்,

1) சீகிரியா 2) யாப்பகூவ 3) இசுறுமுனிய 4) எம்பக்க

03. பிரபல எழுத்தாளராகவும், வானியல் விஞ்ஞானியாகவும் உலகிற்குச் சிறந்த சேவையாற்றியவர்.

1) சேர்.ஆதர்.சி.கிளாக் 2) சேர்.டி.பி.ஜயதிலக்க
3) கலாநிதி.டி.பி.ஜயா 4) கலாநிதி. ஆனந்தகுமாரசுவாமி

04. அரச இலட்சினையில் காணப்படும் பண்டைய அலங்காரம்

1) வாளேந்திய சிங்கம் 2) சூரியன், சந்திரன்
3) பலாபெத்தி 4) நிறைக்குடம்

05. இலவசக்கல்வியின் தந்தை என பெயர் பெற்றவர்.

1) சேர்.டீ.பீ.ஜயத்திலக்க 2) கலாநிதி ஆனந்தகுமாரசுவாமி
3) கலாநிதி சீ.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா 4) கலாநிதி.ரீ.பீ.ஜாயா

06. மின்னேரியாக் குளத்தைக் கட்டுவித்தவர்

1) மகாசேன மன்னன் 2) தாதுசேன மன்னன்
3) தேவனம்பியதீச மன்னன் 4) கலாநிதி ரீ.பீ.ஜாயா

07. கதிகாமப் புனிதநகர் அமைந்துள்ள மாகாணம்

1) தென் மாகாணம் 2) சப்ரகமுவ மாகாணம்
3) கிழக்கு மாகாணம் 4) ஊவா மாகாணம்

08. இலங்கையில் காணப்படும் வணக்கத்துக்குரியது அல்லாத வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடம்

1) ருவன்வெலிசாய 2) காலிக்கோட்டை 3) சிவனொளிபாதம் 4) தூபாராமை

09. ரிட்டிகல மலை அமைந்திருப்பது,

1) வட மாகாணம் 2) வட மத்தியமாகாணம்
3) மேல் மாகாணம் 4) ஊவா மாகாணம்

10. முற்றத்தில் சதுரங்களை வரைந்து பாய்ந்து விளையாடும் விளையாட்டு

1) கிட்டிப்புள் 2) சில்லுக்கோடு 3) பசுவும் புலியும் 4) சடுகுடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11.  உருவில் உள்ளவர்

1) திரு. சீ. டபிள்யூ.டபிள்யூ கன்னங்கரா
2) கலாநிதி. சீ. டபிள்யூ. ஆர்.டீ. பண்டாரநாயக்கா
3) திரு. பொன்னம்பலம் இராமநாதன்
4) திரு. வில்லியம் கோபல்லாவ

12. பல்லாங்குழியில் ஒரு பக்கத்தில் எத்தனை குழிகள் உள்ளன?

1) 8    2) 9    3) 7    4) 5



13. உருவில் உள்ளவர்.

1) டி.பி.ஜயதிலக்க    2) எஸ்.மகிந்த
3) அநகரிகதர்மபால    4) கொங்காலேகொடபண்டா

14. மூலிகைகளை பயன்படுத்தி இலவச மருந்துச்சாலை ஒன்றை தாபித்தவர் யார்?

1) வண.எஸ். மகிந்த    2) ஆனந்தகுமாரசுவாமி
3) டி.பி.ஜயதிலக்க    4) E.B. குணசிங்க

15. மாலைத்தீவு நாட்டின் தேசிய கீதத்திற்கு இசை அமைத்தவர்?

1) ஆனந்தசமரகோன்    2) W.D. அமரதேவா
3) ஸ்டீல் ஒல்கெட்    4) C.W.W. கன்னங்கரா

16. இலங்கையில் சாஹிரா கல்லூரிகளை நிர்மானித்தவர்?

1) ஆனந்தகுமார சுவாமி    2) எம்.சி. சித்திலெப்பை
3) பதுர்தீன் மஹ்மூத்    4) டி.பி.ஜயா

17. மத்திய கால சிங்களக் கலையை உலகறிய வைத்தவர்?

1) ஆனந்தகுமார சுவாமி    2) W.D. அமரதேவா
3) C.W.W. கன்னங்கரா    4) ஸ்டீல் ஒல்கெட்

18. ரிட்டிகல கந்தை அமைந்துள்ள மாகாணம்

1) மத்திய மாகாணம்    2) வடமத்திய மாகாணம்
3) வட மாகாணம்    4) கிழக்கு மாகாணம்

19. மன்னார்பெருக்க மரத்தின் சிறப்பு

1) மென்மையானது    2) வைரமானது
3) கடுமையான வரட்சியை தாங்குவது    4) விரைவில் அழிவது

20. தாமரை கோபுரம் எழுந்த நகரம் எது?

1) காலி    2) மாத்தறை    3) கொழும்பு    4) புத்தளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைகள்

## கருப்பொருள் (01) எமது நல்வாழ்வு

### பயிற்சி 01

(01) 01.உள்மூச்சு வாங்குக வெளிமூச்சு விடுக 02.அருகே கேட்கும் ஒலிகளை செவிமடுங்கள் 03. நான் நற்பண்புள்ள ஒரு நல்ல பிள்ளையாவேன். 04. நான் உணரும் நிம்மதியை எனது நண்பர்களும் உணரட்டும். 05. எனது குடும்பத்துக்கு நான் ஒரு மணிவிளக்கு

(02) 01. 1 02. 2 03.4 04. 05. 05. 3

(03) 01. ✓ 02. ✓ 03. ✓ 04. ✓05. × 06. ✓ 07. × 08. × 09. ✓ 10. ✓

(04) 01. மனநிம்மதி 02. கீரைகள் 03. இதயத் 04. மனவுறுதி 05. கதைக்க 06. இருமுறை 07. வெற்றி 08. அழகு

(05) 01. 2 02. 3 03. 1 04. 3 05. 3 06.4 07. 3 08. 2 09. 3 10. 4 11. 1 12. 2 13. 4 14. 1 15. 2 16. 3

*******************

## கருப்பொருள் (02) நாம் இலங்கையர்

### பயிற்சி 02

(01) 01. தார்மீகம் 02. உலக நிலைத்திருப்பு 03. சௌபாக்கியம் 04. தூய்மை 05. தன்னிறைவு

(02) 01. முஸ்லிம் 02. ஒற்றுமை 03. ஆட்சியை 04. தமிழ் 05. அறம் 06. தேசியக்கொடி 07. தேசிய சுதந்திர 08. நிமிர்ந்து 09. நாகமரம் 10. காட்டுக்கோழி

(03) 01.× 02.✓ 03.✓ 04.✓ 05.× 06.✓ 07.× 08.✓ 09.✓10.✓

(04) 01. நத்தர் 02. சிங்களவர் 03. தமிழர் 04. கிறிஸ்தவர் 05. மீலாதுன் நபி 06. மகிந்த தேரர் வருகையின் நினைவு 07. மன்னார் 08. கண்டி மாநகரம்

(05) 1. காட்டுக்கோழி 2. நீலோற்பலம் 3. அரச இலச்சினை 4. மர அணில்

(06) 01. இலங்கை மத்திய வங்கி 02. பொலிஸ், கல்வி காரியாலயங்கள் 03. கருணை, அன்பு மற்றவர் மகிழ்ச்சியில் பங்குக்கொள்ளல், நன்மை தீமை இரண்டினையும் சமமாகக் கொள்ளல் 04. மகாவலிகங்கை 05. தேயிலை , தென்னை, நெல், கோப்பி 06. டேவிட், மேரி, கிறிஸ்தோபர். 07. தேசிய சுதந்திர தினம் 08. வொலிபோல் 09. முஸ்லிம்கள் 10. அரிசி, தேங்காய்ப்பூ, மா

(07) பொருத்தமாக நிறந்தீட்டப்பட்டிருப்பின்

(08) 01. 4 02. 2 03. 1 04. 1 05. 4 06. 2 07. 2 08. 4 09. 2 10. 3 11. 2 12. 3 13. 1 14. 3 15. 1 16. 1 17. 4 18. 4 19. 2 20. 2

*******************

## கருப்பொருள் (03) மரஞ்செடி கொடிகள்.

### பயிற்சி 03

(01) 01.ஆவணி மாதம் 02. சித்திரை மாதம் 03. ஆனி மாதம் 04. புரட்டாதிமாதம் 05. ஆடி மாதம்

(02) 01. அந்தூரியம் 02. நாகமலர் 03. கார்த்திகை 04. நித்தியக்கல்யாணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(03) (தண்டில் பூப்பவை) பலா, கொக்கோ (கிளை உச்சியில் பூப்பவை) செவ்வரத்தை, எக்சோரா, மா, றம்புட்டான் (கிளையில் நடுப்பகுதியில் பூப்பவை) கத்தரி, வெண்டி, கொய்யா

(04) 01.✓ 02.× 03.✓ 04.✓ 05.✓

(05) 01. 2 02. 3 03. 1 04. 3 05. 4 06. 1 07. 2 08. 4 09. 2 10. 3 11. 1 12. 3 13. 1 14. 2 15. 1 16. 2 17. 4 18. 3 19. 4 20. 3

(06) 01. குறி 02. இதழ் 03. கேசரம் 04. சூலகம் 05. காம்பு 06. புல்லி

(07) 01. அணில், மைனா, கிளி, இருவாச்சி 02. நித்தியக்கல்யாணி , மல்லிகை
03. நந்தியாவட்டை , அலரி 04. தென்னை , அலரி , செவ்வரத்தை
05. செவ்வரத்தை, அலரி 06. குப்பைமேனி , ஆடாதோடை , நொச்சி, கற்றாளை
07. பொன்னாவரசு , வில்வம் 08. மரப்பொந்துகளில்
09. மயிர்கொட்டி, வண்டு 10. பாகல் , புடோல், பூசணி
11. மா, றம்புட்டான் 12. அகத்தி, வேம்பு
13. நத்தை, மயிர்கொட்டி 14. நிறமூட்டிய நீரில் நான்கு நாட்கள் இட்டு வைத்தல்.

*******************

## கருப்பொருள் (04) எம்மைச் சூழவுள்ள பிராணிகள்

### பயிற்சி (04)

(01) 01.உணர்கொம்பு 02.தலை 03. சிறகு 04.கால் 05.வயிறு 06. நெஞ்சு 07.கூட்டுக்கண்

(02) 01. பூனை 02. ஆந்தை 03. நாய் 04. கறையான் 05. வெளவால்

(03) 01. அணில் 02. எறும்புகள் 03. நாய்கள் 04.புளுணிக்குருவிகள் 05. தேவாங்கு 06. கீரி 07. மண்புழு 08. மீன்கள் 09. வண்ணத்துப்பூச்சிகள் 10. கறையான்

(04) 01.✓ 02.✓ 03.× 04.✓ 05.× 06.× 07.✓ 08.✓ 09.✓ 10. ✓

(05) 01. முட்டை, மயிர்கொட்டி , கூட்டுபுழு , வண்ணத்துப்பூச்சி 02. நுளம்பு , வண்டு
03. மா, கோப்பி, பலா 04. தவளை, முயல் 05. கறையான் ,மண்புழு 06. நத்தை, பாம்பு
07. உணவு கொடுத்தல், நோயுற்றால் சிகிச்சையளித்தல். 08. ஈக்கள், நுளம்புகள்
09. கோழி 10. தவளை, தேரை, ஆமை, முதலை

(05) 01. 1 02. 4 03. 2 04. 2 05. 2 06. 3 07. 3 08. 2 09. 2 10. 3 11. 4 12. 1 13. 3 14. 4 15. 2 16. 3 17. 4 18. 3 19. 2 20. 3 21. 3

*******************

## கருப்பொருள் (05) நாம் பயன்படுத்துபவை

### பயிற்சி (05)

(01) 01. சீவுளி 02. துருத்தி 03. மணியாசு 04. அத்தாங்கு 05. வனைசில்லு 06. கலப்பை

(02) 01. வரைகம்பு 02. மட்டப்பலகை/பரம்பு பலகை 03. உளி 04. பட்டடை 05. கரப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(03) 01.✓ 02. ✓ 03. ✓ 04. × 05. ✓ 06 × 07. ✓ 08. × 09. ✓ 10. ✓

(04) 01. கம்பளித் 02. பூக்களை 03. மேளம் 04. கைக்குட்டை 05. நுகத்தடி 06. துலா 07. உளி 08. அத்தாங்கு

(05) 01. மட்பாண்டக்கைத்தொழில்02. விவசாயம் 03. இரும்புருக்குத்தொழில்/உருக்குத் தொழில் 04. மேசன் தொழில்

(06) 01. 4 02. 06 03. 02 04. 05

(07) 01. 1 02. 2 03. 3 04. 3 05. 3 06. 4 07. 2 08. 4 09. 2 10. 2 11. 2 12. 2 13. 4 14. 1 15. 1 16. 1 17. 3 18. 4 19. 2 20. 3 21. 4 22. 1 23. 1 24. 2 25. 3 26. 4 27. 2 28. 4 29. 3

********************

**கருப்பொருள் (06) எமது உணவு**

**பயிற்சி (06)**

(01) 01. 01. நிறையுணவு 02. வல்லாரை 03. பயறு 04. வில்வம்பூ 05. உப்பிடல்

(02) 01.✓ 02. ✓ 03. ✓ 04. ✓ 05. × 06. ✓ 07. ✓ 08. × 09. ✓ 10.✓

(03) 01. ஈக்கள் 02. நோய் நொடிகள் 03. கொதித்தாறிய 04. இறைச்சியை 05. பாத்திரங்கள் 06. கொழுப்புச் 07. புரதம் 08. சாத்தாவாரி

(04) 01. 4 02. 1 03. 3 04. 3 05. 1 06. 2 07. 3 08. 3 09. 4 10. 3 11. 4 12. 2 13. 4 14. 4 15. 3 16. 2 17. 4 18. 4 19. 3 20. 4 21. 1 22. 3 23. 3 24. 2

(05) 01. கம்பளித்தையல் 02. வாந்திபேதி, வயிற்றுவலி, ஒவ்வாமை 03. தலையைச் சொரிதல், மூக்கைப்பிடித்தல் 04. திறந்துவைத்தல், பல்லி, கரப்பான் மொய்த்தல் 05. கடலை, பயறு , அரிசி 06. யோகட், பாண், தேங்காய், தயிர் 07. பாகல், மரவள்ளி, பலா, ஈரப்பலா 08. பொன்னாவரசு, வில்வம் பூ 09. சாத்தாவரி, வல்லாரை, சிறுநாரத்தை 10. உடல் உறுப்புகள் பாதிக்கப்படல் தோல் வரண்டு போதல் 11. பொருத்தமான பாத்திரங்களை தெரிவு செய்தல், மேசைச்சீலையின் பொருத்தப்பாடு, சுவையாக சமைத்தல், கைத்துடைப்பான் மடிப்புகள் 12. நெல்லி, எலுமிச்சைப்பழம், ஆம்பரங்காய் 13. முட்டை, பயறு, பருப்பு, பால்

********************

**கருப்பொருள் (07) பாதுகாப்பும் கரிசனையும்**

பயிற்சி (07)

(01) 01. ஆழிப்பேரலை 02. கடும்மழை பெய்தல் 03. மரங்களை வெட்டுதல் 04. கட்டிடங்கள் சரிதல் 05. மரங்கள் உராய்தல்.

(02) 01.× 02.✓ 03.× 04.✓ 05.✓ 06.× 07.× 08.×

(03) 01. நுளம்புகள் 02. அவதானம் 03. தலைக்கவசம் 04. பாம்புகள் 05. இடங்கள் 06. இயற்கை 07. வாகன 08. கொழுப்பு

(04) 01. 3 02. 6 03. 2 04. 4 05. 1 06. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(05) 01. 3 02. 5 03. 2 05. 6 06. 4

(06) 01. 1 02. 1 03. 2 04. 2 05. 1 06. 2 07. 2 08. 2 09. 1 10.3 11. 4 12. 4 13. 4 14.1 15. 4 16. 3 17. 1 18. 3 19. 2 20. 4 21. 3 22. 3 23. 3 24. 1

********************

**கருப்பொருள் (08) நீர்**

**பயிற்சி (08)**

(01) 01. மஞ்சட்காய்ச்சல் 02. நீரை சூடேற்றுதல் 03. நீரினுள் பனிக்கட்டிகளையிடல் 04. நீராவியின் பயன்பாடு 05. பனிக்கட்டிகளைப் பேணுதல் 06. நீர் மாசடைதல்

(02) 01.✓ 02.✗ 03.✓ 04.✓ 05.✓ 06.✗ 07.✗ 08. ✓

(03) 01. பச்சை 02. சூழல் 03. உருகும் 04. ரெஜிபோம் 05. இசை 06. விரயமாகும் 07. பிட்டு 08. நீராக

(04) 01. 3 02. 4 03. 2 04. 1 05. 1 06. 3 07. 2 08. 4 09. 1 10. 2 11. 1 12. 3 13. 4 14. 3 15. 4 16. 2

********************

**கருப்பொருள் (09) போக்குவரத்து**

**பயிற்சி (09)**

(01) 01. 5 02. 4 03. 6 04. 1 05. 2 06. 3

(02) 01. ✗ 02. ✗ 03.✓ 04. ✓ 05. ✗ 06. ✓ 07. ✓ 08. ✓

(03) 01. வயோதிபர் 02. தொந்தரவு 03. வலது 04. அவதானம் 05 கடக்கக் 06. வீதிக் 07. வைத்தியசாலை 08. முன்னால்

(04) 01. முன்னால் பாதசாரிக்கடவை 2. முன்னால் பாதை வேலை 3. முன்னால் சுற்றுவளைவு 4. முன்னால் பாதுகாப்பற்ற புகையிரதக்கடவை

(05) 01. 4 02. 4 03. 2 04. 3 05. 4 06. 3 07. 1 08. 3 09. 3 10. 1 11. 2 12. 1 13. 2 14. 4 15. 1 16. 2 17. 2 18. 3 19. 4

********************

**கருப்பொருள் (10) வீட்டுத்தோட்டம்**

**பயிற்சி (10)**

(01) 01. காற்றுக்கிலுக்கி 02. இரசாயனப் பசளை 03. கத்தரி 04 பயிர்களைப் பாதுகாத்தல் 05. இலைகுழைகள் 06. வீட்டுத்தோட்ட காய்கறிகள்

(02) 01. ✓ 02. ✓ 03. ✗ 04. ✓ 05. ✗ 06. ✓ 07. ✗ 08. ✓ 09. ✓ 10. ✓

(03) 01. காற்றுக்கிலுக்கி 02. மூலிகை 03. இலைக்குழைகள் 04. நோய்கள் 05. போசணையை 06. வளி 07. வளமான மண் 08. வெப்பம்

(04) 01. 3 02. 3 03. 1 04. 4 05. 4 06. 2 07. 2 08.4 09. 2 10. 3

(05) 01. செவ்வந்தி 02. வளி, நீர், சூரிய ஒளி 03. கடுகு, பயறு 04. கூட்டெரு, ஆட்டெரு, மாட்டெரு 05. மண் வளம் கெடும் , சூழல் மாசடையும் 06. முற்றிய வித்துக்கள்.

(06) 1. வெண்டி 02. கத்தரி 03. தக்காளி 4. சிறுகீரை 5. மிளகாய் 6. புடோல் 07. பீர்க்கு 08. பாகல் 09. அவரை 10. பயற்றை 11. முருங்கை 12. பப்பாசி 13. வாழை 14. கொய்யா 15. கறிவேப்பிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**கருப்பொருள் (11) வேலையை இலகுபடுத்திக் கொள்ளும் வழிகள்**

**பயிற்சி (11)**

(01) 01. பண்டையகாலம் 02. கப்பியின் பயன் 03. சைக்கிள் 04. புள்ளி
05. வடமுனை வடமுனை 06. மின்காந்தம் 07. முனைப்பகுதிகள்
08. வேலையை இலகுவாக்கலாம்.

(02) 01. ✓ 02. × 03. × 04. ✓ 05. ✓ 06. ✓ 07. ✓ 08. ✓

(03) 01. கம்பியை 02. பாக்குவெட்டி 03. நடுவில் 04. விசை 05. கவர்ச்சி 06. மின்னோட்டம்
07. உழவன் 08. மீனவன்

(04) 

(05) 01. முனைப்பகுதிகள் 02. கப்பி 03. 2 ஸ்குரூ வகையும், பின் வகைத்தாங்கியும்
04. சைக்கிள் , கடிகாரம் 05. மீனவப்பாடல், அரிவிவெட்டுப்பாடல், வண்டிப்பாடல்

(06) 01. சட்டக்காந்தம் 02. U வடிவக்காந்தம் 3. வளையல் வடிவக்காந்தம்
04. பரியிலாடக்காந்தம் 05. வட்டத்தட்டுக்காந்தம்

(07) 01. 4 02. 3 03. 3 04. 3 05. 4 06. 1 07. 4 08. 3 09. 4 10. 2 11. 3 12. 4 13. 1 14. 1
15. 2 16. 3 17. 1 18. 4 19. 1 20. 1

---

**கருப்பொருள் (12) மனித நடத்தைகள்**

பயிற்சி **(12)**

(01) 01. 1929 02. திறமைகளை பராட்டுதல் 03.வெசாக் வாழ்த்தட்டை 04. வெள்ளைப்பிரம்பு
05. 5 - 16 வயது 06. அன்பும், அரவணைப்பும் கிடைக்காமை

(02) 01. ✓ 02. ✓ 03. ✓ 04. × 05. ✓ 06. × 07. ✓ 08. ✓

(03) 01. நட்பு 02. தைப்பொங்கல் 03. மூக்குக்கண்ணாடிகளை 04. கல்வியை
05. உரிமைமீறலில் 06. ஆற்றல்கள் 07. தடை 08. 1929

(04) 01. நட்பு புதுப்பிக்கப்படும், பிறரது மதிப்புக்கு உட்படுதல்
02. கடதாசித்துண்டுகள், பசை, வெள்ளைத்தாள்
03. அழகானது, சிறப்பானது, நிறைகளை முதலில் கூற வேண்டும், குறைகளை மனம் நோகாதவாறு கூறவேண்டும்.
04. அன்பு அரவணைப்பு சரியாக கிடைக்காமை, பல தொந்தரவுகளுக்கு ஆளாகுதல்.
05. அழகானது, சிறந்தது, போற்றத்தக்கது.

(05) 01. 1 02.3 03. 2 04. 4 05. 3 06. 4 07. 2 08. 2 09. 2 10. 3 11. 3 12. 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருப்பொருள் (13) நிலமும் வானமும்**

**பயிற்சி (13)**

(01) 01. புற்தரை 02.உக்கல் 03. திசைக்காட்டி 04. சூரிய ஒளி 05. சூரியன்
06. ஊசித்துளைக் கமரா

(02) 01. ✓ 02. × 03. ✓ 04. ✓ 05. × 06. ✓ 07. × 08. ×

(03) 01. கிளிநொச்சி 02. இரண்டு பெட்டிகள் 03. ஒளியும் 04. சூரிய ஒளி 05. சுனாமி
06. இருவாட்டி மண் 07. இரவுபகல் 08. ஈசல்கள்

(04) 01. 2 02. 3 03. 1 04. 3 05. 2 06. 3 07. 3 08. 1 09. 4

---

**கருப்பொருள் (14) எம்மால் செய்யக்கூடிய மாற்றங்கள்**

**பயிற்சி (14)**

(01) 01. மனதில் மகிழ்ச்சி தோன்றுதல் 02. மனதில் வெறுப்பு ஏற்படல் 03. கௌரமாக வாழ முடியும் 04. நுளம்புகள் கட்டுப்படுத்தல் 05. சிறந்த திட்டம் வேண்டும்.

(02) 01. ✓ 02. ✓ 03. ✓ 04. × 05. ✓ 06. ✓ 07. ✓ 08. ✓

(03) 01. கண்டறிதல் 02. திட்டம் 03. பூஞ்செடிகள் 04. சுயசுத்தம் 05. மாற்றங்கள்

---

**கருப்பொருள் (15) மனிதனும் தகவல்களும்**

**பயிற்சி (15)**

(01) 01. கூக்குரலிடல் 02. திறன் பேசி 03. முகபாவம் 04. தொலைக்காட்சி
05. வானொலி 06. பத்திரிகை

(02) 01.✓ 02. ✓ 03. ✓ 04. ✓ 05. ✓ 06. × 07. × 08. ×

(03) 01. கட்புல 02. பச்சை 03. உணர்வுகளை 04. தீக்குவியல் மூட்டல் 05. புறாவின்
06. பத்திரிகை

(04) 01. 2 02. 3 03. 4 04. 4 05. 1 06. 3 07. 4 08. 1 09. 1 10. 2 11. 3 12. 1 13. 4

(05) 01. பத்திரிகை , சுவரெட்டி 02. வானொலி, தொலைபேசி 03. தீ மூட்டல், கூக்குரலிடல், பறை அடித்தல் 04. பயம், வீரம் , சாந்தம் 05. அனுப்புபவர் , ஊடகம், பெறுநர்
06. மின்னஞ்சல், முகநூல் 07. பத்திரிகை , கடிதம் 08. தொலைக்காட்சி, வானொலி

---

**கருப்பொருள் (16) எமது பண்டைய தகவல்கள்**

**பயிற்சி (16)**

(01) 01.c.w.w. கன்னங்கரா 02. ஆனந்தகுமார சுவாமி 03. வண.எஸ்மகிந்த 04. ஆதர்.சி.கிளாக்

(02) 01. மத்தியகால சிங்களக்கலை 02. தேசியகீகக்கமிட்டி 03. செய்மதிகள்
04. இலவசக்கல்வி 05. திபத் நாடு 06. பௌத்தகொடி

(03) 01.✓ 02. ✓ 03. × 04. × 05. ✓ 06. ✓ 07. ✓ 08. ×


(04) 01.அமரதேவா 02. தேசியதாலாட்டு 03. ஜாயா 04. பொஸ்டன்

(05) 01. 2 02. 1 03. 1 04. 3 05. 3 06. 1 07. 4 08. 2 09. 2 10. 2 11. 1 12. 3 13. 3 14. 1
15. 2 16. 4 17. 1 18. 2 19. 3 20. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Rs. 575/=**

**KURINCHI PUBLISHERS &**
**NETHRA OFFSET PRINTERS**
**280 - A , D. S. SENANAYAKA VEEDIYA, KANDY**
**TEL : 081-2204358,**
**Mobile - 0722222775, 0776346263**

PBD
602020145
SUTRADAL SAR SEYA G-4
020223
Rs. 575.00

9 789557 734439
ISBN 978-955-7734-43-9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org